
இ. லி. அந்திரேயெவ்

# எங்கெல்சின் “குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்” எனும் நூல்

முன்னேற்றப் பதிப்பகம்



Der Ursprung der Familie,

des

Privateigenthums

und des Staats.

Im Anschluss
an
Lewis H. Morgan's Forschungen
von
Friedrich Engels.

C 246

இ. லி. அந்திரேயெவ்

ML12

5/-

# எங்கெல்சின் “குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்” எனும் நூல்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

Rs 9 P 2

**И. Л. Андреев**

О КНИГЕ Ф. ЭНГЕЛЬСА „ПРОИСХОЖДЕНИЕ СЕМЬИ, ЧАСТНОЙ СОБСТВЕННОСТИ И ГОСУДАРСТВА“

*На тамильском языке*

**I. L. Andreyev**

ENGELS'S "THE ORIGIN OF THE FAMILY, PRIVATE PROPERTY AND THE STATE"

*In Tamil*

© Progress Publishers, 1985

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1987
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{0102010000-319}{014(01)-87}$ 316-87

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . 7

1. பண்டைய சமுதாயத்தைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் மார்கன் . . . . . . . . . . 18

2. பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் (காட்டுமிராண்டிக் காலகட்டம்) 50

3. குலமரபுச் சமூகத்திலிருந்து வர்க்கங்களை நோக்கிய மாற்றம் (பண்பாடற்ற நிலை) . . . . 70

4. பூர்விக சமூகத்தின் கட்டமைப்பு . . . . . . . . . 102

5. பூர்விக சமூகத்தில் இரத்த உறவுமுறையின் பாத்திரம்: குழுமணம் மற்றும் தாய்வழி மரபு . . 114

- இரத்த உறவுமுறைகளும் அவற்றின் பரிணாமமும் . . . . . . . . 114
- குழு மண முறை: மூலம், பரிணாமம், எச்சங்கள் . . . . . . . . 131
- தாயுரிமைக் குலத்தைப் பற்றிய கண்டுபிடிப்பும் தந்தைவழிக் குடும்பத்தின் ஆதித் தன்மையைப் பற்றிய நம்பிக்கை முடிவடைதலும் . . . 151

6. ஒருதார மணக் குடும்பம் மற்றும் தனிப்பட்ட பாலுறவுக் காதலின் தோற்றம் . . . . . . 159

திருமண-குடும்ப உறவுகளின் வரலாற்றுப் பரிணாமம் . . . . . . 159

தனிப்பட்ட பாலுணர்ச்சிக் காதலின் தோற்றத்தைப் பற்றிய பிரச்சினையும் ''பாலுறவுப் புரட்சிக்'' கருதுகோள்களைப் பற்றிய விமர்சனமும் . . . . . . . . . . . . 169

7. தனிச்சொத்தின் தோற்றம் . . 196

மார்கன் மற்றும் எங்கெல்சினுடைய நூல்களில் சமூக உறவு என்ற முறையில் உடைமை . . . . . . . 196

குலமரபு உடைமை . . . . . . . 201

கால்நடைகளின் மீதான தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையும் பரிவர்த்தனையின் வளர்ச்சியும் . . . . . . 204

நிலத்தின் மீதான தனியுடைமையின் தோற்றம், பணம் மற்றும் அடைமானம் . . . . . . . . . . . . . 215

8. உதித்தெழுந்து கொண்டிருந்த அரசு . . . . . . . . . . . . 238

அரசின் தோற்றம் . . . . . . . 238

ஒடுக்குமுறை இயந்திரம் என்கின்ற முறையில் அரசின் கூறுகள் . . . . 244

அரசின் தோற்றத்தின் இயக்கவியல் . . . . . . . . . . . . . 250

*அரசு அதிகாரத்தின் வர்க்க சாராம்சம்* . . . . . . . . . . . . . . *261*

9. வர்க்க சமுதாயம் உருவாகிய வழிகள்: முதல் சமூகப் புரட்சி . *273*

*வர்க்க சமுதாயத்தின் உருவாக்கத்தில் முரண்பாடான போக்குகள்* . . . . . . . . . . . . . . *273*

*முதல் சமூகப் புரட்சி: சாராம்சமும் வடிவங்களும்* . . . . . . . . . *289*

முடிவுரை . . . . . . . . . . *309*

''அரசு என்ற பிரச்சினையைப் பொறுத்தவரை, நீங்கள் எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலைப் படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நவீன சோஷலிசத்துக்குரிய அடிப்படை நூல்களில் இது ஒன்று. அதன் ஒவ்வொரு வாக்கியத்தையும் நம்பிக்கையோடு ஏற்கலாம். அதாவது அவ்வாக்கியம் மனம்போனவாறு கூறப்பட்டதன்று, வரலாற்று, அரசியல் சம்பந்தமாக அளவற்ற விவரங்களை அடிப்படையாகக் கொண்டது என்ற உறுதியோடு ஏற்கலாம்.'' *

வி. இ. லெனின்

# முன்னுரை

வரலாற்று வளர்ச்சிப் போக்கின் தத்துவத்தைப் பற்றிய மார்க்சிய நூல்களில் பி. எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூல் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது.

கா. மார்க்சும் பி. எங்கெல்சும் தம் காலத்தின் மிக அவசரமான பிரச்சினைகளை ஆராய்ந்தனர். அவர்கள் முதலாளித்துவ சமூக-பொருளாதார அமைப்பின் சாராம்சத்தைப் பகுப்பாய்வு செய்தனர். சோஷலிசப்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *10*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1981*, பக்கம் *14*.

புரட்சிக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய போர்த் தந்திரம் மற்றும் செயல்தந்திரத்தின் அடிப் படைகளை வரையறுத்தார்கள்; எதிர்கால கம்யூனிச சமூகத்தின் முக்கியமான கோட் பாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் 1870க்கள் வரை எழுதிய நூல்களில் இடம் பெற்ற மனிதகுலத்தின் பண்டைக்கால வர லாற்றைப் பற்றிய தகவல்கள் பிரதானமாக, அவர்கள் வாழ்ந்த சமூகத்திற்கு முந்தைய காலப் பகுதியின் தனிப்பட்ட நிகழ்ச்சிப் போக்கு கள் அல்லது புலப்பாடுகளை விளக்குவதற்கு மட்டுமே உபயோகிக்கப்பட்டிருந்தன. எனினும் கா. மார்க்ஸ் குலமரபுச் சமூகம் சிதைந்து வர்க்க-பகைமுரண்பாட்டுச் சமூகம் தோன்று வதைப் பற்றி முக்கியமான புத்தகம் ஒன்றை எழுதுவதற்குப் பல ஆண்டுகளாக ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிவோம்.

1870க்களின் கடைசியில் இனப் பரப்பு விளக்கவியல் ஏராளமான புதிய தகவல்களைச் சேகரித்திருந்தது. பூர்விகக் கூட்டுவாழ்வு சமூக அமைப்பின் பல்வேறு கட்டங்களில் வசித்துக் கொண்டிருந்த மக்களினங்கள், முதலாளித்துவம் ஏற்கெனவே தோன்றி, ஆனால் உச்ச வளர்ச்சியை இன்னும் அடையாத நாடுகளில் (ஜெர்மனி, ருஷ்யா, இதரவை) எஞ்சியிருந்த பூர்விக அமைப்புகள் ஆகிய இரண்டையும் பற்றிய ஏராளமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. கா. மார்க்ஸ்

தன்னுடைய வாழ்க்கையின் கடைசி வருடங்களில் ருஷ்ய சமூகவியலாளர் ம. ம. கவலேவ்ஸ்கி எழுதிய **கூட்டு நிலவுடைமை, அது சிதைவுற்றதன் காரணங்கள், நிகழ்ச்சிப் போக்கு மற்றும் விளைவுகள்,** லூ. ஹெ. மார்கன் எழுதிய **பண்டைய சமுதாயம்** மற்றும் பல நூல்களைப் படித்துக் குறிப்புகளை எழுதுவதற்குக் கணிசமான நேரத்தைச் செலவிட்டதற்கும் இது காரணமாகும். அதே சமயத்தில் பி. எங்கெல்ஸ் ஜெர்மனியின் வரலாற்றைப் பற்றி எழுத உத்தேசித்த புத்தகத்தில் பண்டைக்காலம் மற்றும் மத்தியகால ஆரம்பத்தைப் பற்றிய சில பகுதிகளை எழுதினார்.*

மார்க்ஸ் மரணமடைந்த சிறிது காலத்துக்குப் பிறகு மார்கன் எழுதிய புத்தகத்தைப் பற்றி மார்க்ஸ் தயாரித்திருந்த விரிவான குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற புத்தகத்தை 1884 மார்ச் மற்றும் மே மாதங்களுக்கு இடையில் எழுதினார். அவர் இப்புத்தகத்தை வெளியிட்டதன் மூலம் தன்னுடைய நண்பர் விட்டுச் சென்ற ஒரு பணியை நிறைவேற்றியதாகக் கருதினார். இப்புத்தகத்தில் மனித குலத்தின் பண்டைய வளர்ச்சிக் கட்டங்கள் இயக்கவியல்-பொருள்முதல்வாத நிலையிலிருந்து முறைப்படியாக விளக்கப்பட்டிருந்தன.

* K. Marx, F. Engels, *Werke,* Bd. 19, Dietz Verlag, Berlin, S. 425-520.

மார்க்ஸ் பூர்த்தி செய்யாமல் விட்டுச் சென்ற சில தத்துவ நூல்களை (எல்லாவற்றுக்கும் மேலாக **மூலதனத்தை**) முடிப்பதில் எங்கெல்ஸ் காட்டிய அக்கறையை மட்டுமின்றி, மார்க்ஸ் திட்டமிட்டிருந்த நூல்களை எழுதி முடிக்க வேண்டும் என்ற அவருடைய ஆர்வத்தையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. மார்க்ஸ் **பண்டைய** சமுதாயம் என்ற நூலைப் படித்து விரிவான குறிப்புகளை எழுதி வைத்திருப்பதிலிருந்து, மார்கனுடைய நூலிலுள்ள விஞ்ஞான முடிவுகளை இயக்கவியல்-பொருள் முதல்வாத ரீதியில் விளக்கி பூர்விக சமூகத்தின் வரலாற்றை எழுதுவதற்கு மார்க்ஸ் உத்தேசித்திருந்தார் என்று கருத முடியும்.

மார்க்சியத்தை மேலும் வளர்ப்பதிலும் அதைத் தத்துவ ரீதியில் ஆதாரப்படுத்துவதிலும் எங்கெல்ஸ் எழுதிய இந்நூல் பெரும் பங்காற்றியது. பூர்விக சமூகத்தைப் பற்றிய இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியின் புதிய விவரங்களை, எல்லாவற்றுக்கும் மேலாக மார்கன் எழுதிய நூல்களை எங்கெல்ஸ் தொகுத்துரைத்தார், விமர்சன ரீதியாக விளக்கினார். இந்த விவரங்களின் அடிப்படையில் முக்கியமான தத்துவ மற்றும் அரசியல் முடிவுகளைப் பெறுவதற்கு இவை அவருக்கு உதவின. மார்க்சும் அவரும் உருவாக்கிய உலக வரலாற்றின் கருத்தமைப்பை எங்கெல்ஸ் இந்நூலில் ஸ்தூலமான விவரங்களின் அடிப்படையில் விளக்கினார். முதலாளித்துவ விஞ்ஞானத்தின் பல வறட்டுக் கோட்பாடுகளை,

குறிப்பாக, தந்தைவழிக் குடும்பம், தனிச் சொத்து, அரசு அதிகாரம், சமூக ஏற்றத் தாழ்வு, சுரண்டல், ஒடுக்குமுறை, இதரவை ஆதிக்காலத்திலிருந்து இருந்து வருகின்றன என்ற கருத்துகளை அவர் முன்னைக் காட்டிலும் அதிகமான ஆதாரங்களுடன் மறுத்தார்.

எங்கெல்ஸ் எழுதிய இந்நூலில் மனிதகுலத்தின் தொடக்க கால வரலாற்றைப் பற்றிய ஆதாரபூர்வமான, இயக்கவியல்-பொருள்முதல்வாத விளக்கமும் தனிச்சொத்து, அரசின் தோற்றம் மற்றும் அவற்றுடன் சேர்ந்த திருமண முறைகள், குடும்பத்தின் பரிணாமத்துக்கு அவசியமான பொருளாதார முன்நிபந்தனைகள் மற்றும் வரலாற்று சூழ்நிலைகளைப் பற்றிய விவரங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

எங்கெல்ஸ் தனிச்சொத்து, வர்க்கங்கள் மற்றும் அரசின் பொருளாதார அடிப்படையை வெளிப்படுத்தி அவை வரலாற்று ரீதியில் தற்காலிகமானவை என்பதை எடுத்துக்காட்டினார். முதலாளித்துவ, சந்தர்ப்பவாத, அராஜகவாத சித்தாந்தங்களுக்கு எதிரான மார்க்சியத்தின் போராட்டத்தில் இக்கருதுகோள்கள் முக்கியமான பாத்திரத்தை வகித்தன, இன்றும் வகிக்கின்றன. வி. இ. லெனின் தன்னுடைய சொற்பொழிவுகளிலும் எழுத்துக்களிலும் எங்கெல்ஸ் எழுதிய இந்நூலை அடிக்கடி மேற்கோள் காட்டினார்.

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில், மார்கன்

கண்டுபிடித்த குலம் என்னும் அமைப்பின் சாராம்சத்தை விரிவாக ஆராய்ந்ததுடன் வரலாற்றுப் போக்கைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தின் கருத்தமைப்புகளை விளக்கு வதற்கும் பிரித்துக் காட்டுவதற்கும் கணிச மான பங்களித்தார். இது நவீன சமூக விஞ் ஞானத்துக்கு, குறிப்பாக, ''குலம்'', ''இனக் குழு'' ஆகிய கருதுகோள்களுடன் அதற்குள்ள உறவுக்கு மிகவும் முக்கியமானதாகும். பூர் விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் அடிப்படை அலகு என்ற முறையில் குலத்தின் முக்கியத்து வத்தை மார்கன் வெளிப்படுத்தினார்; அதன் மூலம் பூர்விக சமூகத்தின் வரலாற்றைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப் படைகளை அமைத்தார். கா. மார்க்ஸ் எழுதிய **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர் சன உரைகள் (திருத்தப்படாத நகல், 1857—1858)** என்ற கையெழுத்துப் பிரதிக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியின் கீழுள்ள மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சிக் கழகம் தயாரித்த குறிப்புகளில் பின்வருமாறு எழுதப்பட்டிருக் கிறது: ''19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் வரலாற்று விஞ்ஞானத்தில் 'Stamm' என்ற சொல்லுக்கு இன்றைக்கிருப்பதைக் காட்டிலும் மிகவும் விரிவான அர்த்தம் கொடுக்கப்பட் டிருந்தது. பொதுவான மூதாதையரைக் கொண் டிருந்த மக்கள் அனைவரையும் அது குறித்த துடன் 'குலம்' (Gens), 'இனக்குழு' (Stamm) என்ற நவீனக் கருதுகோள்களையும் தழுவி

யிருந்தது. மார்கன் தன்னுடைய **பண்டைய சமு தாயம்** *(1877)* என்ற நூலில் முதல் தடவை யாக இந்த இரண்டு கருதுகோள்களையும் தெளிவாக வரையறுத்தார், இரண்டுக்கும் இடையில் வேறுபாடுகளையும் எடுத்துக்காட் டினார். மார்கனுடைய முடிவுகளை சுருக்கிக் கொடுத்த எங்கெல்ஸ் இந்த இரண்டு கருது கோள்களின் உள்ளடக்கத்தையும் விரிவான ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார்.'' *

அப்பொழுது இனப் பரப்பு விளக்கவியல் என்ற விஞ்ஞான துறை இன்னும் இளம் பருவத்தில்தான் இருந்தது. அதன் ஆராய்ச்சி யில் எங்கெல்ஸ் ஆற்றிய பங்கு கூட்டுச் சமூகத்தின் (இது அக்காலத்தில் விவசாயிகள் ஒன்றிணைந்திருந்த மிகவும் பரவலான வடி வமாக இருந்தது) வரலாற்று ரீதியான வளர்ச் சியைக் கண்டுபிடிப்பதற்கும் அதன் சாராம் சத்தைப் புரிந்து கொள்வதற்கும் விஞ்ஞானி களுக்கு உதவியது. அதன் தொடக்க நிலை யாக குலக் கூட்டுச் சமூகம் **அல்லது குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் எங்கெல்ஸ் எழுதிய ''கூட்டு பொதுவுடைமை குடும்பச் சமூகம்'' இருந்தது. இரத்த உறவுகளின் அடிப்படையில் இயற்கை யாகத் தோன்றிய பொருளாதார அலகாக இந்தக் கூட்டுச் சமூகமே செயலாற்றியது. இந்த இரத்த உறவுகளின் படிப்படியான மாற்றம் இந்தக் கூட்டுச் சமூகத்தை நிலம்

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, தொகுதி 46, பாகம் I, பக்கம் 537 (ருஷ்ய மொழியில்).

மற்றும் இதர உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட தனிப்பட்ட சிறு அளவு விவசாயிகளின் கூட்டாக மாற்றியது. இது துண்டு நிலங்களைக் கொண்ட விவசாயக் கூட்டுச் சமூக உறவுகளின் திசையில் வளர்ச்சியடைந்தது. இச்சமூகத்தின் உதாரணத்தில் நேரடியான உற்பத்தியாளர்கள் மத்தியில் சொத்துடைமை வேறுபாடு மற்றும் சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிவது தீவிரமடைகின்ற நிகழ்வுப் போக்கைப் பார்க்க முடியும்.

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகளில் பெரும்பான்மையானவற்றில் குலமரபு மற்றும் தந்தைவழிக் கூட்டுச் சமூக உறவுகள் மக்கள் தொகையின் கணிசமான பகுதியினருடைய சமூக உறவுகளின் அச்சாணியாக இன்னும் இருப்பதைக் காண முடியும். இது விவசாயிகளைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்க அளவுக்கு உண்மையாகும். இந்நாடுகளில் தொழில்மயமாக்கும் மற்றும் நகரமயமாக்கும் நிகழ்ச்சிப் போக்குகள் எவ்வளவு தீவிரமடைந்த போதிலும் விவசாயிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டுதான் இருக்கிறது, அடுத்த நூற்றாண்டு வாக்கில் அவர்களுடைய எண்ணிக்கை சுமார் *3,000* மில்லியனை எட்டிவிடும் என்று ஐ.நா. சபை மதிப்பிட்டிருக்கிறது. ஆகவே சோஷலிச திசைவழியைப் பின்பற்றுகின்ற நாடுகளில் அமுலாக்கப்படுகின்ற முற்போக்கான சமூக-பொருளாதார மாற்றங்கள் வெற்றி பெற வேண்டுமென்றால் அவை முதலாளித்துவத்துக்கு முந்திய பொரு

ளாதார மற்றும் சமூக உறவுகளின் வடிவங்களின் வளர்ச்சி நியதிகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஆப்பிரிக்காவில் திருமண-குடும்ப உறவுகள் பெரும் பகுதியும் ஒருதார மணத்துக்கு முந்திய இணைக் குடும்பம் அல்லது பெரிய தந்தைவழி (சில சமயங்களில் தாய்வழி) குடும்பம், பலதார மணம், இதர வற்றின் பாரம்பரியங்களை இன்னும் அடிப் படையாகக் கொண்டிருக்கின்றன. அக்கண் டத்தின் பல பகுதிகளில் முக்கியமான உற் பத்திச் சாதனங்களின் மீதான, குறிப்பாக, நிலத்தின் மீதான தனிச்சொத்துடைமை இன்னும் உருவாகவில்லை. நவீன அரசியல் வாழ்க்கை அமைப்புகள் சில சமயங்களில் குலமரபு ஒருமைப்பாடு அல்லது மக்களின-குலமரபு பொதுமை (ஒன்றுக்கொன்று உறவான இனக்குழுக்களின் கூட்டு) என்ற கருத்துக் களுக்கு அப்பால் போகவில்லை. நவீன காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்று கின்ற ஏகாதிபத்திய சக்திகள் பிற்போக்கு வட்டாரங்களை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய அம்சத்தைப் பெரிதும் பயன்படுத்தி சிறுமாதிரியான, இனக்குழு "அரசியல்" கட்சிகளை ஏற்படுத்துவதற்கு, அதன் மூலம் பிரிவினைவாதத்தையும் குலப்பற்றையும் தூண்டு வதற்குப் பாடுபடுகின்றன; அதன் மூலம் இளம் அரசுகளின் சமூக மற்றும் பிரதேச ஒற்றுமையை அழிப்பதற்கு முயல்கின்றன.

குலமரபு உறவுகள் மற்ற கண்டங்களிலும்

கணிசமான, பல்விதமான பாத்திரத்தை வகிக்கின்றன. உதாரணமாக, ஆசியாவில், இன்றைய ஆப்கானிஸ்தானில் இனக்குழுக்கள் ஸ்தல மக்களை ஒன்றுபடுத்துகின்ற பரம் பரையான வடிவமாக மட்டுமல்லாமல் நேரடி யான அரசியல் நடவடிக்கையில் பங்கேற்கும் உறுப்புகளாகவும் பயன்படுகின்றன. அங்கே ஜிர்கா என்ற பெரியோர் சபை நெடுங் காலமாக இருந்து வருகிறது. அச்சபை முக்கியமான சமூகப் பிரச்சினைகளை முடிவு செய்கிறது.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் எங்கெல்சின் புத்தகம் முறையியல் நோக்கில் மட்டுமின்றி உள்ளடக் கத்திலும் இன்றளவும் முக்கியத்துவத்தைக் கொண்டிருப்பதை இவையெல்லாம் எடுத்துக் காட்டுகின்றன. அதன் அடிப்படையான கருது கோள்களும் முடிவுகளும் கோடிக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்ற மிக முக்கியமான சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றியவை. ஆகவே சோஷ லிச திசைவழியைப் பின்பற்றுகின்ற நாடுகளி லுள்ள புரட்சிகர-ஜனநாயகக் கட்சிகளின் சித்தாந்தவாதிகளும் செயல்வீரர்களும், புதி தாகச் சுதந்திரமடைந்த நாடுகளில் உள்ள எல்லா புரட்சியாளர்களும் எங்கெல்சின் இப்புத் தகத்தை நன்கு கற்க வேண்டும். அப்படிக் கற்பது சுலபமல்ல. ஏனென்றால் இப்புத்தகம் சிக்கலானது, அளவற்ற விஞ்ஞான விவரங் களைக் கொண்டது. ருஷ்யாவின் தொழிலா

ளர்கள் மற்றும் விவசாயிகளின் புரட்சிகர முன்னணிப்படை ஒரு சமயத்தில் இக்கடமையை நிறைவேற்றியது என்று வி. இ. லெனின் சுட்டிக்காட்டினார். அவர் 1919இல் யா. மி. ஸ்வெர்திலோவ் கம்யூனிஸ்டுப் பல்கலைக் கழகத்தில் அரசு பற்றிய தனது சொற்பொழிவில் பின்வருமாறு பேசினார்: ''இந்த நூலின் எல்லாப் பகுதிகளும் ஒரே நிகராகச் சகலருக்கும் புரியக் கூடிய வகையில் எடுத்து விளக்கப்படவில்லை என்பதில் ஐயமில்லைதான். வரலாறு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒரு குறிப்பிட்ட அளவு அறிவுடைய வாசகரை மனத்திற்கொண்டே நூலின் சில பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இந்த நூலைப் படித்ததும், அதை உடனேயே புரிந்து கொள்ளாவிடில், நீங்கள் கலக்கமுறக் கூடாது என்று நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்நூலை எடுத்த எடுப்பில் புரிந்து கொள்வது எவருக்கும் அரிது. பின்பு, உங்கள் ஆர்வம் தூண்டிவிடப்படும் போது, அதை மீண்டும் படித்தீர்களானால், அதனை முழுக்கவும் இல்லாவிட்டாலும், அதன் பெரும்பகுதியைப் புரிந்து கொள்வதில் வெற்றியுறுவீர்கள்.'' *

---

* வி. இ. லெனின், அதே நூல், பக்கம் 14.

# 1. பண்டைய சமுதாயத்தைப் பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் மார்கன்

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களும் ''இனப் பரப்பு விளக்கவியலின் தந்தையாகிய'' மார்கனும் சமூக வாழ்க்கையின் ஆரம்ப வடிவங்களை ஆராய்வதற்குப் பிரதான முக்கியத்துவம் அளித்தார்கள். மேலும் அவர்கள் பூர்விக சமூகத்தின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினைகளை அநேகமாக ஒரே சமயத்தில்தான் ஆராயத் தொடங்கினார்கள். மார்க்சும் எங்கெல்சும் பண்டைய சமுதாயத்தைப் பற்றிய பிரச்சினையை தாங்களிருவரும் *1845 – 1846*இல் கூட்டாக எழுதிய **ஜெர்மன் சித்தாந்தம்** என்ற கையெழுத்துப் பிரதியில் முதல் தடவையாக எழுப்பினார்கள். மார்கன் *1847*இல் தன் கட்டுரைகளை வெளியிடத் தொடங்கினார். அவை பின்னர் *1851*இல் **இரகுவோஸ் லீக்** என்ற தலைப்பில் அவருடைய முதல் ஆராய்ச்சி நூலாக வெளிவந்தன.

எனினும் மார்கனும் மார்க்சியத்தின் மூலவர்களும் பூர்விக சமூகத்தை ஆராய்வதைப் பற்றிய பிரச்சினைகளில் முறையியல் அணுகுமுறையில் வேறுபட்டார்கள்; அவர்கள் வெவ்வேறு கோணங்களிலிருந்து பூர்விக சமூகத்தை ஆராய்ந்தார்கள் என்று கூற வேண்டும்.

மார்கன் தன் ஆராய்ச்சி நூலில் பயன்

படுத்திய இனப் பரப்பு விளக்கவியல் தகவல் களில் பெரும்பகுதியைத் தனது சொந்த நியூயார்க் மாநிலத்தில் வசித்த இரகுவோஸ் செவ்விந்தியர்களுடனான நேரடித் தொடர்பு களின் மூலம் திரட்டினார். அதற்குப் பிறகுதான் அவர் செவ்விந்தியர்களின் மற்ற இனக்குழுக்களைச் சந்திப்பதற்கு விசேஷப் பயணங்களை மேற்கொண்டார். 1840இல் 22 வயதே நிரம்பிய மார்கன் செவ்விந்தியர் களின் பரிதாபகரமான வாழ்க்கையையும் அவர்களுடைய சுயமான கலாசாரத்தையும் உலகத்துக்கு எடுத்துக்காட்டுவதை நோக்க மாகக் கொண்ட கழகத்தை நிறுவினார். பிற்காலத்தில் அவர் மோசடிக்காரர்களின் கோஷ்டி ஒன்றை அம்பலப்படுத்தினார். இவர்கள் செனட்டின் உதவியுடன் செனெக்கா இனக்குழுவினரை ஏமாற்றி அவர்களு டைய நிலங்களைப் பறித்து வந்தார்கள். மார்கனும் "இரகுவோஸ் இனத்தின் மாபெரும் சங்கம்" எனும் அமைப்பைச் சேர்ந்த அவருடைய நண்பர்களும் செவ்விந் தியர்களை ஆதரிக்கும் மனுக்களில் கையெழுத் துக்களைப் பெற்று காங்கிரசுக்கு விண்ணப் பித்து, பறிக்கப்பட்ட நிலங்களைத் திரும்பப் பெற்றார்கள். இரகுவோஸ்களின் செனெக்கா இனக்குழு மார்கனின் சேவைகளைப் பாராட்டி 1846இல் ஒரு சிறப்புச் சடங்கில் அவரைத் தமது இரத்தச் சகோதரர் என்று கௌரவித் தது. செவ்விந்தியர்களுடன் மார்கன் ஏற்படுத்தி யிருந்த நெருக்கமான தொடர்புகளைப்

பற்றி பிரெஞ்சுக்காரரும் பிரபல இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியாளருமான ராவூல் மக்காரியஸ் **பண்டைய சமுதாயத்தின்** முதல் பிரெஞ்சு பதிப்பின் அறிமுகத்தில் பின்வருமாறு எழுதினார்: "செந்தலையர்களின் மரபுகளையும் சடங்குகளையும் பின்பற்றிய மாணவர்களைக் கொண்ட கழகத்தில் அவர் உறுப்பினராக இருந்தார். செவ்விந்தியர்களின் பழக்கவழக்கங்களையும் அமைப்புகளையும் பற்றி மேலும் அதிகமான அறிவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சிக்கு அவர் உத்வேகமூட்டினார். பிறகு வழக்குரைஞர் என்ற முறையில் அவர் முதல் அமெரிக்கர்கள் என்று கருதியவர்களை வெள்ளையர்களின் கொள்ளைகளுக்கு எதிராக ஆதரித்தார். ஆகவே அவர் இவ்விதமாக மானிடவியல் ஆராய்ச்சிக்கு இயற்கையாகவே இட்டுச் செல்லப்பட்டார். செவ்விந்தியர்கள் அவருடைய உலகத்தின் ஒரு பகுதியாக இருந்தார்கள், அவர்களுடைய வாழ்க்கையே எல்லா விதமான பிரச்சினைகளையும் எழுப்பியது."*

மார்கன் எழுதிய முக்கியமான நூலின் — **பண்டைய சமுதாயத்தின்** — அடிச்சரடாகவுள்ள கருத்தை அதன் அமைப்பில் தெளிவாகப் பார்க்க முடியும்.

"புதிது புனைதல் மற்றும் கண்டுபிடித்தலின்

---

* Raoul Makarius, *Guide critique à la lecture de la société archaique de L. H. Morgan*, Editions Anthropos, Paris, 1971, p. XI.

மூலம் அறிவின் வளர்ச்சி'' எனும் முதல் பகுதியில் ''இனவியல் காலகட்டங்கள்'' என் றழைக்கப்படுபவை கூறப்படுகின்றன; காட்டு மிராண்டித்தனத்தின் மூன்று கட்டங்கள், பண்பாடற்ற காலகட்டத்தின் மூன்று கட்டங் கள், மற்றும் நாகரிகம் என்பவற்றை மார்கன் இனங்காணுகிறார். இவை குலமரபு அமைப்பி லிருந்து அரசியல் ஸ்தாபனம் வரை சமூக வளர்ச்சியின் சர்வபொது வரையளவைகளாக இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து மனிதர் களுக்குக் கிடைத்த வாழ்க்கைச் சாதனங் களின் பெருக்கத்தையும் குண ரீதியான மாற்றத்தையும் பற்றி மார்கன் ஒரு விசேஷ அத்தியாயம் எழுதுகிறார். முதல் பகுதியின் முடிவுரையில் மார்கன் ''மனிதகுல முன்னேற் றத்தின் அளவுப் பொருத்தங்களை'' ஆராய்ந்து பெருக்கல் விருத்தியில் அதன் வேகம் தீவிர மடைகிறது என்ற கருத்தை வகுத்தளிக்கிறார்.

**பண்டைய சமுதாயத்தின்** இரண்டாவது பகுதி ''நிர்வகிப்பது என்ற கருத்தின் வளர்ச்சி'' என்ற தலைப்பைக் கொண்டிருக்கிறது. இது புத்தகத்தின் முக்கியமான, மிகப் பெரும் பகுதியாகும். இதில் 15 அத்தியாயங்கள் இருக்கின்றன. இப்பகுதியில் மார்கன் ஆஸ்தி ரேலியாவில் கிறிஸ்துவ சமயத் தொண் டர்கள் சேகரித்த (அவர்கள் அளித்த விளக்கம் தவறு என்று பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டது) தகவல்களின் அடிப்படையில் குலமரபு அமைப்பின் தோற்றத்தை விவரிக்க முயற்சி செய்கிறார். பிறகு இரகுவோஸ்

குலம், பிராட்ரி, இனக்குழு, இனக்குழுக்களின் கூட்டு ஆகியவற்றின் அமைப்பு மற்றும் செயல்முறை மூலச்சிறப்பான வகையில் வர்ணிக்கப்படுகின்றன. மற்ற செவ்விந்திய இனக் குழுக்களைப் பற்றிய வர்ணனையும் மான்டெஸூமா காலத்திலிருந்த அஸ்டெக் சமூக அமைப்பைப் பற்றிய ஆய்வுரையும் அடுத்து வருகின்றன. இது இப்புத்தகத்திலேயே மிகவும் அரிய பகுதி; இன்றும் கூட இது மூலச்சிறப் புள்ளதாக இருக்கிறது. செவ்விந்தியர்கள், பிரதானமாக இரகுவோஸ்களைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்து மார்கன் கிரீசிலும் ரோமிலும் நிலவிய குலம், பிராட்ரி, இனக்குழு, தேசிய இனம் (மக்களினம்) மற்றும் அரசியல் அமைப்பைப் பற்றியும் ஐரோப்பா (ஸ்காட் லாந்து, அயர்லாந்து மற்றும் ஜெர்மனி), ஆசியா (யூரால், சீனா, பாலஸ்தீனம்), ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் சமுத்திரப் பிரதேசத் தின் மக்களினங்கள் மத்தியில் நிலவிய சமூகப் பரிணாமத்தின் பல்வேறு வடிவங்களைப் பற்றியும் தனது தத்துவத்தை வளர்த்துக் கூறுகிறார்.

மூன்றாம் பகுதி ‘‘குடும்பம் என்ற கருத்தின் வளர்ச்சி’’ என்னும் தலைப்பைக் கொண் டிருக்கிறது. இது அடுத்தடுத்து வந்த குடும்பத் தின் ஐந்து வடிவங்களை ஆராய்கிறது: இரத்த உறவுக் குடும்பம் (ஹவாய்த் தீவுகளி லிருந்து தனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மார்கன் இந்தக் குடும்பத்தின் தத்துவ மாதிரியை அமைத்தார். ஆனால்

அவருக்குக் கிடைத்த தகவல்கள் சரியானவை அல்ல); பூனலுவா குடும்பம்; இணைக் குடும்பம்; தந்தைவழிக் குடும்பம்; கடைசியாக, நவீன ஒருதார மணக் குடும்பம்.

நான்காவது பகுதி ''சொத்துடைமை என்ற கருத்தின் வளர்ச்சி'' என்னும் தலைப்பைக் கொண்டிருக்கிறது. இதுதான் இப்புத்தகத்திலேயே மிகவும் சுருக்கமான, நன்கு வளர்த்துக் கூறப்படாத பகுதி. இப்பகுதி இரண்டு அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது (இப்புத்தகத்தில் சுமார் இருபதிலொரு பகுதி). சாராம்சத்தில், ''மரபு வழிச் சொத்துரிமை குறித்த மூன்று விதிகள்'' இங்கே ஒப்பிடப்படுகின்றன: குலத்துக்குள்ளாக மரபு வழி உரிமை; குடும்பத்துக்குள்ளாக மரபு வழி உரிமை; கடைசியாக, குழந்தைகளுக்கு மட்டுமே தரப்படுகின்ற மரபு வழி உரிமை மற்றும் உயில்கள் முறை. உயில்கள் மனிதகுலத்தின் சொத்து வேட்டையின் ஆரம்பத்தைக் குறித்தன, அதிலிருந்து ஏராளமான எதிர்மறையான விளைவுகள் தொடர்ந்தன என்பது மார்கனுடைய கருத்து.

மார்க்சும் எங்கெல்சும் மார்கனுக்கு வேறுபட்ட முறையில், தாங்கள் ஏற்கெனவே விரித்துரைத்த வரலாற்றைப் பற்றிய இயக்கவியல்-பொருள்முதல்வாதக் கருத்தின் அடிப்படையில் பூர்விக சமூகத்தை ஆராய்ந்தார்கள். கீழ் வடிவங்களை உயர் வடிவங்களின் மூலமாக ஆராய்கின்ற முறையியலை மார்க்ஸ் அறிதல் தத்துவத்தின் ஒரு கோட்பாடாக

உருவகச் சிறப்போடு குறிப்பிட்டார்: ''குரங்கின் உடலமைப்பை மனிதனுடைய உடலமைப்பின் மூலமாக அறிய வேண்டும்''. மார்க்சும் எங்கெல்சும் சமூக-பொருளாதார அமைப்புகளைப் பற்றிய தமது தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டார்கள். பிரதானமாக முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய ஆராய்ச்சியின் அடிப்படையில் அத் தத்துவத்தை வகுத்தார்கள். அயர்லாந்திலுள்ள குலமரபுக் குழு அமைப்பிற்கு குலம் என்பது அடிப்படை என்று மார்கனைச் சாராமலே எங்கெல்ஸ் 1870இல் முடிவு செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் அவர் அச்சமயத்தில் இக்கருத்தை ஆதாரப் படுத்தவில்லை, அதை வளர்த்துக் கூறவுமில்லை.

மார்கன் நடைமுறையிலிருந்த குலமரபு அமைப்புகளின் பல்வகையான தன்மை மூலமாக, அதாவது ''மறு கோடியிலிருந்து'' தொடங்கி, உலகம் முழுவதிலுமிருந்து தான் கவனமாகச் சேகரித்த அனுபவ பூர்வமான தகவல்களையும் இரகுவோஸ்களின் வாழ்க்கையைப் பற்றி இக்குலமரபு அமைப்பின் ''உள்ளேயிருந்து'' தான் கண்ட விவரங்களையும் தொகுத்து பூர்விக சமூகத்தின் ''உட்கருவைப்'' புரிந்து கொள்கின்ற திசையில் முன்னேறிக் கொண்டிருந்தார். இவ்விஷயத்தில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் பிரச்சினைக்குப் பொது மற்றும் தனிப்பட்ட தீர்வுகள் முற்றிலும் சுயேச்சையாகவே நிறைவேற்றப் பட்டன.

மனிதகுலத்தின் முற்போக்கான வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களை ஆராய்வதில் மேற்கூறிய இரண்டு முறைகளின் ஈடிணையற்ற ஒன்றிணைப்பாக எங்கெல்சின் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** இருக்கிறது. மேலும் எங்கெல்ஸ் இப்புத்தகத்தை எழுதியதன் மூலம் மார்கனின் கருத்தமைப்பின் மீது மார்க்ஸ் காட்டிய அக்கறை மற்றும் இது சம்பந்தமான மார்க்சின் அணுகுமுறையைப் புதிய தலைமுறையைச் சேர்ந்த மார்க்சியவாதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அக்காலத்தில் **பண்டைய சமுதாயத்தைப்** படித்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் எங்கெல்சின் புத்தகத்தின் மூலமாகவே மார்கன் எழுதிய இப்புத்தகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். குறிப்பாக, 23 வயது நிரம்பிய லெனின் (1888இல் **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை** ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்து விட்டு **மூலதனத்தைப்** படித்த பிறகு) பீட்டர்ஸ்பர்குக்கு வந்து 1893ஆம் ஆண்டில் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலை அதன் ஆசிரியரின் ஆயுட்காலத்திலேயே படித்தார்.

இதே சமயத்தில் ருஷ்யாவில் அகநிலை கருத்துமுதல்வாதத்தின் பிரதிநிதியான நி. க. மிஹைய்லோவ்ஸ்கி மார்க்சியத்தை விமர்சனம் செய்ய தொடங்கினார். மார்க்ஸ் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தை ''மட்டுமே'' ஆராய்ந்தார், அவருடைய வளர்ச்சித் தத்து

வம் முதலாளித்துவ சமூகத்துக்கு ''மட்டுமே'' பொருந்தும், முதலாளித்துவக் கட்டத்துக்கு முந்திய சமூக-பொருளாதார உறவுமுறைகள் இன்னும் நீடிக்கின்ற நாடுகளுக்கும் மக்களினங் களுக்கும் அது பொருந்தாது என்று கூறி விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவர்களின் தத்துவப் பாரம்பரியத்தைப் பற்றிய விமர் சனத்தை மிஹய்லோவ்ஸ்கி தொடங்கி வைத் தார். உலக வரலாற்றின் ஆரம்பக் கட்டங் களைப் பொறுத்தவரை, அவற்றின் சாராம் சத்தையும் நியதிகளையும் மார்க்சுக்கும் எங் கெல்சுக்கும் சுட்டிக்காட்டியவர் மார்கன், இவர் மார்க்ஸ், எங்கெல்சின் சீடரல்ல, இவர் களுடைய கருத்துகளை ஆதரிக்கவோ பின்பற்றவோ இல்லை என்று மிஹய்லோவ்ஸ்கி கூறினார். சமூக-பொருளாதார அமைப்பு களையும் சமூகப் பகைமைகளின் தற்காலிக மான தன்மையையும் பற்றி மார்க்சியத் தத்துவத்தில் உள்ள, பண்டைய சமுதாயம் சம்பந்தமான ஏதோ ஒரு ''இடைவெளியை'' நிரப்புவதற்காக எங்கெல்ஸ் மார்கனுடைய பண்டைய சமுதாயத்தை உற்சாகத்துடன் தேர்ந் தெடுத்து குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம் என்ற நூலில் அதற்கு உரை எழுதினார் என்று மிஹய்லோவ்ஸ்கி கூறினார்.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற் றின் தோற்றம் என்னும் நூலை லெனின் ஆழமாகப் படித்ததோடு கூட தன்னுடைய கவனத்தைக் கவர்ந்த சில பகுதிகளை ருஷ்ய

மொழியில் மொழிபெயர்க்கவும் செய்தார். அவர் 1894இல் **"மக்களின் நண்பர்கள்" எனப் படுவோர் யார், சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போராடுகிறார்கள்?** என்ற தன்னுடைய முதல் புத்தகத்தை எழுதினார், அதில் அவர் மிஹய்லோவ்ஸ்கியின் கருத்து நிலைகளை அடிப்படையான விமர்சனத்துக்கு உட்படுத்தியதுடன் எங்கெல்ஸ் மற்றும் மார்க்ஸனுடைய புத்தகங்கள் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சிக்கு முறையியல் மற்றும் தத்துவ ரீதியில் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன என்பதையும் உயர்வாக மதிப்பிட்டார். சமுதாயத்தைப் பற்றிய மார்க்சியத் தத்துவம் சர்வாம்ச, உலக வரலாற்றுத் தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதை லெனின் ஆணித்தரமாக ஆதாரப்படுத்தினார். தந்தைவழிக் குடும்பம் ஆதிமுதற் கொண்டு இருந்து வருகிறது, குலமரபு உறவுகள் — தேசிய இன உறவுகள் கூட — குடும்ப உறவுகளிலிருந்து தோன்றியவை என்னும் கருத்துகள் ஆதாரமற்றவை, வரலாற்று விஞ்ஞானத்துக்குப் புறம்பானவை என்றும் அவர் விளக்கினார். மார்க்ஸனுடைய புத்தகத்திலுள்ள ஏராளமான, அனுபவ பூர்வமான விவரங்கள் சமூக உறவுகள் பொருளாயத உறவுகள் (முதன்மையானவை) மற்றும் கருத்தியல் உறவுகள் (இரண்டாம் நிலையானவை) என்று புறநிலையில் வேறுபட்டிருப்பதைப் பற்றிய மார்க்சிய முடிவை நிரூபித்தன. லெனினின் கருத்துப்படி, குடும்பம்,

தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூல் வரலாற்று நிகழ்வுப் போக்கைப் பற்றிய, குறிப்பாக முதலாளித் துவத்துக்கு முந்திய கட்டங்களைப் பற்றிய மார்க்சியத் தத்துவத்தை மிகவும் சிறப்பாக முழுமையாக்கியது, அதன் மூலம் முதலாளித் துவத்துக்கு முந்திய சமூக-பொருளாதார அமைப்புகளின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றிய புறநிலையான தர்க்கத்தைப் பலப் படுத்தியது.

மார்கனுடைய படைப்புகள் வெளியிடப் படுவதற்கு முன்னர் போதிய விவரங்கள் இல்லாத காரணத்தால் ''பண்டைய ஐரோப் பிய வரலாற்றில் சில மிக முக்கியமான நிகழ்வுகளைப் பற்றிய ஆராய்ச்சிக்கு, உதாரண மாக, குலமரபு அமைப்பு பற்றிய ஆராய்ச் சிக்கு'' வரலாற்றைப் பற்றி மார்க்ஸ் கண்டு பிடித்த பொருள்முதல்வாதக் கருத்தைக் கையாள முடியவில்லை, ''ஆகவே அந்த அமைப்பு புதிராக நீடித்தது'' என்று லெனின் விளக்கினார். ''ஆனால் அப்போது அமெரிக் காவில் மார்கன் சேகரித்த ஏராளமான விவரங்கள் அவருக்கு குலமரபு அமைப்பின் சாரத்தை ஆராய்வதற்கு உதவின. அதன் விளக்கத்தை சித்தாந்த உறவுகளில் (உதாரண மாக, சட்ட அல்லது மத உறவுகளில்) தேடக் கூடாது, பொருளாயத உறவுகளில் தேட வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். இது பொருள்முதல்வாத முறை யைப் பற்றி மேதாவிலாசம் நிறைந்த

நிரூபணமே தவிர வேறல்ல என்பது தெளிவு.''* மார்கன் எழுதிய நூல் குலமரபு அமைப்பைப் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க உதவியது. இது ''மிகச் சிக்கலான பிரச்சினைகளில் ஒன்று, இதை விளக்க ஏராளமான தத்துவங்கள் தோன்றின''. இது தவிர இந்நூல், ''சமூக உறவுகள் பொருளாயத உறவுகளாயும் சித்தாந்த உறவுகளாயும் பிரிக்கப்பட்டிருக்கின்றன, பிந்தியவை முந்தியவற்றின் மீதான மேற்கட்டுமானம் மட்டுமே; பொருளாயத உறவுகள் மனிதனுடைய சித்தத்தையும் உணர்வையும் சாராமலேயே மனித வாழ்க்கைக்கான நடவடிக்கையின் பயனாக உருவாகின்றன''** என்று மார்க்சும் எங்கெல்சும் வெளியிட்ட கருத்துகளைப் பண்டைக்கால வரலாற்றைப் பற்றிய விவரங்களின் அடிப்படையில் நிரூபித்தது.

வி. இ. லெனின் பிற்காலத்தில் எழுதிய படைப்புகளில் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலை அடிக்கடி மேற்கோள் காட்டினார். குறிப்பாக அவர் **அரசும் புரட்சியும்** *(1917)* என்ற படைப்பில் எங்கெல்சின் நூலிலுள்ள, அரசின் குறியடையாளமான கூறுகளை வரையறுத்து, வரலாற்று ரீதியில் அரசின் தற்காலிகமான தன்மையை விளக்கிய விரிவான பகுதிகளை மேற்கோள் காட்டினார். *1919*இல் அவர் நிகழ்த்திய

* V. I. Lenin, *Collected Works,* Vol. 1, Progress Publishers, Moscow, p. 150.

** *Ibid.*, p. 151.

அரசு என்ற சொற்பொழிவில் ''நவீன சோஷலிசத்திற்குரிய அடிப்படை நூல்களில் ஒன்றாகிய''* எங்கெல்சின் இந்நூலை நுணுக்கமாகக் கற்க வேண்டும் என்று அவையினரைக் கேட்டுக் கொண்டார்.

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் கிழக்கிலுள்ள மக்களினங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியை ஏன் சாராம்சத்தில் ஆராயவில்லை என்ற கேள்வியை ஆராய்ச்சி நூல்களில் நாம் அடிக்கடி காண்கிறோம். கால்நடை வளர்ப்பின் தோற்றம் மற்றும் அது போன்ற தனிப்பட்ட விஷயங்கள் தொடர்பாக மட்டும் எப்பொழுதாவது அவற்றைப் பற்றி குறிப்பிடப்பட்டது. எங்கெல்ஸ் ''ஆசிய உற்பத்தி முறை'' மற்றும் கீழ்த்திசை எதேச்சாதிகார அரசு முறை ஆகியவற்றைப் பகுத்தாராயவில்லை. **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் கீழ்த்திசைச் சமூகத்தை இம்முறையில் ஆராயாதது வர்க்க முரணியல்புகளின் பொருளாதார மற்றும் அரசியல் முன்நிபந்தனைகள் தோன்றுகின்ற நிகழ்வுப் போக்கைத் தத்துவ ரீதியில் அமைத்துக் காட்டுகின்ற முயற்சிகளை அவர் கைவிட்டதாகுமா என்று சில மேற்கத்திய ஆசிரியர்கள் வினவுகிறார்கள். ஏனென்றால் எங்கெல்ஸ் மார்கனின் புத்தகத்தைப் படிப்பதற்கு முன்னர், 1878ல் எழுதிய **டூரிங்குக்கு மறுப்பு** என்னும்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 14.

நூலில் அத்தகைய தத்துவ மாதிரியை அமைத்திருக்கிறார். எனினும் மேற்கூறிய இரண்டு நூல்களிலுமே எங்கெல்ஸ், மார்க்சும் தானும் கூட்டாக விரித்துரைத்த வரலாற்றைப் பற்றிய இயக்கவியல் பொருள்முதல்வாதக் கருத்தை அடிப்படையாகக் கொள்கிறார் என்பது நன்கு புலனாகும். சமூகத்தின் ஆதி அலகு குலம் என்று மார்கன் இனம் கண்டது இம்முறையியலின் சர்வபொது சாராம்சத்தை மாற்றாமல் அதை ஒரு புதிய திசையில் உபயோகிப்பதை சாத்தியமாக்கியது.

பண்பாடற்ற காலகட்டத்தின் மத்தியப் பகுதியில் — பண்பாடற்ற காலகட்டத்தின் பிந்தியப் பகுதியில் இன்னும் அதிகமாகக் கூட — மனிதகுல வரலாற்றின் கருமையம் ஆசியா மற்றும் மத்திய கிழக்கிலிருந்து தெற்கு மற்றும் மேற்கு ஐரோப்பாவுக்கு நகர்ந்தது என்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம். மார்கனுடைய வாழ்க்கைக் காலத்தில் பண்டைய சமுதாயத்தின் வளர்ச்சியின் முந்திய காலகட்டங்களின் எச்சங்கள் பிரதானமாக அமெரிக்கக் கண்டத்திலும் தெற்குக் கடல்களின் தீவுகளிலும்தான் இருந்தன. இந்த உண்மையை மனதிலிறுத்துவது அவசியம். ஏனென்றால் எங்கெல்ஸ், மார்கன் இருவருமே கலாசார வரலாற்றை எழுதுவதை மிகவும் முக்கியமான விஷயமாகக் கருதவில்லை, பண்டைக்கால மனிதனுடைய சமூக-பொருளாதார வளர்ச்சியின் இயற்கையான கட்டங்

களின் தர்க்கத்தையும் விஞ்ஞான வகைப் படுத்தலையும் எடுத்துக் கூறுவதற்கு விரும் பினார்கள்.

**குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் பண்டைய சமுதாயத்தின் பல்வேறு புலப்பாடுகள் மற்றும் நிகழ்வுப் போக்குகளின் தோற்றத்தின் ''கலப்பற்ற'' வடிவங்கள் மற்றும் வகைவேறுபாடுகளின் மீது அழுத்தம் தரப்பட்டிருப்பது முதலாளித்து வத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராய்வதற்கு இங்கிலாந்து மிகவும் பொருத் தமான, மூலச்சிறப்பான உதாரணம் என்று மார்க்ஸ் தேர்ந்தெடுத்ததை நினைவுபடுத்து கிறது. ஒரே மாதிரியான விஷயங்கள் எதிரெதிராக அமைக்கப்பட்டிருப்பதை **டூரிங் குக்கு மறுப்பு** (பிரதானமாக, கிழக்கு நாடு களின் விஷயங்கள்) மற்றும் **குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** (அநேகமாக முற்றிலும் மேற்கு நாடுகளின் விஷயங்கள்) என்ற நூல்களில் பார்க்கிறோம். எங்கெல்ஸ் முதல் நூலில் பூர்விகக் கூட்டு வாழ்வு அமைப்பின் சிதைவுப் போக்கிற்குரிய பொருளாதார நியதிகளை வலியுறுத்தினார் (டூரிங்கின் ''பலப்பிரயோகத் தத்துவத்தை'' விமர்சனம் செய்தார்); இரண்டாவது நூலில் வர்க்க-பகைமுரண்பாட்டு சமுதாயத்தின் அடிப் படையாக தனிச்சொத்து மற்றும் அரசு தோன்றுவதன் இயக்கவியலை வலியுறுத் தினார். மேலும் பண்டைக்காலக் கீழ்த்திசை அரசுகள் எண்ணற்ற புராதன சடங்குகளின்

சுமையினால் அழுத்தப்பட்டிருந்தபடியால் அவற்றில் தனிச்சொத்தின் தோற்றம் தடுக்கப்பட்டிருந்தது. எனவே மார்கனும் தானும் சேகரித்த விவரங்களின் அடிப்படையில் பெற்ற தத்துவ மற்றும் அரசியல் முடிவுகளை முதலாளித்துவ ஐரோப்பாவின் உழைக்கும் மக்களுக்குப் போதிய தெளிவுடனும் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் விளக்குவதற்குத் தக்க உதாரணங்களாக அவை இருக்கவில்லை.

**குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலின் துணைத் தலைப்பிலும் முன்னுரையிலும் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல அந்த நூல் அதற்கு ஏழு வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட மார்கனின் **பண்டைய சமுதாயம் அல்லது காட்டுமிராண்டித்தனத்திலிருந்து பண்பாடற்ற கால கட்டத்தின் வழியே நாகரிகத்திற்கான மனிதகுல முன்னேற்றத்தின் திசைவழிகளைப் பற்றிய ஆராய்ச்சிகள்** என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. எங்கெல்ஸ் தன்னுடைய நூலின் நான்காவது பதிப்பின் (1891) முன்னுரையில், மார்கனின் **பண்டைய சமுதாயம்** "எனது இந்த நூலுக்கு ஆதாரமாயிருக்கும் புத்தகமே"* என்று மீண்டும் ஒரு முறை கூறியிருக்கிறார்.

இந்த மாபெரும் அமெரிக்க இனப் பரப்பு

* K. Marx and F. Engels, *Selected Works,* in three Volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1983, p. 201.

விளக்கவியல் ஆராய்ச்சியாளர் செய்த ஆராய்ச்சிகளின் மீதான அக்கறையை விளக்கி எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதுகிறார்: ''... நாற்பது ஆண்டுகளுக்கு முன் மார்க்ஸ் கண்டுபிடித்திருந்த, வரலாறு பற்றிய அதே பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தைத்தான் மார்கன் தமது சொந்த வழியில் அமெரிக்காவில் மீண்டும் கண்டுபிடித்தார்; பண்பாடற்ற காலகட்டத்தையும் நாகரிகத்தையும் மார்கன் ஒப்புநோக்குகையில், மார்க்ஸ் எந்த முடிவுகளுக்கு வந்திருந்தாரோ அதே முடிவுகளுக்கு, பிரதான விஷயங்களில், அந்தக் கருத்தோட்டம் மார்கனையும் கொண்டு வந்துவிட்டது.''*

**பண்டைய** சமுதாயத்தைப் பற்றி மார்க்ஸ் தயாரித்த நுணுக்கமான குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலை எழுதுகின்ற பொழுது எங்கெல்ஸ் மார்கன் சுட்டிக் காட்டியதைப் போன்ற அதே பிரச்சினைகளை ஆராய்ந்தார். கிரேக்கர்கள், ரோமானியர்கள், மற்றும் ஜெர்மானியர்களைப் போன்ற ஐரோப்பிய மக்களினங்களின் கடந்த காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளில் கூட அவர்களுடைய ''முதுகுகளுக்குப்'' பின்னால் ''காட்டுமிராண்டி (உதாரணமாக, இரகுவோஸ்) தலையை நீட்டுவதைக்''** காண முடிவது (மார்க்ஸ் உபயோகித்த தத்ரூபமான உவமையை எங்கெல்ஸ் மறுபடியும் கையாண்டார்) ஏன் என்பதை

* *Ibid.*, p. 191.

** *Ibid.*, p. 269.

மற்ற விஷயங்களுடன் இது விளக்குகிறது.

மார்கனின் விஞ்ஞான நேர்மையை உயர்வாக மதித்துப் போற்றி, அவருடைய புத்தகத்தை அக்காலத்தில் சகாப்தத்தை உருவாக்குகின்ற ஒருசில படைப்புகளில் ஒன்று என்று வர்ணித்த எங்கெல்ஸ், முதலாளித்துவ விஞ்ஞானம் மார்கனுடைய புத்தகத்தின் விஷயத்திலும் மார்க்சினுடைய முக்கிய நூலின் விஷயத்திலும் ஓரளவு ஒரே மாதிரியாக நடந்து கொண்டதை விவரிக்கிறார்: ''மேலும், ஜெர்மனியில் அதிகாரவர்க்கச் சார்புள்ள பொருளாதார நிபுணர்கள் எப்படி **மூலதனம்** நூலிலிருந்து உற்சாகமாக இலக்கியக் களவு நடத்தியும் அந்த நூலைப் பற்றி விடாப்பிடியாக மௌனம் சாதித்து அமுக்கியும் வந்தார்களோ, அதே மாதிரிதான் இங்கிலாந்தில் 'வரலாற்றுக்கு முந்திய' விஞ்ஞானத்தின் சார்பாகப் பேசியவர்கள் மார்கன் எழுதிய **பண்டைய சமுதாயம்** என்ற நூல் விஷயத்தில் நடந்து கொண்டார்கள்.'' * சிறிது காலத்துக்கு முன்னர் மரணமடைந்திருந்த மார்கனின் புகழ் மற்றும் சாதனையைப் பற்றி முதலாளித்துவ விஞ்ஞானம் கடைப்பிடித்த மௌனம் என்ற சுவரை எங்கெல்சின் புத்தகம் நொறுக்கியது.

சார்லஸ் டார்வின் எழுதிய **உயிரினங்களின் தோற்றம்** என்ற நூலைப் போல **பண்டைய சமுதாயம்** தன் காலத்தில் பொதுவான விவாதப் பொருளாயிற்று. அது சிலரிடம்

---

* *Ibid.*, p. 191.

உண்மையான உற்சாகத்தையும் மற்றவர் களிடம் அவதூறு செய்கின்ற விமர்சனத் தையும் தூண்டியது. இந்த விளைவுக்கு சமூகக் காரணங்கள் இருந்தன. ''மார்க்சியத் தத்துவம் மார்கனுடைய ஆய்வுரைகளில் சிலவற்றை ஏற்றுக் கொண்ட விஷயம் அவ ருடைய நூலின் விதியின் மீது தீர்மானமான தாக்கத்தைக் கொண்டிருந்ததைப் போலவே பொதுவாக இனப் பரப்பு விளக்கவியல் சிந்தனையின் விதியின் மீதும் கொண்டிருந்தது'' என்று ராவூல் மக்காரியஸ் **பண்டைய சமுதாயத் தின்** முதல் பிரெஞ்சு மொழிபதிப்பின் முன் னுரையில் எழுதினார். ''மார்க்சியத்தை நெருங்கிய மார்கன், மேற்கத்திய மானிட வியல் தான் எதுவாக இருக்க விரும்புகிறது என்பதை அதிகத் துல்லியமாக வகுத்துரைப் பதன் மூலம் தன்னை வரையறுப்பதற்கு முயற்சி செய்த முனைக் கோடியானார்...'' மேலும் மக்காரியஸ் பின்வருமாறு எழுது கிறார்: ''டார்வினிசத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்து அமெரிக்காவில் அதைப் போதிப் பதைக் கூடத் தடை செய்வதில் வெற்றி யடைந்த பழமைவாதச் சக்திகள் உயிரியல் துறையில் அடைந்த தோல்விக்குப் பிறகு சமூகவியல் பரிணாமவாதத்தை எதிர்ப்பதில் தம்முடைய சக்தியை ஒன்று குவித்தன. அது மார்க்சியத்தோடு இணைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளத் தக்க, சிறப்பான புரட்சிகர வடிவத்தை அடைந்தபடியால் இந்தச் சண்டை

மிகவும் உக்கிரமாக நடைபெற்றது.'' *

மார்கனுடைய தத்துவத்தைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் காட்டிய நன்னோக்குடைய அக்கறையைப் பற்றி முதலாளி வர்க்க சித்தாந்திகள் கவலைப்பட்டார்கள், அஞ்சினார்கள். இது இரண்டு விளைவுகளை ஏற்படுத்தியது. முதலாவதாக, மார்கனுடைய நூலைப் பற்றி மௌனத்தைக் கடைப்பிடித்தது மாறி விஷமத்தனமான தாக்குதல்கள் தொடங்கின. இரண்டாவதாக, மார்கனின் தத்துவத்தை மார்க்சியத்துடன் இனங்கண்ட முதலாளி வர்க்க ஆசிரியர்கள் **பண்டைய** சமுதாயத்தில் இருந்த முரண்பாட்டையும் சில தவறான கருத்துகளையும் மார்க்சியத்தின் மீது சுமத்தி அதைக் களங்கப்படுத்த முயற்சி செய்தார்கள். இத்தகைய இருவிதமான தாக்குதல்களையும் ராவூல் மக்காரியஸ் குறிப்பிடுகிறார்: ''அவருடைய [மார்கனின்] நூல் மார்க்சியப் போதனையின் மீது ஒட்டிவைக்கப்பட்டு அதன் கலவரப்படுத்தும் ஒளியைப் பிரதிபலித்தது. அவர் குடும்பப் பரிணாமத்தின் உருவரைகளை எடுத்துக்காட்டினார்; அதற்குப் பின்னால் ஒரு சமூகப் பரிணாமம் புலப்பட்டது; மார்க்சின் தத்துவத்தில் சுட்டிக்காட்டப்படுகின்ற சமூகப் பரிணாமமாக மட்டுமே அது இருக்க முடியும்.'' அதைத் தொடர்ந்து பிரெஞ்சு இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியாளர் பின்வருமாறு எழுதுகிறார்: ''பரிணாம

---

* R. Makarius, *op. cit.,* p. XIV.

வாதத்தைப் பற்றிய அவருடைய [மார்கனின்] கருத்தோட்டத்தின் குறைகளும் முரண்பாடுகளும் அதை மார்க்சியத்தின் பலவீனமாக மாற்றின. அதைத் தாக்குவது பொதுவில் சமூகப் பரிணாமம் என்ற கருத்தைத் தாக்குவதாக, மார்க்சிய மூலவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் மார்க்சியத்தின் முக்கியமான கருத்துகளில் ஒன்றை தாக்குவதாக இருந்தது.'' *

மார்கனைப் பற்றிய அணுகுமுறைக்கும் எங்கெல்சைப் பற்றிய அணுகுமுறைக்கும் இடையிலிருந்த தொடர்பை 1964இல் **பண்டைய சமுதாயத்தின்** புதிய பதிப்பை வெளியிட்ட எலியனோர் லீகோக் இன்னும் தெளிவாக எடுத்துக்காட்டினார். ''மார்கனுடைய நூல் எங்கெல்சினுடைய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலுக்கு அடிப்படையாக இருந்த அக்காலத்திலிருந்தே மார்கனைப் பற்றிய வாதங்கள் பெரும்பாலும் மார்க்சிற்கு எதிரான மறைமுக வாதங்களாக இருந்தன'' ** என்று லீகோக் சுட்டிக்காட்டினார்.

மார்கன் வரலாற்றைப் பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தைச் சுதந்திரமாக வகுத்துக் கொண்ட ஆராய்ச்சியாளர் என்று எங்கெல்ஸ் வர்ணிக்கிறார். எனினும் மார்கன் முரணில்லாத பொருள்முதல்வாதி என்பது இதன்

* *Ibid.,* pp. XXI, XV.

** Eleanor Leacock, "Morgan and Materialism", *Current Authropology*, Chicago, April 1964, p. 110.

அர்த்தமல்ல. திறமையும் நேர்மையும் உள்ள விஞ்ஞானி, தன் காலத்திய முதலாளித்துவ விஞ் ஞானத்தின் கருத்துமுதல்வாதக் கருத்தமைப்பு களிலிருந்து தொடங்கியபோதிலும் சாராம் சத்தில் பொருள்முதல்வாத முடிவுகளுக்கு வர முடியும் என்பதைத்தான் எங்கெல்ஸ் வலியுறுத்தினார். விஞ்ஞான அக்கறைகளிலும் ஆராய்ச்சிப் பொருளிலும் விஞ்ஞான சோஷ லிசத்திலிருந்து வெகு தொலைவுக்கு அப்பா லிருப்பதாகத் தோன்றிய ஒரு விஞ்ஞானி மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய வரலாற்று வளர்ச்சித் தத்துவத்தின் பல அம்சங்களை சிறப்பாக ஆதாரப்படுத்தினார்.

எனினும் மார்கனுடைய கருத்துகள் — பண்டைக்கால வரலாற்றை விளக்குவதில் கூட — மார்க்சியத்துக்குச் சமமானவை அல்ல என்று எங்கெல்ஸ் உறுதியாக கருதினார். **பண்டைய சமுதாயம்** என்ற நூலைப் பற்றிய மார்க்சின் நுணுக்கமான குறிப்புகள் விமர் சனக் கருத்துகளைக் கொண்டிருந்தன, அவற் றைக் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற் றின் தோற்றம்** நூலில் வெளியிட்டிருப்பதாக எங்கெல்ஸ் அந்நூலின் முன்னுரையில் விசேஷ மாக குறிப்பிட்டார். மார்கன் தன்னுடைய நூலின் பல பகுதிகளைத் தவறான தகவல் களின் அடிப்படையில் எழுதினார். ‘‘பொரு ளாதார வாதங்கள் மார்கனுடைய காரியத் துக்குப் போதியவையாயிருந்தன, ஆனால் என் காரியத்துக்கு அவை கொஞ்சங்கூடப் போதவில்லை. அவற்றை நானே புதிதாக

விளக்கி விவரித்து வைத்திருக்கிறேன்''* என்று எங்கெல்ஸ் எழுதினார். எனவே மார்கன் சேகரித்த விவரங்களுக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமலேயே எங்கெல்ஸ் தன்னுடைய புத்தகத்தின் இரண்டாம் பாதியை எழுதினார் என்பது இதிலிருந்து தெரிய வரும். மார்கன் கண்டுபிடித்த பூர்விக சமூகத்தின் பரிணாம விதிகளை அவர், பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்புக்குப் பதிலாக வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் தோன்றிய புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் சமூக உள்ளமைப்புடன் தர்க்க ரீதியாகப் பொருத்தினார் எனலாம். அந்த சமூக உள்ளமைப்பு மார்கனின் ஆராய்ச்சித் துறைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. மார்கன் பண்டைக்கால வரலாற்றைப் பிரித்த அநேகமாக எல்லாக் காலகட்டங்களுக்குமே எங்கெல்ஸ் கணிசமான, கோட்பாட்டு ரீதியான விவரங்களைச் சேர்த்திருந்தார்.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் மற்றும் பண்டைய சமுதாயத்துக்கும் இடையிலுள்ள பொருளின் இணைப்பு பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகமாக மாற்றமடைந்ததைப் பற்றிய எங்கெல்ஸ் மற்றும் மார்கனுடைய கருத்துகளை ஒப்புநோக்கும் பிரச்சினையைத் தத்துவஞான-வரலாற்று நோக்கில் மிகவும் முக்கியமானதாக்கும். இப்பொருளைப்

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 192.

பற்றிய முதலாளித்துவ ஆராய்ச்சிகள் அவை முற்றொருமை என்றில்லாவிட்டாலும் ஒரே மாதிரியானவை என்று விடாப்பிடியாகக் கூறி வருவதால் அத்தகைய ஒப்பீடு மிகவும் முக்கியமானதாகும். மேலும் மேற்கத்திய ஆசிரியர்கள் எங்கெல்ஸ் மார்கனுடைய சீடர், அவர் தன்னுடைய சோஷலிசக் கருத்துகளை ஆதாரப்படுத்துவதற்குப் பண்டைய சமுதாயத் தின் பரிணாமத்தைப் பற்றிய மார்கனின் தத்துவத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் அடிக்கடி எழுதுகிறார்கள்.

இது ஒரு பாரபட்சமான அணுகுமுறை. இது அடிப்படையில் தவறானது. முதலா வதாக, மார்கனுடைய புத்தகம் வெளியிடப் படுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே வர்க்க சமூகத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியை யும் பற்றி எங்கெல்ஸ் ஆராய்ச்சி செய்து கொண் டிருந்தார். **இயற்கையின் இயக்கவியல், டூரிங்குக்கு மறுப்பு** ஆகிய நூல்கள் இந்த உண்மையைப் பறைசாற்றுகின்றன. இரண்டாவதாக, மார் கனும் எங்கெல்சும் பண்டைய சமுதாயத்தைப் பற்றி வெவ்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ச்சி செய்தார்கள், வெவ்வேறு வழிகளில் சென்று அதை ஆராய்ந்தார்கள். மார்கன் இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியாளர் என்ற முறையில் இப்பொருளை ஆராய்ந்தார். அமெரிக்க செவ்விந்தியர்களின் சமூக அமைப் பைப் பற்றிய அளவற்ற அனுபவ பூர்வமான விவரங்களை நுணுக்கமான ஒப்புநோக்கு-வரலாற்றுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார்.

எங்கெல்ஸ் முக்கியமாக இயக்கவியல்-பொருள் முதல்வாத உலகக் கண்ணோட்டத்தின் பொதுவான கோட்பாடுகளைப் பின்பற்றி பண்டைக்கால வரலாற்றின் பிரச்சினைகளைப் பற்றிய தன்னுடைய பகுப்பாய்வில் அதைப் படைப்புத் திறனுடன் கையாண்டார். எங்கெல்ஸ் மார்கனுடைய ஆராய்ச்சிகளுடன் தான் செய்த ஆராய்ச்சி முடிவுகள் (பண்டைக்கால ஜெர்மானியர்கள் மற்றும் கெல்டுகளின் வரலாற்றைப் பற்றிய முடிவுகள்) உட்பட மற்றவர்களுடைய ஆராய்ச்சி முடிவுகளையும் சேர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் அவர் காலத்திய வரலாற்று ஆராய்ச்சியிலிருந்த பல ''இடைவெளிகளையும்'' நிரப்பினார் (தம் காலத்திய வரலாற்று ஆராய்ச்சி உதிரியாகவும் நம்ப முடியாத விதத்திலும் இருக்கிறது என்று எங்கெல்ஸ் அடிக்கடி புகார் செய்வதுண்டு). மூன்றாவதாக, மார்கன் உள்ளுணர்ச்சி கொண்ட பொருள்முதல்வாதி (அவருடைய முறையியல் கருத்தமைப்புகளில் அல்ல, அவருடைய சிந்தனை முறையில்) ஆவார். **பண்டைய சமுதாயத்தின்** பல்வேறு பகுதிகளுக்கு அவர் கொடுத்த தலைப்புகள் (''புதிது புனைதல் மற்றும் கண்டுபிடித்தலின் மூலம் அறிவின் வளர்ச்சி'', ''நிர்வகிப்பது என்ற கருத்தின் வளர்ச்சி'', ''குடும்பம் என்ற கருத்தின் வளர்ச்சி'' மற்றும் ''சொத்துடைமை என்ற கருத்தின் வளர்ச்சி'') ஆசிரியருடைய கருத்துகளின் கருத்துமுதல்வாதத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

மேலும் அவர் கடவுள் அருளையும் காட்டு மிராண்டியிலிருந்து பண்பாடற்ற மனிதனையும், பண்பாடற்ற மனிதனிலிருந்து நாகரிக மனிதனையும் படைப்பதற்குப் பேரறிவின் உத்தேசத்தையும் தம் புத்தகத்தில் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார். முன்னேற்றம் என்பது மனித வரலாற்றின் குணாம்சம் என்று கருதிய மார்கன் அதே சமயத்தில் பிரதானமாக புதிது புனைதல் மற்றும் கண்டுபிடிப்புத் துறைக்கு மட்டுமே இந்த முன்னேற்றம் உரியதென்று கூற முற்பட்டார்; சமூக அமைப்புகள் மற்றும் வடிவங்களின் வளர்ச்சியை ஒற்றைப் பரிமாணத்தைக் கொண்ட வளர்ச்சி நிகழ்ச்சிப் போக்காகக் கருதினார். எனினும் அவர் தீவிரமான மதப்பற்றுடையவர் அல்ல, முதலாளி வர்க்க சித்தாந்தியும் அல்ல என்பதை அவருடைய நாட்குறிப்புகளும் கடிதங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

பொருளாதாரம், நிர்வாகம், குடும்பம் மற்றும் சொத்துத் துறைகள் பரஸ்பரத் தொடர்புடனும் ஒன்றை ஒன்று நிர்ணயித்தும் வளர்ச்சி அடைகின்றன என்று கருதாமல் அவை தனித்தனியாகவும் இணைகரமாகவும் வளர்ச்சி அடைகின்றன என்று மார்கன் கருதினார். *

மார்கனால் பண்டைக்கால வரலாற்றைப் பற்றிய தன்னுடைய ஆராய்ச்சியையும் தம் காலத்திய சமூகப் பிரச்சினைகளையும் ஒன்

* Lewis H. Morgan, *Ancient Society,* The Belknap Press, Cambridge (Mass.), 1964, p. 133.

றாக இணைத்துப் பார்க்க இயலவில்லை; அதற்கு அவர் முயற்சி செய்யவுமில்லை. மார்கன் வெறும் அறிவுத்துறை ஆராய்ச்சிக்கு அப்பால் போகவில்லை. இது எங்கெல்சுக்கும் அவருக்குமிருந்த முக்கியமான வேறுபாடாகும். வெவ்வேறு வரலாற்றுச் சகாப்தங்களில் சமூக புலப்பாடுகளின் தோற்றத்தையும் தொடர்வரிசை முறையையும் அவை படிப் படியாக மாற்றமடைவதையும் அதற்கு எடுத்துக் கொள்கின்ற நீண்ட காலத்தையும் குறிப்பிட்டதுடன் சாராம்சத்தில் அவர் நின்று விட்டார். மேலும் மார்கன் இந்த நிகழ்வுப் போக்கை அறிவு மற்றும் கருத்துகளின் வளர்ச்சியுடன் மிகவும் உறுதியாக இணைத்தார். பண்டைக்கால உலகத்தில் சமூக மாற்றங்களின் முன்னறிவிப்பாளன் என்ற வகையில் ‘‘சமூக இயக்கம்’’ மற்றும் ‘‘சமூக அதிருப்திக் கூற்றைப்’’ * பற்றி அவர் எப்பொழுதாவது மட்டுமே குறிப்பிடுகிறார், மிகவும் தளர்வாகவே குறிப்பிடுகிறார்.

வரலாற்று வளர்ச்சியில் மார்கன் ஒதுக்கிய இந்த அம்சத்தை எங்கெல்ஸ் வர்க்க நிலைகளிலிருந்து ஆராய்ந்தார். முதலாளித்துவப் புரட்சிகளுக்கு நெடுங்காலத்துக்கு முன்பே சமூக மாற்றங்களைக் கொண்டு வந்தது பேரறிவு அல்ல, பண்டைக்கால உலகத்தின் பெருந்திரளான மக்கள், உழைக்கும் மக்கள்தான் என்பதை அவர் எடுத்துக்காட்

* Lewis H. Morgan, *op. cit.*, p. 221.

டினார். அதன் விளைவாக பண்டைக்கால உலகத்தின் வரலாற்றுக்கும் நவீன உலகத்தின் வரலாற்றுக்கும் இடையிலுள்ள இணைப்பைப் பற்றி பொருள்முதல்வாத விளக்கம் தருவதற்கும் அதை ஒற்றை நிகழ்ச்சிப் போக்காகக் காட்டுவதற்கும் எங்கெல்சினால் முடிந்தது. இது இந்நிகழ்ச்சிப் போக்கின் நியாயமான கட்டங்களுக்கு இடையேயுள்ள ஆழமான பண்பு ரீதியான மாற்றங்களை விலக்கவில்லை, மாறாக அவற்றை முன்னனுமானிக்கிறது. பண்பாடற்ற நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு மாற்றங்களை பொருளாதாரம், குடும்பம், நிர்வாகம் மற்றும் சொத்துடைமை என்ற வடிவங்களில் இனங்கண்டது மார்கனுடைய சிறப்பு; ஆனால் அவர் சுரண்டல், ஒடுக்குமுறையின் தோற்றம் மற்றும் வளர்ச்சியையும் பொதுவாக உலக வரலாற்றின் வர்க்க-பகைமுரண்பாட்டுக் கட்டத்தின் பிரத்யேகக் கூறுகளையும் விசேஷமாக ஆராயவில்லை. அதே சமயம் அவருடைய ஆராய்ச்சி முடிவுகள் பூர்ஷ்வா சமூகவியலின் தத்துவார்த்த அடிப்படையாகத் திகழ்ந்தவையும் மார்கனின் ஆரம்ப முறையியல் நிலைகளாகவும் இருந்த கண்ணோட்டங்களை இறுதியாக நிராகரித்தன.

வரலாற்று நிகழ்ச்சிப் போக்கைப் பற்றிய மார்கனுடைய வரையறுப்பை எங்கெல்ஸ் இயக்கவியல்-பொருள்முதல்வாத ரீதியில் விளக்கினார். இந்த விளக்கம் சமூக-பொருளாதார அமைப்புகளின் வளர்ச்சியைப் பற்றிய மார்க்

சியத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. மார்கனுடைய வரையறுப்பில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு (காட்டுமிராண்டிக் காலகட்டம்), வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் (சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் அடிப்படையாகக் கொண்ட நாகரிகம்) மற்றும் முதலாவதிலிருந்து இரண்டாவதற்கு மாறுகின்ற கட்டம் (அதற்கு மார்கன் கொடுத்த பண்பாடற்ற நிலை என்ற பெயரை எங்கெல்ஸ் வைத்துக் கொண்டார்) ஆகியவற்றின் உருவரையை எங்கெல்ஸ் கண்டார்.

மார்கன் பண்டைக்கால வரலாற்றைப் பற்றிய தெளிவான தோற்றம்-பரிணாமச் சித்திரத்தைக் கொடுத்தார் என்றால் எங்கெல்ஸ் மார்கனால் முறைப்படுத்தப்பட்ட பண்டைக்கால வரலாற்றின் காலப்பிரிவு வரையறுப்பை வர்க்கப் போராட்டம், சமூகப் புரட்சி என்ற கருத்துகளைக் கொண்டு செழுமைப்படுத்தினார். எங்கெல்ஸ் மார்கனுடைய கருதுகோளுக்குப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் விளக்கமளிப்பதுடன் நிற்கவில்லை. பண்டைய சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியின் முக்கியமான விதியை, அதாவது உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மனித சமூக வளர்ச்சிக்கு அடிப்படை, அவை தனிச்சொத்து, வர்க்கங்கள், வர்க்க முரணியல்பு மற்றும் அரசைத் தோற்றுவித்தன என்பதையும் அவர் கண்டுபிடித்தார். இந்த விதி மார்கனுடைய நூலில் இல்லை, ஆனால் இந்த விதி இல்

லாமல் மனிதகுல வரலாற்றுக்கு முந்திய கட்டத்தின் சமூக நிகழ்ச்சிப் போக்குகளை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.

மார்கனைப் பின்பற்றி எங்கெல்சும் தாய் வழிக் குலத்தைப் பூர்விக மனிதர்களின் சுய ஒழுங்கமைப்பின் ஆரம்ப வடிவமாக, சமூகத்தின் தொடக்க ''அணுவாகக்'' கருதினார். உற்பத்தி வளர்ச்சியின் அடிப்படையில் இதிலிருந்தே பல்வகையான சமூக அமைப்புகள் தோன்றின.

மேற்கத்திய ஆசிரியர்கள் சில சமயங்களில் தாய்வழி அமைப்பை ஆண்களின் மீதான பெண்களின் பரிபூரண ஆட்சி என்று தவறாகக் கருதுகிறார்கள்; இது போர்க்குணமுள்ள அமேசான்களை (பெண்ணுரிமைவாதத்தை உருவாக்கியவர்கள்) பற்றிய புராணக்கதைகளை நினைவூட்டுகிறது. தாய்வழி அமைப்பு என்பது குலச் சமுதாயத்தின் ஆரம்பக் கட்டம், அக்கட்டத்தில் மரபுவழி பெண்களிடமிருந்து கணக்கிடப்படுகிறது என்றுதான் மார்கனும் எங்கெல்சும் கூறினார்கள். இவ்வமைப்பில் பெண்கள் ஆண்களைப் பூரணமாய் அடக்கி ஆண்டார்கள் என்பது அவர்களுடைய கருத்தல்ல. தாய்வழிச் சமூகத்தில் ஆண்களும் பெண்களும் சமமாக இருந்ததை எங்கெல்சும் மார்கனும் அங்கீகரிக்கிறார்கள். அத்துடன் பெண்களின் வீட்டு வேலை மற்றும் உணவு சேகரிக்கின்ற வேலைக்கு அதிகமான பொருளாதார முக்கியத்துவமும் தாய்வழி மரபுரிமையும் இருந்தன.

இவ்வாறாக இரத்த உறவு மற்றும் உண்மையான திருமண-குடும்ப உறவுகள் ஆகிய முறைகளுக்கு இடையிலுள்ள முரண்பாடுகள் இனங்கண்டு கொள்ளப்பட்டன. குலமரபுச் சமுதாய அமைப்பு பொருளாதார முன்னேற்றத்தின் விளைவாக ஒருதார மணம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது என்று மார்கன் எடுத்துக்காட்டினார். இவை அனைத்தும் அக்காலத்திய விஞ்ஞானத்துக்குப் புதியவை; எனவே இவை முதலாளி வர்க்க அறிஞர்கள் மத்தியில் கொந்தளிப்பைத் தூண்டின. மேலும் குலமரபுச் சமுதாயத்தைப் பற்றி மார்கனுடைய உள்ளுணர்ச்சி ரீதியான பொருள்முதல்வாதக் கருத்துகளும் முடிவுகளும் மார்க்சும் எங்கெல்சும் தம்முடைய நூல்களில், கூட்டங் கூட்டமாக வாழ்ந்த மனிதர்களின் உணர்வு, உழைப்பின் எளிமையான, விலங்குலகத்திற்குரிய வடிவங்கள், இனக்குழு உடைமை, குலமரபுக் குழு ஜனநாயகம், குலமரபு உறவுகளின் நஞ்சுக்கொடியுடன் இன்னும் பிணைக்கப்பட்டிருந்த தனிநபர்களின் பூர்விக ஒரே சீரான தன்மை மற்றும் சமூக ரீதியான ஒற்றுமை, பூர்விகக் கூட்டுச் சமூகங்களின் ஒதுக்கமான தன்மை மற்றும் சுயபூர்த்தி, தனிச்சொத்து, அரசு அதிகாரம், மனிதனை மனிதன் சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் தோற்றத்தின் பொருளாதாரக் காரணங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறிய கருத்துகளுடன் பல வழிகளில் பொருந்தியிருந்தன.

மார்கனுடைய விஞ்ஞான முடிவுகள் செழுமையான நிலத்தின் மீது விழுந்தன. மார்க்சும் எங்கெல்சும் அவற்றின் கருத்துமுதல்வாதப் பூச்சுகளையும் சேர்த்தல்களையும் நீக்கினார்கள், அவற்றை வரலாற்றைப் பற்றிய இயக்கவியல்-பொருள்முதல்வாதக் கருத்தின் ஒளியில் ஆராய்ந்தார்கள், அவற்றுடன் புதிய, பொதுமைப்படுத்தப்பட்ட விஞ்ஞானத் தகவல்களைக் கூடுதலாக இணைத்தார்கள். அமெரிக்க மானிடவியல் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த குலமரபுச் சமுதாய வாழ்க்கையைப் பற்றிய நியதிகளை இம்முறையில் பார்த்த பொழுது மனித குலத்தின் பூர்விக வரலாற்றுக் கட்டத்தைப் பற்றிய மிகவும் சிக்கலான, புரிந்து கொள்ள இயலாத பிரச்சினைகளை விளக்க முடிந்தது. எங்கெல்ஸ் (மார்க்சின் குறிப்புகளின் உதவியுடன்) **பண்டைய சமுதாயத்தைப்** படைப்பாற்றலுடன் விளக்கிக் கூறியதானது விஞ்ஞானத்தால் ஆதாரப்படுத்தப்பட்ட மார்கனுடைய தத்துவ முடிவுகளுக்குப் புதிய வாழ்க்கையைக் கொடுத்தது, அவற்றின் அறிதல் திறனைப் பெருக்கியது, அன்றைய முதலாளி வர்க்க விஞ்ஞானிகளின் வாதாடும் அறைகளிலிருந்து அவற்றை அகற்றியது, **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலின் மூலம் அவற்றை அன்றைய காலத்தின் முன்னணித் தொழிலாளர்களுக்கும் அறிவுஜீவிகளுக்கும், பிறகு முற்போக்கு மனித குலம் அனைத்துக்கும் வழங்கியது.

## 2. பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் (காட்டுமிராண்டிக் காலகட்டம்)

மார்கன் விவரித்துக் கூறிய காட்டுமிராண்டிக் காலகட்டத்தின் அமைப்பைப் பற்றி எங்கெல்ஸ் தன்னுடைய நூலில் திருப்பிச் சொல்லும் பொழுது அதன் தன்னிச்சையான பொருள்முதல்வாத சாராம்சத்தை வெளிப் படுத்தி வளர்க்கிறார். அவர் பேச்சின் ஆரம்பம், நிரந்தரமாக நெருப்பு உப யோகித்தல் மற்றும் வேட்டையாடுவதில் புதிய கட்டத்தைத் துவக்கிய வில், அம்பு கண்டு பிடிக்கப்பட்டது ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகிறார். மேலும் இவை அறிவு முயற்சிகளின் விளைவு மட்டுமே என்று எங்கெல்ஸ் கருதவில்லை, மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகளின் முற்போக்கான வளர்ச்சி யில் முதல் மற்றும் அடிப்படையான காலடி கள் என்ற வகையில் அவர் இந்நிகழ்ச்சிப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்கிறார். இக்கண்டுபிடித்தல்களுக்கும் புதிது புனைதல் களுக்கும் உயிர்பிழைப்பதற்கான போராட்டம் மட்டும் காரணமல்ல, மனிதர்கள் இயற் கையுடனும் தமக்கிடையிலும் ஏற்கெனவே சாதித்த இடைச்செயலின் அளவு மற்றும் சமூக புலப்பாடு என்ற முறையில் உழைப்பின்

வளர்ச்சி ஆகியவையும் காரணம் என்பது எங்கெல்சின் விளக்கமாகும்.

காட்டுமிராண்டித்தனத்தின் ஆரம்பக் கட்டம் உயிரியல் உலகத்துக்கும் சமூக வாழ்க்கைக்கும் இடையிலுள்ள இடையம்சமாக இருக்கிறது. காட்டுமிராண்டித்தனத்தின் ஆரம்பக் கட்டம் சாராம்சத்தில் ''இடைநிலைப் பிறவிகளின்'' பூர்விகக் கூட்டுச் சகாப்தத்தை ஒத்ததாகும். **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** *(1876)* என்னும் கட்டுரையில் எங்கெல்ஸ் இதைப் பற்றி ஏற்கெனவே எழுதியிருந்தார். பி. லவ்ரோவுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றில் *(1875)** இன்னும் முன்னதாகக்கூட இதைப் பற்றி எழுதியிருந்தார். **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் காட்டுமிராண்டி நிலையின் ஆரம்பக் கட்டத்தைப் பற்றிய வர்ணனையின் இறுதிப் பகுதி இதை எடுத்துக்காட்டுகிறது: ''வரலாற்றுக் காலத்தில் தெரிய வந்திருக்கின்ற மக்களினங்கள் எதுவுமே இந்த ஆதி மனித நிலையில் இருக்கவில்லை. இந்தக் காலப் பகுதி பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு நீடித்திருக்கக் கூடும் என்றாலும் அதைப் பற்றி நமக்கு நேரடியான ஆதாரம் கிடையாது. ஆனால் விலங்குலகிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதை ஒத்துக்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 479.

கொண்டால் இந்த மாற்றக் காலகட்டத்தை ஒத்துக்கொள்வதைத் தவிர்க்க முடியாது.'' *

இவ்வார்த்தைகளை எழுதுகின்ற பொழுது எங்கெல்ஸ் **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** எடுத்துக் கொண்ட சில பொருட்தலைப்புகளுக்குத் திரும்புகிறார். பூர்விக மனிதர்களுக்கு இடையில் தகவல் தொடர்புச் சாதனம் என்ற முறையில் பேச்சின் ஆக்கபூர்வமான பாத்திரத்தை அவர் மறுபடியும் சரியாக வலியுறுத்துகிறார். பேச்சு என்பது சுற்றுப்புற உலகத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கின்ற, பாதுகாக்கின்ற, ஒழுங்கமைக்கின்ற, அறிவிக்கின்ற சாதனம், அறிதல் மற்றும் நிர்வாகக் கருவி, அது மிருகங்களால் அடைய முடியாதது என்று எங்கெல்ஸ் கருதுகிறார். சொல் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கை ஒருங்கிணைக்கின்ற, சுற்றுப்புற உலகத்தின் மீதும் மிருகங்கள் மீதும் மனிதர்களின் கூட்டுச் செல்வாக்கை ஏற்படுத்துகின்ற சாதனமாகப் பயன்பட்டது என்று நவீன ஆராய்ச்சியாளர்கள் மேன்மேலும் அதிகமாகக் கருதுகிறார்கள்.** மனிதனுடைய பரிணாமத்தின் இறுதிக் கட்டங்களிலும் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் ஆரம்பக் கட்டங்களிலும் மொழியின் பாத்

---

* *Ibid.*, p. 204.

** ப. ஃபி. போர்ஷ்னெவ், **மனித வரலாற்றின் தொடக்கத்தைப் பற்றி**, மாஸ்கோ, 1974, பக்கங்கள் 352—360 (ருஷ்ய மொழியில்) பார்க்க.

திரம் அக்காலகட்டத்தைச் சேர்ந்த மிகவும் எளிமையான கோடாரி மற்றும் இதர கருவிகளை (சாராம்சத்திலே இவை மனிதனுடைய இயற்கையான உழைப்பு உறுப்புகளின் தொடர்ச்சியாக இருந்தன) காட்டிலும் குறையாத முக்கியத்துவத்தையும் செயல் திறனையும் கொண்டிருந்திருக்க வேண்டும் எனலாம். கூட்டு உழைப்பின் அவசியமான நிபந்தனை என்ற முறையில் மொழி, உருவாகி கொண்டிருந்த பூர்விக மனித கூட்டை ஒன்றுபடுத்துகின்ற, சுற்றியுள்ள பூர்விகக் கூட்டங்களிலிருந்து அதைப் பிரிக்கின்ற முதல் சாதனமாக இருந்தது.

காட்டுமிராண்டித்தனத்தின் இடைக் கட்டம் நெருப்பு என்னும் ''சக்திக் கருவியைக்'' கண்டுபிடிப்பதுடன் தொடங்குகிறது; மூலச் சிறப்பான பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு தோன்றியிருப்பதை அறிவிக்கிறது. நெருப்பு முற்றிலும் புதிய வேட்டைக் கருவி மட்டுமல்ல, அது உணவு சமைப்பதற்கு உபயோகப்படுகின்ற, கொடிய விலங்குகள் மற்றும் குளிர்ச்சியிலிருந்து பாதுகாக்கின்ற சாதனம் மட்டுமல்ல, நெருப்பு பூர்விக மனிதர்களின் சக்தி வளத்தையும் மக்கள்தொகைக் கட்டமைப்பையும் மரபுகளையும் அடிப்படையாக மாற்றியது. நெருப்பை உபயோகிக்கத் தெரியாத காலத்தில் மனிதனாக உருவாகிக் கொண்டிருந்தவன் நாளொன்றுக்கு 2,000 கிலோகலோரிகளுக்கும் குறைவாகப் பெற்றான் (பிரதானமாக உணவின் மூலம்,

அந்த உணவில் பாதி தாவர உணவாயும் பாதி இறைச்சியாகவும் இருந்தது). மனிதன் நெருப்பை உபயோகிக்கத் தெரிந்து கொண்டதும் அன்றாடம் 5,000 கிலோகலோரிகள் சக்தியை உட்கொள்ளுவது சாத்தியமாயிற்று. இதில் 3,000 கிலோகலோரிகள் உணவின் மூலமும் 2,000 கிலோகலோரிகள் ''சுகமளிக்கின்ற'' வெப்பத்தின் மூலமாகவும் கிடைத்தன.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு முதியவர்கள் ''நெருப்புக் காப்பாளர்களாக'' இருக்கும் வாய்ப்பு தோன்றியது. அதன் மூலம் அவர்களுடைய ஆயுட்காலம் நீடித்தது. இது ஒன்றை ஒன்று விரைவாக மாற்றுகின்ற தலைமுறைகளின் தொடர்புக் காலம் நீடிப்பதற்கு, உற்பத்தி மற்றும் சமூக அனுபவம் திரட்டப்பட்டு, பொதுமைப்படுத்தப்பட்டு கைமாற்றித் தரப்படுவதற்கு, இதரவற்றுக்கு அனுகூலமாயிருந்தது. இதற்கு முன்னர் மனிதர்கள் வசிப்பதற்குத் தகுதியில்லாதவை என்று கருதப்பட்ட இயற்கைப் பிரதேசங்களிலும் இடங்களிலும் (உதாரணமாக, குகைகள்) வசிப்பது நெருப்பின் மூலம் சாத்தியமாயிற்று; அதாவது நெருப்பு ஒரே சமயத்தில் இடப்பெயர்ச்சியையும் நிரந்தரமான குடியிருப்பையும் ஊக்குவித்தது. கடைசியாக, நெருப்பைப் பாதுகாப்பது மனித கூட்டின் எல்லா உறுப்பினர்களுக்கும் இடையில் ''கண்ணுக்குப் புலனாகின்ற'' முதல் பிணைப்பாகவும் எனவே அவர்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் தொடர்பின் நன்கு உணரப்படத் தக்க குறியீடாகவும் இருந்தது.

பூர்விக மனிதர்களின் வாழ்க்கையில் நெருப்பின் பாத்திரத்தை மார்கன் குறைவாக மதிப்பிட்டார் (உராய்வின் மூலம் நெருப்பை உண்டாக்கக் கண்டுபிடித்ததை மார்கன் தோல்செருப்பு, பனிச்சறுக்கு கட்டை ஆகியவற்றைக் கண்டுபிடித்ததுடன் சேர்த்துக் கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும்). இது மார்க்சுக்கு வியப்பைக் கொடுத்தது. இது ஒரு புறமிருக்க, காட்டுமிராண்டித்தனத்தின் இடைக் கட்டத்தைப் பற்றிய கற்பனைச் சித்திரத்தில் **பண்டைய சமுதாயத்தின்** ஆசிரியரைக் காட்டிலும் எங்கெல்ஸ் கணிசமாக முன்னேறிச் சென்றார் என்பதற்குப் பல முக்கியமான விவரங்களைக் கூற முடியும். உதாரணமாக, உயிர்வாழ்வதற்குரிய சாதனங்களின், குறிப்பாக உணவின் தோற்றுவாய்கள் அதிகரித்ததைக் கூறியதுடன் எங்கெல்ஸ் நின்றுவிடவில்லை. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கரடுமுரடான, பட்டை தீட்டப்படாத கற்கருவிகளுக்குப் பதிலாக சிலம்பம், ஈட்டி முதலிய முதல் ஆயுதங்கள் உருவாக்கப்பட்டதையும் ''இயற்கையான'' நெருப்பிலிருந்து உராய்வின் மூலம் நெருப்பைத் தயாரிப்பதற்கு மாறியதையும் எங்கெல்ஸ் வலியுறுத்தினார். அதே சமயத்தில் அவர் மீன் உணவைப் பற்றிய மார்கனுடைய கருத்தையும் விரிவுபடுத்தி அதில் நண்டுகள், சிப்பி, நீரில் வசிக்கின்ற இதர பிராணிகளையும் சேர்த்துக் கொண்டார். மேலும் சுடுசாம்பலிலோ, குழி அடுப்புகளிலோ சுடப்பட்ட, ஸ்டார்ச்சை தரத்தக்க

வேர்க்கிழங்குகள் உபயோகிக்கப்பட்டதைக் காட்டிலும் வேட்டையாடுதலின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

பூர்விக மனித வாழ்க்கையின் பொருளாயத அடிப்படை மற்றவற்றைக் காட்டிலும் தீயுண்டாக்கும் கலையிலும் வேட்டையாடுதலிலும் இருந்தது என்று எங்கெல்ஸ் கண்டார். மார்கனுடைய கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே எங்கெல்ஸ் **இயற்கையின் இயக்கவியலில்** சேர்க்கப்பட்டுள்ள **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** மற்றும் இதர கட்டுரைகளில், உராய்வின் மூலம் தீயுண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்தது மிக முக்கியமான முன்னேற்றம், அது உருவாகி வந்த மனிதனை விலங்குலகத்திலிருந்து முடிவாகப் பிரித்தது என்று எழுதினார். மனிதனால் தயாரிக்கப்பட்டு அவனுடைய கட்டுப்பாட்டில் உபயோகிக்கப்பட்ட நெருப்புக்கு சக்தி எனும் உழைப்புக் கருவிக்குரிய எல்லாக் கூறுகளும் உள்ளன. அதே சமயத்தில் எங்கெல்ஸ் பூர்விக மனிதர்களின் பொருளாதாரத்தில் மீன் பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்களின் உணவில் மீனுணவின் பங்கையும் சிறிதும் குறைத்து மதிப்பிடாமலேயே நவீன மனிதனின் மனநிலை-உயிரியல் அமைப்பை உருவாக்குவதில் வேட்டையாடுதல் ஒப்பிட முடியாத அளவுக்குப் பேரளவான பாத்திரத்தை வகித்தது என்பதை எடுத்துக்காட்டினார். பெரிய

பிராணிகளையும் கொடிய விலங்குகளையும் வேட்டையாடுகின்ற பொழுது, குறிப்பாக அவற்றைச் சுற்றி வளைத்து வேட்டைக் காரர்கள் இருக்கும் இடத்துக்கு விரட்டிச் செல்கின்ற பொழுது உழைப்புக் கூட்டுறவின் முதல் எளிய வடிவங்கள் தோன்றியதை அவர் சுட்டிக்காட்டினார். மேலும் வில்லும் அம்பும் வேட்டையாடுதலுக்கு ஒரு நிபந்தனை என்று மார்கன் கருதியதைப் போல எங்கெல்ஸ் நினைக்கவில்லை.

காட்டுமிராண்டி நிலையின் உச்சக் கட்டம் மூலச்சிறப்பான, முதிர்ச்சியடைந்த பூர்விகக் கூட்டுவாழ்வு சமூகக் காலகட்டமாகும். கடந்த காலப் பயணிகளின் நாட்குறிப்புகள் மற்றும் நவீன இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சி யாளர்களின் கள ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்ற சமூகம் அனேக மாக இதுவே. உணவைப் பெறுகின்ற மிகப் பலனுள்ள சாதனம் என்ற முறையில் வேட்டை யாடுதல் இக்கட்டத்தில் தாவர உணவைச் சேகரித்தலைக் கணிசமாக பின்னுக்குத் தள்ளி தான் மேன்மேலும் பொருளாதார முக்கியத்துவத்தைப் பெற்றது. முக்கியமான விஷயம் என்னவெனில் உழைப்புக் கருவிகளை உபயோகிப்பது மற்றும் அவற்றை உற்பத்தி செய்வது சம்பந்தமான செயல்நடவடிக்கையும் சிக்கலானதாக மாறுகிறது. போக்குவரத்துச் சாதனங்களைத் தயாரிப்பதும் சரக்குகளை எடுத்துச் செல்லுவதும் பரவலாகின்றன; இருப் பிடம் அமைத்தல், உடைகளைத் தயாரித்தல்,

இதரவற்றில் புதிய முறைகள் தோன்றுகின்றன. இவை அனைத்தும் ''வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்வதில் ஓரளவு தேர்ச்சித் திறத்தை'' பூர்விக மனிதனுக்கு ஏற்படுத்தின என்று எங்கெல்ஸ் சரியாகக் கூறினார். சேர்த்துக் கொள்ளப்பட்ட பிரதேசங்களின் மக்கள் தொகை வாய்ப்பு வளம் அதிகரித்ததும் மக்கள்தொகை அடர்த்தி பெருகியதும் அதன் இயற்கையான விளைவுகளாகும். இது ''கிராமம் கிராமமாகக் குடியேறுவதன் ஆரம்ப நிலைகளை''* முன்நிர்ணயித்தது. நாடோடி முகாம்கள் நிரந்தரமான அல்லது நெடுங் காலத்துக்கு இருக்கும்படி அமைக்கப்பட்ட இருப்பிடங்களின் தன்மையைப் படிப்படியாகப் பெற்று வந்தன. இருப்பிடங்களை அமைப்பதற்குக் கூர்மையாக்கப்பட்ட கற்கோடரிகளினால் தயாரிக்கப்பட்ட மரங்களும் பலகைகளும் உபயோகிக்கப்பட்டன.

எனவே, வில், அம்பு உபயோகம் மட்டுமே காட்டுமிராண்டி நிலையின் உச்சக் கட்டத்தின் பிரதான தன்மை என்று எங்கெல்ஸ் கருதவில்லை; மண்பாண்டங்களைச் செய்வதைக் கண்டுபிடித்ததையும் அவர் பிரதானமாகக் கருதவில்லை. பிந்தியதைப் பற்றி அவர் மார்கனுடைய கருத்தை எழுதுவதுடன் நின்றுவிடுகிறார், இதைப் பற்றித் தன்னுடைய கருத்தைக் கூறவில்லை. எங்கெல்சைப் பொறுத்த

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 205.

மட்டில் இது ஒரு முக்கியமான அம்சமல்ல என்பது மட்டும் தெளிவு. மறு பக்கத்தில் கூர்மையாக்கப்பட்ட கற்கோடரியும் நெருப்பும் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற சாதனங்கள் என்ற வகையில் முக்கியமானவை என்று எங்கெல்ஸ் கருதுகிறார். வில்லும் அம்பும் உணவைப் பெறுவதற்கும் பூர்விக மனிதனுடைய தற்காப்புக்கும் பயன்படுகின்ற சாதனங்களில் ஒன்று மட்டுமே. மேலும் வில்லும் அம்பும் எல்லா இடங்களிலும் பூர்விக மனிதர்கள் மத்தியில் காணப்படவில்லை. எனினும் இது வில், அம்பைக் கண்டுபிடிக்காத இனக் குழுக்களால் காட்டுமிராண்டி நிலையின் இடைக் கட்டத்திலிருந்து உச்சக் கட்டத்துக்கு முன்னேற முடியாது என்பதைக் குறிக்கவில்லை. வில், அம்பு நெடுந்தொலைவு செல்லக் கூடிய ஆயுதம். வேட்டையின் போது வில், அம்பு மனிதனை இரைக்கு ''அருகிலும்'' அதே சமயத்தில் நேரடியான ஆபத்து ஏற்பட முடியாதபடி ''தொலைவிலும்'' வைக்கின்றன. எனவே பெரிய, கொடிய பிராணிகள் இல்லாத இடங்களில் — உதாரணமாக, காடுகளிலும் மலைகளிலும் தெற்குக் கடல்களின் தீவுகளிலும் ஆஸ்திரேலியாவிலும் ஆப்பிரிக்காவிலுள்ள சில இடங்களிலும் — வில், அம்பை உபயோகிப்பது மட்டுமல்ல அவற்றைக் கண்டுபிடிப்பதும் அனேகமாக அர்த்தமற்றதாகியது. அத்தகைய இடங்களில் வளைதடி, அம்பெறிவதற்கான ஊதுகுழாய், எறிகண்ணி, சுருக்குக் கயிறு, கைவேல், ஈட்டி ஆகியவை உபயோ

கிக்கப்பட்டன.

வில், அம்பு காட்டுமிராண்டி நிலையின் உச்சக் கட்டத்தின் பொருளாயத அடிப்படை, மேலும் பூர்விக சமூகம் பண்பாடற்ற காலகட்டத்துக்கு வளர்ச்சியடைவதற்கு உந்தித் தள்ளிய சக்தி என்று அவற்றை மிகைப் படுத்துவதை எங்கெல்ஸ் மறுக்கிறார் என்பது தான் உண்மை. வில், அம்பைப் பற்றிய மார் கனுடைய கருத்தமைப்பின் சாரத்தை எங்கெல்ஸ் சுட்டிக்காட்டினார். வில், அம்பு இயந்திரவியல் சக்தியைச் சேகரிப்பதையும் உருமாற்றுவதையும் அடிப்படையாகக் கொண்டு மனிதனால் தயாரிக் கப்பட்ட முதல் அமைப்பு என்று மார்கன் கருதி னார். சுற்றுப்புறத்துக்குத் தன்னைத் தகவமைத் துக் கொள்வதிலும் அதை மாற்றுவதிலும் அதற்கு முந்திய மனித அனுபவத்தின் அடிப்படையான சாதனைகளின் ஒன்றுதிரட்டப்பட்ட வெளியீடு அது. வில், அம்பு சமூக முன்னேற்றத்தின் குறியீடு என்று எங்கெல்ஸ் கண்டார். ''வில், நாண், அம்பு ஆகியவை கூட்டாக அமைந்த ஒரு சிக்கலான கருவியாகும்; அதைப் படைப்ப தென்றால் அதற்கு முன் நெடுங்காலமாகச் சேகரித்து வந்த அனுபவமும் மேலும் அதிக மாக கூர்மையாக்கப்பட்ட அறிவுச் சக்தியும் இருந்திருக்க வேண்டும், ஆகவே அதே சமயத் தில் இதர பல புதிய படைப்புகளையும் அறிந் திருக்க வேண்டும்''* என்று எங்கெல்ஸ் எழுதி னார்.

* *Ibid.*

பல்வேறு குலமரபுக் குழுக்கள் வசித்த பல்வகையான புறச்சூழல் மற்றும் மக்கள் தொகை நிலைமைகள், சில இயற்கை வளங்கள், உழைப்புக் கருவிகள் மற்றும் உயிர் பிழைப்பதற்குரிய சாதனங்களின் பற்றாக்குறை, இன்னும் நிலையில்லாத சமூக வாழ்க்கை முறையின் திடீர் மாற்றங்கள் ஆகியவை வில், அம்பு பிரத்யேகமான வரலாற்றுப் பாத்திரத்தை வகிப்பதற்கு புறவய ரீதியாக இட்டுச் சென்றன. வில்லும் அம்பும் குலம், இனக்குழு வசிக்கின்ற பிரதேசத்தை மற்ற குழுக்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கின்ற முதல் ஆயுதமாகவும் அந்தக் குழுவின் சித்தத்தை மற்றவர்கள் மீது நிர்ப்பந்திக்கின்ற சாதனமாகவும் இருந்தன. வில்லும் அம்பும் மேன்மேலும் சிக்கலடைந்து கொண்டிருந்த சமூக உறவுகளை முதலில் பல்வேறு குல மற்றும் இனக்குழுக்களுக்கு இடையிலும் பிறகு அவற்றுக்குள்ளாகவும் ஒழுங்குபடுத்துகின்ற சக்தி வாய்ந்த பொருளாயதச் சாதனமாயின. இவ்விஷயத்தைப் பொறுத்தமட்டில், மண்பாண்டங்கள் செய்யும் கலையைக் கண்டுபிடித்ததன் முக்கியத்துவத்தை மார்கன் மிகைப்படுத்தியதைப் பற்றி கருத்து தெரிவிக்காத எங்கெல்ஸ் பின்வருமாறு கூறினார்: ''பண்பாடற்ற நிலைக்கு இரும்பு வாள் எப்படி நிர்ணயமான ஆயுதமாக விளங்கியதோ, நாகரிக நிலைக்குச் சுடு ஆயுதம் எப்படி நிர்ணயமான ஆயுதமாக விளங்கியதோ அது போலத்தான் காட்டுமிராண்டிக் காலகட்டத்துக்கு வில்லும் அம்

பும் நிர்ணயமான ஆயுதமாக விளங்கின''. *

மார்கன் பண்டைய சமுதாயத்தின் காலகட்டங்களைப் பற்றிய தன்னுடைய வகைப் படுத்தலில் ஓரளவில் டார்வினுடைய உயிரியல் பரிணாமவாதத்தின் சுவடுகளைத் தன்னை அறியாமலே புகுத்தினார் என்பதைக் குறிப்பிட வேண்டும். நுகர்வின் இயற்கையான ஆதாரங்களை விரிவுபடுத்தி தனிப்பட்ட உயிரியல் தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்யும் வடிவங்களின் இயக்கப் போக்கு அவருக்கு அடிப்படை அம்சமாக இருந்தது. ''இயற்கையான வாழ்க்கை சாதனங்களில் இருந்து, அதாவது குறுகிய வாழ்விடத்தில் சேகரிக்கும் கனிகள், கிழங்குகளிலிருந்து'' ''மீன் உணவுக்கு'' ** மாறியதை அவர் குறிப்பிட்டார். கூட்டு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு அபிவிருத்தி அடைந்ததாலும் நெருப்பு மற்றும் ஆயுதங்களின் உபயோகத் தினாலும் இது சாத்தியமாயிற்று. வில்லும் அம்பும் ஆயுதங்களில் மிகவும் நவீன கண்டுபிடிப்பாக இருந்தன. மார்க்ஸ் **பண்டைய சமுதாயம்** என்ற நூலைப் பற்றி எழுதிய குறிப்புகளிலும் எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம் தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலிலும் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்தார்கள்.

---

* *Ibid.*

** L. H. Morgan, *op. cit.,* pp. 24-25.

‘‘கண்ணுக்குத் தெரிகின்ற’’, வாழ்க்கைச் சாதனங்கள் மற்றும் மனிதனின் நேரடியான உற்பத்தியை அவர்கள் இந்தச் சமூக அமைப்பின் இயக்குச் சக்தியாக கருதியதை விட, முக்கியமற்றதாகத் தோன்றுகின்ற எளிமையான உற்பத்திச் சாதனங்களின் (பிரதானமாக உழைப்புக் கருவிகளின்) உற்பத்தியையும் இயற்கையாக மனிதர்களிடையே உருவாகியுள்ள உறவுகளின் வடிவங்கள் மற்றும் மாதிரிகளின் (உற்பத்தி உறவுகள், இவற்றிலிருந்து இன்னும் பிரிந்து போகாத மற்ற சமூக உறவுகளின்) புனருற்பத்தியை இத்தகைய இயக்குச் சக்தியாக கருதினார்கள். காட்டுமிராண்டிக் காலகட்டத்தில் வில், அம்பைக் கண்டுபிடித்தது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக மட்டும் இருக்கவில்லை, பூர்விக மக்களிடையிலான உற்பத்தி உறவுகளில் எதிர் காலத்தில் ஏற்படப் போகின்ற அடிப்படை மாற்றங்களின் ‘‘விதையாகவும்’’ இருந்தது.

வில், அம்பைப் பற்றிப் பேசும் பொழுது இவ்விஷயத்தின் உளவியல்-அறிதலியல் அம்சம் அல்லது இக்கண்டுபிடிப்பின் மூலம் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட புரட்சி வழக்கமாக வலியுறுத்தப்படுகிறது. ஜே. பெர்னால் வில்லும் அம்பும் மனிதகுல வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் இயந்திரம் என்கிறார். வில்லின் இழுக்கப்பட்ட நாணில் உள்ள ஒடுங்குநிலைச் சக்தி செலுத்தப்படுகின்ற அம்பின் இயங்குச் சக்தியாக மாற்றப்படுவதை ஆதாரமாகக் கொண்டு அவர் இந்த முடிவுக்கு

வருகிறார்.* எது எப்படியிருந்தாலும், வில், அம்பு அதற்கு முந்திய கருவிகளிலிருந்து (திருகை, கற்கோடரி, உளி, இதரவை) தீவிர மாக வேறுபட்டிருந்தன. ஏனென்றால் அவற் றின் கண்டுபிடிப்பிலும் செயற்பாட்டிலும் உள்ள கோட்பாடு இயற்கையான மனித உழைப்பு உறுப்புகளைப் போலியாகப் பின்பற்றவில்லை, இயற்கையான பொருட்களை அல்லது ''பாதி தயாரான'' பொருட்களை சிறிது மாற்றி உபயோகிக்கும் கோட்பாடாகவில்லை.

வில், அம்பின் உபயோகம் உற்பத்திச் சக்தி களின் அமைப்பில் ஒரு மாற்றம் ஆரம்பமா வதைக் குறித்ததென்பது சிறிதும் குறையாத முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இது தன் பங்கிற்கு பூர்விக சமூகத்தில் முந்திய உற்பத்தி உறவுகள் சிதறுவதற்குரிய முன்நிபந் தனைகளைப் படைத்தது. முன்னர் உற்பத்திச் சக்திகளில் அகநிலைப் பகுதி—மக்கள் கூட்டின் ஒற்றுமை, தகவல்களைச் சேகரித்து பரப்பும் சாதனங்கள், திறமைகள் மற்றும் தேர்ச்சிகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள், துன் பத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தி, தனிப்பட்ட துணிவு—ஒப்பீட்டளவில் குறைவான, நன்கு வகைப்படுத்தப்படாத பொருளாயதக் கருவிகள் (பிரதானமாக கற்கருவிகள்) மீது ஆதிக் கத்தைக் கொண்டிருந்தது. உழைப்புக் கருவிகள் மற்றும் ஆயுதங்களின் தொகுதி விரிவடைந்

* J. D. Bernal, *Science in History,* Watts, London, 1954.

ததும் அவை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டதும் உற்பத்திச் சக்திகளின் பொருளாயதப் பகுதி மேன்மேலும் முக்கியத்துவம் பெற்றது. இது தன் பங்கிற்கு மனிதர்களிடையேயான உறவுகளில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தியது. வில்லும் அம்பும் வேட்டைத் தொழிலில் ஒரு புதிய சாதனத்தின் தோற்றத்தை அறிவித்தன. அது தனிநபரிடமிருந்து ''பிரிக்கப்படக் கூடியது'', ஆனால், அதே சமயத்தில் இயற்கைச் சூழலில் அந்த நபருடைய நிலையைப் பலப்படுத்தக் கூடியது. அதன் விளைவாக, புது ரகங்களைச் சேர்ந்த உழைப்புக் கருவிகளும் ஆயுதங்களும் (முதலில் தனிநபருடைய விசேஷமான திறமைகளுக்குத் தக்கபடி அமைக்கப்பட்டவை) தயாரிக்கப்பட்டதால் அவற்றைத் தனிச்சொத்தாக ஒருவர் வைத்திருப்பதற்கு முன்நிபந்தனைகள் தோற்றுவிக்கப்பட்டன. ஏனென்றால் ஒருநபர் அவற்றைச் செய்யவும் அடுத்தவர் அவற்றை உபயோகிக்கவும் முடியும்.

மனிதகுலத்தின் பண்டைய வரலாற்றைப் பற்றிய மார்கனுடைய காலப்பிரிவைக் கோட்பாட்டளவில் பாராட்டுகின்ற பொழுது அது அக்காலத்தில் கிடைத்த வரலாற்று விவரங்களுக்குப் பொருத்தமாக இருந்தது என்று எங்கெல்ஸ் கூறினார். அதே சமயத்தில் அவர் வரலாற்றைப் பற்றிய இயக்கவியல்-பொருள் முதல்வாதக் கருத்தின் முறையியல் நிலைகளிலிருந்து அதைப் பரிசீலனை செய்வதற்கும் திருத்துவதற்கும் அடிப்படையை உருவாக்கி

னார். மார்கன் காட்டுமிராண்டி நிலையின் ஆரம்பக் கட்டம் என்று கூறியதை எங்கெல்ஸ் ''இடைநிலைப் பிறவிகளின்'' பூர்விகக் கூட்டுச் சகாப்தம் என்று கூறினார் (**மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** என்ற எங்கெல்சின் கட்டுரையைப் படித்தவர்களுக்கு இது அறி முகமானதே). எனவே காட்டுமிராண்டி நிலை யின் இடைக் கட்டம், மனிதர்கள் உருவாகி வந்த கட்டத்திற்கான ஒரு ஒப்புமையாகத் திகழ்கிறது.

எங்கெல்ஸ் பண்டைக்கால வரலாற்றைப் பற்றிச் செய்த பகுப்பாய்வில் இயற்கையோடு மனிதனுடைய உறவுக்கும் மனிதர்கள் ஒருவருக் கொருவர் கொண்டிருந்த உறவுக்கும் இடை யிலுள்ள மிகவும் ஆழமான தொடர்பை வெளிப்படுத்துகிறார்; பூர்விகக் கூட்டுச் சமூகத் தில் தனிநபருடைய நிலையையும் பூர்விக மனிதனுடைய பிரத்யேகமான மனநிலைப் பண்புகளையும் அவர் ஆராய்கிறார். இங்கே அவர் மார்கனைக் காட்டிலும் கணிசமாக முன்னே செல்கிறார். **பண்டைய சமுதாயத்தின்** ஆசிரியர் பொருளாதார வடிவங்களுக்கும் உளவியல் கூறுகளுக்கும் இடையிலுள்ள நேரடி யான தொடர்பை வலியுறுத்துகிறார், பிறகு உளவியல் கூறுகளுடன் உள்ள தொடர்பின் மூலமாக மட்டுமே சமூக உறவுகளை வலியுறுத்து கிறார். எங்கெல்ஸ் இந்த இரண்டாவது இணைப்பைத் தலைகீழாக்குகிறார். பொரு ளாதார மற்றும் உளவியல் புலப்பாடுகளுக்கு

இடையிலுள்ள இணைப்பாக சமூகக் கூற்றை, அதாவது சமூக உறவுகளை வைக்கிறார். பண்டைய சமுதாய வளர்ச்சியின் பொரு ளாயத முன்நிபந்தனைகள் முதன்மையானவை என்பதையும் கருத்தியல், ஆன்மீக முன் நிபந்தனைகள் இரண்டாம் பட்சமானவை என்பதையும் அவர் வலியுறுத்துகிறார்.

சமூக உறவுகள் குல, இனக்குழுக்களின் எல்லைகளில் ''முறித்துக் கொள்ளப்பட்டன'', குழுவிற்குள்ளேயும் அவை பலவீனமாக வகைப் படுத்தப்பட்டிருந்தன என்பதைப் பூர்விக உற்பத்தியின் ஸ்தலக் கட்டுப்பாடுகள் நிர்ணயித் தன. எங்கெல்ஸ் சுட்டிக்காட்டியதைப் போல இந்த முரண்பாடு அக்காலகட்டத்தின் சமூக உணர்விலும் வெளிப்பட்டது. பூர்விக மனிதனுடைய அசாதாரணமான பழமைப் பற்றுள்ள மனநிலைக்கு மார்க்சிய உளவியல் இங்கே ஒரு விளக்கத்தைக் கண்டது; பூர்விக மனிதன் பல சமயங்களில் தர்க்கத்தை விடுத்து நினைவுத் திறனில் நம்பிக்கை வைத் தான், ஆகவே மரபு சமூக உறவுகளை ஒழுங்கு படுத்துகின்ற ஒரே வடிவமாக இல்லாவிட் டாலும் மிக முக்கியமான வடிவமாக நெடுங் காலம் இருந்தது. எனவே சமூக உறவுகளின் மாற்றங்கள் உளவியல் மாற்றங்களை அடிப் படையாகக் கொண்டிருக்கவில்லை என்பது இதிலிருந்து புலப்படும். அதற்கு மாறாக, சமூக உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் (இவை முடிவில் பொருளாதார வளர்ச்சி யினால் நிர்ணயிக்கப்பட்டன) சமூக உணர்வில்

மாற்றங்களுக்கு அடிகோலின. சுருக்கமாகக் கூறுவதென்றால் சகோதரத்துவம் மற்றும் பரஸ்பர உதவி உணர்ச்சிகள் (செல்வத்தைத் திரட்ட வேண்டுமென்னும் விருப்பத்தையும் சமூக வெறுப்பையும் போல) நேரடியாக உற்பத்தியினால் நிர்ணயிக்கப்படுவதில்லை, அவை அதை நிர்ணயிப்பதும் இல்லை. உற்பத்திக்கும் சமூக உணர்வுக்கும் இடையிலுள்ள இணைப்பு சமூக உறவுகளே.

ஆகவே இந்த அணுகுமுறையில் எங்கெல்ஸ் விவரிக்கின்ற மூலச்சிறப்பான பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு வனப்புமிக்க சொர்க்க புரியாகவோ, ரூஸ்ஸோவின் ''பொற்கால மாகவோ'' அல்லது நரகமாகவோ, ஹாப்ஸ், டூரிங் மற்றும் சமூக டார்வினிஸ்டுகள் வர்ணிக் கின்ற ''எல்லோருக்கும் எதிரான எல்லோரின் போராட்டமாகவோ'' தோன்றவில்லை. இக் காலகட்டத்தில் சமூக உறவுகளின் சாராம்சம் மனிதன் இயற்கையை மிகவும் அதிகமாகச் சார்ந்திருந்ததிலிருந்து வருவதாக எங்கெல்ஸ் கண்டார். இது பூர்விகக் கூட்டுச் சமூகத்திற் குள்ளே நிலவிய ஒற்றுமையையும் (ரூஸ்ஸோ இந்த அம்சத்தைத் தனிமுதலாக்கினார்) இச் சமூகங்களுக்கு மத்தியில் போட்டியையும் நிர்ணயித்தது.

எங்கெல்ஸ் குடும்பம், **தனிச்சொத்து**, அரசு **ஆகியவற்றின்** தோற்றம் என்ற தன்னுடைய நூலில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பைப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் வரை யறுக்கின்ற பொழுது இவ்வமைப்பு, மக்கள்

மத்தியில் சமூக உறவுகள் வலுப்படுகின்ற சமூக வளர்ச்சிக் கட்டம் மற்றும் இன்னும் கூடுதலான சமூக வளர்ச்சிக்கு அவசியமான பொருளாயத மற்றும் ஆன்மீக முன்நிபந்தனைகளைப் படைக்கின்ற நிகழ்ச்சிப் போக்கு தொடங்கிய சமூக வளர்ச்சிக் கட்டம் என்கிறார். எனினும் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பில் மேலும் உயர்வான சமூக உறவுமுறைகளுக்கு முன்னேறிச் செல்கின்ற வாய்ப்பு அடங்கியிருக்கவில்லை. பிந்தியவை பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் அழிவுக் குவியலின் மீது அமைக்கப்பட்டன, அதன் சிதைவுகளிலிருந்து வளர்ச்சியடைந்தன. இக்கருத்தை வலியுறுத்துவது அவசியம். ஏனென்றால் வர்க்க முரணியல்புகள் மூலச்சிறப்பான பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிற்குள்ளாகவே பரிணமித்தன என்ற தவறான நம்பிக்கை இன்றும்கூட அடிக்கடி காணப்படுகிறது.

# 3. குலமரபுச் சமூகத்திலிருந்து வர்க்கங்களை நோக்கிய மாற்றம் (பண்பாடற்ற நிலை)

''பண்பாடற்ற நிலை'' என்ற மார்கனுடைய கருத்து எங்கெல்சின் **குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்தை நோக்கிய மாற்றத்துடன் ஒப்பிடப்படுகிறது. மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி இந்த மாற்றத்தை நிர்ணயித்தது. உற்பத்தி உறவுகளின் துறையில் சமூக உழைப்புப் பிரிவினை இந்த மாற்றத்துக்கு அடிப்படையாக இருந்ததென்பதை எங்கெல்ஸ் ஆணித்தரமாக எடுத்துக்காட்டினார். பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட சமூக உழைப்புப் பிரிவினை தன் பங்கிற்கு வாழ்க்கைச் சாதனங்கள் மிகையளவில் உற்பத்தி செய்யப்படுவதையும் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் சகவாழ்வையும் — முறையான பரிவர்த்தனைக்குப் புறநிலை அடிப்படை இது — முன்னூகித்தது.

பண்டைய சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றிய மார்கனுடைய காலப்பிரிவை எங்கெல்ஸ் மேலும் துல்லியமாக வரையறுத்தது பண்பாடற்ற காலகட்டத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. மார்கனைப் பொறுத்தமட்டில்

பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டம் (மண்பாண்டங்கள் செய்வது என்ற சம்பிரதாய மான வரையளவைக் கொண்டு அது நிர்ணயிக்கப்பட்டது) உண்மையில் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகியவற்றின் கட்டம் என்ற முறையில் காட்டுமிராண்டி நிலையுடன் இணைந்திருந்தது. இதற்கு மாறாக, பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டம் மற்றும் உச்சக் கட்டம் சாராம்சத்தில் அதே கண்ணோட்டத்திலிருந்து, அதாவது கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்த் தொழில் (விவசாய உற்பத்தி) ஆதிக்க நிலை யிலிருந்து பார்க்கப்பட்டன. மார்கன் கொடுத்த சமூக உழைப்பு வடிவங்களின் தொடர்வரி சையை எங்கெல்ஸ் அப்படியே வைத்துக் கொண் டாலும் அவற்றின் தர்க்கவியல்-வரலாற்று ஒழுங்குமுறைக்குக் கோட்பாட்டளவில் வேறு விதமான விளக்கத்தைத் தருகிறார். சுவீ கரிப்புப் பொருளாதாரத்திலிருந்து உற்பத்திப் பொருளாதாரத்துக்கு மாற்றமே காட்டு மிராண்டி நிலைக்கும் பண்பாடற்ற நிலைக்கும் இடையிலான பிரிவினைக் கோடு என்று எங் கெல்ஸ் தன்னுடைய நூலில் கூறியுள்ளார். பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டம் நாகரிகத்தின் தோற்றத்துக்கு மட்டுமின்றி மனிதனை மனிதன் சுரண்டுவது மற்றும் ஒடுக்குமுறையின் தோற்றத்துக்கும் முன்னுரை யாக விளங்கியதை எங்கெல்ஸ் இனங்காண் கிறார். எங்கெல்ஸ் இக்கட்டத்தை ஆராயும் பொழுது ''பண்பாடற்ற நிலையும் நாகரிக

நிலையும்'' என்ற ஒரு விசேஷ அத்தியாயத்தைத் தன்னுடைய நூலின் முடிவுப் பகுதியில் எழுதியிருப்பது இக்காரணத்துக்காகவே என்று தோன்றுகிறது.

''உபயோகத்துக்குத் தயாராகவிருந்த இயற்கைப் பொருட்களை சுவீகரிப்பதே மிகப் பெரும்பான்மையாக இருந்த'' காலகட்டத்திலிருந்து ''மனித நடவடிக்கைகளின் மூலம் இயற்கைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகள் கற்றுக் கொள்ளப்பட்ட''* காலகட்டத்துக்கான மாற்றத்தை காட்டுமிராண்டி நிலைக்கும் பண்பாடற்ற நிலைக்கும் இடையில் பிரிவினைக் கோடாக எங்கெல்ஸ் வைத்துக் கொண்டார். தொல்பொருள் ஆராய்ச்சியில் இக்கட்டம் புதுக் கற்காலத்தின் வரம்புகளுக்குள் தொடங்குவதால், இயற்கையின் பால் மனிதனுடைய உறவுகளின் வளர்ச்சி என்னும் படிப்படியான நிகழ்ச்சிப் போக்கில் ஒரு இடைநிறுத்தமாகத் தோன்றுவதால் நவீன அறிவியல் இன்று அங்கீகரித்துள்ள ''புதுக் கற்காலப் புரட்சி'' என்ற சொல் நியாயமாகத் தோன்றுகிறது. ''மனிதன் முற்றிலும் ஒட்டுண்ணி வாழ்க்கையிலிருந்து வெளிவந்து பயிர்த்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு மாறியதன் மூலம் இயற்கையின் சீற்றங்களிலிருந்து விடுதலை அடைந்த படைப்பாளியாக மாறிய

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 209.

புரட்சிதான்''* இச்சகாப்தத்தின் பிரதான உள்ளடக்கம்.

பண்பாடற்ற காலகட்டத்தைப் பற்றிய விளக்கத்தில் எங்கெல்ஸ் மார்கனைக் காட்டிலும் வெகுதூரம் முன்னேறிச் செல்கிறார். மனிதனுடைய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவனுடைய தகுதியையே பிரதான மாக வைத்து மார்கன் பண்பாடற்ற கால கட்டத்தை வரையறுக்கிறார். முதலில் இது பூமியில் பயிரிட்டுப் பெறுகின்ற மாவுணவாக இருந்தது (பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டம், உலகத்தின் மேற்கு கோளார்த்தத்தில் இது நெடுங்காலம் வரை நீடித்தது), பிறகு இறைச்சியும் பாலும் வந்தன (பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டம், கிழக்கு கோளார்த் தத்தின் குறியடையாளம்), கடைசியில் ''விவசா யத்தின் மூலம் உயிர்வாழ்வதற்குரிய முடிவில் லாத சாதனங்களைப்'' பெறுதல் (பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டம்).** பொருளாயத நலன்களின் உற்பத்தி முறையே சமூகத்தின் இருத்தலுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை என்று மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய கருத்தமைப்பின்படி மனிதர்கள் உற்பத்திச் சாதனங்களின் தொகுதியை விரிவுபடுத்தி அவற்றை அபிவிருத்தி செய்ததை எங்கெல்ஸ் பிரதானமாக அழுத்திக் கூறுகிறார்.

வரலாற்றின் ஆரம்பக் கட்டங்களில் மனித

* V. Gordon Childe, *New Light on the Most Ancient East*, Grove Press, Inc., New York, pp. 1—2.

** L. H. Morgan, *op. cit.*, pp. 26—30.

உழைப்பு, கருவிகளில் அடங்கியிருந்த உழைப்பைக் காட்டிலும் அதிகமாக இருந்தது தெளிவு. உணவைப் பெறுவதற்கான நடவடிக்கையை மனிதன் சார்ந்திருந்தது அநேகமாக உழைப்புக் கருவிகளை — குறிப்பாக, மற்ற கருவிகளையும் உற்பத்திச் சாதனங்களையும் தயாரிக்க உதவும் உழைப்புக் கருவிகளை — தோற்றுவிப்பதைத் தடுத்தது. எனினும் நவீன விஞ்ஞானத்தால் பூர்விக சமூகத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடிப்படையின் முன்னேற்றத்தைத் தெளிவாகக் காண முடிகிறது. அது எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் வெளியிட்டிருக்கின்ற கருத்துகளை உறுதிப்படுத்துகிறது. ஆயுதங்கள், உழைப்புக் கருவிகள் (கல்லால் செய்யப்பட்டவையேனும்) இல்லாமல் கால்நடை வளர்ப்பு அல்லது பயிர்த்தொழில் சாத்தியமாக இருந்திருக்க முடியாது என்று எங்கெல்ஸ் கருதினார்.*

எங்கெல்சின் கருத்தமைப்பின்படி இப்பிரச்சினையை அணுகுகின்ற பொழுது புதுக் கற்காலப் புரட்சி (மார்கன் பண்பாடற்ற நிலை என்று பெயரிட்ட காலகட்டத்தில்) மனிதகுலத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு பாய்ச்சலாக இருந்தது என்று சரியாகவே கருத முடியும். இது பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு சிதைவடைந்து வர்க்க-பகைமுரண்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 207.

பாட்டு சமூகம் தவிர்க்க முடியாதபடி ஏற்படு வதற்குரிய பொருளாயத மற்றும் அகநிலை யான முன்நிபந்தனைகளைப் புறவய ரீதியாக உருவாக்கியது. எண்ணிக்கையில் அதிகரித்து வந்த மேன்மேலும் சிக்கலான பொருளாதார நடவடிக்கைகளைப் பயன்தன்மையோடு நிறை வேற்றுவதற்கு அவசியமான ஏராளமான உழைப்புக் கருவிகள் தீவிரமாகத் தயாரிக்கப் படுகின்ற நிகழ்ச்சிப் போக்கு புதுக் கற்காலத்தில் தொடங்கிப் படிப்படியாக கருவி உற்பத்திக்கு இட்டுச் சென்றது. இக்கருவிகளும் உழைப்புச் சாதனங்களும் குறிப்பிட்ட காரியங்களுக்கு மட்டுமே பயன்படக் கூடியவை, பிரதானமாக தசைச் சக்தியினால் இயக்கப்படுகின்றன. எனினும் அவை சமூக உழைப்பின் உற்பத்தித் திறனைத் தீவிரமாக அதிகப்படுத்துகின்றன. இயற்கை வளங்களை இன்னும் சிறப்பாக உபயோகிப்பதற்கு கருவி உற்பத்தி நிபந்தனை யாக இருந்தது. கல், எலும்பு, மரம், உலோகம் ஆகியவற்றுடன் நிலமும் உணவை உற்பத்தி செய்கின்ற சாதனம் என்ற முறையிலும் இயற்கையின் பரிசோதனைக் கூடம் மற்றும் மூலபொருட்களின் களஞ்சியம் என்ற முறை யிலும் மேன்மேலும் உழைப்புப் பொருளா கிறது; நிலத்துடன் தொடர்புடைய விலங் குலகு மற்றும் தாவர உலகின் பொருட்களும் உழைப்புப் பொருட்களாகின்றன. முதல் பூர்விக, செயற்கை உழைப்புக் கருவிகள் மனிதனுக்கு உபயோகமுள்ள தாவரங்கள் மற்றும் மிருகங்களின் உற்பத்தித் திறனை

ஓரளவுக்கு அதிகரிப்பதை ஏற்கெனவே சாத்தியமாக்கி விட்டன. பயிர்த்தொழில் (முதலில் தோட்டக் கலை என்ற முறையில்) மற்றும் கால்நடை வளர்ப்பின் (மேய்ச்சல் நிலத்துக்கு அலைகின்ற நாடோடி மரபாக) மேற்கொண்ட வரலாற்று வளர்ச்சி கருவிகளின் உற்பத்தியில் முன்னேற்றத்துக்கு உதவியது மட்டுமின்றி அதற்கு உபயோகப்படுத்திய பொருட்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தது. இதன் மூலம் கருவி உற்பத்தியின் சாதனைகள், கால்நடை வளர்ப்பில் பழக்கப்படுத்தப்பட்ட மிருகங்களின் தசைச் சக்தியுடனும் காற்று, தண்ணீர், வெப்பம், இதரவைகளுடனும் இணைக்கப்படுவதற்கு அவசியமான முன்நிபந்தனைகள் உருவாக்கப்பட்டன.

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலிலும் அதற்கு முந்திய **டூரிங்குக்கு மறுப்பு** நூலிலும் எடுத்துக் காட்டியதைப் போல மேலே வர்ணிக்கப்பட்ட கூறுகள் ஏற்படுத்திய பொருளாதார நிலைமைகள் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பு சிதைவுறுவதற்கு வழிவகுத்தன. பூர்விகக் கூட்டுச் சமூகங்களுக்கு இடையிலும் கூட்டுச் சமூகத்திற்கு உள்ளேயும் உள்ள சமூக உழைப்புப் பிரிவினை மற்றும் மக்கள்தொகையினரிடம் பின்னர் ஏற்பட்ட சமூக-சொத்துடைமை மற்றும் அரசியல் வேறுபாடுகள் இந்த நிலைமைகளாகும். இக்கட்டம் நீர்ப்பாசன விவசாயம், மேய்ச்சல் நிலத்தைத் தேடிச் சென்று கால்நடை வளர்ப்பு ஆகியவற்றின்

தொடக்கங்களைக் கண்டது. கைத்தொழில்களும் நிலவழியாகவும் கடல்வழியாகவும் தொடர்ச்சியான வர்த்தகமும் வளர்ச்சியடைந்தன. மேலும் பண்பாடற்ற நிலையின் தொடக்கம் மற்றும் உச்சக் கட்டத்துக்கு நம்மை இட்டுச் செல்கின்ற மற்றொரு கூறும் உண்டு. மிருகங்களைப் பழக்குவதும் புதிய தாவர வகைகளைக் கண்டுபிடிப்பதும் பூர்விக மனிதர்களின் பொருளாதார வாழ்க்கையில் மேன்மேலும் அதிகமான பாத்திரத்தை வகிக்கும் பொழுது இயற்கை நிலைமைகளின் வேற்றுமை சமூக-பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் வேறுபாடுகளுக்கும் ஏற்றத்தாழ்வுக்கும் இட்டுச் செல்கிறது.

"இது வரைக்கும் பரிணாமம் சென்ற போக்கு ஒரு திட்டவட்டமான காலப் பகுதிக்குப் பிரதேச வித்தியாசம் எதுவுமின்றி எல்லா மக்களுக்கும் பொதுவாகச் செல்லத் தக்கதாகும் என்று நாம் கருத முடியும். ஆனால் பண்பாடற்ற நிலை தொடங்கிய பிறகு நாம் ஒரு கட்டத்தை எட்டுகிறோம்; அந்தக் கட்டத்தில் இரண்டு மாபெரும் கண்டங்களுக்கிடையில் இருக்கின்ற இயற்கை நிலைமைகளின் வித்தியாசம் செயல்படத் தொடங்குகிறது. மிருகங்களைப் பழக்குவது, வளர்ப்பது, பயிர் சாகுபடி செய்வது — இவை பண்பாடற்ற காலகட்டத்தின் விசேஷத் தன்மை பெற்ற குணாம்சங்களாகும். பழைய உலகம் என்று சொல்லப்படுகின்ற கிழக்குக் கண்டத்தில் வீட்டில் பழக்குவதற்கு ஏற்ற அநேகமாக

எல்லா மிருகங்களும், ஒரு தானியத்தைத் தவிர மற்ற சாகுபடி செய்யத் தக்க எல்லாத் தானிய ராசிகளும் இருந்தன. ஆனால் மேற்குக் கண்டமாகிய அமெரிக்காவில் லாமா என்கிற ஒரு மிருகம் தான் வீட்டில் பழக்கக் கூடியதாய் இருந்தது; அதுவும் அக்கண்டத்தின் தெற்கிலுள்ள ஒரு பகுதியில்தான் இருந்தது. மேலும், அக்கண்டத்தில் சாகுபடி செய்வதற்கு ஒரேயொரு தானியம்தான் இருந்தது. ஆனால் அது எல்லாத் தானியங்களிலும் தலைசிறந்ததாகும், அதுதான் மக்காச்சோளம். வேறுபட்ட இயற்கை நிலைமைகளின் விளைவு என்னவென்றால், அன்றிலிருந்து ஒவ்வொரு கோளார்த்தத்தைச் சேர்ந்த மக்கள்தொகையும் தனக்குரிய விசேஷமான வளர்ச்சிப் பாதையிலே சென்று விட்டது, மேலும் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களின் எல்லைக் கோடுகளில் அமைந்துள்ள ஸ்தல அடையாளக் குறிகளும் இரண்டு கோளார்த்தங்கள் விஷயத்திலும் ஒன்றுக்கொன்று வித்தியாசப் பட்டிருக்கின்றன.'' *

உலக வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் தவிர்க்க முடியாத கட்டமாகிய பண்பாடற்ற நிலை நியதியான முறையில் ஒன்றன் பின் ஒன்றாக வரும் மூன்று கட்டங்களைக் கொண்டிருந்தது என்னும் மார்கனுடைய கருத்தை எங்கெல்ஸ் ஏற்றுக் கொள்கிறார், எனினும் மார்கன் பண்டைய சமுதாயத்தில்

---

* *Ibid.*, p. 206.

குறிப்பிடாத சில கணிசமான கூறுகளைச் சுட்டிக்காட்டி அவருடைய குறையை ஈடு செய்கிறார்.

புதுக் கற்காலத்தில் பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்தில் உற்பத்தி வளர்ச்சி யடைகின்ற இயற்கையான நிலைமைகளைப் பொறுத்து கூட்டுச் சமூகங்கள் மற்றும் இனக் குழுக்களுக்கு இடையில் பொருளாதார வகை வேறுபடுதல் தோன்றியது என்பது எங் கெல்சின் வாதமாகும். இது பூர்விகக் கூட்டு வாழ்வு அமைப்பு சிதறும் கட்டமாகும்.

பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டம் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்புக்குப் பதிலாக வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் ஏற்படுகின்ற நிகழ்ச்சிப் போக்கின் ஒரு திருப்புமுனையாக இருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சியின் மொழியில் குறிப்பிடுவதென்றால் இக்கட்டம் உத்தேசமாக வெண்கல யுகத்துக்கு (சில பிரதேசங்களில் செம்பு கல் யுகத்துக்கு) சமமாக இருக்கிறது. பொருளாதார ரீதியில் குறிப் பிடுவதென்றால், முதல் பெரும் சமூக உழைப்புப் பிரிவினை — பண்பாடற்ற மக்கள் மத்தி யிலிருந்து மேய்ச்சல் வாழ்க்கையை நடத்தும் இனக்குழுக்கள் பிரிந்து விடுதல் — இக்கட்டத் தில் நடைபெறுகிறது. இக்கட்டத்தில் உழைப்புப் பிரிவினையின் பிரத்யேக, ஸ்தல வடி வங்கள் சமூக உழைப்புப் பிரிவினையின் பிற் காலத்திய, எங்கெல்சால் குறிப்பிடப்பட்ட போக்குகளின் கூறுகளைக் கொண்டிருந்திருக் கலாம். சில இனக்குழுக்கள் (உதாரணமாக

மாயா மற்றும் அஸ்டெக் இனக்குழுக்கள்) ஒரு தனிவகையான பொருளாதார நடவடிக்கை என்ற முறையில் கால்நடை வளர்ப்பைப் பற்றி ஒன்றுமே அறியாதிருந்தன.

ஒரு மக்களினம் பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தைக் கடந்துவிட்ட அதே சமயத்தில் மற்றொரு மக்களினம் இக்கட்டத் திலேயே இருந்தது. பிரத்யேகமான இயற்கை மற்றும் சமூக நிலைமைகளின் காரண மாய், பல பண்பாடற்ற சமுதாயங்களில் பூர்விகக் கூட்டுவாழ்வுச் சமூகம் சிதறி வர்க்க சமூகம் தோன்றுகின்ற கட்டத்திலேயே வர லாற்று வளர்ச்சி தீவிரமாக தாமதமடைந்தது. வர்க்க சமூகத்தின் ஆரம்பக் கட்டங்களில் வர்க்கப் பகைகளின் உருவாக்கத்தில் முரண் பாடான போக்குகள் இருந்தன: சொந்த மக்களையும் (கூட்டுச் சமூகத்தின் சாதாரண உறுப்பினர்கள்) அந்நியர்களையும் (சிறைப் பிடிக்கப்பட்ட அடிமைகள்) சுரண்டுதல். இந்த நிகழ்ச்சிப் போக்குகள் இன்னும் தனித் தனியாகப் பிரிந்து விடவில்லை, ஒவ்வொன்றும் அடுத்ததன் வளர்ச்சியை ஓரளவுக்குத் தடுத்தது. பின்னர் இந்த சமூகக் கட்டமைப்புகள் வீழ்ச்சியடைந்து சமூகம் முன்னே சென்றது (கிரெட்டோ-மைசீன் மற்றும் இட்ராஸ்கன் நாகரிகங்கள்); அல்லது அவை தொடர்ந்து தேக்க நிலையை, வரலாற்று ரீதியில் ஒரே இடத்தில் ''சுற்றுதலை'' (பழங்காலக் கிழக்கு) ஏற்படுத்தின. இக்கட்டம் முந்திய சமூக அமைப் பின் இடிபாடுகளின் மீது தோன்றிய புதிய சமூக

அமைப்பின் கூறுகள் மற்றும் சமூக உறவுகளின் ''பிரசவ வேதனையைத்'' தீவிரமான வடிவத்தில் எடுத்துரைத்தது என்று மார்க்சின் வார்த்தைகளில் கூறலாம்.

பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டத்தில் இரும்பை உருக்குதல் கண்டுபிடிக்கப்படுகிறது; இரும்புக் கருவிகள் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றன; உற்பத்தி நடவடிக்கையில் கைத்தொழில் தலைமையான போக்காகிறது. அதன் தொடர்பாக பல்வேறு இனக்குழுக்கள் மற்றும் கூட்டுச் சமூகங்களுக்கு இடையிலும் அவற்றுக்கு உள்ளேயும் பரிவர்த்தனை இணைப்புகள் தீவிரமாக அதிகரிக்கின்றன. இக்கட்டத்தின் பிரதான சமூக-பொருளாதார உள்ளடக்கம் என்னவென்றால் பகையியலான வர்க்கங்கள், தனிச்சொத்து மற்றும் அரசின் தோற்றமாகும். அதே சமயத்தில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் உறவுமுறை மற்றும் ஆன்மீக பாரம்பரியங்கள் புதிய சமூக நிலைமைகளுக்கு ஏற்ற முறையில் கைவிடப்படுகின்றன அல்லது மாற்றியமைக்கப்படுகின்றன. இதை மார்கனும் எங்கெல்சும் கிரேக்கர்கள், ரோம் நகரத்தை நிறுவுகின்ற முற்பொழுதில் இருந்த இத்தாலிய இனக்குழுக்கள், தாசிட்டஸ் வர்ணித்திருக்கும் பண்டைக்கால ஜெர்மானியர்கள், வீக்கிங்குகளின் காலத்தைச் சேர்ந்த நார்மானியர்களின் வரலாற்றிலிருந்து உதாரணங்களின் மூலம் விளக்கியிருக்கிறார்கள்.

பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டம் நேரடியாக நாகரிகமாக — வர்க்க-பகைமுரண்

பாட்டு சமூகமாக — வளர்ச்சி அடைகிறது. எனினும் வளர்ச்சி சம்பந்தமான இந்தப் ''பிணைப்பு'' வெவ்வேறு சமூக-பொருளாதார அமைப்புகள் என்ற முறையில் ''அவ்விரண்டுக்கும் இடையிலுள்ள பெருத்த வேறுபாட்டை''* மறைக்க முடியாது என்பது எங்கெல்சினுடைய கருத்தாகும்.

பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க சமூகத்துக்கு மாறுகின்ற கட்டத்தை இவ்வளவு நுணுக்கமாக வரையறுத்திருப்பது அதை அகல்விரிவாகப் பகுத்தாராய்வதை சாத்தியமாக்கிற்று. குலமரபுச் சமூகத்திலிருந்து வர்க்கங்களுக்கும் பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்திலிருந்து (பூர்விகக் கூட்டு வாழ்வு அமைப்பு சிதறுதல்) உச்சக் கட்டத்துக்கும் (வர்க்கங்கள் தீவிரமாக உருவாதல்) மாற்றம் ஏன் நடைபெற்றது என்பதை மட்டுமல்லாமல் அந்த நிகழ்ச்சிப் போக்கு எப்படி நடைபெற்றது என்பதையும் எங்கெல்சால் விளக்க முடிந்தது. இது அதன் உள் சுய இயக்கத்தின், மற்ற வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகளுடன் உள்ள பரஸ்பர செயலாக்கத்தின் தர்க்கவியலைக் கண்டுபிடிக்க உதவுகிறது. எங்கெல்ஸ், பூர்விகக் கூட்டுவாழ்வுச் சமூகத்திலிருந்து வர்க்க சமூகத்துக்கு மாறும் வடிவங்களின் ஆழ்ந்த நியதிகளையும் பரஸ்பர தொடர்புகளையும் பல் அடுக்கு மற்றும் பன்முகத் தன்மையையும் வெளிக்காட்டினார்;

---

* *Ibid.*, p. 209.

பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூக-பொருளாதார அமைப்புகளுக்கு மாறும் சிக்கலான காலகட்டத்தை, மனிதகுல வரலாற்றில் முதல் சமூகப் புரட்சியை எங்கெல்ஸ் விசேஷமான ஆராய்ச்சிப் பொருளாக எடுத்துக் கொண்டார்.

பண்பாடற்ற நிலை ஆரம்பக் கட்டம், இடைக் கட்டம், உச்சக் கட்டம் என்னும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுவதைப் பற்றிய எங்கெல்சின் அதிக நுணுக்கமான வரையறுப்பு பூர்விக அமைப்பிலிருந்து வர்க்க சமூகத்துக்கு மாறும் நிகழ்ச்சிப் போக்கைப் பற்றிய பொதுவான காலப்பிரிவுக்கு முக்கியமாக இருப்பது மட்டுமல்லாமல் சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய வளர்ச்சியின் நியதிகளையும் முந்திய சமூக உறவுமுறைகளின் மாற்றத்தையும் பகுப்பாய்வு செய்வதற்கும் முக்கியமாக இருக்கின்றது. இவ்வாறாக, பொருளாதார நடவடிக்கையை நிர்ணயிக்கின்ற வடிவத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட அமைப்புகள் பண்பாடற்ற நிலையின் மூன்று கட்டங்களுக்குப் பொருந்துகின்றன: 1) தொன்மைப் பொருளாதாரம்; 2) பயிர்த்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு; 3) கைத்தொழில் உற்பத்தி. *

பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்தின்

---

* வ. ம. மஸ்ஸோன், ''பண்டைய கிழக்கில் ஆரம்ப வர்க்க சமூகத்தின் தோற்றம்'', **வப்ரோசி இஸ்டோரியி** (''வரலாற்றுப் பிரச்சினைகள்''), இதழ் 5, 1967, பக்கங்கள் 87—88 (ருஷ்ய மொழியில்) பார்க்க.

தொன்மைப் பொருளாதாரம் என்பது உணவு சேகரித்தல் (''ஆதி விவசாயம்''), மிருகங்களைப் பழக்குவதற்குச் செய்யப்படுகின்ற முதல் முயற்சிகள் (''ஆதி கால்நடை வளர்ப்பு'') ஆகியவை வேட்டையாடுதல், மீன் பிடித்தல், இதரவற்றுடன் இணைந்து பிரிக்கப்படாத ஒட்டுமொத்தமாக இருக்கிறது. இத்தொன்மைப் பொருளாதாரத்தில், பிரிக்கப்படாத ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் சுற்று வட்டத்துக்குள், ஒரு குறிப்பிட்ட சமூக குழு ஸ்தூலமான இயற்கை மற்றும் மக்கள்தொகை சூழ்நிலைகளில் உயிர் பிழைத்து நீடிப்பதை நம்பகமான முறையில் உறுதிப்படுத்துகின்ற பொருளாதார நடவடிக்கையின் வடிவங்கள் படிப்படியாகப் பக்குவமடைந்தன. தொன்மைப் பொருளாதார அமைப்பில் சில இனக் குழுக்கள் ஏற்கெனவே உபரி பொருட்களைக் கொண்டிருந்தன. இதன் தொடர்பாக பொருளாதார நடவடிக்கையை ஒருங்கிணைக்கின்ற அவசியம் ஏற்பட்டது (உற்பத்தியை ஒழுங்கு படுத்துவதற்கும் அமைப்பு ரீதியாக்குவதற்கும் உத்தேசிக்கப்படுகின்ற குறிப்பிட்ட வகையான உழைப்பின் புறநிலையான அடிப்படை). உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான பிரிவினைக்கு மூல வேர் இங்கே இருந்தது. பூர்விக அமைப்பு சிதைந்து வர்க்க சமூகம் தோன்றியதில் அதன் முக்கியத்துவத்தை மார்க்சும் எங்கெல்சும் **ஜெர்மன் சித்தாந்தம்** என்ற படைப்பில் சுட்டிக்காட்டினார்கள். அத்தகைய நிலைமைகளில் பிரத்

யேகமான ''கருத்துகளின் உற்பத்தி'' தொடங்குகிறது. அதைப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதற்கு மார்கனால் முடியவில்லை.

முதல் பெரிய சமூக உழைப்புப் பிரிவினை, அதாவது பண்பாடற்ற மக்கள் திரளிலிருந்து மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் இனக்குழுக்கள் பிரிந்ததானது பிற்காலத்தில் பயிர்த்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு இனக்குழுக்களின் பொருளாதார நடவடிக்கையின் சுதந்திரமான வடிவங்களாக வளர்ச்சியடைய வழிவகுத்தது. பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் ஒரே சமயத்தில் ''ஒரு நபருடைய தேவைகளுக்கு கூடுதலான உபரி'' இருக்கிறது, அடுத்தடுத்து இரண்டு வித்தியாசமான உற்பத்தி மட்டங்கள் இருக்கின்றன, அவை ஒன்றுசேர்ந்து ''முறையான பரிவர்த்தனைக்கு நிலைமைகளை''* உருவாக்குகின்றன என்று எங்கெல்ஸ் கருதினார்.

முதல் பெரிய சமூக உழைப்புப் பிரிவினையானது அதிகரித்து வந்த உபரிப் பொருட்களை முறையாக பரிவர்த்தனை செய்வதற்கு அவசியமான முன்நிபந்தனைகளை ஏற்படுத்தியது. பொருளாதார நடவடிக்கையின் ஒப்பீட்டளவில் சுதந்திரமான வடிவங்கள் என்ற முறையில் கால்நடை வளர்ப்பும் பயிர்த்தொழிலும் பிரிந்ததானது இதற்கு முன்னர்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 322.

எப்போதுமிருந்ததைக் காட்டிலும் அதிக அளவில் வெவ்வேறு பூகோளப் பிரதேசங்களின் புறச்சூழல் நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்வதற்கு உதவியது. எங்கெல்ஸ் முன்னூகித்தபடி பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்துக்கும் இடைக் கட்டத்துக்கும் இடையிலுள்ள எல்லைக் கோட்டில், பொருட்களின் உபரி ஏற்கெனவே முறையாக உற்பத்தி செய்யப்பட்ட பொழுது கால்நடை வளர்ப்பும் பயிர்த்தொழிலும் தனித்தனியே பிரிந்தன. சில இனக்குழுக்கள், இன்னும் காட்டுமிராண்டி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இனக்குழுக்களை மட்டுமின்றி, புதுக் கற்காலப் புரட்சியை நிறைவேற்றி உற்பத்திப் பொருளாதாரத்தின் ஆரம்பக் கட்டத்தை எட்டிவிட்ட இனக்குழுக்களைக் காட்டிலும் தம்மை உயர்த்திக் கொண்டன.

நிச்சயமாக, கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்த்தொழிலைப் பற்றிய எங்கெல்சின் கருத்துகள் — இவற்றில் பல முன்னூகங்கள்* என்ற முறையில் முன்வைக்கப்பட்டன — மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் இனக்குழுக்களான செமைட்டுகளும் ஆரியர்களும் பயிர்த்தொழிலைப் பின்பற்றியதன் விளைவாக தென்மேற்கு ஆசியா மற்றும் மத்தியதரைக் கடற் பிரதேசத்தின் மூலச்சிறப்பான நாகரிகங்கள் தோன்றியது பற்றி அன்றைய விஞ்ஞானத்தில் ஆதிக்கம் செலுத்திய கருத்துகளை அடிப்படை

* *Ibid.*, pp. 206—207.

யாகக் கொண்டிருந்தன. இந்த நாடோடி இனக்குழுக்கள், அழிந்து போன, பழமையான, நிலத்தை உழுகின்ற பண்பாடுகளின் இடங்களில் குடியேறின, அவற்றை அவை அப்பொழுது பகுதியளவுக்குக் கைப்பற்றினவா என்பதெல்லாம் தெரியவில்லை. தட்ப, வெப்ப நிலைமைகள் திடீரென்று மாறியதன் விளைவாக அவை நெருக்கடிக்கு உள்ளாயின என்பது உண்மை. இந்த நாடோடி இனக்குழுக்களின் தொலைவான முன்னோர்கள் நாடோடிக் கால்நடை வளர்ப்புக்கு மாறும் முன் களைக் கொட்டுப் பயிர்த்தொழிலின் அடிப்படைகளை அறிந்திருந்தார்கள் என்பதும் தெளிவாயிற்று. முதல் பெரிய சமூக உழைப்புப் பிரிவினையில் கால்நடை வளர்ப்பு இனக் குழுக்களின் பாத்திரத்தை எங்கெல்ஸ் விரிவாக விளக்கி பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் பயிர்த்தொழிலின் பாத்திரத்தை விரிவாகக் கூறவில்லை என்பது இயற்கையே.

எனினும் கால்நடை வளர்ப்பு பயிர்த் தொழிலுக்கு முன்னர் தோன்றியதென எங்கெல்ஸ் கருதியதாக முடிவு செய்வதற்கு இது போதிய ஆதாரம் அல்ல. பயிர்த்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பின் மொத்த வரலாற்றில் காடுகளும் ஸ்டெப்பி புல்வெளிகளும் கலந்த மண்டலத்தில் நாடோடிக் கால்நடை வளர்ப்பிலிருந்து கலப்பைப் பயிர்த் தொழிலுக்கான மாற்றத்தை மட்டுமே எங்கெல்ஸ் நுணுக்கமாக ஆராய்ந்தார். இம்மாற்றம் பிரதானமாக பண்பாடற்ற நிலையின்

இடைக் கட்டத்திலிருந்து உச்சக் கட்டத்துக்கான மாற்றத்துடன் பொருந்தியிருக்கிறது. உண்மையிலேயே நாடோடிக் கால்நடை வளர்ப்புக் கட்டம் பிற்காலத்தில் தீவிரமான உழுதுப் பயிரிடும் பயிர்த்தொழிலின், அதாவது, எங்கெல்ஸ் கூறுகிறபடி, மாடுகளைக் கொண்டு நடைபெற்ற வேளாண்மையின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் புறநிலையில் அவசியமான முன்நிபந்தனையாக இருந்தது. மேய்ச்சல் வாழ்க்கை முறை வரலாற்று ரீதியாக எளிமையான களைக்கொட்டுப் பயிர்த் தொழிலின் குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்தை முன்னூகிப்பது வேறு விஷயமாகும். களைக் கொட்டுப் பயிர்த்தொழில் (யுக்கடான், மெக் சிக்கோவின் மேட்டுப்பகுதி, கினி வளைகுடாவின் கடற்கரைப் பகுதி மற்றும் வெப்ப மண்டல ஆப்பிரிக்காவின் இதர பகுதிகள்) அல்லது நாடோடிக் கால்நடை வளர்ப்பு (அரேபியா, மத்திய ஆசியா) ஒப்பீட்டளவில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்த பிரதேசங்களில் மக்களினங்களின் வளர்ச்சி பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் நெடுங்காலம் வரை நீடித்தது. மேலும் மேலே கூறப்பட்ட பயிர்த்தொழிலின் கட்டம் கால் நடை வளர்ப்புக்குச் சம்பந்தமின்றியே தோன்ற முடியும்; அது பிரத்யேகமான வடிவங்களில் பூர்விக அமைப்பு சிதறுவதற்கும் வர்க்கங்களும் அரசும் தோன்றுவதன் தொடக்கத்துக்கும் இட்டுச் செல்ல முடியும்.

வர்க்கங்கள் உருவாகின்ற நிகழ்ச்சிப் போக்

கில் பயிர்த்தொழிலின் பாத்திரத்தை எங்கெல்ஸ் குறைவாக மதிப்பிட்டார் என்று சில சமயங்களில் சொல்லப்படுகிறது. எங்கெல்சின் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூல் இந்த கருத்துக்கு எதிரிடையாக இருக்கிறது. எங்கெல்ஸ் கலப்பைப் பயிர்த்தொழிலை பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டத்தின் உற்பத்தி அடிப்படை மற்றும் வர்க்கங்களின் தோற்றத்துக்கு வழி வகுக்கின்ற கணிசமான உபரி உற்பத்தியின் சாத்தியமான தோற்றுவாய் என்று கருதினார். ''எல்லாவற்றிற்கும் மேலாக, மாடுகள் இழுத்துச் செல்லும் இரும்புக் கலப்பைக் கொழுவை இங்கேதான் முதன்முதலில் சந்திக்கிறோம். விரிந்த அளவில் நிலத்தை உழுது பயிரிடுவதை — **வேளாண்மையை** — இது சாத்தியமாக்கிற்று, மேலும் அன்றைய நிலைமைகளில், உயிர்வாழ்வதற்குரிய சாதனங்கள் நடைமுறையில் வரம்பற்ற விதத்தில் பெருகுவதையும் சாத்தியமாக்கிற்று...'' * நாடோடிக் கால்நடை வளர்ப்பைப் பொறுத்தமட்டில், இதற்கு முன்னர் ஒரு காலகட்டத்தில் அது ஓங்கியிருந்ததென்று எங்கெல்ஸ் சரியாகக் கண்டு அதை வேறுவிதமாக வர்ணிக்கிறார்: ''பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் மக்களினங்களிடம் ஏற்கெனவே கால்நடை வடிவில் ஒரு சொத்து இருந்தது என்பதைக் காண்

---

* *Ibid.*, p. 208.

கிறோம். போதுமான அளவுக்குப் பெரிய மந்தை இருக்கின்ற பொழுது அது அவர்களுடைய தேவையைக் காட்டிலும் ஓரளவு அதிகமான உபரியை முறையாகக் கொடுத்தது....''*

''அன்றைய நிலைமைகளில், உயிர்வாழ்வதற்குரிய சாதனங்கள் நடைமுறையில் வரம்பற்ற விதத்தில் பெருகுதல்'' என்பதற்கும் ''அவர்களுடைய தேவையைக் காட்டிலும் ஓரளவு அதிகமான உபரி'' என்பதற்கும் இடையில் குண ரீதியான வேறுபாடு இல்லையா?

பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்திலிருந்த சில பிரதேசங்களில் ''மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் இனக்குழுக்கள் மற்ற பண்பாடற்ற மக்களைக் காட்டிலும் அதிகமான உணவுப் பொருட்களை மட்டுமின்றி பல்வகைப் பொருட்களையும் அதிகமாக உற்பத்தி செய்தன''.** எனினும் எங்கெல்ஸ், மேயச்சல் வாழ்க்கையுடன் அதே சமயத்தில் தோட்டக் கலை அல்லது களைக்கொட்டுப் பயிர்த்தொழில் வளர்ந்ததைப் பற்றித் தெளிவான முறையில் எழுதுகிறார், அதை வேளாண்மையின் முன்னோடியாகக் காண்கிறார். இல்லையென்றால் பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்திலிருந்த, மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் இனக்குழுக்கள் தம்முடைய உழைப்பின் பிரத்யேகமான விளைபொருட்களின் உபரியை யாருடன் பரிவர்த்தனை

---

* *Ibid.*, p. 322.

** *Ibid.*, p. 317.

செய்து கொள்வார்கள்? தொன்மைப் பொருளாதாரத்தில் உபரி அப்பொழுதுதான் தோன்றியிருந்தது, அது தவிர்க்க முடியாத விதத்தில் சிறிய அளவிலும் நிலையில்லாததாகவும் இருந்தது. களைக்கொட்டுப் பயிர்த்தொழில் உலகத்தின் மிகத் தொன்மையான நாகரிகங்களின் பொருளாதார அடிப்படையாக இருந்தது தற்செயலான விஷயமல்ல.

பழங்கற்காலப் பொருளாதார ஆய்வுகள், பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தைச் சேர்ந்த களைக்கொட்டுப் பயிர்த்தொழில் ஏற்கெனவே கணிசமான (எல்லாவற்றிலும் முக்கியமாக, நிலையான) தானிய உபரியை உற்பத்தி செய்தது (மேய்ச்சல் வாழ்க்கை நடத்திய இனக்குழுக்களுடனான பரிவர்த்தனையில் தானியம் பிரதான பொருளாக இருந்தது) என்பதை உறுதிப்படுத்தின. வ. ம. மஸ்ஸோனின் கணிப்பின்படி மிதவெப்ப மண்டலப் பிரதேசத்தில் பயிர்த்தொழிலின் ஆரம்பக் கட்டங்களில் ஒரு உழவன் தனக்கு ஒரு வருடத்திற்குத் தேவையான தானியம் பெறுவதற்கு 60 நாட்கள் தீவிரமாக உழைக்க வேண்டியிருந்தது, நீர்ப்பாசனப் பயிர்த்தொழில் வந்த பிறகு 30 நாட்கள் உழைப்பே போதுமாயிற்று.

பயிர்த்தொழில் தரும் பொருட்களைக் காட்டிலும் சுலபமாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படக் கூடிய, இடம்பெயரக் கூடிய பரிவர்த்தனைப் பொருள் என்ற முறையில் கால்நடைகள் வர்த்தகம் மற்றும் தனிச்சொத்

தின் தோற்றத்தில் அதிகமான பாத்திரத்தை வகித்தன என்பது வேறு விஷயமாகும். மனிதன் ஸ்டெப்பி புல்வெளிகள் மற்றும் மேட்டுநிலங்களின் பெரும் பிரதேசங்களை உற்பத்தி முறையில் பண்படுத்தியதில் நாடோடிக் கால்நடை வளர்ப்பின் முக்கியத்து வத்தையும் இறைச்சி உணவின் நிலையான தோற்றுவாய் மற்றும் உழுது பயிரிடும் பயிர்த் தொழிலின் முக்கியமான முன்நிபந்தனைகளில் ஒன்று என்னும் அதன் பாத்திரத்தையும் இங்கே குறிப்பிடுவது அவசியம். எனினும் உழுது பயிரிடும் பயிர்த்தொழில் தோன்றியது முதல் இந்த உற்பத்தி நடவடிக்கை வடிவங் களின் வரலாற்றுத் தொலைக் காட்சிகள் தீவிரமான மாற்றத்துக்கு உள்ளாகின்றன. வேளாண்மை கைத்தொழிலின் சாதனை களால் மேலும் வளர்க்கப்படுகிறது. நாடோடிக் கால்நடை வளர்ப்பு அதன் முற்போக்கான தன்மையை இழக்கிறது; நாடோடிகள் வரலாற் றின் வெளிவட்டத்துக்குத் தள்ளப்படுகிறார் கள்.

ஒரு குறிப்பிட்ட பூகோள பிரதேசத்தில் இருக்கின்ற நிலைமைகளைப் பொறுத்து உற்பத்தி நடவடிக்கையின் பல்வேறு ரகங் களை வேறுபடுத்துதல் அதே நேரத்தில் பூமியின் இயற்கை வளங்களை மனிதன் சர்வாம்ச ரீதியில் தன்வயப்படுத்திக் கொள் வதற்கான புறநிலை அடிப்படையாகவும் இருக்கிறதென்பது சமூகத்துக்கும் இயற்கைக் கும் இடையிலான பரஸ்பர செயலாக்கத்தின்

இயக்கவியல் அம்சங்களில் ஒன்றாகும். இந்த அர்த்தத்தில் பண்பாடற்ற காலகட்டத்தில் பயிர்த்தொழிலுக்கும் கால்நடை வளர்ப்புக்கும் இடையிலுள்ள ஒப்புநிலை பொருளாதாரத்தின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு துறைகளுக்கு இடையில் நடைமுறையாக உருவாகியுள்ள பொருளாதார ஒத்திசை வாகும் என்று கருத முடியும். பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் அவை உற்பத்தியின் இணைகரப் போக்குகளாகத் தோன்றின. இது முறையான பரிவர்த்தனை யின் வளர்ச்சிக்கு அடிப்படையாயிற்று. பண் பாடற்ற நிலையின் உச்சக் கட்டத்துக்கு மாறுகின்ற பொழுது பொருளாதாரத்தின் இவ்விரண்டு துறைகளும் பெரும்பான்மையான பிரதேசங்களில் பரஸ்பரம் ஊடுருவின; அவை கைத்தொழில் உற்பத்திக்கு எதிரான ஒற்றை விவசாயப் பொருளாதாரத்தின் வரம்புகளுக் குள் ஒன்றுசேர்க்கப்பட்டன. பரிவர்த்தனைத் தொடர்புகளில் இதற்குப் பொருத்தமான மாற் றம் நடைபெறுகிறது, கைத்தொழில் விவசாயத் திலிருந்து பிரிகின்ற இரண்டாவது பெரிய சமூக உழைப்புப் பிரிவினை நடைபெறுகிறது.

உழைப்புக் கருவிகள், ஆயுதங்கள், படகு கள், வண்டிகள் ஆகியவற்றைப் போன்ற போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பல விதமான நுகர்வுப் பொருட்கள், சொகுசுப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட பிரத்யேகமான நடவடிக்கை தோன்றுகிறது. கைத்தொழிலின் மலர்ச்சி

தன்னியல்பான பரிவர்த்தனை முறையான வர்த்தகமாக மாறுவதற்கும் சந்தையை முன் னிட்டுச் செய்யப்படுகின்ற உற்பத்திக்கும் இட்டுச் சென்றது. மேலும், உற்பத்தி பண்ட உற்பத்தியாக மாற்றப்பட்ட போது உற்பத்தி யாளரிடமிருந்து உற்பத்திப் பொருள் அந் நியப்படுத்தப்படும் போக்கு துவங்கியது, அது உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துக்கும் விசேஷமான நிர்ப்பந்த முறை கள் தோன்றுவதற்கும் இட்டுச் சென்றது.

சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவின் தன்மை, உற்பத்திக்கு இடத்தைத் தேர்ந்தெடுப்பதையும் மக்களின் குடியேற்றம் மற்றும் சமூக தொடர்புகளின் வகைகளையும் சமூக உறவுகளை ஒழுங்குபடுத்தும் முறை களையும் நிர்ணயிக்கிறது.

பயிர்த்தொழில் மற்றும் கால்நடை வளர்ப் பின் வளர்ச்சி தொன்மைப் பொருளாதாரத் துடன் ஒப்பிடுகின்ற பொழுது தீவிரமான பொருளாதார மாற்றங்களுடன் சம்பந்தப்பட்ட பிரதேசத்தைக் கணிசமான அளவில் அதிகப் படுத்தியது. இப்பொழுது பயிர்த்தொழிலும் கால்நடை வளர்ப்பும் மிதவெப்ப மண்டலம் முழுவதும் பரவின. கைத்தொழில் விவசா யத்திலிருந்து பிரிந்ததும் இரும்புக் கருவிகளின் தயாரிப்பும் பயிர்த்தொழிலின் உற்பத்தி முறைகளில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி உழைப்புச் சாதனங்களில் வளமான பிரதேசங் களை (மேற்கு ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் காடுகள் மற்றும் ஸ்டெப்பி

நிலங்கள், சகாராவுக்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்காவின் காடுகள் மற்றும் வெப்ப மண்டல சமவெளிகள்) உற்பத்திப் பொருளா தாரத்துக்குத் திறந்து விட்டன. இரும்பின் முக்கியத்துவம் (மார்கன் கூறியபடி இதைக் கண்டுபிடித்த பொழுது "நாகரிகத்துக்கான போராட்டத்தில் பத்தில் ஒன்பது பங்கு வெற்றி கிடைத்து விட்டது"*) உருக்குதலின் மூலம் இதை உற்பத்தி செய்யும் விஷயத்துடன் நின்றுவிடவில்லை என்பதை எங்கெல்ஸ் எடுத் துக்காட்டினார். இரும்புக் கருவிகளின் உற்பத்தி மற்றும் உபயோகத்தினால் ஏற்பட்ட புரட்சி அதைக் காட்டிலும் கூட முக்கியமானதாக இருந்தது. "இரும்பு, வேளாண்மையை முன் னிலும் பெருமளவில் நடத்துவதையும் விரிந்த காட்டுப் பிரதேசங்களைச் சாகுபடிக்காகத் தரிசாக்குவதையும் சாத்தியப்படுத்தியது. எந்தக் கல்லும், அப்போது அறிந்துள்ள எந்த உலோகமும் எதிர்நிற்க முடியாத அளவுக்குக் கடினமும் கூர்மையும் பெற்ற கருவிகளை அது கைவினைஞனுக்குக் கொடுத்தது"** என்று எங்கெல்ஸ் எழுதினார்.

இம்முறையில் வரலாற்று வளர்ச்சி வெவ் வேறு இனக்குழுக்களுக்கும் மக்களினங்களுக்கும் இடையேயான பரஸ்பர உறவுகளில் சில மாற்றங்களுக்கு வழிவகுத்தது. காட்டுமிராண்

---

* L. H. Morgan, *op, cit.*, p. 43.

** K. Marx and F. Engels, *Selected Works*, Vol. 3, p. 320.

டிக் காலகட்டத்தில் கூட்டுச் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்கள் மட்டுமல்லாமல் கூட்டுச் சமூகங்களும் இனக்குழுக்களும் கூட ஒரே மாதிரியான தன்மையைக் கொண்டிருந்தன. கற்காலத்தைப் பொறுத்தமட்டில் வரலாற்றில் ஒரே மாதிரியாக நடைபெறும் அம்சம் விதியாக இருந்தது என்றார் எங்கெல்ஸ். பண்பாடற்ற காலகட்டத்தில்தான் ''வேறுபட்ட இயற்கை நிலைமைகளின்'' விளைவாக ''ஒவ்வொரு கோளார்த்தத்தைச் சேர்ந்த ஜனத்தொகையும் தனக்குரிய விசேஷமான பாதையிலேயே சென்று விட்டது. வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களின் எல்லைக் கோடுகளில் அமைந்துள்ள ஸ்தல அடையாளக் குறிகளும் அவ்விரு கோளார்த்தங்கள் விஷயத்திலும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றன.'' * வெவ்வேறு மக்கள் குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியின் சமமற்ற தன்மை ஓரளவில் சரக்குகள், கருத்துகள், உற்பத்தித் திறமை, சமூக உறவுமுறைகள் ஆகியவற்றின் பரிவர்த்தனையினால் ஈடு செய்யப்படுகிறது.

காட்டுமிராண்டிக் காலகட்டம் மற்றும் பண்பாடற்ற காலகட்டத்தைச் சேர்ந்த மக்களினங்கள் இப்பொழுது ஒன்று மற்றொன்றுடன் நேரடியான தொடர்பில் இருக்கின்றன. உலோகத் தொழில் ஆயுதங்களை உழைப்புக் கருவிகளிலிருந்து பிரிப்பதற்கு

---

* *Ibid.*, p. 206.

வழிவகுக்கிறது; உலோகத்தை உற்பத்தி செய்வதை அறிந்திருக்கும் மக்களினங்கள் மற்ற மக்களினங்கள் மீது இராணுவத் தலைமையைப் பெறுவதை சாத்தியமாக்குகிறது. பிரபலமான ஆங்கிலத் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான கார்டன் சைல்ட் பின்வருமாறு எழுதினார்: "ஸ்பானியர்களுக்கு எதிராக அஸ்டெக் இனத்தவர்களால் ஒன்றுமே செய்ய இயலாததைப் போல செப்பு ஆயுதங்களும் தலைக்கவசங்களும் உள்ள நாகரிகமான துருப்புகளை எதிர்க்கின்ற கற்காலக் காட்டுமிராண்டிகள் எதுவும் செய்ய இயலாதவர்களாக இருப்பார்கள்".* எனினும் செப்பு யுகத்தில் யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட அதிகமான நபர்களை நம்பகமான முறையில் காவல் செய்வதற்கு எவ்விதமான வழியும் இல்லை. எனவே பண்டைய கிழக்கைச் சேர்ந்த நாகரிகங்கள் சிலவற்றில், பக்கத்திலிருந்த கற்கால இனக்குழுக்களைப் போர்க்களத்தில் தோற்கடிக்கும் பொழுது ஆண்களைக் கொன்றுவிட்டுப் பெண்களை மட்டுமே அடிமைப்படுத்தினார்கள்.

மனிதகுலத்தின் முதற் பகுதியினர் வெண்கல யுகத்துக்கு மாறியது பிரதேச யுத்தங்களையும் உள்ளீடான சமூக நிகழ்ச்சிப் போக்குகளையும் தீவிரப்படுத்தியது. எனவே பல ஆசிரியர்கள் வெண்கல யுகத்தை அடிக்கடி நடைபெற்ற யுத்தங்களுடனும் அரசின் முதல் கரடுமுரடான

---

* V. Gordon Childe, *op. cit.,* p. 244.

வடிவம் என்ற முறையிலான கிழக்கத்திய எதேச்சாதிகாரத்தின் வளர்ச்சியுடனும் தொடர்பு படுத்துவது தற்செயலானதல்ல. இரும்பு யுகம், இரும்பைப் பயன்படுத்திய இனக்குழுக் கள் வெண்கல ஆயுதங்களை வைத்திருந்த, பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தைச் சேர்ந்த நாகரிகங்களைக் கணிசமாகப் பின் தள்ளுவதற்கு முன்நிபந்தனைகளை உருவாக் கியது.

ஸ்தல அளவிலான புதுக் கற்காலத்தின் பின்னணியில் இரும்பு உற்பத்தி வளர்ச்சி யடைந்த பிரதேசங்களில் (சகாராவுக்குத் தெற்கிலுள்ள ஆப்பிரிக்கா, கிழக்கு ஐரோப்பா) ''இரும்பு நிலம் மற்றும் காட்டின் மீது மட்டுமல்லாமல், அரபு வரலாற்றாசிரியரான எல் ஸூஹ்ரி ஒளி பாய்ச்சுகின்ற முறையில் வர்ணித்ததைப் போல, கல், எலும்பு மற்றும் மரத்தை உபயோகித்த பக்கத்து இனக்குழுக் களின் மீதும் புதிய ஆதிக்கத்தை ஏற்படுத் தியது.''* வெண்கல யுகத்தில் வசித்துக் கொண் டிருந்த பிரதேசங்களில் இரும்பு உபயோகத்தை நோக்கிய மாற்றம் ஓரளவுக்கு வேறுவிதமாக இருந்தது. பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்துக்கும் உச்சக் கட்டத்துக்கும் இடை யிலான எல்லையில் நடைபெற்ற பல சம்பவங் களின் முடிவு மலிவான, ஏராளமாகத் தயாரிக் கப்பட்ட இரும்பு ஆயுதங்களுக்கும் அழகான,

---

* Basil Davidson, *Old Africa Rediscovered,* Victor Golancz Ltd., London, 1960, p. 83.

ஆனால் குறைவான செயல்திறனைக் கொண்ட வெண்கல ஆயுதங்களுக்கும் இடையிலுள்ள போட்டியினால் தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக, அஸீரியாவிடம் எகிப்து படுதோல்வியடைந்தது, கிரேக்க வரலாற்றில் மைசீன கட்டத்தை டோரிக் கட்டம் (அதற்குள் மூலச் சிறப்பான அடிமையுடைமை உற்பத்தி முறை பிறகு வடிவமெடுத்தது) அகற்றியது ஆகியவற்றுக்கு அடிப்படையான காரணத்தை இங்கே கண்டு கொள்ள முடியும்.

உற்பத்திப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததன் விளைவாக ஸ்திரமான வாழ்க்கை முறை பரவி மக்கள்தொகை பெருகியது. இப்பொழுது நிரந்தரமான குடியிருப்புகள் ஏற்பட்டன. இவற்றில், பரிவர்த்தனை வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக வேறுபாட்டுப் போக்கில் கூட்டுச் சமூகம் சிறு விவசாய நிலவுடைமையாளர்களைக் கொண்ட கிராமமாக மாறுகிறது. பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தில் இக்குடியிருப்புகளைச் சுற்றி கோட்டைச் சுவர்கள் இருந்தன. அவற்றில் சில வர்த்தகப் பாதைகளில் அமைந்திருந்தபடியால் அவை கைத்தொழில்கள் மற்றும் நிர்வாகக் கேந்திரங்களாக மாறி நகரங்களாக வளர்ச்சியடைந்தன.

நகரங்கள் தோன்றியதானது பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்த கைவினைஞர்கள் ஒரே இடத்தில் திரளுவதற்கு (எதிர்காலப் பட்டறைத் தொழிலுக்கு இது முன்நிபந்தனை)



7*

இட்டுச் சென்றதுடன் பழைய குலமரபு அமைப்புகளைக் காட்டிலும் இன்னும் மிகப் பெரிய அளவில் அவர்களை ஒன்றுபடுத்தியது. இது தேவையை அதிகப்படுத்தியது, பரிவர்த் தனைக்குரிய பலவித பொருட்களை அதிகரித் தது, சமூகப் பிணைப்புகளைத் தீவிரப்படுத் தியது. நகரம் பொது நிர்வாக உறுப்புகள் மற்றும் அதிகாரிகளின், ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக வளர்ந்து கொண்டிருந்த குல மற்றும் கூட்டுச் சமூகத் தலைமையின் இருப் பிடமாயிற்று. நகரவாசிகள் படிப்படியாக பயிர்த்தொழிலையும் கால்நடை வளர்ப் பையும் கைவிட்டிருந்தனர்; அவர்களுக்குத் தேவையான விவசாயப் பொருட்களும் மூலப் பொருட்களும் நகரத்தைச் சுற்றியிருந்த விவ சாய நிலத்திலிருந்து கிடைத்தன. நகரமும் கிராமமும் தனித்தனியாகப் பிரிந்து கொண் டிருந்தன.

எங்கெல்ஸ் ''கலாசாரத்தின் வரலாற்றுக்கு முந்திய கட்டங்கள்'' என்னும் அத்தியாயத்தின் முடிவில் மறுபடியும் பின்வருமாறு எழுது கிறார்: ''காட்டுமிராண்டி நிலை, பண்பாடற்ற நிலை இவற்றின் வழியே நாகரிகத்தின் தொடக்கத்துக்கு மனிதகுலத்தின் பரிணாம வளர்ச்சியை மார்கனைப் பின்பற்றி நான் வர்ணித்திருப்பதில்'' அவருடைய **பண்டைய சமுதாயத்தில்** இல்லாத கூறுகள், ''புதிய, இன்னும் முக்கியமாக, மறுக்க முடியாத கூறுகள் மண்டிக்கிடக்கின்றன; அவை உற்பத்தி யிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டபடியால்

மறுக்க முடியாதவை''.* தன்னுடைய நூலில் இப்பிரச்சினையைப் பிரத்யேகமாக ஆராயப் போவதாக எங்கெல்ஸ் வாசகருக்கு உறுதி யளித்திருக்கின்றபடியால் மார்கனுடைய காலப் பிரிவு முறையைப் பின்வரும் சொற்களில் சுருக்க மாகத் தொகுத்துரைக்கிறார்: ''காட்டு மிராண்டி நிலை — உபயோகத்துக்குத் தயாராக விருந்த இயற்கைப் பொருட்களை சுவீகரிப் பதே மிகப் பெரும்பான்மையாக இருந்த ஒரு காலகட்டம்; மனிதன் தானே தயாரித்த பொருட்கள் பிரதானமாக இப்படி சுவீகரிப் பதற்கு வசதி செய்து கொடுக்க அமைந்த கருவிகளேயாகும். பண்பாடற்ற நிலை — கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்த்தொழி லைப் பற்றிய அறிவு பெறப்பட்ட காலகட்டம்; மனித நடவடிக்கைகளின் மூலமாக இயற்கை யின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகள் கற்றுக் கொள்ளப்பட்ட கால கட்டம் இது. நாகரிக நிலை — இயற்கைப் பொருட்களை மேலும் பண்படுத்திக் கொள் வது பற்றியும் தொழில்துறையைப் பற்றியும் கலையைப் பற்றியும் அறிவு பெறப்பட்ட காலகட்டம் இது.''**

* *Ibid.*, p. 208.

* *Ibid.*, p. 209.

# 4. பூர்விக சமூகத்தின் கட்டமைப்பு

மார்கன் சேகரித்த ஏராளமான அனுபவ விவரங்களைப் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்ததுடன் மட்டும் எங்கெல்ஸ் நின்று விடவில்லை. எங்கெல்ஸ் — **பண்டைய சமுதாயத்தின்** ஆசிரியரிலிருந்து வேறுபட்ட முறையில் — பூர்விக சமூகத்தின் வாழ்க்கை நடவடிக்கை நிகழ்ச்சிப் போக்கை, வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை உற்பத்தி செய்வது, மனிதனையே உற்பத்தி செய்வது என்னும் இரண்டு அடிப்படையான உற்பத்தி ரகங்களாகப் பிரித்தார் (மார்க்சும் எங்கெல்சும் கூட்டாக எழுதிய **ஜெர்மன் சித்தாந்தம்** என்ற நூலிலும் முன்னர் இப்படிச் செய்திருக்கிறார்கள்). ''பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தின்படி இறுதியாக வரலாற்றில் நிர்ணயமான காரணப் பொருளாக விளங்குவது, உடனடி வாழ்க்கையின் உற்பத்தியும் புனருற்பத்தியும்தான். ஆனால் இது இருவகைப்பட்ட தன்மை கொண்டது. ஒரு பக்கத்தில் வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களை உற்பத்தி செய்வது, அதாவது உணவு, உடை, வீடு ஆகியவற்றையும் அவற்றைப் பெறுவதற்குத் தேவையான கருவிகளையும் உற்பத்தி செய்வது; மறு பக்கத்தில் மனிதனையே

உற்பத்தி செய்வது, அதாவது மனித இனப் பெருக்கம் செய்வது''* என்று எங்கெல்ஸ் எழுதினார்.

உயிர்வாழ்வதற்குரிய சாதனங்களின், எல்லாவற்றுக்கும் மேலாக உழைப்புக் கருவிகளின் பொருளாயத உற்பத்தியே மனித வாழ்க்கையின் மற்ற அம்சங்கள் மற்றும் இவற்றின் அமைப்பு வடிவங்களின் வரலாற்றுப் பரிணாமத்தின் சமூக முளையாணி என்று எங்கெல்ஸ் கண்டார். சமூக உற்பத்தியின் வளர்ச்சிக்கும் திருமண-குடும்ப உறவுகளுடைய வடிவங்களின் பரிணாமம், தொடக்க, கூட்டு உடைமை சிதறிய போக்கு, உற்பத்தியை ஒழுங்குபடுத்துகின்ற புதிய (எதிர்காலத்தில் அரசு மற்றும் சட்டபூர்வமான) வடிவங்கள் மற்றும் சாதனங்களின் தோற்றத்துக்கும் இடையிலுள்ள பொருள்முதல்வாதத் தொடர்பைப் பற்றி அவர் சுருக்கமாக விளக்கினார். எங்கெல்ஸ் தனது நூலின் தலைப்பில் குறிப்பிட்ட நிகழ்ச்சிப் போக்குகளை — குடும்பம், தனிச்சொத்து, அரசின் தோற்றம் — தர்க்க ரீதியாக ஆதாரப்படுத்தினார்.

இவற்றில் முதலாவதை எங்கெல்ஸ் பின்வருமாறு விளக்குகிறார்: ''ஒரு திட்டவட்டமான வரலாற்றுச் சகாப்தத்தைச் சேர்ந்த, ஒரு திட்டவட்டமான நாட்டைச் சேர்ந்த மக்கள் எந்தச் சமுதாய ஒழுங்குமுறைகளின் கீழ் வாழ்ந்து வருகிறார்களோ, அந்த

---

* *Ibid.*, p. 191.

ஒழுங்குமுறைகளை உற்பத்தியின் இவ்விரு வகைகளும் நிர்ணயிக்கின்றன: உழைப்பின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்ற விஷயம் ஒரு பக்கத்திலும் குடும்பத்தின் வளர்ச்சி எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்ற விஷயம் மற்றொரு பக்கத்திலும் இருந்து இந்த ஒழுங்குமுறைகளை நிர்ணயிக்கின்றன. எந்த அளவுக்கு உழைப்பின் வளர்ச்சி குறைவாயிருக்கிறதோ, எந்த அளவுக்கு உழைப்பின் உற்பத்தியளவு குறுகியதாகவும் எனவே சமுதாயத்தின் செல்வமும் குறுகியதாகவும் இருக்கிறதோ, அந்த அளவுக்குப் பெரியதாக அந்தச் சமுதாய அமைப்பின் மீது இரத்த உறவுகள் ஆதிக்கம் பெற்றிருப்பதாகத் தோன்றும்.'' *

தனிச்சொத்து கடவுளின் சித்தத்தினாலோ, தற்செயலான வரலாற்று நிகழ்வினாலோ, யாரோ ஒருவருடைய கெட்ட எண்ணத்தினாலோ தோன்றவில்லை; அது பொருளாயத உற்பத்தியின் நியதியான வளர்ச்சி மற்றும் அதன் வேறுபடுதல் உருவாக்கிய பரிவர்த்தனையின் விளைவாகத் தோன்றியது என்று எங்கெல்ஸ் வற்புறுத்தினார். ''இரத்த உறவுகளின் அடிப்படையில் அமைந்த இந்தச் சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்குள்ளிருந்தே உழைப்பின் உற்பத்தித் திறன் மேலும் மேலும் வளர்கிறது, அத்துடன் கூடவே தனிச்சொத்தும் பரிவர்த்தனையும் வளர்கின்றன; செல்வத்தில் வேற்றுமைகளும் மற்றவர்களின்

---

* *Ibid.*, pp. 191—192.

உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பும் அதன் மூலம் வர்க்க முரண்பாடுகளின் அடிப்படையும் வளருகின்றன. இவையெல்லாம் புதிய சமூக அம்சங்களாகும். தலைமுறைக்குப் பின் தலைமுறையாக இந்தப் புதிய சமூக அம்சங்கள் பழைய சமுதாய அமைப்பை புதிய நிலைமைகளுக்கு ஏற்பத் தக்கவைப்பதற்கு முயலுகின்றன; கடைசியிலே அவ்விரண்டிற்கும் இடையிலுள்ள பொருந்தா நிலை ஒரு பூரணமான புரட்சிக்குக் கொண்டு போய்விடுகிறது''* என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.

வரலாற்று ரீதியில் தற்காலிகமான சமூக நிறுவனம் என்ற முறையில் அரசு குலமரபு ஜனநாயக சுயநிர்வாகத்தின் இடிபாடுகளின் மீது தோன்றுகிறது. சாதகமான பொருளாதார நிலைமைகளினால் விரைவாக வளர்ச்சியடைந்திருக்கின்ற தனிச்சொத்தின் கண்ணோட்டத்திலிருந்து சுயநிர்வாகத்தின் சமூகச் சிதைவு காணப்படுகிறது. அரசு அதிகாரம் சட்டம் மற்றும் நிர்ப்பந்தத்தின் மூலமாக ஒரு ரகத்தைச் சேர்ந்த குடும்பத்தை, வர்க்க, சமூக முரணியல்புகளை அமைப்பு ரீதியாக்குகிறது. ''புதிதாக வளர்ந்த சமுதாய வர்க்கங்களின் மோதலில் குலமரபு குழுக்களின் அடிப்படையில் அமைந்திருந்த பழைய சமுதாயம் வெடித்துச் சிதறிவிடுகிறது; அந்தப் பழைய சமுதாயத்தின் இடத்தில் ஒரு புதிய சமுதாயம்

---

* *Ibid.*, p. 192.

தோன்றுகிறது; அதுவே ஓர் அரசாக அமைகிறது. இந்த அரசின் கீழ்த்தர அங்கங்களாக இப்பொழுது இருப்பவை குலமரபு குழுக்கள் அல்ல, பிரதேச அடிப்படையில் அமைந்த குழுக்களே. இந்தப் புதிய சமுதாயத்தில் குடும்ப அமைப்பின் மீது சொத்துடைமை உறவுகள் முழுக்க முழுக்க ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும் இந்த சமுதாயத்தில் வர்க்க முரண்பாடுகளும் வர்க்கப் போராட்டங்களும் இப்பொழுது சுதந்திரமாக வளருகின்றன. இந்த வர்க்க முரண்பாடுகளும் வர்க்கப் போராட்டங்களும்தான் இதுவரைக்கும் ஏடறிந்த எல்லா வரலாற்றிற்கும் உள்ளடக்கமாக அமைந்துள்ளன''* என்று எங்கெல்ஸ எழுதுகிறார்.

மார்கன் பண்டைய சமுதாயத்தில் காட்டுமிராண்டி நிலையிலிருந்து பண்பாடற்ற நிலையின் வழியே நாகரிகத்திற்கான மனிதகுல முன்னேற்றத்தின் நான்கு திசைகளை (பொருளாதாரம், குடும்பம், நிர்வகித்தல், சொத்துடைமை) ஆராய்ந்தார். அவர் நான்கையும் இணைகரமான நிகழ்வுகளாகவே கருதினார். எங்கெல்சோ வரலாற்றைப் பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப அந்த வளர்ச்சியின் பிரதான திசையாக பொருளாதாரத்தைச் சுட்டிக் காட்டினார். அது பூர்விக சகாப்தத்தில் ஏற்கெனவே புறவய ரீதியாக முன்னேற்

---

* *Ibid.*

றத்தின் எஞ்சிய அம்சங்கள் அனைத்துக்கும் பொருளாதார அடிப்படையாக இருந்தது. எங்கெல்ஸ் உழைப்புக் கருவிகளின் உற்பத்தியின் மீது தன்னுடைய கவனத்தை செலுத்தினார்.

மார்கனும் எங்கெல்சும் பண்டைய சமுதாயத்தை ஆராய்ந்த அடிப்படையான முறையியல் நிலைகளுக்கு இடையில் சில ஒற்றுமைகள் இருந்தபோதிலும் அவை கோட்பாட்டு ரீதியாக வேறுபட்டன.

மார்க்சும் எங்கெல்சும் இதற்கு முன்னர் எழுதிய **ஜெர்மன் சித்தாந்தத்தில்** உற்பத்தியை உயிர்வாழ்வதற்குரிய சாதனங்களின் உற்பத்தி என்றும் மனிதனையே உற்பத்தி செய்தல் என்றும் பிரித்தார்கள். இப்பிரிவினை மனிதர்களுக்கு இடையில், மனிதனுக்கும் புறச் சூழலுக்கும் இடையில் உள்ள சமூக மற்றும் இயற்கை உறவுகளின் வேற்றுமையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. முதல் விஷயத்தில் பொதுத் தேவைகளைப் (சாதாரணமாக, நேரடியான முறையில் அல்ல) பூர்த்தி செய்வது ஓங்கியிருந்தது. கோட்பாட்டு ரீதியில் இவை மிருகங்களுக்கு உரித்தானவை அல்ல; இரண்டாவதில் பூர்விக மனிதர்களின் தனிப்பட்ட (தனது அடிப்படையில் உயிரியல் ரீதியான) தேவைகளைப் பூர்த்தி செய்வது மேலோங்கி நிற்கிறது.

வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்தல் என்பதில் நேரடியான நுகர்வுப் பொருட்களின், எல்லாவற்றுக்கும் மேலாக உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றின் உற்பத்தி

யும் உற்பத்திச் சாதனங்களின், எல்லாவற் றுக்கும் மேலாக உழைப்புச் சாதனங்களின் சமூக உற்பத்தியும் அடங்கியிருக்கின்றன. பல சமயங்களில் ஆராய்ச்சி நூல்கள் பூர்விக சகாப்தத்தின் பொருளாயத உற்பத்தியை உணவு உற்பத்தி மற்றும் உணவு உற்பத்தி அல்லாத, அதாவது பிரதானமாக கருவிகளின் உற்பத்தி என்று பிரிக்கின்றன.

உணவு உற்பத்தி தன் பங்கிற்கு தாவர மற்றும் இறைச்சிப் பொருட்களை உற்பத்தி செய்வதை உள்ளடக்கியிருக்கிறது. உணவு சேகரித்தல், வேட்டையாடுதல் என்னும் உழைப்புப் பிரிவினையை இது மறைமுகமாக முன்னூகிக்கிறது. உணவு பெறுகின்ற இந்த இரண்டு அடிப்படையான வடிவங்களும் ஒன்றுக் கொன்று துணையாக இருக்கின்றன. தாவர உணவில் கலோரிகள் குறைவு, மேலும் அது சாதகமான பருவநிலைமையை அதிக மாகச் சார்ந்திருக்கிறது. ஆனால் அதை நீண்ட காலம் பாதுகாக்க முடியும், அதிகமான ஆபத்து இல்லாமல் அதைப் பெற முடியும், இதரவை. இறைச்சி உணவு அதிகமான சக்தி யுள்ளது. ஆனால் அதைப் பெறுவதற்கு அங்கு மிங்கும் போவதும் தீவிரமான முயற்சியும் அவசியம், ஆபத்தும் உண்டு. மேலும் அதைக் கெட்டுப் போகாதபடி வைப்பது இன்னும் கடினம் (அதைச் சமைக்கும் வெப்ப முறை களைக் கண்டுபிடிக்கின்ற வரை இந்த நிலை நீடிக்கிறது). உழைப்பின் இலக்கு தாவரமா, பிராணியா என்பதைப் பொறுத்து வாழ்க்

கைச் சாதனங்களின் உற்பத்தியில் (சேகரித்தல், வேட்டையாடுதல்) இயற்கைக் கருவிகள் மற்றும் செயற்கைக் கருவிகளின் பாத்திரத்தில் அடிப்படையான வேறுபாடு இருக்கிறது.

மனிதனை உற்பத்தி செய்தலோ இருபாலினருக்கும் இடையில் இயற்கையான உறவுகளையும் சமூகமயமாக்கல் எனும் சமூக உறவுகளையும் முன்னூகிக்கின்றது. பின்னால் சொல்லப்பட்டது சமூக அமைப்புகளின் அடிப்படையான கூறாகிய மனிதன் சமூக நடவடிக்கையில் பங்கெடுப்பதைக் குறிக்கிறது. இருபாலினருக்கும் இடையிலான உறவுகள் மனித இனத்தைத் தொடர்வதன் அவசியத்தை இயற்கையாகப் பூர்த்தி செய்வதென்ற முறையில் குழந்தைகள் பிறப்பு மற்றும் தனிப்பட்ட இயற்கைத் தேவைகளை நேரடியாக, சமூக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் திருப்தி செய்கின்ற பாலுறவை உள்ளடக்கியிருக்கின்றன.

சமூகமயமாக்கல் என்னும் நிகழ்ச்சிப் போக்கிற்குள் தனிநபர், உழைப்பு மற்றும் இதர சமூகப் பணிகளை நிறைவேற்றுவதற்குரிய, வளர்ப்பு முறை மற்றும் கல்வியின் மூலம் சமூக ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட தயாரிப்புக்கு உள்ளாகிறார். விளையாட்டு, மரபு, சடங்கு பிரத்யேகமான கடமைகளை நிறைவேற்றுகின்றன. விளையாட்டு (வயதுவந்தவர்கள், குழந்தைகள் இருவரிடமும்) உழைப்புக்குப் பிரத்யேகமான தயாரிப்பாகச் செயல்படுகிறது. உழைப்பு நிலைமைகளை மனதில்

கற்பனை செய்து நிறைவேற்றுதல், உடற் பயிற்சி மற்றும் உணர்ச்சி பூர்வமான தயாரிப்பை அது உள்ளடக்கியிருக்கிறது. இளைய தலைமுறையினருக்குப் போதிப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் சமூக உறவுகளில் பெற்ற அனுபவத்தையும், குறிப்பிட்ட இயற்கை நியதிகளைப் பற்றிய அறிவையும் மாற்றிக் கொடுப்பதற்கும் விளையாட்டு ஒரு சாதனமாக இருக்கிறது.

உழைப்புச் சாதனங்களின் உற்பத்தி, சமூக உறுப்பினர்களையே உற்பத்தி செய்தல் ஆகிய இரண்டுமே சாராம்சத்தில் சமூக ரீதியான உற்பத்தி வடிவங்களே. அவை இரண்டும் சேர்ந்து மார்க்ஸ், எங்கெல்ஸ் வர்ணித்த "மனிதர்கள் ஒருவரோடொருவர் கொண்டிருக்கும் பொருள்முதல்வாத இணைப்பாக", ஒரு தலைமுறையை மட்டுமின்றி பல தலைமுறைகளையும் சேர்ந்த "பல தனிநபர்களின் ஒத்துழைப்பாக"* இருக்கிறது. நுகர்வுச் சாதனங்களின் (உணவு) இயற்கையான உற்பத்தி வடிவங்களையும் (வெளித்தோற்றத்தில் இவை மிருகத்தின் வாழ்க்கை நடவடிக்கையை நினைவுபடுத்துகின்றன) பாலுறவுகளையும் பொறுத்தமட்டில் இவை மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையில் பொருள்முதல்வாத இணைப்பு என்று கூறலாம்.

இருபாலினருக்கும் இடையிலுள்ள உறவுகளின் வரலாற்றுப் பரிணாமத்தை பூர்விக

---

* K. Marx, F. Engels, *Collected Works,* Vol. 5, Progress Publishers, Moscow, p. 43.

மனிதர்களுக்கும் மனிதக் குரங்குகளுக்கும் நேரடி யான ஒப்புமையின் அடிப்படையில் விளக்கு வதற்குச் சில சமயங்களில் முயற்சி செய்யப் படுகிறது. எனினும் வாழ்க்கை நடவடிக் கையின் சமூக வடிவங்களில் பங்கெடுப்பதற்கு அவசியமான குணங்களைக் கொண்டிருக்கின்ற தனிநபர்களின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக் கைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் இந்த வரலாற்றுப் பரிணாமத்தை விளக்க முடியாது. மனித இனப் பெருக்கப் பணியிலும் இருபாலி னருக்கும் இடையில் நெருக்கமான உறவு களின் தன்மையிலும் ஏற்படும் மாற்றங்கள் சமூகமயமாக்கலினால் மேன்மேலும் அதிகமாக நிர்ணயிக்கப்படுகின்றன.

மனிதர்கள் இறைச்சி உணவைத் தேடிப் பிடித்ததைப் பல ஆராய்ச்சியாளர்கள் திரளாக வசிக்கும் காட்டு விலங்குகளின் மறிவினை-இயல்புணர்ச்சிக் ''கூட்டுறவுகளுடன்'' இணைக் கிறார்கள். ஆனால் அதை உழைப்புக் கருவி களின் உற்பத்தி, உபயோகம் மற்றும் உற்பத்தி ஒத்துழைப்பின் ஆரம்ப வடிவங்களிலிருந்து பிரித்தால் அதைத் திருப்திகரமாக விளக்க முடியாது.

குலமரபு உறவுகளின் தோற்றம் மற்றும் பரிணாமத்தைப் பற்றி ஆராய்கின்ற பொழுது மார்கன் மற்றும் எங்கெல்சினுடைய தத்துவ அணுகுமுறைகளிலிருந்த அடிப்படையான வேறு பாட்டை இக்கண்ணோட்டத்திலிருந்து பார்த் தால் இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். மார்கன் காட்டுமிராண்டி நிலை

யிலிருந்து பண்பாடற்ற நிலை வழியே நாகரிகத்திற்கான மனிதகுல ''முன்னேற்றத்தின் திசைகளில்'' சாராம்சத்தில் சுயாட்சியுள்ள நான்கு இணைகரத் திசைகளைக் குறிப்பிட்டார். எங்கெல்ஸ் அவற்றில் பொருளாதாரத் திசை ஒன்றை மட்டுமே அடிப்படையான, ஆதாரமான, இயக்குகின்ற கோட்பாடாகக் கண்டார். உள்ளடக்கத்தைப் பொறுத்தமட்டில் இத்திசை மார்க்சும் எங்கெல்சும் உருவாக்கிய உற்பத்திச் சக்திகள் என்ற கருதுகோளுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. மார்கன் இந்த ஆதாரத்தை உள்ளுணர்ச்சியுடன் கண்டறிந்தார். இதன் மீதுதான் அவர் இனங்கண்ட சமூக வாழ்க்கையின் மற்ற மூன்று அம்சங்கள் முதிர்ச்சி அடைந்தன, பிறகு அதிலிருந்து பிரிந்தன, பரஸ்பரச் செயலாக்கத்தில் ஈடுபட்டன.

பூர்விக சகாப்தத்தில் குலமரபு கூட்டுச் சமூகத்திலுள்ள தொடர்புகளின் முன்னர் பிரிக்கப்படாத, பன்முகச் செயல் கட்டமைப்பு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மற்றும் மனிதர்கள் ஒருவருக்கொருவரும் இயற்கையுடனும் கொண்டுள்ள உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கத்தால் படிப்படியாக வேறுபாடு அடைந்தது.

உற்பத்தி, மனித இனப் பெருக்கம், சமூக ஒழுங்குபடுத்துதல் ஆகிய சமூக வாழ்க்கையின் மூன்று அம்சங்கள் ஒன்றையொன்று பரஸ்பரம் நிர்ணயிக்கும் இயக்கவியல்-முரண்பாடான நிகழ்ச்சிப் போக்கில் வளர்ச்சி அடைகின்றன.

மார்கனுடைய கருத்துப்படி புதிது புனைதல், கண்டுபிடிப்புகளில் வெளிப்படுகின்ற மனித அறிவின் வளர்ச்சியே வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் இயக்குச் சக்தியாகும். எங்கெல்ஸ் பிரச்சினையைக் கோட்பாட்டு ரீதியில் வேறு விதமாக முன்வைத்தார். ஒருதார மணம், தனிச்சொத்து, அரசு அதிகாரம் ஆகியவை தோன்றுவதன் புறநிலையான நிகழ்ச்சிப் போக்குகளை அவர் ஆராய்கிறார். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மற்றும் சமூக உழைப்புப் பிரிவினை அவற்றின் பொருளாயத் அடிப்படையாகவும் இயக்குச் சக்தியாகவும் இருந்ததாக எங்கெல்ஸ் கருதுகிறார்.

அடுத்த அத்தியாயங்களில் சமூக வாழ்க்கையின் மேற்கூறிய அம்சங்களை அவற்றின் தோற்றம் மற்றும் நியதியான வரலாற்றுப் பரிணாமம் என்னும் கண்ணோட்டத்தில் ஆராய்வோம்.

# 5. பூர்விக சமூகத்தில் இரத்த உறவுமுறையின் பாத்திரம்: குழு மணம் மற்றும் தாய்வழி மரபு

## இரத்த உறவுமுறைகளும் அவற்றின் பரிணாமமும்

மரபு ரீதியாக சடத்துவமுள்ள இரத்த உறவுமுறைகளின் அமைப்புக்கும் அதைக் காட்டிலும் மிகவும் சுறுசுறுப்பான யதார்த்த குடும்ப உறவுமுறைகளுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை மார்கன் கண்டுபிடித்ததற்கு எங்கெல்ஸ் விஞ்ஞான கண்டுபிடிப்பு என்ற முறையில் அதிகமான மதிப்பளித்தார். இரகு வோஸ் செவ்விந்தியர் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய உண்மையான பெற்றோர்கள் யார், குழந்தைகள் யார், தன்னுடைய இரத்த சகோதரர்கள், சகோதரிகள் யார் என்பது நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவர் களுடைய குலம் ஏற்கெனவே இணைக் குடும் பத்தை (அதாவது இரு தரப்பினரும் மண உறவைச் சுலபமாக ரத்து செய்யக் கூடிய ஒருதார மணம்) கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் வழக்கப்படி தம்முடைய குழந் தைகளை மட்டுமின்றி தம் சகோதரர்களின் குழந்தைகளையும் குமாரர்கள், குமாரத்திகள் என்று அழைத்தார்கள், அவர்களும் அவரை அப்பா என்று அழைத்தார்கள். அதே சமயம் தம் சகோதரிகளின் குழந்தைகளை அவர்

மருமகன், மருமகள் என்று அழைத்தார்; அவர்கள் அவரை மாமா என்று அழைத்தார்கள். இரகுவோஸ் பெண் இதற்கு மாறான முறையில் தன்னுடைய சகோதரிகளின் குழந்தைகளைக் குமாரர்கள், குமாரத்திகள் என்று அழைத்தாள்; அவர்களும் அவளை அம்மா என்று அழைத்தார்கள், ஆனால் அவளுடைய சகோதரர்களின் குழந்தைகள் அவளை அத்தை என்று அழைத்தார்கள்.

இத்தகைய முறை ஐரோப்பிய கலாச்சாரத்தின் பிரதிநிதிகளுக்கு விசித்திரமாகத் தோன்றியது. அது வேடிக்கையாகவும் இருந்திருக்கும்; ஆனால் அத்தகைய இரத்த உறவு முறை உலகத்தின் பல்வேறு பகுதிகளில் (அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில்) இருந்தது; அத்தகைய உறவு முறைகளின் எச்சங்கள் சில காலம் முன் வரை, பண்டைக்கால கிரேக்கர்கள், ரோமானியர்கள், ஜெர்மானியர்கள் உட்பட ஐரோப்பியர்களிடமும் இருந்தன. ''காட்டுமிராண்டி நிலை மற்றும் பண்பாடற்ற நிலைக் காலகட்டங்களில் எல்லா மக்களினங்களின் சமுதாய அமைப்பிலும் இரத்த உறவுமுறை வகித்த தீர்மானமான பாத்திரத்தைப்'' பற்றி சிந்தித்த எங்கெல்ஸ் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்: பூர்விக சகாப்தத்தில் ''தகப்பன், குழந்தை, சகோதரன், சகோதரி என்ற சொற்கள் வெறும் மரியாதையைக் குறிக்கும் பட்டப் பெயர்களல்ல. அவை திட்டவட்டமான, மிகக் கடுமையான பரஸ்பரக் கடமைகளைத்

தாங்கி உள்ளன; அந்தக் கடமைகளின் முழுமை இந்த மக்களினங்களின் சமுதாய அமைப்பில் ஒரு முக்கியப் பகுதியாய் அமைந்துள்ளது''.* இரத்த உறவுமுறைகள் ஒருவருடன் ஒருவருக்கு உள்ள தொடர்புகளில் நிலவும் வெறும் மரியாதை சடங்கு முறைகளைப் போல் இருக்கின்றன என்று கருதிய மாக்லென்னான் மார்கனுடைய கருத்தை எதிர்த்தார். ஆனால் எங்கெல்ஸ் மார்கனுடைய கருத்தை ஆதரித்தார் என்பதை மேலே தரப்பட்டிருக்கும் பகுதி எடுத்துக் காட்டுகிறது.

இரத்த உறவுமுறைகள் மற்றும் யதார்த்த குடும்ப உறவுகளை அவற்றின் வடிவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் எங்கெல்ஸ் ஆராய்ந்த பொழுது **பண்டைய சமுதாயம்** என்ற நூலை பற்றி மார்க்ஸ் எழுதியிருந்த குறிப்புகளிலிருந்து ஒரு பகுதியை மேற்கோள் காட்டுகிறார். இப்பகுதியில் இரத்த உறவுமுறைகள் பூர்விக சமுதாயத்தின் உறுப்பினர்களுடைய உலகக் கண்ணோட்டத்தின் முளையாணி என்ற வகையில் பிற்காலங்களைச் சேர்ந்த ''அரசியல், சட்டவியல், மத மற்றும் தத்துவஞான அமைப்புகளுடன்'' ஒரே வரிசையில் அமைந்திருக்கின்றன. மார்க்ஸ் துல்லியமாக இந்த அடிப்படையில்தான் தொல்கதைகள் (அக்காலத்திய யதார்த்த வாழ்க்

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 210.

கையிலிருந்து வழக்கற்றுப் போன இரத்த உறவுமுறையின் கருத்தியலான பிரதிபலிப்பு அவை) மதமாகப் பரிணமித்ததை விளக்கினார். முற்காலத்தில் நிலவிய பூர்விக சமத்துவம், கூட்டு மனப்பான்மை மற்றும் ஜனநாயகத்துக்கு ''மாற்றுப் பொருள்'' என்ற பாத்திரத்தை மதம் எடுத்துக் கொள்கிறது. சமூக-உடைமை பாகுபாடு தோன்றுவதால் குலமரபு அமைப்பின் எச்சங்கள் தவிர்க்க முடியாதபடி அகற்றப்படுகின்ற பொழுது, வர்க்க முரணியல்புகள் முதிர்ச்சி அடைகின்ற பொழுது இது நடைபெறுகிறது.

எங்கெல்ஸ் 1876இல் **மனிதக் குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப் படியில் உழைப்பின் பாத்திரம்** என்ற கட்டுரையை எழுதிக் கொண்டிருந்த பொழுது — மார்கனுடைய நூலைப் படிப்பதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே — பூர்விக சமூகத்தில் இரத்த உறவுமுறைகளின் தோற்றத்தின் மீது அக்கறை செலுத்தினார்.

இரத்த உறவுமுறை அமைப்புகளைப் பற்றிய ஆராய்ச்சியின் மூலம் குடும்பத்தின் பூர்விக வடிவத்தின் உருவரைகளை எடுத்துக்காட்டிய மார்கன் தான் அமெரிக்க செவ்விந்திய இனக்குழுக்களுக்குள் கண்டுபிடித்த, ''விலங்குகளின் பெயர்களைக் கொண்ட இரத்த உறவுமுறைக் கூட்டுகள்'', ''நாகரிக சகாப்தத்தை எட்டுகின்ற வரை, (நமக்கு இன்று கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு பார்க்கும் பொழுது) அதற்குப் பின்னாலும் கூட எல்லா மக்களினங்களுக்கும் பொதுவான அமைப்

பாகிய''* குலங்களைத் தவிர வேறல்ல என்பதை நிரூபித்தார் என்று எங்கெல்ஸ் எழுதுகிறார்.

ஆனால் குலம் எப்படித் தோன்றுகிறது? அதன் மூலம் எது? அதன் பிற்காலப் பரிணாமத்தின் முன்நிபந்தனைகள் எவை?

''ஒரு இனக்குழுவில் வரைமுறையற்ற பால் உறவுகள் நிலவிய ஒரு பூர்விக நிலை இருந்தது; ஆக ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணுக்கும் சொந்தமாயிருந்தாள்; அதே போல் ஒவ்வோர் ஆணும் ஒவ்வொரு பெண்ணுக்கும் சொந்தமாயிருந்தான்''** என்பது மார்கனுடைய கருத்து. எங்கெல்ஸ் மார்கனுடைய கருத்தை மேற்கோள் காட்டுகின்ற பொழுது, வரைமுறையற்ற பால் உறவுகளின் பரிணாம மூலத்தை திருமணம் மற்றும் குடும்பம் தோன்றுவதற்கு முந்திய பூர்விக சமூகத்திலிருந்து வருவிப்பதற்கு சமூக டார்வின்வாதிகள் செய்கின்ற முயற்சிகளை (அத்தகைய முயற்சிகள் இன்றும் விஞ்ஞானத்தில் நடைபெறுகின்றன) மறுத்தார். ''மிருகக் குடும்பமும் பூர்விக மனித சமூகமும் ஒன்றுக்கொன்று பொருந்தாதவை'',*** மிருகக் கட்டத்திலிருந்து தோன்றிய பூர்விக மனிதர்களுக்கு எவ்விதமான குடும்பத்தைப் பற்றியும் தெரியாது, அல்லது எவ்வளவு அதிகமாகப் பார்த்தாலும் மிருகங்களிடம் ஒருபோதும் இல்லாத குடும்பத்தை

* *Ibid.*, pp. 255—256.

** *Ibid.*, pp. 211-212.

*** *Ibid.*, p. 213.

மட்டுமே அறிந்திருந்தார்கள் என்று அவர் எழுதினார். இந்த விஷயத்தைப் பற்றி மார்கனுடைய புத்தகத்துக்குப் பிறகு எழுதப் பட்டிருக்கின்ற ஆராய்ச்சிகளைப் பொழித் துரைக்கின்ற எங்கெல்ஸ் பிரெஞ்சுத் தத்துவ ஞானியும் சமூகவியலாளருமான அல்ஃபிரேட் எஸ்பினாஸ் எழுதிய *Des sociétés animales* (பாரிஸ், 1877) என்னும் நூலில் எழுதியுள்ள கருத்துரையைத் தன்னுடைய வாதங்களுக்கு அடிப்படையாக வைக்கிறார். எஸ்பினாஸ் பரிணாமத் தத்துவத்தை ஆதரித்தவர். ''உயர்தர மிருகங்களிடையே மந்தையும் குடும்பமும் ஒன்றுக்கொன்று அனுசரணையாயிருப்பவை அல்ல, ஒன்றுக்கொன்று எதிர்மறையானவை.'' ஏனென்றால் ''புணர்ச்சி வேட்கைக் காலத்தில் ஆண் மிருகங்களிடையே ஏற்படுகின்ற பொறாமை கூடிவாழும் ஒவ்வொரு மந்தையையும் கட்டுத் தளரச் செய்கிறது அல்லது தற்காலிகமாகக் கலைத்து விடுகிறது'' * என்று எஸ்பினாஸ் எழுதினார்.

உயிரியல் சுயநலமும் (பால் மற்றும் உணவைக் குறித்து) தனியாகப் பிரிந்திருத்தலும் அடிமட்ட சமூக அங்கத்தின் முன்னோடியாகப் பரிணமிக்கக் கூடிய புதிய ரக மந்தையின் உருவாக்கத்தைத் தடுத்தன.

வரைமுறையற்ற புணர்ச்சியை ஒத்த உறவு களைக் கொண்டிருந்த பூர்விக மனித கூட்டு — அதன் ஆரம்பக் கட்டங்களில் —

---

* *Ibid.*, p. 214.

மனிதகுலத்தின் வரலாற்று எல்லைக்கு வெளியே இருந்தது என்று மார்கனுக்கு மாறாக எங்கெல்ஸ் உறுதியாகக் கருதினார். இக்கட்டம் ''மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கைக்கு மாறுகின்ற கட்டத்துக்குப்'' பொருத்தமானது* என்று அவர் கருதினார். எங்கெல்ஸ் மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கையை நோக்கிய முன்னேற்றத்துக்குப் பொருள் முதல்வாத விளக்கமும் கொடுத்தார். ''மனிதனாக மாறி வந்த மிருகம்—ஆயுதமெதுவும் இல்லாத மிருகம்—தனிமையில், சிறிய எண்ணிக்கையில், ஜோடி ஜோடிகளாக வாழுவது மந்தை வாழ்க்கையின் உயர் வடிவமாக இருந்த போது கூட உயிர் தப்பி வாழ முடிந்தது.... ஆனால் மிருக வாழ்க்கையிலிருந்து வெளிப்பட்டுப் பரிணாம வளர்ச்சியடைவதற்கு, இயற்கை கண்ட அதியுன்னதமான முன்னேற்றத்தைச் சாதிப்பதற்கு கூடுதலாக இன்னொரு அம்சமும் தேவைப்பட்டது; அதாவது, தனிமனிதனின் போதாக் குறையான தற்காப்புத் திறனுக்குப் பதிலாக மனிதக் கூட்டத்தின் ஒன்றுபட்ட பலமும் கூட்டு நடவடிக்கையும் அமைய வேண்டியிருந்தது''** என்று எங்கெல்ஸ் எழுதினார்.

மிருக உலகத்திலிருந்து சமூக உலகத்துக்கு இட்டுச் செல்வதற்குப் பூர்விக மனிதக் கூட்டங்கள் (கூட்டுச் சமூகத்தின் முன்னோடி

---

* *Ibid.,* p. 215.

** *Ibid.,* p. 214.

கள்) நீண்ட காலமாக மாறும் கட்டத்தில் வாழ்ந்திருந்தன என்னும் கருத்தமைப்பை சோவியத் அறிஞர்கள் முன்வைத்திருக்கின்றனர்.* இயல்புணர்ச்சியான, மிருக ரகத்தைச் சேர்ந்த உழைப்பு வடிவங்கள் இக்கட்டத்தில்தான் தோன்றின என்றும் கருதப்பட்டது. இவற்றைப் பற்றி மார்க்ஸ் மூலதனத்தில் எழுதினார்.** அதே சமயத்தில் மனிதனுடைய தொலை முன்னோர்களின் விலங்கியல் இயல்புணர்ச்சிகள் — உணவு மற்றும் பாலுறவைப் பொறுத்த இயல்புணர்ச்சிகள் உட்பட — கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. ''வயதுவந்த ஆண்களிடையே பரஸ்பர சகிப்புத் தன்மையும் பொறாமையொழிந்த மனோநிலையும் பெரிதாயும் நிரந்தரமாயுமுள்ள மனிதக் குழுக்களை நிறுவுவதற்கு முதல் நிபந்தனையாயிருந்தன; இந்தப் பெரிய, நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய குழுக்களிடையேயிருந்துதான் மிருக நிலையிலிருந்து மனித நிலைக்குச் செல்லும் மாற்றத்தைச் சாதிக்க முடிந்தது.''***

திருமண-குடும்ப உறவுகளின் வரலாற்றுப் பரிணாமத்தின் தொடக்க நிலையை இன்னும்

---

* ஏ. இ. பெர்ஷித்ஸ், ஏ. எல். மொன்காய்த், வி. பி. அலெக்ஸேயெவ், **பூர்விக சமூகத்தின் வரலாறு**, மூன்றாவது பதிப்பு, மாஸ்கோ, 1982, பக்கங்கள் 60—61 (ருஷ்ய மொழியில்) பார்க்க.

** K. Marx, *Capital,* Vol. 1, Progress Publishers, Moscow, 1983, p. 175.

*** K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, pp. 214—215.

மட்டுமின்றி ஆணும் சொந்த குணங்களைக் கொண்டு மதிக்கப்படாமல் சொத்துக்களைக் கொண்டு மதிக்கப்படும் வழியிலே அதிகமாகிக் கொண்டே போகும் அளவில் நடத்தி முடிக்கப்படுகின்றது.'' *

மனிதனைப் புனருற்பத்தி செய்தல் (உயிரியல் மற்றும் ஆன்மிக அர்த்தத்தில் மனித இனப் பெருக்கம்), வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்கின்ற துறையில் இந்த நிகழ்ச்சிப் போக்கிற்கு வகை செய்தல் புதிதாகத் தோன்றிய மனிதகுலத்தின் எல்லா அம்சங்களின் அமைப்புக்கும் ஒழுங்குபடுத்தலுக்கும் மையமாகும். இரத்த உறவுமுறைத் தொடர்புகளோ வயதுக்கும் பாலுக்கும் பொருத்தமான முறையில் தனிநபருடைய நடத்தை மற்றும் கௌரவத்தை நிர்ணயித்த பிரத்யேக உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன: 1) **குடிவழிப்பட்டியல்** உறவுமுறை (தலைமுறை ரீதியான உறவுமுறை) ''தாய் — மகவு'' என்னும் ரகம் (பிறப்பு, உணவூட்டுதல், விளையாடுதல், இதரவை) மற்றும் ''தந்தை — மகவு'' என்னும் ரகம் (உணவுக்கு வழி செய்தல், எதிரிகளிடமிருந்து பாதுகாத்தல், இதரவை) மற்றும் 2) **சமவயதுள்ளோருக்கு இடையிலான** உறவுமுறை, ''சகோதரன் — சகோதரன்'' மற்றும் ''சகோதரி — சகோதரி'' என்ற உறவுகள். இவை வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்வதில் உழைப்பின் ஒத்துழைப்புக்கு அடிப்படையாக இருந்தன.

---

* *Ibid.*, p. 251.

மேலும் ஆரம்பத்தில் கனிகள் மற்றும் கிழங்குகளைச் சேகரிப்பதிலும் வேட்டை யாடுதலிலும் வயதுவந்தவர்களின் செயல்கள் மிருகங்களின் நடத்தையை அதிகமாக நினைவு படுத்தின.

மனிதனை உற்பத்தி செய்வதன் முக்கியமான குறிக்கோள் மற்றும் ''பொருள்'' குழந்தை களே. முதியோர் சமூக நினைவை ஒருங் கிணைத்தனர், எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியர்களாகவும் கற்பிப்பவர்களாகவும் செய லாற்றினர். பால் ரீதியில் முதிர்ச்சியடைந்த ஆண்களும் பெண்களும் குழந்தை பெற்றுக் கொள்வது என்ற உற்பத்தி நிகழ்ச்சிப் போக் கில் இறங்கினர். அவர்களுக்கிடையில் நெருக்க மான உறவுகளைச் சமூகம் ஒழுங்குபடுத்தியது. பூர்விக சமூகத்தின் ஆரம்ப நிலையில் வரை முறையற்ற புணர்ச்சி இருந்தது என்னும் கருதுகோளை எங்கெல்ஸ் ஏற்றுக் கொள் கிறார். அவருடைய கருத்தின்படி, தலை முறைகளின் அடிப்படையில் திருமணக் குழுக் கள் பிரிக்கப்பட்ட இரத்த உறவுக் குடும்பம் அதை அகற்றவில்லை; சகோதரர்களும் சகோ தரிகளும் திருமண உறவிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட பூனலுவா குடும்பமும் அதை அகற்றவில்லை; குழு மண முறை என்ற தொடக்க சமூக உறவுமுறை அதை அகற் றியது. இங்கே பாலுறவுகளில் ஈடுபடுபவர்கள் (நிச்சயமாக, உடலியல் அர்த்தத்தில் அல்ல, சமூக அர்த்தத்தில்) பரஸ்பர அனுதாபத் தைக் கொண்ட தனித்தனி ஆண்களும் பெண்

களும் அல்ல, இரத்த உறவினால் இணைக்கப் பட்ட தனிநபர்களின் குழுக்களே, அதாவது கூட்டு *ego* (நான்). எனினும் பாலுறவில் ஈடுபடுகின்ற ஆணுக்கும் பெண்ணுக்கும் இரத்த உறவு இருக்கக் கூடாது என்பது அத்தகைய பாலுறவுகளின் அவசியமான நிபந்தனை யாகும்.

ஒரு சமூகக் குழுவிற்குள் (குலம், பிராட்ரி) திருமணத்தை விலக்குவது சம்பந்தமான புறமண முறை பிரச்சினை விசேஷ ஆராய்ச் சிக்கு உரியது. பூர்விக மனிதர்களுக்கு சமூக உறவுகள் மற்றும் நடத்தையின் பிரதான அளவுகோல், இரத்த உறவு முறையின் அடிப் படையில் அமைந்த, பாலுறவு மற்றும் உணவு ரீதியான தடைகளையும் முன்விருப்பச் சார்புகளையும் கொண்ட முறையில் அடங்கி யிருந்தது. இப்பொருளைப் பற்றி எழுதப் பட்டுள்ள ஆராய்ச்சி நூல்களில் வழக்கமாக தடைகள் வலியுறுத்தப்படுகின்றன, ஏனென் றால் அவை மிகத் தெளிவாகத் தெரிகின் றன. மேலும், பெரும்பாலும் பாலுறவு ரீதியான தடைகளைப் பற்றி (புறமண முறை) பேசப்படுகிறது. இவை நெடுங்காலமாக தெரிந் ததே. அதற்கிடையில், வாழ்க்கைச் சாத னங்களை உற்பத்தி செய்கின்ற துறையைச் சேர்ந்த உணவுத் தடைகள் இதே சமூகப் பாத்திரத்தை நிறைவேற்றின என்னும் கருத் தை அண்மைக் காலத்தில் லௌரா மற்றும் ராவூல் மக்காரியஸ் முன்வைத்திருக்கின்றனர்.

இதைப் பொருள்முதல்வாதக் கோணத்தில்

எப்படி விளக்க முடியும்? பாலுறவுகளுக்குக் குழந்தைகள் என்னும் பார்க்கக் கூடிய ''விளைவு'' ஏற்படுவதைக் கொண்டு இதை ஒருவேளை விளக்க முடியும் (ஆனால் பாலுற வுக்கும் கர்ப்பத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில இனக்குழுக்களுக்குத் தெரியாது என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்). இரத்த உறவு கட்டமைப்பையும் தன்மை யையும் சகோதர உறவுமுறையையும் கறா ராகக் கடைப்பிடித்தல், மூதாதையர் வழிபாடு, இதரவை பூர்விக சமூகத்தில் வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி இரண்டாம் நிலை யாகவே இருந்தது, மனிதனை உற்பத்தி செய் வதற்கு அது உதவியாக இருந்தது என்ற கருத்துக்கு இட்டுச் செல்ல முடியும்; சில சமயங்களில் அப்படி இட்டுச் செல்கின்றன. மேலும், உற்பத்தியின் கட்டமைப்பைப் பார்க் கின்ற பொழுது சமூக அம்சத்துக்குப் பதிலாக உடலியல் (உயிரியல்) அம்சத்தை மட்டுமே வலியுறுத்தினால் பூர்விக மனிதர்கள் ஒருவகை யான பழைய கற்கால பாலுறவு வெறியர் களாக இருந்தார்கள் என்றும், எங்கெல்சின் கருத்துகளுக்கு மாறாக, உழைப்பு அல்ல, பாலுறவு மனிதனைப் படைத்தது, அவனை விலங்குலகத்திலிருந்து பிரித்தது, சமூக வாழ்க் கையின் தொடக்க அடிப்படையாக இருந்தது என்றும் ஒருவர் முடிவு செய்யக் கூடும். இப்படிப்பட்ட கூற்றுகள் பூர்ஷ்வா இலக் கியத்திற்கு உரித்தானவை.

பூர்விக சமூகம் அதற்குப் பின் ஏற்பட்ட மூன்று வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகங்களுடன் — அவை தமக்குள் வேறுபட்டிருந்ததைக் காட்டிலும் மிகவும் அதிகமாக வேறுபட்டிருந்தது. **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் இதைப் பற்றி எங்கெல்ஸ் எழுதியுள்ள கருத்துகளைப் பல நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பரவலாக ஆதரித்திருக்கிறார்கள். ‘‘பூர்விக சமூகங்களின் நிகழ்வுகள் அவற்றுக்குப் பிரத்யேகமானவை என்பதால் அந்த சமூகங்களுக்கே உரிய கண்ணோட்டங்கள் மற்றும் நடத்தை பற்றிய கருத்தினங்களின் மூலமாக அன்றி அவற்றை விளக்க முடியாது’’* என்று ராவூல் மக்காரியஸ் சரியாகக் கூறியுள்ளார். ‘‘பூர்விக சமூகம், குடும்ப அமைப்பை குணாம்சமாகக் கொண்டிருக்கவில்லை, குல மற்றும் இனக்குழு அமைப்பு அதன் குணாம்சம்’’ என்பது முக்கியமானதாகும். ‘‘இங்கே ஒவ்வொன்றும் தனிநபரை அடிப்படையாகக் கொண்டல்ல, குழுவை அடிப்படையாகக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது, அனுபவிக்கப்படுகிறது, சிந்திக்கப்படுகிறது. உயிர் வாழ்வதற்கான போராட்டத்தை நடத்த வேண்டியது தனிநபரல்ல (அல்லது ஒரு ஆண்மகன் தன்னுடைய மனைவி, குழந்தைகளுடன் கூட அல்ல), எண்ணிக்கையில் இன்னும் அதிகமான, உயிரியல் உறவுகளால்

* R. Makarius, *op. cit.*, p. X.

மட்டுமே இணைக்கப்படாத ஒரு குழு அதைச் செய்ய வேண்டும்; அதற்குள் தனிநபர் மொத்தத்தில் ஒரு துணுக்காகவே செயல்படுகிறார்.''* பூர்விக சமூகத்தின் மொத்த வாழ்க்கை முறையின் மீதும் தாக்கம் செலுத்திய குலமரபு உறவுகள் மனித உணர்விலும் அதன் ''கேந்திரமான'' அமைப்புகளாகிய குலமரபு தடைகள் (taboo), இரத்த உறவு முறை, ஒற்றுமை, புறமண முறை, பிரிவினைகள், இனமரபுச் சின்ன முறைமை (totemism), இனக்குழு அமைப்பு ஆகியவற்றிலும் பிரதிபலிக்கப்படாது இருக்க முடியாது.** தொடக்க குலமரபு அமைப்புகள் பல ஆயிரமாண்டுகள் நிலைத்து நின்றதற்கும் பின்னர் தவிர்க்க முடியாதபடி சிதறியதற்கும் புறநிலையான அடிப்படையைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சித்த ராவூல் மக்காரியஸ் பின்வருமாறு எழுதினார்: ''பொருளாதார நடவடிக்கை பலவீனமாக இருந்தபடியால், உழைப்புப் பிரிவினை போதுமான வலிமையைப் பெற்றிருக்காதபடியால் சமூக உறுப்பினர்களுக்கு இடையே செயல்முறை தொடர்பும் ஒற்றுமையும் இரத்த உறவுகளினால் நிறைவேற்றப்படுகின்றன. இக்கட்டடத்தில் அந்த உறவுகள் சமூக கட்டமைப்பின் தன்மையை நிர்ணயம் செய்கின்றன. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி அடைந்து இன்னும் அதிகமான உழைப்புப்

---

* *Ibid.*, p. XXXI.

** *Ibid.*

பிரிவினையை ஏற்படுத்திக் கொண்ட பொழுது உற்பத்தி உறவுகள் தொன்மையான இரத்த உறவுகளுடன் கூடிக் கலக்கின்றன. இரத்த உறவுகள் அக்கணத்திலிருந்து சிதறிவிடத் தொடங்குகின்றன... பழைய இரத்த உறவு முறை அமைப்புகளுக்குள் புதிய பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகள் உருவாகி அவற்றை அகற்றுகின்ற பொழுது பழைய இரத்த உறவுமுறைகள் வழக்கொழிந்து போகின்றன.'' * நாம் ஒரு விதிவிலக்குடன் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியும்: புதிய உழைப்புத் துறைகளில் தோன்றிய மரபுவழி அல்லாத உற்பத்தி உறவுகள் பழைய இரத்த உறவுகளுடன் கூடிக்கலப்பதில்லை, மாறாக அவற்றிலிருந்து வெடித்துக் கொண்டு வெளியே வந்து பிரிந்து விடுகின்றன. புதிய உற்பத்தி உறவுகள் தமது கூடுதலான வளர்ச்சியைத் தடை செய்கின்ற குலமரபு உறவுகளை முதலில் மறைவாகவும் பின்னர் மேன் மேலும் பகிரங்கமாகவும் எதிர்க்கின்றன. உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி உற்பத்திச் சக்திகளில் முற்போக்கான மாற்றம் ஏற்படுவதை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், இரத்த உறவுமுறைப் பிணைப்புகளின் ஸ்திர நிலை பிரதானமாக மேற்கட்டுமானத்தைச் சார்ந்திருப்பதால் பொருளாதாரப் பிணைப்புகளின் வரலாற்றுத் தொலைக்காட்சிகள் மேன்மேலும் முக்கியத்துவத்தை அடைகின்

* *Ibid.*, pp. X—XI.

றன, ஒரு காலத்தில் ஆதிக்கம் செலுத்திய இரத்த உறவுமுறைப் பிணைப்புகள் தளர்வது முன்னைக் காட்டிலும் நன்கு புலப்படும்.

## குழு மண முறை: மூலம், பரிணாமம், எச்சங்கள்

எங்கெல்ஸ் பிற்காலத்தில் குழு மண முறை என்று பெயரிட்டதை முதலில் சொன்னவர் மார்கன். அதுவும் ஒழுங்குபடுத்தப்படாத பாலுறவுகள் — வரைமுறையற்ற புணர்ச்சி — அதன் ஆரம்ப நிலையாக இருந்தன என்பது ஆராயப்பட்டதும் பழைய சுகத்தில் மூழ்கியிருந்த ஐரோப்பிய அற்பவாதிக்குத் தீவிரமான அதிர்ச்சியைக் கொடுத்தது. மார்கனுடைய **பண்டைய சமுதாயம்** மேற்கு ஐரோப்பாவில் வெளியிடப்பட்டவுடன் கண்டனமும் போலியான ஆவேசப் புயலும் கிளம்பின. மனிதன் குரங்கிலிருந்து தோன்றியதாக டார்வின் இதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு கூறிய பொழுதும் இதே மாதிரியான கண்டனம் வெடித்தது. **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** வெளியிடப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும் முதலாளித்துவப் பொதுஜன அபிப்பிராயம் அப்படியேதான் இருந்தது. பாலுறவு ஒழுக்கம், திருமணம் ஆகியவற்றைப் பற்றி பைபிளில் சொல்லப்பட்டிருப்பவை பூர்விக மனிதர்களின் ஆதிக்குணங்கள், அவர்களின் உள்ளுறையான

குணங்களைப் பொறுத்தவை என்று பல சமயங்களில் கருதப்பட்டது.* ராவூல் மக்காரியஸ் **பண்டைய சமுதாயத்தின்** முதல் பிரெஞ்சு மொழிப் பதிப்பின் முன்னுரையில் இப்புத்தகத்தைப் பற்றிய முதலாளி வர்க்க வட்டாரங்களின் கருத்துகளைப் பின்வருமாறு விளக்கினார்: ''கிறிஸ்துவுக்கு சில ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றிருந்தாலும் கூட மனிதர்கள் வரைமுறையற்ற புணர்ச்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்ற கருத்து பழியைத் தோற்றுவித்தது. ஏனென்றால் ஐரோப்பாவிலிருந்த கிறிஸ்துவ மக்களினங்கள் உறுதியாகக் கடைப்பிடித்த, மரபுவழியாக ஏற்றுக் கொண்ட பாலுறவு நல்லொழுங்கு மற்றும் திருமணக் கருத்தை அது மறுத்தது.''**

விலங்குலகத்திலிருந்து அப்பொழுதுதான் வெளிவந்திருந்த மனிதகுலத்தின் பால் வாழ்க்கையை மார்கன் வர்ணித்ததை ''விபசாரக் கண்ணாடியின் மூலமாக...''*** அல்லாமல் வேறு முறையில் முதலாளி வர்க்கத்தால் பார்க்க முடியாததைப் பற்றி எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் நன்கு இகழ்ந்து எழுதியிருக்கிறார். இந்த மாறும் கட்டத்தில்

---

* Robert Briffault, *The Mothers,* Vol. 2, George Allen & Unwin Ltd., London, 1927, pp. 1—19.

** R. Makarius, *op. cit.,* p. XIX.

*** K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 216.

(அதாவது, கறாராகப் பார்த்தால், ‘‘பரி பூரண’’ மனித சமூகத்துக்கு முந்திய கட்டத் தில்) வரைமுறையற்ற புணர்ச்சி என்பது முதலாவதாக, முற்றிலும் புனைவுகோளாகும்; இரண்டாவதாக, பாலுறவுகளை ஒழுங்கு படுத்துகின்ற மரபு இல்லாததை மட்டுமே அது குறிக்கிறது. *

வரைமுறையற்ற புணர்ச்சியிலிருந்து ஒரு தார மணத்துக்கும் (அதாவது ஒரு ஆணிற் கும் ஒரு பெண்ணிற்கும் இடையிலான நிலை யான திருமண வடிவம்), தேர்ந்தெடுத்த நபருடன் காதல் கொள்வதற்கும் இட்டுச் செல்கின்ற முதல் காலடிகளாக இரத்த உறவுக் குடும்பமும் பூனலுவா குடும்பமும் இருந்தன என்பது மார்கனுடைய கருத்தாகும். முதலா வதில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும், அதாவது வெவ்வேறு தலைமுறைகளுக்கு இடையில் பாலுறவு விலக்கப்பட்டது; இரண் டாவதில் ஒரு தாய்க்குப் பிறந்த ஆண்களுக் கும் பெண்களுக்கும் இடையில் பாலுறவு தடை செய்யப்பட்டது. மார்கன் ஊக முறையில் பெற்ற இம்முடிவுகளை எங்கெல்ஸ் ஓரளவுக்கு எச்சரிக்கையுடன் மேற்கோள் காட்டினார். உதாரணமாக, இரத்த உறவுக் குடும்பத்தைப் பற்றி ‘‘வரலாற்றுக்குத் தெரிந்த மிக மிகப் பண்பாடறியாத மக்களினங்களும் கூட இந்தக் குடும்ப வடிவத்துக்கு ஊர்ஜிதப் படுத்தக் கூடிய உதாரணங்களைத் தருவன

---

* *Ibid.*, pp. 215—216.

வாயில்லை''* என்று அவர் எழுதினார். பூனலுவா குடும்பத்தைப் பற்றியும் இதே கருத்தைக் கூற முடியும். பூர்விகக் காலத்தில் பூனலுவா குடும்ப முறையே எங்கும் நிலவியது என்று மார்கன் கருதியதாக எங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளார். *1890 — 1891*இல் இதுவரை தெரிந்திராத குழு மண வடிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டது ''மார்கன் இந்த விஷயத்தில் வெகுதூரம் போய்விட்டார்''** என்பதை எடுத்துக்காட்டியது.

இந்தப் பிரச்சினைகளை ஆராய்கின்ற பொழுது **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலின் முதல் பதிப்பை *(1884)*, கணிசமாகத் திருத்தப்பட்டு, விரிவு படுத்தப்பட்ட நான்காவது பதிப்புடன் *(1891)* ஒப்பிடுவது முக்கியமாகும். மற்றவற்றுடன் ஒப்பிடுகையில், குழு மண முறையைப் பற்றிய கருத்தின் மீது எங்கெல்ஸ் விசேஷ கவனம் செலுத்தினார் என்பதை அதில் காண முடியும். எங்கெல்சின் புத்தகத்தில் இது மார்கன் வர் ணித்த இரத்த உறவு மற்றும் பூனலுவா குடும்பங்களுக்குப் பதிலாக இடம் பெறுகிறது.

எங்கெல்சின் கருதுகோளுக்கு அக்காலத்தில் போதுமான அளவு அனுபவ ரீதியான ஆதா ரங்கள் இல்லை என்றபோதிலும் நவீன இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சிகள் அக்கருத் தை நிரூபித்திருக்கின்றன. குறிப்பாக, இரத்த

* *Ibid.*, p. 217.

** *Ibid.*, p. 221.

உறவுக் குடும்பத்தைப் பற்றிய மார்கனுடைய கருதுகோள் நிராகரிக்கப்பட்டு விட்டது. ஹவாய்த் தீவுகளைப் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மார்கன் பூனலுவா குடும்பத்தைக் கருத்தளவில் அமைத்தார். எனினும் நவீன இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியாளர்கள் (சோவியத் ஆராய்ச்சி யாளரான டி. டி. டுமார்க்கின் உட்பட) பின்வரும் தகவல்களைக் கூறியுள்ளனர்: முதலாவதாக, இரத்த உறவுமுறைகள் மற்றும் திருமண உறவுகளின் அமைப்புகளைப் பற்றி மார்கன் தன்னுடைய ஆராய்ச்சிகளைத் தொடங்கிய காலத்தில் ஹவாய் மக்கள் குழு மணக் கட்டம் மற்றும் காட்டுமிராண்டிக் கால கட்டத்தை விட்டுப் போய் நெடுங்காலமாகி யிருந்தது. அது தவிர, குலமரபு அமைப்பு சிதறிக் கொண்டிருக்கும் பாதையில், சமூக-சொத்துடைமை வேறுபாடுகள் தோன்றியிருக் கும் பாதையில் அவர்கள் ஏற்கெனவே சென்றனர். காலனியாதிக்கவாதிகள் ஹவாய்த் தீவுகளுக்கு வருவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே அங்கே வர்க்க சமூகம் தோன்றத் தொடங்கியிருந்தது. இரண்டாவதாக, இக் கருத்தளவான குடும்ப முறைக்குப் பெயரிடு வதற்குப் பயன்பட்ட பூனலுவா என்ற வழக் கம் ஹவாய் மக்களின் மேற்குடியினரிடத்தில் மட்டுமே காணப்பட்டது. அங்கே கணவன், மனைவி இருவருக்கும் இரண்டாவது துணை யைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை இருந்தது. இரண்டாவது துணை "பூன

லுவா'', அதாவது நெருங்கிய நண்பர் அல்லது எங்கெல்சின் சொற்களில் associé (அந்தரங்கக் கூட்டாளி)* என்று அழைக்கப்பட்டார். ஆனால் இந்த வழக்கம் நேரடியாகக் குழு மண முறையுடன் இணைக்கப்பட்டிருக்க வில்லை, மேற்குடியினரின் அகமண முறையின் கட்டுப்படுத்தப்பட்ட வடிவத்தை (குறிப்பிட்ட சமூகக் குழுவினருக்கு மத்தியில் திருமணம்) நினைவுபடுத்தியது. மூன்றாவதாக, மார்கனிடம் தகவல்களைத் தெரிவித்த நபர்கள் இத்துறை யில் தகுதி உடையவர்கள் மட்டுமல்ல; மேலும் ஹவாய்த் தீவுகளில் அவர்களுடைய கொடுமை களையும் குற்றங்களையும், அவர்களுடைய நடத்தையைப் பற்றி ஆவேசமடைந்த ஐரோப் பாவுக்கு முன்பாக நியாயப்படுத்த விரும்புகின்ற சுயநலமும் அவர்களிடம் இருந்தது. ஹவாய் மக்களை மனிதர்களிலும் இழிந்தவர்கள், ''கூடா ஒழுக்கம்'' உடையவர்கள் என்று பட்டம் சூட்டுவது அவர்களுக்குச் சாதக மாக இருந்தது. மேலும் திருமண மற்றும் குடும்ப உறவுகளின் பரிணாமத்தைப் பற்றிய சர்வபொது தத்துவத்தில் பூனலுவா குடும்பத் தைப் பற்றிய கிறிஸ்துவ சமயத் தொண்டர்களின் விளக்கத்தையும் மார்கன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியவர் அவருடைய குடும்ப நண்பரும் பாதிரியுமான மாக்வில்வேயின் ஆவார். மார்கன் மதத்தைப் பற்றி அலட்சியமாக இருந்ததை மாற்றுவதற்கு அவர் பல வருடங்

---

* *Ibid.*, p. 218.

களாக முயற்சி செய்தவர். போலினீஷியா விலிருந்த கிறிஸ்துவ சமயத் தொண்டர் களால் தங்களுக்கு முன்னர் அமெரிக்கா விலிருந்த ஸ்பானிய பாதிரியார்களைப் போல பூனலுவா போன்ற மரபுகளில் ''அருவருப் பைத்'' தவிர வேறு எதையும் பார்க்க இயலாது என்னும் எங்கெல்சின் கருத்து சரியானதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

குழு மண முறை எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? ''இடைநிலைப் பிறவி களின்'' வாழ்க்கை முறை மற்றும் இருபாலி னருக்கும் இடையில் உழைப்புப் பிரிவினை பற்றிய ஏங்கெல்சினுடைய கருத்துக்கு நாம் திரும்பினால் நவீன விஞ்ஞானம் தரும் விவரங்களின் அடிப்படையில், காட்டுமிராண்டி நிலையின் ஆரம்பக் கட்டத்தில் உள்ள பூர்விக மனிதக் கூட்டம் தற்காலிகமாகத் தனியான வேட்டைக்காரர்கள், சேகரிப்பவர்கள் என்ற குழுக்களாகப் பிரிந்ததைக் கருத்தளவில் புனரமைக்க முடியும். இத்தகைய நிலவரம் பூர்விக மனிதக் கூட்டத்தின் வாழ்க்கை நடவடிக்கையின் திசையமைவை அடிப்படை ரீதியாக மாற்றியமைத்தது. மிருக உலகத் தில் தனிப்பட்ட மிருகங்கள் ஒன்றுசேர்வதன் முக்கிய ''நோக்கம்'' இயல்பான இனப்பெருக்க உணர்வும் பாலுறவுத் தேவைகளைத் திருப்தி செய்வதுமே. ஆனால் இப்பொழுது கருவிகளை உபயோகிக்கின்ற நடவடிக்கையின் மூலம் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பல்வேறு உணவைக் கூட்டாகத் திரட்டுவது அழுத்தம்

பெறுகிறது. பாலுறவு (உற்பத்தி-பாலுறவு) மற்றும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உணவுத் தடைகளின் விசித்திரமான எச்சங்களை சமுதாய வரலாற்றின் முதற்கட்டத்தில் மறைந்துவிட்ட காட்டுமிராண்டி நிலையின் ஆரம்பக் கட்டத்தின் மூலத்துக்குரிய ''சுவடுகள்'' என்று கருதக் கூடும். அதிகமான கதிரியக்கம் மற்றும் இதர காரணங்களின் விளைவாக ஏற்பட்ட உடலியல் வளர்ச்சி மாற்றங்களினால், பெண் உணர்ச்சியடைகின்ற பொழுது மட்டும் பாலுறவு கொள்கின்ற மிருகங்களுக்கு மாறாக இந்த ''இடைநிலைப் பிறவிகளுக்குத்'' தொடர்ச்சியான பாலுறவு அவசியமாயிற்று என்றும் ஒரு கருதுகோள் இருக்கிறது. எனினும் சேகரித்தல் அல்லது வேட்டையாடுதலின் மூலம் உணவைப் பெறுகின்ற தீவிரமான முயற்சியின் போது ஒருபாலினரைக் கொண்ட குழுக்கள் தனித்திருந்தன. இக்குழுக்களின் வாழ்க்கை நடவடிக்கையின் இரண்டு நெருக்கமான தொடர்புடைய அம்சங்கள் — வாழ்க்கைச் சாதனங்களை மந்தை-கூட்டு முயற்சியின் மூலம் பெறுதல் மற்றும் மனிதர்களைப் புனருற்பத்தி செய்தல் — தமக்கிடையில் காலம் மற்றும் விசும்பில் கணிசமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. எனினும் அவை ஒன்றாக இருப்பதன் மூலமாக மட்டுமே உயிரோடு வாழ்வதையும் ''பரிபூரண'' மனிதன் மற்றும் சமூகத்தை நோக்கிய பரிணாம வளர்ச்சியையும் உறுதிப்படுத்த முடியும்.

மேலே வர்ணிக்கப்பட்ட நிலைமை கருத்தள

வான பூர்விக கூட்டத்தின் இரண்டு பாலு டைய ‘‘பாதிகள்’’ மற்ற புதிய முறைகளில் (விலங்குலகிற்கு உரித்தானவை அல்ல) ஒன்று சேருவதற்கு வழிவகுத்தன. இயற்கையான ஆர்வம், ஆராய்ச்சி என்ற அழுத்தமாக வளர்ச்சி யடைந்த இயல்புணர்ச்சி, எப்பொழுதும் பக்கத்திலேயே இருக்கின்றவர்கள் மீது பாலுறவு ‘‘அக்கறை’’ குறைவது — இந்த அம்சம் ஏற் கெனவே குரங்கு மனிதர்களிடமும் பூர்விக மனிதர்களிடமும் கவனிக்கப்பட்டிருக்கிறது — இவையனைத்தும் வெவ்வேறு பூர்விகக் கூட் டங்களைச் சேர்ந்த பெண் சேகரிப்பாளர் களையும் ஆண் வேட்டைக்காரர்களையும் கொண்ட ‘‘ஜோடிகள்’’ ஏற்பட வழிவகுத்தன. இப்படிப்பட்ட முறையில் இந்தப் பூர்விக மனிதக் கூட்டங்களின் மரபுவழி குணங்களின் அமைப்புகள் தன்னிச்சையாக செழுமைப் படுத்தப்பட்டன. பூர்விகக் கூட்டம் பிரிக்கப் பட்டதை முறையான பாலுறவின் மூலம் இரண்டு பாலுடைய ‘‘பாதிகளின்’’ இணைப்பு ஈடு செய்தது.

ஆகவே, சுருக்கமாகச் சொல்வதென் றால் குலத்தின் தோற்றத்தின் தொடக் கத்திலிருந்தே வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தித் துறை (உணவைப் பெறுதல், கருவிகளை உற்பத்தி செய்தல்) மற்றும் மனிதனையே உற்பத்தி செய்யும் துறையில் (பாலுறவுகள், குழந்தைகளைப் பெற்றெடுத்தல் மற்றும் சமூக அனுபவத்தை மாற்றிக் கொடுத் தல்) குறிப்பிட்ட அளவு முரண்பாடு நிலவி

யது. வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி, உருவாகியுள்ள மனிதக் கூட்டுகளின் பிரிவினையை முன்னூகித்தது; மனிதனை உற்பத்தி செய்தல் அதற்கு மாறாக இரண்டு பாலுடைய ''பாதிகளின்'' இணைப்பை முன்னூகித்தது. காட்டுமிராண்டி நிலையின் இடைக் கட்டத்தில் குலத்தின் தோற்றம், உச்சக் கட்டத்தில் அதன் வளர்ச்சி, பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்தில் அதன் உச்சம் ஆகியவற்றைப் பற்றி எங்கெல்ஸ் தெரிவித்த கருத்துகள் இப்படி இருந்தன.

வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தியின் தோற்றம் உணவைப் பெறுகின்ற உயிரியல் சடத்துவத்தையும் உழைப்பு தோன்றி வளர்வதன் நிகழ்ச்சிப் போக்கின் விளைவாக உற்பத்திக் கருவிகளின் தயாரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. உழைப்புக் கருவிகளின் தயாரிப்பு முறைகளிலும் உபயோகத்திலும் அபிவிருத்திகள் விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் மனிதனால் தயாரிக்கப்பட்ட ஆதிக்கருவிகள் கூட அவை எப்படி உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்னும் முறையைக் ''குறிப்பாகச் சுட்டின''; அந்த அர்த்தத்தில் அவற்றைப் ''புதைபடிவமாக்கப்பட்ட கருத்துகள்'' என்று கூறலாம்.

மனிதனையே உற்பத்தி செய்தல் இனப்பெருக்க நிகழ்ச்சிப் போக்கின் (இருபாலினருக்கும் இடையிலுள்ள உறவுகள்) உயிரியல் சடத்துவத்தை ஆதாரமாகக் கொண்டிருந்த

தெனினும் அது சமூகக் காரணிகளால் தீவிரமாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது. மனிதன் தோன்றிய காலகட்டத்தில் உருவெடுத்த குழு உணர்ச்சிகள், கூட்டு உணர்ச்சிகளின் அறிதல் (இயற்கைச் சக்திகளின் தானே இயக்குகின்ற ''நடவடிக்கைகளின்'' ஒப்புமையின் மூலம்) அதிகாரமுடைய, கேள்வி கேட்கப் பட முடியாத, எத்தகைய ஆதாரமும் இல்லாத தடுப்புகளில் வெளிப்பட்டது. மனிதக் குழுவின் ஒற்றுமை மற்றும் ஒத்திசைவின் அரை இயல்புணர்ச்சியான அறிதலின் முதல் வடிவமே **குலச் சின்னம்** மற்றும் அதற்கு ''உறவான'' மனித குழுவைப் பற்றிய கருத்துகளாகும். பிராணிகள், தாவரங்கள் மற்றும் இயற்கை நிகழ்வுகளுக்கு மனிதப் பண்புகள் கொடுக்கப் பட்டன; குலத்தின் மூதாதையர் மற்றும் பாதுகாவலராக வழக்கமாக ஒரு மிருகம் அல்லது சில சமயங்களில் ஒரு பறவை, மீன் அல்லது பூச்சி இருந்தது.

தடுப்புகள் மற்றும் அவற்றிலிருந்து தோன்றிய தனிநபர்களின் நடத்தை **வழக்கங்கள்** சமூக இடையுறவில் வகித்த பாத்திரம், முறையியல் அர்த்தத்தில், சுற்றுப்புறச் சூழ்நிலை சம்பந்தமாக **உழைப்புக் கருவிகள்** வகித்த பாத்திரத்துக்கு ஒப்பானதாகும். ஆகவே மாறுகின்ற கட்டத்தில் உருவாகிய கூட்டு உணர்வில் உழைப்புக் கருவிகளின் கூட்டு உற்பத்தி மற்றும் உபயோகத்தின் அவசியமான நிபந்தனையை மட்டுமின்றி சமூக இடையுறவின் ஆகமுக்கியமான முன்நிபந்தனையையும்

பார்க்க முடியும். மனிதக் கூட்டிற்கு இடையில் சமூக இடையுறவுகள் வழக்கங்களின் மீது மையங் கொண்டிருந்தன; வழக்கங்கள் மனித நடத்தையை ஒழுங்குபடுத்தும் பெயரற்ற அதிகாரத் தன்மை கொண்ட சக்தியாக இருந்தன. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் இயற்கைத் தேர்வு முறையினால் நயப்படுத்தப்பட்ட கூட்டு அல்லது குழு நலன்களைக் கெட்டிப் படுத்தப்பட்ட வடிவத்தில் வழக்கங்கள் எடுத்துரைத்தன. தனது பங்கிற்கு இந்த நலன்கள் எல்லாவற்றுக்கும் மேலாக விலங்கியல் சுயநலம், மூர்க்கத்தனம், கலந்துறவாடாமை ஆகியவற்றின் சாத்தியமான தனிப்பட்ட வெளிப்பாடுகள் மற்றும் எச்சங்களுடன் தொடர்புடைய முறையில் வகைப்படுத்தப்பட்டன. மேலும் தனிப்பட்ட நடத்தையில் தடை செய்யப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுவது எவை என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற தடுப்புகளின் மொத்தம் மனிதக் கூட்டினால் அங்கீகரிக்கப் பட்ட ''இலட்சிய'' நடத்தையின் மங்கலாகத் தெரிகின்ற வடிவத்தைப் பிரதிநிதித்துவம் செய்தது. இந்த இலட்சியம் மூதாதையர்களின் ''புனிதமான'' அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது; அவர்களுடைய அறிவு மற்றும் துணிவு பிற்கால சந்ததியினர் உயிர் வாழ்வதற்குக் காரணமாக இருந்தன. பூர்விக மனிதனுடைய உணர்வுக்குப் பின்வரும் அம்சங்கள் உரித்தானவை: 1) கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கின்ற போக்கு, 2) மூதாதையர்கள் கடைப்பிடித்த பழக்கங்களை அப்படியே

பின்பற்றுதல், 3) நேரடியான தொடர்பு மேலோங்கியிருத்தல். மூதாதையர்கள், சம காலத்தவர்கள் மற்றும் சந்ததியினர் உளவியல் ரீதியில் ஒரு தொடர்ச்சியான, நிரந்தரமாக நீடிக்கின்ற ஒற்றுமையாக இருப்பதாகக் கருதப்பட்டனர். சமூக இடையுறவுக்கும் வெவ்வேறு தலைமுறைகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களுடைய உணர்வுகளின் பரஸ்பர செயலாக்கத்துக்கும் சர்வாம்சச் சாதனமாக வழக்கம் இருந்தது. ஆகவே பூர்விக மனிதனுடைய சமூக வாழ்க்கையில் கருவிகளின் தயாரிப்பைப் போன்ற அதே அளவுக்கு வழக்கங்களும் அவசியமான அம்சமாக இருந்தன.

கூட்டாக உற்பத்தி செய்யப்பட்ட உழைப்புக் கருவிகள் ஆரம்பமான சமூக ஒற்றுமைக்கும் இயற்கைச் சூழ்நிலைக்கும் இடையில் சமரசப் படுத்துகின்ற இணைப்பாக இருந்தன. உணர்வு மற்றும் சித்தத்தைக் கொண்ட தனிநபர்களைப் பொறுத்தமட்டில் இந்தப் பாத்திரத்தை நடத்தைப் பழக்கவழக்கங்கள் நிறைவேற்றின. அவை வாய்மொழியாக நிர்ணயிக்கப்படுபவை என்பதால் தனிநபரைக் காட்டிலும் உயர்ந்து நின்று அந்த நபருக்குப் பிறகும் நிலைத்திருந்தன.

குழு மண முறை குடும்பத்திற்கு முந்தியது என்பது மார்கனுடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் ஒன்று. எங்கெல்ஸ் இக்கண்டுபிடிப்புக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு நீண்ட காலகட்டம் முழுவதும் பாலுறவுகளும் மனிதனை உற்பத்தி செய்யும்

மொத்த துறையும் குடும்பத்தினால் (அது இன்னும் உருவாகவில்லை) ஒழுங்குபடுத்தப் படவில்லை, புறமண முறை என்னும் உறவு முறையினால் ஒழுங்குபடுத்தப்பட்டன. புறமண முறையில் குலத்திற்குள் திருமணமும் எவ் விதமான பாலுறவுகளும் கண்டிப்பாகத் தடுக்கப்பட்டிருந்தன. பாலுறவுக் கூட்டாளியை —பிற்பாடு கணவன் அல்லது மனைவியை— அதே இனக்குழுவை சேர்ந்த, கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட, அவர்களுக்கு தெரிந்த மற்றொரு புறமண முறைக் குலத்திற்குள்ளி லிருந்து மட்டுமே தேர்வு செய்ய வேண்டும் என்கின்ற அகமண முறை விதிகள் புறமண முறைத் தடைகளுக்கு எதிர்மறையானவை.

புறமண முறைக் குலங்கள் அகமண முறை இனக்குழுவிற்குள் இயக்கவியல் ரீதியில் இணைந் திருந்தன என்னும் மார்கனுடைய கருத்தை எங்கெல்ஸ் உற்சாகமாக ஆதரித்தார். மாக் லென்னான் ஆரூடம் கூறிய புறமண முறை ''இனக்குழுக்கள்'' இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''ஆனால் குழு மண முறை இன்னமும் பரவலாக நிலவி வந்த காலத்தில்—அநேகமாக அது எல்லா இடங்களிலும் ஏதாவது ஒரு காலத்தில் இருந்திருக்கத்தான் செய்தது—ஒரு இனக்குழு என்பது பல குழுக்களை, குலங்களைக் கொண்டு அமைந்திருந்தது; அவை தாய் வழியே இரத்த உறவுகள் கொண்டிருந்தன. இந்தக் குலங்கள் ஒவ்வொன்றும் தனக்குள்

ளேயே மணம் செய்து கொள்ளாதபடித் திட்டமாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஒரு குலத்தைச் சேர்ந்த ஆண்கள் தமது இனக்குழுவிற்குள்ளேயே பெண் களை மனைவியராகக் கொள்ள முடிந்தது, வழக்கமாகக் கொள்ளவும் செய்தார்கள் என்றாலும், அந்த ஆண்கள் தமது குலத் துக்கு வெளியே இருந்துதான் மனைவியரைக் கொள்ள வேண்டியிருந்தது. ஆக, குலத்தைப் பொறுத்தமட்டில் அது திட்டமாக புறமண முறையைக் கொண்டிருந்தது. ஆனால் இந்தக் குலங்களைத் தன்னுள் கொண்டிருந்த இனக் குழு என்னவோ அகமண முறையைத் திட்ட மாகக் கொண்டிருந்தது. இத்துடன் மாக் லென்னான் நிர்மாணித்திருந்த செயற்கையான அமைப்பில் கடைசி மிச்சமீதங்களும் சரிந்துவிட் டன.'' *

அக்காலத்தில் அமூர் நதியின் கீழ்ப்பகுதிகளி லும் ஸகாலீன் தீவிலும் வசித்த கில்யாக்-நிவ்ஹ் மக்கள் மத்தியில் ''கில்யாக் பிராட்ரி'' என்று சொல்லப்படுகின்ற முறை நிலவியது கண்டு பிடிக்கப்பட்டது இப்பிரச்சினை குறித்து எங்கெல்சினுடைய கருத்துகளை நிரூபித்தது. ஜாரிச அரசாங்கத்தினால் அப்பகுதிக்கு நாடு கடத்தப்பட்டிருந்த பிரபல ருஷ்ய இனப் பரப்பு விளக்கவியலாளரான எல். யா. ஷ்தேர்ன் பெர்க் இதைக் கண்டறிந்து கூறினார். இதைப் பற்றி ருஷ்ய மொழியில் எழுதப்பட்டிருந்த

* *Ibid.*, p. 201.

சுருக்கமான கட்டுரையைப் பற்றி அக்காலத்திய ஐரோப்பிய அறிஞர்களில் எங்கெல்ஸ் ஒருவர் மட்டுமே அக்கறை காட்டினார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட எங்கெல்ஸ் **குழு மண முறைக்கு மற்றொரு உதாரணம் கண்டுபிடிக்கப்படுகிறது** என்ற தலைப்பில் சுருக்கமான கட்டுரையை எழுதினார்.*

கில்யாக்குகள் மத்தியில் திருமண முறை இரண்டு அல்ல, மூன்று குலங்களை இணைத்திருந்தது. இந்த மூன்று குல அமைப்பு பண்டைக்கால ரோமின் குறியடையாளமாக இருந்தது. கில்யாக்குகள் மத்தியில் "ego" குலத்துடன் சேர்ந்தே "மாமனார்" குலமும் (அதிலிருந்து மனைவிகள் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்), "மருமகன்" குலமும் (பெண்கள் அந்தக் குலத்தினருக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டார்கள்) இருந்தன. இந்தக் குலங்களுக்கு இடையில் இணைப்பு குலங்களுக்குள்ளாகத் திருமணத்தைத் தடை செய்வதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, கறாராக வரையறுக்கப்பட்ட குலத்தின் பிரதிநிதிகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற உறுதியான கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. "ஆண்கள் தம்முடைய தாயார்களின் சகோதரருடைய மகள்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும், அல்லது

---

* K. Marx, F. Engels, *Werke,* Bd. 22, S. 351—354.

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்த பெண் களும் பிறப்பிலிருந்தே தங்கள் தகப்பனாரின் சகோதரியின் குமாரர்களுக்குச் சொந்தமான வர்கள்''* என்ற கோட்பாட்டின் அடிப் படையில் இங்கே திருமணம் செய்யப்பட வேண்டும். இங்கே நாம் குடும்பங்களைப் பற்றிப் பேசவில்லை, மொத்த குலங்களைப் பற்றிப் பேசுகிறோம் என்பது தெளிவு. ஷ்தேர்ன் பெர்கின் சீடரும் பிரபல சோவியத் இனப் பரப்பு விளக்கவியலாளருமான டி. அ. ஓல் டெரோகெ இம்மாதிரியான ஆப்பிரிக்க குழுக் களைப் பற்றி ஆராய்ச்சி செய்திருந்தார். இவற்றை ''மூடிய வட்ட குலங்கள் அல்லது மூன்று குலங்களின் ஐக்கியம் (Gens triplex)'' என்று குறிப்பிட் வேண்டும் என்று அவர் சொல்லியிருந்தார். இரண்டு குல அமைப்புகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது அவை அந்த அளவுக்குத் தொன்மையானவை அல்ல என்று அவர் கருதினார்.** மாபெரும். தேசபக்த யுத்தத்தின் போது எதிரி களின் படைகளால் முற்றுகையிடப்பட் டிருந்த லெனின்கிராதில் 1942 மே மாதத்தில் நடைபெற்ற சோவியத் யூனியன் விஞ்ஞானப்

---

* எல். யா. ஷ்தேர்ன்பெர்க், **வடகிழக்கு ஆசியாவின் மக்களினங்களில் குடும்பமும் குலமும்**, லெனின்கிராத், 1933, பக்கம் 100 (ருஷ்ய மொழியில்).

** டி. அ. ஓல்டெரோகெ, **இணைக்குழு மண முறை, கட்டுரைகள்**, மாஸ்கோ, 1983, பக்கங்கள் 179, 181 (ருஷ்ய மொழியில்).

பேரவையைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் விஞ்ஞான கவுன்சில் கூட்டத்தில் டி. அ. ஒல்டெரோகெ "இணைக்குழு மண முறையும் புறமண முறையும்" என்னும் தலைப்பில் அறிக்கை சமர்ப்பித்தார். "திருமணத் துணையை நட்புக் குழுவிலிருந்து மட்டுமே தேர்ந்தெடுப்பதை இணைக்குழு மண முறை என்னும் சொல்லின் மூலம் குறிக்கலாமென்றால் புறமண முறை என்பது இனணக்குழு மண முறை என்னும் அதிகப் பொதுவான கோட்பாட்டின் விளைவாகும்"* என்று ஒரு கருதுகோளை அவர் இந்த அறிக்கையில் முன்வைத்தார். இணைக்குழு மண முறையிலிருந்து புறமண முறையின் (ஆகவே அகமண முறையையும் சேர்த்து) தோற்றத்தின் தர்க்கத்தை அமைத்துக் கூறுகின்ற முயற்சியில் ஒல்டெரோகெ பின்வருமாறு எழுதினார்: "தொடக்கத்தில் இணைக்குழு மண முறை ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த ஆண்கள் மற்றொரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்த பெண்களைத் திருமணம் புரிய வேண்டும் என்று வற்புறுத்தியது; கில்யாக் பிராட்ரியில் அல்லது இரத்த உறவு முறையின் மூடிய வட்ட அமைப்பில் மற்றும் ஆஸ்திரேலியாவின் திருமண வகுப்பு அமைப்புகளில் இதைப் பார்க்க முடியும். பின்னர் இந்த அமைப்புகள் தகர்ந்த பொழுது இக்கடமை மறைந்தது, சொந்தக்

---

* அதே நூல், பக்கம் 20.

குழுவுக்குள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்னும் தடையும் ஏதாவதொரு நட்புக் குழுவுக்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் கடமையும் மட்டுமே எஞ்சின.'' * ''இணைக்குழு மண முறை அடிப்படை விதி, அதன் விளைவாகப் புறமண முறை தோன்றியது'' என்பதை அங்கீகரித்தால் ஆராய்ச்சியாளர்கள் புறமண முறையின் தோற்றத்துக்கு உயிரியல் விளக்கங் களைத் தேட வேண்டிய அவசியம் இருக்காது என்பது ஓல்டெரோகெயின் கருத்தாகும். **

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் பூர்விக சமுதாயத்தை ஆராய்வதற்கு முன்வைத்த கருத்துகள் மற்றும் முறையியல் கோட்பாடு களின் அடிப்படையில் நம் கால மார்க்சிய இனப் பரப்பு விளக்கவியல் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பதை மேற்கூறிய பகுதி எடுத்துக்காட்டும்.

குழு மண முறை வெறும் பாலுறவு இணைப்பாக மட்டும் இருக்கவில்லை என்பதை நவீன விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. அது ஒன்றுபட்ட பூர்விக மனிதக் கூட்டின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக, அதாவது மனிதனை உற்பத்தி செய்தல் மற்றும் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்தல் ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்புடைய அம்சமாக விளங்கியது.

---

* அதே நூல், அதே பக்கம்.

** அதே நூல், பக்கம் 23.

உதாரணமாக, நவீன மானிடவியல் ஸரோரிட், லீவிரிட் என்னும் குழு மண முறையின் எஞ்சிய வடிவங்களை இனங்கண்டு ஆராய்ந்திருக்கிறது. இவை சில சகோதரர் களை அல்லது சில சகோதரிகளைத் திருமணம் செய்து கொள்கின்ற முறையின் எச்சங் களாகும். கணவன் அல்லது மனைவி மரணமடைந்தால் கணவனுடைய சகோ தரன் அல்லது மனைவியினுடைய சகோதரி அந்த ''இடத்தைப் பெறுகின்ற'' வழக்கம் படிப்படியாக மேற்கூறிய முறைக்குப் பதிலாக ஏற்பட்டது. முதலில் கட்டாய முறையிலும் பின்னர் தேர்வு மூலமும் சகோதரனின் விதவையுடன் அல்லது சகோதரி இறந்த பின் அவளுடைய கணவனுடன் திருமணம் நடைபெற்றது. **பலதார மணம், பல கணவர் மணம்** ஆகிய இரண்டுமே குழு மண முறையின் எஞ்சிய வடிவங்கள் எனலாம். மேலும் ''**பாவம் கழுவும்**'' மற்றும் ''**விருந் தோம்பல் மிக்க**'' **பொது மகளிர் முறையும்,** அதாவது திருமணத்துக்கு முன்பு பெண்கள் தம்முடைய சாத்தியமான ''குழுக்'' கணவர் களுக்குத் தம்மை ஒப்படைக்கின்ற ''கடமை'' மற்றும் பருவமடைந்த பெண்கள் தம்முடைய கணவர் அல்லது தகப்பனாருடைய விருந் தினர்களை மகிழ்விக்கின்ற வழக்கம் இப்படிப் பட்டவையே. இப்படி எஞ்சிய வடிவங்களில் இன்று மிகவும் பரவலாக இருப்பது பலதார மண முறையே. உதாரணமாக, மேற்கு ஆப்பிரிக்காவில் திருமணம் செய்து கொண்

டுள்ள ஆண்களில் சுமார் 20 சதவிகிதத்தினருக்கு இரண்டு அல்லது அதற்கும் அதிகமான மனைவியர் இருக்கிறார்கள். சில நாடுகளில் (கினி, காங்கோ, இதரவை) இந்த எண்ணிக்கை 24—25 சதவிகிதத்தைக் கூட எட்டுகிறது. இத்தகைய குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக—இருபது வரை—இருக்கிறது. ஏனென்றால் திருமணமான ஆப்பிரிக்கப் பெண் 35 வயதை அடைவதற்குள் சராசரியாக ஆறு குழந்தைகளைப் பெற்று வளர்க்கிறாள்.

குழு மண முறைக்குப் பதிலாக இணைக் குடும்பம் ஏற்பட்டது. இதில் குழு மண முறையின் கூறுகளும் (ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள பிணைப்பின் சார்புநிலையான தன்மை), ஒருதார மண முறையின் கூறுகளும் (இணை முறை) இணைந்திருந்தன.

## தாயுரிமைக் குலத்தைப் பற்றிய கண்டுபிடிப்பும் தந்தைவழிக் குடும்பத்தின் ஆதித் தன்மையைப் பற்றிய நம்பிக்கை முடிவடைதலும்

19ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய கருத்துகளின்படி தந்தை வழிக் குடும்பமே சமூக அமைப்பின் ஆதி வடிவமாகக் கருதப்பட்டது.

இரத்த உறவுமுறையின் அமைப்புகள் மற்றும் உறவுமுறையைக் குறைக்கும் வார்த்தைகள்

பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்த முதல் நபரான மார்கன் தாயுரிமைக் குலமே சமூக அமைப்பின் ஆதி வடிவம் என்று கண்டுபிடித்தார். ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல வரலாற்றாசிரியரும் வழக் குரைஞருமான யோஹன் ஜாக்கப் பாஹொஃ பென் **தாயுரிமை** என்னும் தனது நூலில் பெண்களின் பரிபூரண ஆட்சியை முதலில் தத்துவ ரீதியாக விவாதித்தார். ஆனால் மார்கன் அவருக்கு மாறாக தாயுரிமைக் குலத்தின் தோற்றம் மற்றும் இருத்தலை மாயை-மதக் காரணங்களால் அல்ல, யதார்த்த மான, பொருளாதார மற்றும் உற்பத்திக் கூறுகளைக் கொண்டு விளக்கினார்.

குலம் ஒருதார மணத்துக்குப் பிறகு வந்தது, ஒன்றாகக் கூடிய குடும்பங்களின் அமைப்பு என்று அதைக் கருத வேண்டும் என்ற கருத்தை மார்கன் சமரசத்துக்கு இடமில்லாமல் மறுத்ததை மார்க்ஸ் மார் கனுடைய புத்தகத்தைப் பற்றி எழுதிய குறிப்புகளில் முழுமனதுடன் ஒத்துக்கொள் கிறார் (எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலை எழுதிய பொழுது மார்க்சின் குறிப்புகளைப் பயன்படுத் தினார் என்பது அறிந்ததே). ஆங்கில வழக்குரைஞரும் வரலாற்றாசிரியரும் இந் தியாவில் காலனியாட்சிச் சட்டங்களைத் தயாரிப்பதில் அதிகமான பங்கெடுத்தவருமான ஹெ. ஸ. மெயின் இக்கருத்தைக் கூறி யிருந்தார். இத்தகைய தத்துவங்களை ஆதரித்த

முதலாளி வர்க்க அறிஞர்கள் இனவெறி மற்றும் காலனியாதிக்கத்தை ஆதரிக்கும் நிலைக்கு சுலபமாக சரிந்தார்கள்; முதலாளித்து வத்துக்கு முந்திய, குறிப்பாக வர்க்கங் களின் தோற்றத்துக்கு முந்திய வளர்ச்சிக் கட்டங்களைச் சேர்ந்த மக்களினங்கள் குறைந்த அறிவு வளர்ச்சியைக் கொண்டிருந்தன என்னும் விஞ்ஞானத்துக்குப் புறம்பான போலித் தத்துவங்களைப் பரப்புபவர்களாக மாறினார் கள். ''இதுவரையிலும் சர் ஹென்ரி மெயின் உட்பட அறிவு நிறைந்த கனவான்கள் அனைவரும் (தந்தைவழிக் குடும்பத்தின்) யூத மற்றும் ரோமானிய வடிவங்களை சமூகத்தின் ஆதி அமைப்பு என்று அங்கீகரித் தார்கள்.... **மனிதகுலத்தின் தரங்கெடுதலைப்** பற்றிய கருதுகோள் இதனுடன் இணைக்கப் பட்டிருக்கிறது, **பண்பாடற்ற மக்கள் மற்றும் காட்டுமிராண்டிகளின் இருத்தலை** அது விளக்கு வதாகக் கருதப்பட்டது''* என்று மார் கனுடைய நூலைப் பற்றி குறிப்பெடுத்த போது மார்க்ஸ் எழுதினார்.

எங்கெல்ஸ் தன்னுடைய நூலில், குடும் பத்துக்கு முன்னர் குலம் இருந்தது, தந்தை வழி முறைக்கு முன்னர் தாய்வழி முறை இருந்தது என்னும் மார்கனுடைய கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு தீவிரமாக ஆதரித்தார். ''தமக்குள் மணம் புரிந்து

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, தொகுதி 45, பக்கம் 256 (ருஷ்ய மொழியில்).

கொள்ள அனுமதிக்கப்படாதிருக்கின்ற பெண் வழி இரத்த உறவினர்களைக் கொண்ட ஒரு குறுகிய வட்டமாக'' குலம் உருவாகி கொண்டிருந்தது. ''அது முதல், மற்ற சமுதாய மற்றும் மதப் பொது உறவு முறைகளைக் கொண்டு அது மேன்மேலும் கெட்டிப்படுத்தப்படுகிறது, அதே இனக்குழுவைச் சேர்ந்த பிற குலங்களினின்றும் அது தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்கிறது.'' *

குலமரபு அமைப்பின் தொடக்கத்திலிருந்தே புறமண முறை அதன் அடிப்படையான குறியடையாளமாக இருந்து வந்தது, ஆகவே அது இயற்கையாகவே தனது ஆரம்ப வடிவத்தில் தாய்வழி முறையின் வரம்பு களுக்குள்ளே தோன்றி இருந்தது என்று எங்கெல்ஸ் கருதியதை மேற்கூறிய பகுதி எடுத்துக்காட்டும்.

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலின் நான்காவது ஜெர்மன் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில், மார்கனால் கண்டுபிடிக்கப்பட்ட வட அமெரிக்க செவ்விந்தியர்கள் மத்தியில் உள்ள குலமரபு உறவுகள் முக்கியமான பிரச்சினைகளுக்கு, பண்டைக்கால கிரேக்கர்கள், ரோமானியர்கள் மற்றும் ஜெர்மானியர்களின் வரலாற்றைப் பற்றி இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினை

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 221.

களுக்குத் திறவுகோலாக இருந்தன* என்பதைக் காட்டிலும் ஆதிக் குலத்தின் தாயுரிமைத் தன்மையை அவர் கண்டுபிடித்ததே முக்கியமானதென்று வலியுறுத்துகிறார் என்ற விஷயம் குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே இறந்து விட்ட மார்கனை எங்கெல்ஸ் முழுமனதுடன் பாராட்டி, ''கண்ணோட்டத்தில் புரட்சியை'' ஏற்படுத்தியது விஞ்ஞானத்தில் அவருடைய மாபெரும் சாதனை என்று எழுதினார். இக்கருத்தை ஆதாரப்படுத்தி அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வினுடைய தத்துவம் உயிரியலில் எவ்வளவு முக்கியமானதோ, உபரி மதிப்பு பற்றிய மார்க்சின் தத்துவம் அரசியல் பொருளாதாரத் துறையில் எவ்வளவு முக்கியமானதோ அதே அளவுக்கு, நாகரிகமடைந்த மக்களினங்களின் தந்தையுரிமைக் குலத்துக்குப் பூர்வாங்கமான கட்டமாக ஆதிகாலத் தாயுரிமைக் குலம் இருந்தது என்ற கண்டுபிடிப்பும் பூர்விக சமுதாய வரலாற்றுத் துறையில் அவ்வளவு முக்கியமானதாகும். அதைக் கொண்டு குடும்பத்தைப் பற்றிய ஒரு வரலாற்றை முதல் தடவையாக மார்கன் வரைந்து காட்ட முடிந்தது. தற்சமயம் கிடைக்கின்ற விஷயாதாரங்கள் அனுமதிக்கிற அளவுக்கு, குறைந்த பட்சம் சாஸ்திரீயமான வளர்ச்சிக் கட்டங்களாவது மொத்தத்தில் அந்த வரலாற்றில் பூர்வாங்க

* *Ibid.*, p. 192.

மாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பூர்விக வரலாற்றை ஆராய்வதில் ஒரு புதிய சகாப்தத்தை இது திறந்து வைக்கிறது என்பது தெளிவு. தாயுரிமைக் குலம் ஓர் அச்சாணியாகி விட்டது, அதைச் சுற்றித்தான் இந்த விஞ்ஞானம் முழுவதும் வந்து கொண்டிருக்கிறது: அது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு நாம் எந்தத் திசையில் ஆராய்ச்சிகளை நடத்திச் செல்ல வேண்டும் என்பது தெரிந்தது, எதைப் பரிசீலிப்பது, பரிசீலனைகளின் முடிவுகளை எப்படி வகைப்படுத்துவது என்பது தெரிந்தது. இதற்கிணங்க, மார்கனின் நூல் வெளிவருவதற்கு முந்தியிருந்ததைவிட இப்போது இந்தத் துறையில் முன்னேற்றம் துரிதமாக இருக்கிறது.'' *

எனினும் எங்கெல்சோ, நவீன மார்க்சிய விஞ்ஞானிகளோ தாயுரிமைக் குலத்தை வரம்பில்லாத பெண் அதிகாரத்துடன் மற்றும் கிரேக்க தொல்கதைகளில் வருகின்ற அமேசான்களின் கொடிய ஆட்சியுடன் ஒருபோதும் இனங்காணவில்லை. குலம் தொடக்கத்திலிருந்து சமூக சமத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. பால் மற்றும் வயது வேறுபாடுகளுக்குப் பிறகு இரத்த உறவுமுறையை நிர்ணயித்தல் அக்காலத்தில் சாத்தியமாக இருந்த ஒரே மரபுவழிக் கோட்பாட்டை, அதாவது தாயுடனிருந்த உறவை அடிப்படையாகக் கொண்

* *Ibid.*, p. 201.

டிருந்தது. முதலாளி வர்க்க மானிடவியல் சில சமயங்களில் குரங்குகளின் மந்தை அமைப்பைச் சுட்டிக்காட்டி தாய்வழி முறையே ஆதியில் இருந்ததென்ற தத்துவத்தை ஆதரிக்க முயற்சி செய்கிறது. அத்தகைய ''நேரடியான'' ஒப்பீடுகள் பயனற்றவை என்று எங்கெல்ஸ் தன்னுடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

எங்கெல்ஸ் தாயுரிமைக் குலத்தின் தோற்றம், பரிணாமம் மற்றும் சிதைவை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் தெளிவாக இணைக் கிறார். குறிப்பாக, சிறப்புத் தேர்ச்சியுடைய சேகரித்தல், அதிலிருந்து வளர்ச்சியடைந்த தோட்டக் கலை மற்றும் களைக்கொட்டுப் பயிர்த்தொழிலிலிருந்து கால்நடை வளர்ப்பு மற்றும் கலப்பைப் பயிர்த்தொழிலுக்கான மாற்றத்தின் விளைவாகத் தந்தைவழி முறை தோன்றியது என்று அவர் விளக்குகிறார்.

உழைப்புக் கருவிகள் மற்றும் பொரு ளாதார வடிவங்களின் வரலாற்றுத் தொடர் வரிசையை ஆராய்வதுடன் ''பழங் கற்கால வீனஸ்கள்'' என்று சொல்லப்படுகின்ற கரடு முரடான கற்சிலைகள் (மனித இனப்பெருக் கத்துடன் தொடர்புடைய பால் குறியடை யாளங்கள் வீக்கமடைந்த கற்சிலைகள்) கண்டு பிடிக்கப்பட்டதையும் உபயோகித்து முதலில் தாய்வழி முறை இருந்ததென்று தொல் பொருளியல் வாதிடுகிறது. தந்தைவழி முறை பலமடைவதைக் குறிக்கின்ற ஆண்குறி வழிபாடு இதற்கு மிகவும் பிந்திய காலத்தைச் சேர்ந்ததாகும்.

தந்தைவழி முறைக்கு முன்னதாகத் தாய்வழி முறை இருந்தது என்ற கருதுகோளை இனப் பரப்பு விளக்கவியல் கோணத்தில் எட்வர்டு டெய்லரின் ''தேற்றம்'' ஆதரிக்கிறது. அவர் இதை சென்ற நூற்றாண்டின் கடைசியிலே *(1889)* வகுத்தளித்தார். தாய்வழி முறையிலிருந்து தந்தைவழி முறைக்கு மாறிய ஆயிரக்கணக்கான மறுக்க முடியாத உதாரணங்களை விஞ்ஞானம் அறியும், ஆனால் அதற்கு எதிராக ஓர் உண்மையான உதாரணம் கூட இல்லை என்ற விஷயத்தை டெய்லர் வலியுறுத்தினார். தந்தைவழி முறையிலிருந்து தாய்வழி முறைக்கு, அல்லது குடும்பத்திலிருந்து குலத்துக்கு மாறியதற்கு ஓர் உதாரணம் கூட இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது உண்மையே.

# 6. ஒருதார மணக் குடும்பம் மற்றும் தனிப்பட்ட பாலுறவுக் காதலின் தோற்றம்

## திருமண-குடும்ப உறவுகளின் வரலாற்றுப் பரிணாமம்

எங்கெல்சின் நூலில் குடும்பத்தின் தோற்றத்தைப் பற்றிய பிரச்சினை ஒருதார மணத்தின் தோற்றம் என்ற முறையில் ஆராயப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்வு பாலுறவுக் காதலின் — அது ஒரு நீண்ட, முரண்பாடான வரலாற்று வளர்ச்சியின் விளைவு — சூக்குமமான தனித் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, அது தனிச்சொத்து மற்றும் அரசின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

தொடக்கத்தில் காட்டுமிராண்டி நிலையின் ஆரம்பக் கட்டத்தில் (அதாவது மாறும் கட்டத்தில்) பாலுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட உறவுகளிலிருந்து முறையான சமூக அமைப்பை நோக்கிய மாற்றம் என்ற கோணத்திலிருந்து மார்கன் மனிதகுலத்தின் பண்டைய வரலாற்றை ஆராய்ந்தார். இதன்படி குலமரபு அமைப்புக்குப் பதிலாக அரசியல் மேற்கட்டுமானம் ஏற்பட்டது (அதை அவர் அரசுடன் இனங்கண்டார்). எங்கெல்ஸ் தன்னுடைய நூலின் தலைப்பிலேயே எல்லாவற்றுக்கும் மேலாக குடும்பத்தின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சியை, குழு மண

முறையிலிருந்து ஒருதார குடும்பத்தை நோக்கிய புறநிலையான வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சியை வலியுறுத்தினார். இதன் தொடர்பாக ''திருமணம்,'' ''குடும்பம்'' இவ்விரண்டு சொற்களின் பொருளையும் அவை சுட்டிக் காட்டுகின்ற மெய்யான உறவுகளையும் ஆராய்வது நியாயமானதென்று தோன்றுகிறது.

''திருமணம்'' என்ற சொல் வழக்கமாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள உறவின் நெருக்கமான, பாலுறவு அம்சத்தை, அவர்களுடைய, சாராம்சத்தில் உயிரியல், பாலுணர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதை வலியுறுத்துகிறது. ஆழமான உணர்ச்சியினால் தூண்டப்படுகின்ற, தனிப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பரஸ்பரப் பாலுணர்ச்சிக் காதல் திருமணத்தின் வரலாற்று வளர்ச்சியின் ஆக உயர்ந்த கட்டம் என்பதை எங்கெல்ஸ் சிறப்பாகச் சுட்டிக்காட்டினார். மற்ற உயிரியல் தேவைகளை — பிரதானமாக, பல்வேறு வாழ்க்கைச் சாதனங்களின் தேவை மற்றும் குழந்தைகளைப் பெறுவதும் வளர்ப்பதும் — பூர்த்தி செய்வது இதனுடன் ஒப்பிடும் பொழுது இரண்டாம் நிலையாகக் கருதப் பட்டது.

''குடும்பம்'' என்ற கருத்து வழக்கமாகத் திருமணத்துடன் இணைந்திருக்கிறது, அதிலிருந்து ஏற்படுகிறது; ஆனால் அதை நேரடியாக திருமணத்துடன் குறுக்கிவிட முடியாது. ''குடும்பம்'' என்ற சொல் பாலுணர்ச்சித் தேவைகளை மட்டுமின்றி உணவு மற்றும்

இதர அன்றாடத் தேவைகளையும் (பொது வான இருப்பிடம், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல், சொத்துடைமையை மரபு வழி யாகப் பெறுதல், இதரவற்றைப்) பூர்த்தி செய்வதற்காகத் தனிநபர்கள் இடைச்செயல் புரிகின்ற நிகழ்ச்சிப் போக்கை முன்னூகிக் கிறது. குடும்பம், திருமணம் என்ற ஆதாரத்தின் மீது அமைந்திருக்கிறது, எனினும் அது திருமணத்துடன் குறுக்கப்பட்டு விடவில்லை. அது பல தலைமுறைகளைச் சேர்ந்த மரபுவழி இணைப்புகளின் பல்வேறு அம்சங் களையும் நெருங்கிய மற்றும் தூர உறவுகளின் கிளைகளின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொண்டிருக்கும். திருமணத்தைப் பொறுத்த மட்டில் குடும்பத்தின் பிரத்யேக சுயாட்சி, திருமணத்திலிருந்து பிரிந்து நிற்கின்ற அதன் போக்கு திருமணம் இல்லாத குடும்பம் என்ற நிகழ்வில் தெளிவாக எடுத்துக்காட்டப் படுகிறது. இது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இலக்காகியிருக்கிறது.* வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது குடும்பம், வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தியின் ஆதார அலகா யிருந்த குலமரபுக் கூட்டுச் சமூகத்தின் செயல்களை மரபுரிமையாகப் பெறுகிறது.

இந்த அர்த்தத்தில் குடும்பம் திருமணத்தைக் காட்டிலும் அதிகமான சமூகத் தன்மையைக் கொண்டிருக்கிறது எனலாம், திருமணம்

---

* மிலான் போஸனாத்ஸ், திருமணத்துக்கு வெளி யிலான குடும்பம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981 (ருஷ்ய மொழியில்) பார்க்க.



11–503

தன் பங்கிற்கு அதிகமான உயிரியல் தன்மையைக் கொண்டிருக்கிறது. திருமண மற்றும் குடும்ப உறவுகளின் வரலாற்று ரீதியான மாற்றப் போக்கு, பரஸ்பரம் இவற்றின் பங்கில் ஏற்படும் மாற்றங்களிலும், குடும்ப அமைப்பு பலப்படுவதிலும், (இது திருமணம் என்பதன் மீது மேன்மேலும் எழுந்து கொண்டிருந்தது) அடங்கியுள்ளது.

மெய்யான நடைமுறையில், குழு மண முறையின் எதிர்முனை இருபாலினருக்கும் இடையில் உறவுகளைக் கண்டிப்பாக, சடங்கு முறையாக ஒழுங்குபடுத்தலாகும். இந்த ஒழுங்குபடுத்தல் பூர்விகப் பொதுவுடைமைக் குடும்பம் என்னும் அதன் பொருளாதார அடிப்படையை வழக்கமாக மறைத்தது.*

இணைக் குடும்பத்தில் மனிதனை உற்பத்தி செய்வதும் வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தியும் அநேகமாக சம அளவுகளில் இணைந்திருக்கின்றன. வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி வரலாற்று ரீதியாக தீவிரமாகச் செயல்படுவது — இது ஒருதார மண முறைக்கு மாறுவதற்கான முன்நிபந்தனைகளைப் படைக்கிறது — ஒரு புறமிருக்க, மேற்கூறிய இரு போக்குகளுக்கு இடையில் ஒப்பீட்டளவிலான சமநிலை நிலவுகிறது. இது இணைக் குடும்பத்தின் குணாம்சமாகும். இந்தக் கட்டத்தில் சமூக வாழ்க்கையில் திருமண-குடும்ப மற்றும்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, pp. 218, 227.

உடைமை-அதிகார உறவுகள் தலைகீழாக மாறுகின்றன என்பது எங்கெல்சினுடைய கருத்து. அது குடும்பத்தின் வடிவத்தில் துல்லியமாக ஒரு புரட்சியாக இருந்தது; புதுக் கற்காலப் பொருளாயத-தொழில்நுட்பப் புரட்சியை அடிப்படையாகக் கொண்ட தந்தைவழி முறைக்கு மாற்றமாக அந்தப் புரட்சி முதல் சமூக முரணியல்புகளை முதிரச் செய்து பிற்காலத்தில் வர்க்க சமூகத்துக்கு மாறும் வடிவமாகியது. திருமண-குடும்ப உறவுகளின் கட்டமைப்பில் (நேரடியான உற்பத்திச் சக்திகளின் அமைப்புக்கு வெளியில்) அடிப்படையான மாற்றத்துக்குரிய முன்நிபந்தனைகள் படிப்படியாகப் பக்குவமடைந்தன, பாலுறவுகளையும் இனப்பெருக்கத்தையும் தன்னிச்சையாக ஒழுங்குபடுத்திய இயற்கைத் தேர்வின் இடத்தை இறுதியாக ''சமூக இயக்குச் சக்திகள்'' * பெற்றன.

பிற்காலத்தில் குலமரபு அமைப்பை வெடித்துத் தகர்க்கப் போகின்ற சமூக முரண்பாடுகள் ஒருதார மணக் குடும்பத்துக்குள் முதலில் திரண்டு பின்னர் வெளிப்பட்டன. உருவாகியுள்ள சமூக முரணியல்புகள் குடும்பத்துக்குள் இரு பாலினருக்கும் இடையிலான சமத்துவமற்ற நிலையிலும் வெளிப்பட்டன. மேலும் ஒருதார மணக் குடும்பத்தின் தொடக்கத்திலிருந்து, அதாவது நாகரிக யுகத்தில் ஒரு தீவிரமான மாற்றம் ஏற்படு

---

* *Ibid.*, pp. 230, 240, 248.

கிறது. இப்பொழுது சமூக முரணியல்புகளை, உடைமையில் சமத்துவமின்மையை, மனிதனை மனிதன் சுரண்டுவதையும் ஒடுக்குவதையும் முதலில் அகற்றாமல் குடும்பத்துக்குள் உறவு களை அடிப்படையான முறையில் மாற்ற முடியாது.

திருமண-குடும்ப உறவுகள் இருபால்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு இடையில் நெருக் கமான உறவுகளைப் பிரதிநிதித்துவம் செய் கின்றன. அவர்கள் குடும்பம் என்ற முறையில் இனப்பெருக்கத்தின் அடிப்படை அலகாக இருக்கின்றனர். அவர்கள் குடும்பம் என்ற முறையில் சமூகத்துக்குள் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கையின் ஆரம்ப அலகாகவும் இருக்கின்றனர். உற்பத்தி மற்றும் நுகர்வு சமூக நிகழ்ச்சிப் போக்குகளில் பங்கெடுப்பதன் மூலமாக மனிதர்களின் அவசிய மான வாழ்க்கை நடவடிக்கைக்கு நேரடி யாக வகை செய்யும் சாதனமாக அந்த அலகு இருக்கிறது. குடும்பம் மற்றும் சமூக-வர்க்க உறவுகளின் இயக்கவியலை விளக்கும் பொழுது எங்கெல்ஸ் குடும்பச் செயல்கள் ஒவ்வொன்றின் வரலாற்று ரீதியான வளர்ச் சியை ஆராய்ந்தார்; அவை சமூக-பொருளா தார வளர்ச்சியின் குறிப்பிட்ட மட்டத்தி னால், குறிப்பாக, சமூக உழைப்புப் பிரிவினை யினால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டினார்.

குழு மண முறை, இணை மண முறை மற்றும் ஒருதார மண முறை என்னும்

திருமணத்தின் அடிப்படையான மூன்று வடிவங்களைச் சுட்டிக்காட்டி, அவை அக்காலத்தில் உருவாகியுள்ள சமூக-பொருளாதார உறவுகளினால் நிர்ணயிக்கப்பட்டன என்று எங்கெல்ஸ் எடுத்துக்காட்டினார்; காட்டுமிராண்டி நிலை, பண்பாடற்ற நிலை, நாகரிக நிலை என்னும் மூன்று காலகட்டங்களுடன் இம் மூன்று திருமண முறைகளை அவர் இணைத்தார். இரத்த உறவுக் குடும்பம், பூனலுவா குடும்பம் எனப்படுபவை இரண்டாம் நிலையான நிகழ்வு என்பது எங்கெல்சின் கருத்தாகும். எங்கெல்சின் கருத்து பாலுறவுகளை ஒழுங்குபடுத்துகின்ற ஆரம்ப வடிவத்தைப் பற்றிய நவீனக் கருத்துகளுடன் தெளிவாக உடன்படுகிறது. அந்த ஆரம்ப வடிவத்தில் பால் மற்றும் திருமண உறவுகளில் ஈடுபட்ட ஆண்களும் பெண்களும் வெவ்வேறு ஆனால் கறாராக வரையறுக்கப்பட்ட இடைத் திருமணம் செய்து கொள்கின்ற குலங்களைச் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் விலகி வாழ்ந்தார்கள், ஒவ்வொருவரும் தன்னுடைய குலப் பிரதேசத்தில் வசித்தார்கள், பிரதானமாக தன்னுடைய சொந்த குலத்தின் (அடுத்தவருடைய குலத்தில் அல்ல) பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

குழு மண முறை எல்லாவற்றுக்கும் மேலாக பாலுறவுத் துறையை நிர்ணயித்தது; இணைக் குடும்பம் பெற்றோர்களை நிர்ணயித்தது; ஒருதார மணக் குடும்பமோ சொத்தைப் பாரம்பரியமாகப் பெறும் உரிமை

மற்றும் சமூக சலுகைகளின் விளைவாக அடிப்படையான பொருளாதார, உற்பத்தி-நுகர்வு அலகாக உருப்பெற்றது. எனினும் இந்த வரலாற்றுப் பாதை நேர் பாதையாக இருக்கவில்லை. பாலுறவுகளை ஒழுங்குபடுத்து கின்ற தொன்மையான வடிவங்களின் சடத்து வத்தினாலும் குலத்துக்கும் கூட்டுச் சமூகத் துக்கும் பதிலாக ஏற்பட்ட சமூக-பொரு ளாதார அமைப்புகளிலிருந்த முரண்பாடு களின் தாக்கத்தினாலும் அந்தப் பாதை சுற்றி வளைந்து சென்றது. ஒருதாரக் குடும்பத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடை யில் உறவுகள் உயிரியல் கூறுகளைக் காட் டிலும் சமூக-பொருளாதாரக் கூறுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒருதார மண முறை இணைக் குடும்பம் மற்றும் குழு மண முறையின் எச்சங்கள் சிலவற்றைச் சேர்த்துக் கொண்டதுடன் — அதைக் காட்டிலும் முக் கியமானதாக — ஒரு வர்க்க சமூகத்துக்குள் இயன்றவரை அதன் முரணியல்புகள் அனைத் தையும் சுவீகரித்துக் கொண்டு பெண்ணுக்கு அடிமை நிலையை விதிக்கிறது. பிறன் மனையை நாடுவதிலும் விபசாரத்திலும் அது சாராம்சத்தில் குழு மண முறையின் மிகவும் ஆரம்பக் கால வடிவங்களிலிருந்த தொன்மையான போக்குகளை மாற்றப்பட்ட வடிவத்தில் புனருற்பத்தி செய்கிறது என்று எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

பண்பாடற்ற காலகட்டத்தில் இணைக்

குடும்பம் பெரிய தந்தைவழிக் குடும்பமாக (சில மக்களினங்களில் தாய்வழிக் குடும்பமாக) பரிணமிக்கிறது, தந்தைவழிக் குடும்பம் ஒருதார மணத்தை நோக்கி வளர்ச்சி அடைகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; அந்த வளர்ச்சி உழைப்புப் பிரிவினையின் புதிய துறைகளையும் வடிவங்களையும் நிர்ணயிக்கிறது. குறிப்பாகச் சொல்வதென்றால், கால்நடை வளர்ப்பின் வளர்ச்சி மற்றும் பரிவர்த்தனை உறவுகள் தீவிரமடைதல் தந்தைவழிக் குலம் மற்றும் தந்தைவழிக் குடும்பத்துக்கு அடிப்படையாக இருந்தன. கைத்தொழில்கள் மற்றும் முறையான வர்த்தகத்தின் வளர்ச்சி சிறு அளவான, தனிப்பட்ட, ஒருதாரக் குடும்பங்களின் தோற்றத்துக்கு வழிவகுத்தது.

சமூக முரணியல்புகள் பக்குவமடைவதற்கும் ஒருதார மணம் தோன்றுவதற்கும் இடையிலுள்ள இணைப்பை தந்தைவழிக் குடும்பத்தில் நாம் பார்க்க முடியும். யுத்தங்களின் போது பிடிக்கப்பட்ட கைதிகள் (மற்றும் கடன்காரர்களின்) அடிமை உழைப்பு முதலில் குடும்பத்துக்குள் பயன்படுத்தப்பட்டது. பண்டைக்கால ரோமாபுரியில் familia என்னும் சொல் ஆரம்பத்தில் குடும்பத் தலைவரது அதிகாரத்துக்கு உட்பட்ட அடிமைகளின் மொத்த எண்ணிக்கையைக் குறித்தது என்று எங்கெல்ஸ் சுட்டிக்காட்டுகிறார். பிறகு அடிமை உழைப்பு மேன்மேலும் உற்பத்தித் துறைக்கு

மாற்றப்பட்டது; குடும்பமோ குடும்பத் தலைவரது (pater familias) வீட்டில் வேலை செய்கின்ற அடிமைகளின் ஒட்டுமொத்தமாகியது. குடும்பம் அரசு-அதிகார உறவுகளின் ஆதிக்க முறையைப் பிரதிபலிப்பதாகத் தோன்றுகிறது. ஆகவே ரோமானிய குடும்பம் ஓரளவுக்கு ரோமானிய பேரரசின் சிறு வடிவமாக இருந்தது.

பகைமுரண்பாட்டுச் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள உறவுகள் ''பணம், அல்லது சமூக அதிகாரத்தின் மற்ற சாதனங்களுடன்'' * நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன என்று எங்கெல்ஸ் வாதிடுகிறார். ஒருதார மணம், முதன்முதலில் ''இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டிராத, ஆனால் பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட குடும்பத்தின் ஒரு வடிவம்''; ஆகவே ''வரலாற்றில் தோன்றுகின்ற முதல் வர்க்க முரணியல்பு ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான முரணியல்பின் வளர்ச்சியுடனும் முதல் வர்க்க ஒடுக்குமுறை ஆண்பாலினர் பெண்பாலினரை அடிமைப்படுத்தியதுடனும் பொருந்துகிறது'' ** என்று அவர் கூறுகிறார். முதலாளித்துவ சமுதாயத்தில் ''ஒருதார மணமும் விபசாரமும்... எதிரிடைகளாக இருந்தாலும், அவை

* *Ibid.*, p. 255.

** *Ibid.*, pp. 239—240.

பிரிக்க முடியாத எதிரிடைகள், ஒரே வித மான சமூக முறையின் முனைகள்''* என்று எங்கெல்ஸ் விளக்குகிறார்.

## தனிப்பட்ட பாலுணர்ச்சிக் காதலின் தோற்றத்தைப் பற்றிய பிரச்சினையும் ''பாலுறவுப் புரட்சிக்'' கருதுகோள்களைப் பற்றிய விமர்சனமும்

நவீனக் குடும்பத்தின் வடிவங்களைப் பற்றிய தன்னுடைய விளக்கத்தில் அதன் மிக முக் கியமான சமூக-உளவியல் அம்சங்களில் ஒன்று என்ற முறையில் காதலின் மீது எங்கெல்ஸ் விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறார். அவர் தன்னுடைய புத்தகத்தில் தனிப்பட்ட பாலு ணர்ச்சிக் காதலைப் பற்றி எழுதுகிறார். அதன் மூலம், காதல் எக்காலத்திலும் இருந்து வருவதாகவும் (இதில் பாலுறவு அம்சம் சூக்குமமான, மேன்மையான உணர்ச்சிக்குப் பின்னால் மறைக்கப்படுகிறது), தந்தைவழி-ஒருதாரக் குடும்பம் என்றென்றும் இருந்து வருவதாகவும் பைபிளில் எழுதப்பட்டுள்ள தானது விஞ்ஞானத்துக்குப் புறம்பானது என்று மறுக்கப்பட்டிருக்கிறது. மனித வரலாற் றின் தொடக்கத்தில் அவனுக்குக் குடும் பத்தைப் பற்றித் தெரியாது, காதலைப் பற்றி யும் தெரியாது என்று எங்கெல்ஸ் நம்பக மான முறையில் சுட்டிக்காட்டுகிறார். இதிலும்,

---

* *Ibid.*, p. 249.

நெருக்கமான உறவில் ஒரு நபருக்குப் பதிலாக மற்றொரு நபரை விரும்புகின்ற சாதாரணத் தேர்வுரிமையைக் காட்டிலும் — இத்தேர்வுரிமை தனிப்பட்ட குணங்களையும் ரசனைகளையும் பொறுத்திருக்கும் — கூடுதலான ஒன்றைக் காதல் என்ற சொல்லின் மூலம் குறிப்பதாக கருதப்படுகிறது. ''உடல் அழகு, மிக அன்னி யோன்னியமாகப் பழகுதல், விருப்பங்களில் ஒருமனப்பட்ட தன்மை போன்றவை ஆண், பெண் இடையே புணர்ச்சி வேட்கையை எழச் செய்தன; யாருடன் இந்த அதிக அன்னி யோன்னியமான உறவில் ஈடுபடுவது என்ற கேள்வியைப் பற்றி ஆணோ, பெண்ணோ முழுக்க முழுக்க அசட்டையாக இருந்ததில்லை என்பது எல்லாம் சொல்லாமலே அமையும். இருந்தாலும் நம் காலத்திய பாலுணர்ச்சிக் காதலுக்கும் இதற்கும் எவ்வளவோ தூர முண்டு'' * என்று எங்கெல்ஸ் எழுதினார்.

பூர்விக சமூகத்தில் குழு மணமுறையே தலை மையான திருமண வடிவமாக இருந்தது. இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பரஸ்பர ஈடுபாடு வளர்வதற்கும் வெளிப் படுவதற்கும் சிறிதும் வாய்ப்புத் தரவில்லை. பழங்காலத்திய கிழக்கு நாடுகளின் ஆலயங் களில் அவற்றைச் சேர்ந்த ''தேவதாசி கள்'' இருந்தார்கள்; ஒரு காலத்தில் வழக் கமாக இருந்த குழு மண முறையின் எச்ச மாகிய பாவம் கழுவும் பொது மகளிர் முறையை

* *Ibid.*, p. 243.

நோக்கிய போக்கை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்தார்கள்.

பண்டைக்கால கிரேக்க தொல்கதைகளில் காதற் கடவுளான ஏரொஸ் வருகிறார், ஆனால் காதல், சமூகத்துக்கு வெளியே இருக்கின்ற பரத்தையர்கள் மற்றும் அடிமைகளான இடையர்களிடம் மட்டுமே உண்டு. எனினும் இந்த உணர்ச்சிகள், பிற்காலத்தில் காதல் என்று சொல்லப்பட்டதற்கு முந்திய உணர்ச்சிகளாக இருந்தன.

பண்டைக்கால கிரீசிலும் ரோமாபுரியிலும் இருந்த காதலைப் பற்றிய கருத்தையும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் முதலாளித்துவ சமுதாயத்தில் தோன்றிய காதலைப் பற்றிய கருத்தையும் பிரித்த மாபெரும் வரலாற்றுத் தூரத்தை வலியுறுத்திய எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ‘‘நம் காலத்து பாலுணர்ச்சிக் காதல் பண்டைக்காலத்தியவர்களின் வெறும் புணர்ச்சி விருப்பத்திலிருந்து, ஏரொஸ் எனப்படுவதிலிருந்து வெகுவாக மாறுபட்டிருக்கிறது. முதலாவதாக, இருதலைக்காமம் என்பது இதற்கு இருக்க வேண்டும்; இந்த அம்சத்தில் ஆணுக்குச் சமமாகப் பெண் இருக்கிறாள்; ஆனால் பண்டைக்காலத்திய புணர்ச்சி விருப்பம் நிலவிய போது எல்லாச் சமயங்களிலும் பெண்ணை யாரும் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. இரண்டாவதாக, இரு தரப்பினரும் இல்லாமையை அல்லது இவர்களின் பிரிவைப் பெரிய — யாவற்றிலும் பெரிய என்று இல்லா

விட்டாலும் — துரதிர்ஷ்டம் என்று கருது கின்ற அளவிற்கு காதல் தீவிரமும் நிரந் தரமும் பெற்று விளங்குகிறது. ஒருவரை யொருவர் அடைவதற்காக அவர்கள் மாபெரும் அபாயங்களிலும் இறங்குகிறார் கள், உயிரைப் பணயம் வைக்கவும் முன் வருகிறார்கள்; அதிகமாகச் சொல்லப் போனால், பண்டைய காலத்தில் இது சோரக் காமத்தில்தான் நிகழ்ந்தது. கடைசியாக, பாலுறவை மதிப்பிடுவதற்கு ஒரு புதிய தார் மீக அளவுகோல் கிடைக்கிறது. புணர்ச்சி சட்டபூர்வமானதா, இல்லையா என்பது மட்டுமல்ல கேள்வி; அது பரஸ்பரக் காதலிலே விளைந்ததா, அல்லவா என்றும் கேள்வி கேட்கப்படுகிறது.'' *

மத்திய காலத்தில் காதல் என்பது திரு மணம் அல்ல, அது பிறன் மனையை நாடு வதாக, திருமணத்துக்கு வெளியே நடை பெறுகின்ற பாலுறவாக இருந்தது. புத்தி சாலித்தனமான, நுட்பமான உணர்வுகளை யுடைய, காதல் புரிவதில் அனுபவம் மிக்க — நடைமுறை விவகாரங்களில் ஆலோசகர் களாகவும் இருந்த — பொது மகளிருக்குப் பதிலாக, புத்தார்வக் காதல் தோன்றிய தோடு நயமில்லாத (பொது மகளிருடன் ஒப்பிடுகின்ற பொழுது), குறைவான கல்வி யுடைய, ஆனால் வலிமையான, வீரம் மிக்க, ஆபத்தில் குதிக்கத் தயாரான மத்திய

---

* *Ibid.*, p. 250.

கால வீரப் பெருந்தகை வருகிறான். ''வரலாற்றிலேயே முதன்முதலாக தோன்றிய பாலுணர்ச்சிக் காதலின் வடிவமாகிய மனவெழுச்சி, எந்த ஒரு நபருக்கும் (குறைந்த பட்சம் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களைச் சேர்ந்தோருக்கு) எட்டக் கூடிய மனவெழுச்சி, புணர்ச்சி வேட்கையின் உயர் வடிவமாகிய மனவெழுச்சி (இதுதான் அதன் விசேஷத் தன்மையாகும்), காதலின் முதல் வடிவமாகிய, மத்திய காலத்தைச் சேர்ந்த வீரப் பெருந்தகையின் காதலாகும்; ஆனால் இது திருமணக் காதலாக இருக்கவில்லை. அதற்கு மாறாக அதன் சாஸ்திரீய வடிவத்தில், புரொவான்ஸால் மக்களிடையே, அது நேராக முழு வேகத்துடன் பிறன் மனையை நோக்கிப் போகிறது; அதன் அருமை பெருமைகளைப் பற்றி அவர்களின் கவிஞர்கள் பாடி வைத்திருக்கிறார்கள்.'' * சுருக்கமாகச் சொல்வதென்றால், பண்டைய உலகம் முடிந்த இடத்திலிருந்து — பிறன் மனையை நாடுவதிலிருந்து — மத்திய காலம் தொடங்குகிறது என்று எங்கெல்ஸ் கூறினார். ** ஒரு வீரப் பெருந்தகை திருமணமான பெண்ணைக் காதலிக்கின்ற கதை வரலாற்று ரீதியில் தனிப்பட்ட பாலுணர்ச்சிக் காதலின் வளர்ச்சியில் ஒரு புதிய வடிவமாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில் பெயரளவில்

---

* *Ibid.*, pp. 243—244.

** *Ibid.*, p. 250.

சமத்துவத்தைக் கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான திருமணத்தின் சட்டரீதியான மூடுதிரை உண்மையான திருமண மற்றும் குடும்ப உறவுகள் மற்றும் பொதுவாகப் பாலுறவுகளின் போலியான தன்மை மற்றும் பகிரங்கமான வர்த்தகத் தன்மையை அநேகமாக மறைக்கவில்லை. இந்த உறவுகளின் கண்ணுக்குப் புலனாகாத சமூக அடிப்படை முதலாளித்துவத்துக்கு உரிய உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமையே. ''பகிரங்கமாகவோ, மறைவாகவோ உள்ள பெண் அடிமைத்தனத்தின் அடிப்படையில்தான் நவீன காலத் தனிப்பட்ட குடும்பம் இருக்கிறது; நவீன காலச் சமுதாயம் என்பதும் தனிப்பட்ட குடும்பங்களைத் தனது மூலக்கூறுகளாகக் கொண்டிருக்கின்ற கூட்டமைப்பே. இன்று, மிகப் பெரும்பான்மையான சமயங்களில், ஆண்தான் சம்பாதிக்கிறவனாக, சோற்றுக்கு வழி செய்கிறவனாக இருக்க வேண்டியிருக்கிறது, குறைந்த பட்சம் சொத்துள்ள வர்க்கங்களில் இப்படித்தான்; இது அவனுக்கு ஆதிக்க நிலையைத் தருகிறது, அதற்கொன்றும் விசேஷமான சட்டவகைச் சலுகையுரிமைகள் வேண்டியதில்லை''* என்று எங்கெல்ஸ் எழுதினார். பெயரளவில் சமத்துவத்தைக் கொண்ட இருவருக்கு இடையிலான திருமணத்துக்கும் மூலதனத்தைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட ''கௌரவ

* *Ibid.*, p. 247.

மான'' குடும்பத்துக்கும் உரிய ''விளையாட்டின் விதிகளை'' முதலாளி வர்க்கம் பிரகடனம் செய்தது; அந்த விதிகள் பணத்தைப் போல சர்வாம்சமுடையன மற்றும் அன்றைக்கிருந்த உற்பத்தி உறவுகளுக்குப் பொருந்தியிருந்தன. வெறும் கணக்கை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய திருமண-குடும்ப உறவுகளின் தார்மீக அம்சத்தை எங்கெல்ஸ் ஃபூரியேயின் வாசகத்தை மேற்கோள் காட்டி வர்ணித்தார்: ''இலக்கணத்தில் இரண்டு எதிர்மறைகள் உடன்பாட்டுப் பொருள் ஆவது போல், திருமண ஒழுக்கங்களில் இரண்டு விபசாரங்கள் ஒரு நன்னெறியாக ஆகின்றன.'' *

எனினும் மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக் காட்டியதைப் போல முதலாளித்துவ சமுதாயத்திற்குள் அதை விரைவில் தூக்கியெறியப் போகின்ற முன்நிபந்தனைகள் வடிவமெடுத்துக் கொண்டிருந்தன; அதைத் தூக்கியெறியுமாறு விதிக்கப்பட்டிருந்த வர்க்கம், பாட்டாளி வர்க்கம் உருவாகிக் கொண்டிருந்தது. முதலாளி வர்க்கக் குடும்பங்களிலிருந்து வேறுபட்ட முறையில் பாட்டாளி வர்க்கக் குடும்பங்களில் சம்பிரதாய முறையிலான ஒருதார மணம் மெய்யான சமத்துவத்தையும் இரு பாலினருக்கும் இடையிலான காதலை அடிப்படையாகக் கொண்ட பரஸ்பர உறவுகளையும் முதல் தடவையாக அடைந்து

* *Ibid.*, p. 245.

கொண்டிருந்தது. பாலுணர்ச்சிக் காதல் தன் தன்மையில் மற்றவற்றை விலக்குவது என்ற அளவுக்கு, ''பாலுணர்ச்சிக் காதலை அடிப் படையாகக் கொண்ட திருமணம் தன் தன்மையில் ஒருதார மண முறையே.''* உணர்வுபூர்வ மான, உருவாகிக் கொண்டிருந்த புதிய ஒழுக் கத்தால் ஸ்திரப்படுத்தப்பட்ட ஒருதார மணத் தின் கூறுகளை மாஞ்செஸ்டர் நகரத்தின் புகைபடிந்த, ஏராளமான மக்கள் அடைபட் டிருந்த ஆலைக் குடியிருப்புகளில், ''உலகத்தின் தொழிற்சாலையைச்'' சேர்ந்த உழைக்கும் மக்களின் பெரும் வறுமை, குடிப்பழக்கம், கொச்சைத்தனம், குறைவான கலாசார நிலை ஆகியவற்றின் ஊடாக பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தத்துவாசிரியர் மதி நுட்பத்தோடு கண்டுபிடித்தார். இளைஞரான எங்கெல்ஸ் 1844இல் அந்த நகரத்தில் **இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை** என்ற தன்னுடைய முதல் புத்தகத்தை எழுதினார்.

எங்கெல்சின் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலில் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் காதலை அடிப்படையாகக் கொண்ட திருமண-குடும்ப உறவுகளைப் பற்றிய பிரச்சினை குறிப்பிடத் தக்க வன்மையுடனும் நம்பிக்கையுடனும் ஆராயப்படுகிறது. இங்கே மனிதனை உயர்த்து கின்ற, மனிதனால் உயர்த்தப்படுகின்ற

---

* *Ibid.*, p. 254.

காதலின் முன்மாதிரியை நாம் பார்க்கின்றோம்; அது முதலாளித்துவ அவநம்பிக்கை, போலித்தன்மை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்ட காதல்; ஆண், பெண் உறவுகள் உட்பட எல்லாவற்றையுமே ''பணமாக்குகின்ற'' உருத்திரிபான உடைமை உறவுகளினால் ஏற்படுகின்ற அவலட்சணமான திரிபுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட காதல் இதுவே. நம் காலத்திய திறமை மிக்க பல மேற்கத்திய எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கூட இப்பொருளைப் பற்றி அவநம்பிக்கையுடன்தான் எழுதுகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும், முதலாளித்துவ சமுதாயத்தின் மற்ற துறைகளிலும் இதே நிலைமைதான் இருக்கிறது. உபயோகப்படுத்தி விட்டுத் தூக்கியெறிகின்ற நுகர்வுப் பொருளைப் போல மக்கள் ஒருவரையொருவர் ''பயன்படுத்திக்'' கொள்கிறார்கள். மேலும் இந்த நிகழ்ச்சிப் போக்கு மேன்மேலும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் மனிதர்களுடைய உறவுகளின் மனிதத் தன்மை சீக்கிரத்தில் முடியப் போகிறதென்றால் மனிதனுடைய எதிர்காலம் என்ன? அமெரிக்க சமூகவியலாளரான அல்வின் டோஃப்லர் இதைப் பற்றி **எதிர்கால அதிர்ச்சி** என்னும் தலைப்பில் எழுதியுள்ள நூல் இன்று அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

எங்கெல்ஸ் நூறு வருடங்களுக்கு முன்பே முதலாளித்துவ சமுதாயம் மற்றும் முதலாளித்

துவக் கலாச்சாரத்தின் ஆழமான நெருக் கடியில் சமூக உறவுகளின் புதிய, எதிர்கால, சோஷலிச ரகத்தைச் சேர்ந்த முளைகளைக் கண்டார். இது திருமண-குடும்ப உறவுமுறை களுக்கும் பொருந்துவதே; அவை லாப உணர்ச்சி யில் தோய்ந்திருக்கின்ற அற்பவாத ஒருதார மணத்துக்கு முற்றிலும் எதிராக இருக்கும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் புதிய உறவுகள் தோன்றக் கூடிய ஆதாரமாக எங்கெல்ஸ் பாட்டாளி வர்க்கத்தைக் கண் டார். ''ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடையேதான், அதாவது தற்காலத்தில் பாட்டாளி வர்க்கத் தினரிடையேதான், கணவன், மனைவி உறவுக் கிடையே காதல் என்பது விதியாக முடியும்; இப்படித்தான் இருக்கிறது; இந்த உறவு அதிகாரபூர்வமாக அனுமதிக்கப்பட்டதா இல் லையா என்பது பற்றி அக்கறையில்லை. ஆனால் இங்கே மூலச்சிறப்பான ஒருதார மணத்திற்குரிய எல்லா அடிப்படைகளும் நீக்கப்படுகின்றன. இங்கே சொத்து அறவே கிடையாது; இந்தச் சொத்தைப் பாதுகாத்து வாரிசிடம் விட்டுச் செல்வதற்காகத்தான் ஒருதார மண முறையும் ஆண் ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டன. ஆகவே, இங்கே ஆண் ஆதிக்கத்தை வலியுறுத்திக் காட்டத் தூண்டு கோல் எதுவும் கிடையாது. இன்னும் மேலாக, அதற்கு வழிவகைகளும் கிடையாது; இந்த ஆண் ஆதிக்கத்தைப் பாதுகாப்பது பூர்ஷ்வாச் சட்டமே; அந்தச் சட்டம் உடைமை வர்க்கங்களுக்குத்தான், பாட்டாளி

வர்க்கங்களோடு அவை வைத்துக் கொண்டுள்ள உறவுகளுக்குத்தான் இருக்கிறது. அதற்குப் பணமும் செலவழியும்; எனவே, தொழிலாளியின் வறுமையின் காரணமாக, மனைவிபால் அவன் கொள்ளும் மனப்பான்மையில் இந்தச் சட்டத்துக்கு முக்கியத்துவம் இல்லை. இங்கே, முற்றிலும் வேறான தனிப்பட்ட உறவுகளும் சமுதாய உறவுகளும் நிர்ணயமான காரணப் பொருட்களாயுள்ளன. மேலும், பெருமளவுத் தொழில்துறை வீட்டிலிருந்து உழைப்புச் சந்தைக்கும் தொழில்சாலைக்கும் பெண்களை மாற்றியனுப்பி விட்டிருப்பதாலும் அது குடும்பத்தின் சோற்றுக்கு வழி தேடுபவளாக அவளை அடிக்கடி ஆக்குகிறதாலும் பாட்டாளி வீட்டில் ஆணின் ஆதிக்கத்துக்குரிய கடைசி மீதமிச்சங்களும் கூட அறவே ஆதாரம் அற்றுப் போயின; ஒருதார மண முறை ஸ்தாபிதமான பிறகு உறுதியாக வேர் விட்டுப் போன, பெண்ணை மிருகத்தனமாக நடத்தும் போக்கு இருக்கிறதே, அது மட்டும் ஒருவேளை இங்கும் கொஞ்சம் இருக்கலாம்.'' *

மரபு வழிப்பட்ட முதலாளித்துவத் திருமணத்தின் சுற்றுவட்டத்துக்கு வெளியான ''செவ்வொழுங்குத் திருமணம்'' என்றழைக்கப் படுவதைப் பற்றி நவீன முதலாளி வர்க்க சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் துல்லியமாக சிறப்புத் தேர்ச்சியுடைய ஆங்கில

---

* *Ibid.*, p. 245.

தொழிலாளர்கள் மத்தியில் அதைக் கண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியம். வீட்டு வேலையின் மரபு வழிப்பட்ட ''ஆண்'', ''பெண்'' வடிவங்களை ஓரளவுக்குச் சம அளவில் பகிர்ந்து கொள்வதிலும் கூட்டாக நிறைவேற்றுவதிலும் அதன் சமூக சாரம் அடங்கியிருக்கிறது.* இந்த உளவியல் போக்கின் பொருளாதாரக் காரணங்களை எங்கெல்ஸ் நூறு வருடங்களுக்கு அதிகமான காலத்துக்கு முன்னர் விரிந்த உருவரையில் சுட்டிக்காட்டினார் என்பதை இங்கே குறிப்பிடுவது முக்கியமாகும். மூலச்சிறப்பான ''தந்தைவழி'' ஒருதார மணத்தின் பொருளாதார மற்றும் சட்டவியல் அடிப்படைகள் பாட்டாளி வர்க்கக் குடும்பத்தில் இல்லை என்று அவர் தன்னுடைய நூலில் குறிப்பிட்டிருந்தார்.

''எனவே, பாட்டாளிக் குடும்பம், அதன் கறாரான அர்த்தத்தில் ஒருதார மண வகைப்பட்டதல்ல — அதிதீவிரக் காதல் இருந்தாலும், பரஸ்பர தாம்பத்திய விசுவாசம் இருந்தாலும் சரி, எல்லா மத அல்லது சாதாரண ஆசிகள் பெற்றிருந்தாலும் சரி. எனவே, ஒருதார மண முறையோடு நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கிற தொங்குசதைகளான பொது மகளிர் முறையும் பிறன் மனை நாடுவதும் இங்கே அற்பப் பாத்திரம்தான்

---

* Geoffrey Gorer, *Sex and Marriage in England Today*, Nelson, London, 1971.

வகிக்கின்றன. திருமணத்தை ரத்து செய்யும் உரிமையைப் பெண் நடைமுறையில் திரும்பப் பெற்று விட்டாள்; கணவனும் மனைவியும் இணைந்து வாழ முடியவில்லையென்றால் இருவரும் பிரியவே விரும்புகிறார்கள். சுருங்கச் சொன்னால், சொல்லிலக்கணத்தின் அர்த்தப் படித்தான் பாட்டாளித் திருமணம் ஒருதார மணமாகுமேயொழிய அந்தச் சொல்லின் வரலாற்றிற்குரிய அர்த்தத்தில் ஆகாது.'' *

எதிர்கால சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவுகளில் புதிய சகாப்தம் தோன்றப் போவதைப் பற்றிய எங்கெல்சின் பார்வை இது. உற்பத்தி மற்றும் உடைமை அமைப்புத் துறையில் ஏற்பட்ட தீவிரமான மாற்றங்கள் இரு பாலினருக்கு இடையிலுள்ள உறவுகள் உட்பட மனித உறவுகளின் தன்மையில் மாற்றங் களுக்கு இட்டுச் சென்றன. இரு பாலினருக்கு இடையிலான உறவுகளுக்கும் உடைமை வடிவங்களுக்கும் இடையிலுள்ள இணைப்பை பற்றி, குறிப்பாக விவாகரத்து உரிமைக்கான பொருளாதார முன்நிபந்தனைகளைப் பற்றி எங்கெல்ஸ் தன்னுடைய நூலில் விசேஷமாக ஆராய்ச்சி செய்தார். அவர் எதிர்கால சமூ கத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: ''என்றாலும், ஒருதார மணம், சொத்து

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 245.

உறவுகளிலிருந்து எழுந்ததன் விளைவாக அதன் மீது முத்திரையாக விழுந்திருக்கிற எல்லா அம்சங்களும், அதாவது, முதலாவதாக, ஆணின் ஆதிக்கம், இரண்டாவதாக, மணத்தை ரத்து செய்ய முடியாமை அதிநிச்சயமாக மறையும்; மண வாழ்க்கையில் ஆண் ஆதிக்கம் செலுத்துவது வெறுமனே அவனது பொருளாதார ஆதிக்கத்தின் விளைவேயாகும்; அது போகும் போது இதுவும் போய் விடும். மணத்தை ரத்து செய்ய முடியாமை என்பது ஓரளவுக்கு ஒருதார மணம் தோன்றியெழுந்ததற்குரிய பொருளாதார நிலைமைகளுடைய விளைவு; ஓரளவுக்கு இந்தப் பொருளாதார நிலைமைகளுக்கும் ஒருதார மணத்துக்குமுள்ள சம்பந்தம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப் படாமலும் மதத்தினால் மிகைபடக் கூறப்பட்டும் வந்த காலத்திலிருந்து வந்திருக்கிற ஒரு சம்பிரதாயத்தினுடைய விளைவு. இன்று அது ஆயிரம் மடங்கு உடைந்துள்ளது. காதல் திருமணங்கள் மட்டுமே ஒழுக்கமானவை என்றால் காதல் நீடித்திருக்கும் மண வாழ்க்கைகள்தான் ஒழுக்கமுள்ளவை. தனிப்பட்ட காதல் நிலவும் காலம் நபருக்கு நபர் — குறிப்பாக ஆண்களிடத்தில் — மிகவும் வேறுபடுகிறது. அந்தக் காதல் திடமாக அற்றுப் போவது, அல்லது இன்னொரு நபர் மீது கொள்கிற புதிய ஆர்வமிக்க காதல், திருமணம் ரத்து செய்வதை அந்தத் தம்பதிகளுக்கும் சமுதாயத்துக்கும் ஒரு வரப்பிரசாதமாகச் செய்கின்றது, விவாக ரத்து எனும் பயனற்ற சேற்றில் இறங்கி

நடக்கிற அனுபவம் மக்களுக்கு நேராது.''*

தனிநபர்களுக்கு இடையிலான உறவுகளில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவதில் எதிர்கால சோஷலிச, கம்யூனிச சமுதாய மக்களின் ஆக்கபூர்வமான கடமைகளையும் ஒருதார மணம் மற்றும் திருமண-குடும்ப உறவுகளின் வளர்ச்சி வாய்ப்புகளையும் எங்கெல்ஸ் உற்பத்தி மற்றும் சொத்துடைமை உறவுமுறைகளின் அடிப்படை மாற்றத்தின் விளைவு என்ற வகையில் மிகப் பொதுவான வடிவத்தில் சுட்டிக் காட்டியது இயற்கையே. ''உற்பத்திச் சாதனங்கள் பொதுச் சொத்தாக மாறியதும் தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகாக இருந்து வருவதும் நின்று போகிறது. தனிப்பட்ட வீட்டு நிர்வாகம் சமுதாயத் தொழிலாக மாற்றப்படுகிறது. குழந்தைப் பராமரிப்பும் கல்வியும் பொது விவகாரங்களாகிவிடுகின்றன. எல்லாக் குழந்தைகளையும் (அவர்கள் திருமணமானவர்களுக்குப் பிறந்தவர்களாயினும் சரி, திருமணமாகாத பெண்களுக்குப் பிறந்தவர்களாயினும் சரி) சமுதாயம் சமமாகக் கவனித்துக் கொள்கிறது. எனவே, 'விளைவுகளைப்' பற்றிய கவலை — தன்னை நேசிப்பவனுடன் தங்குதடையின்றி சங்கமமாகத் தடையாக இருக்கும் மிக முக்கியமான தார்மீக, பொருளாதார அம்சம் — மறைந்து போகும்.''**

---

* *Ibid.*, p. 254.

** *Ibid.*, p. 249.

ஒருதார மணம் இரு பாலினரது சமத்துவத்தை நோக்கி மேலும் வளர்ச்சியடையும், இதன் தொடர்பாக ஒருதார மணத்தின் தன்மையில் மாற்றம் ஏற்படுவது சாத்தியம் என்று மார்கன் கருதினார். எங்கெல்சின் மேற்கூறிய வாதங்கள் பொருளாதார, மனிதாபிமான, அறவியல் வாதங்களுடன் சேர்ந்து மார்கனுடைய கருத்தைக் கணிசமான அளவுக்கு வலியுறுத்தின. அதே சமயத்தில் முதலாளித்துவ சமுதாயத்தின் ''உள்ளே'' இப்பிரச்சினையைப் பற்றி நுணுக்கமாக ஆராய்வது தவிர்க்க முடியாத விதத்தில் குறுகிய தன்மையைத்தான் கொண்டிருக்கும் என்பதை எங்கெல்ஸ் அங்கீகரித்தார். திருமண-குடும்ப உறவுகளில் புதிய வடிவங்களையும் பாலுணர்ச்சி நடத்தையில் புதிய தரங்களையும் படைப்பது எதிர்கால சோஷலிச மற்றும் கம்யூனிச சமுதாயத்தைச் சேர்ந்த மக்களின் கடமை என்று அவர் கருதினார். ''ஆக, முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு வந்து கொண்டிருக்கும் அழிவுக்குப் பிறகு பால் உறவுகளைச் சீர்படுத்துவது பற்றி நாம் ஊகமாகச் சொல்லக் கூடியது எது நடக்காது, எது இருக்காது என்ற வகையில்தான் பெரும்பாலும் இருக்கிறது. ஆனால் கூடுதலாக என்ன இருக்கும்? ஒரு புதிய தலைமுறை வந்த பிறகு அது முடிவு கட்டப்படும். அந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஆண்களுக்கும் பணத்தைக் கொண்டோ, அன்றிச் சமூக ரீதியான இதர அதிகாரச் சாதனங்களைக்

கொண்டோ ஒரு பெண்ணைத் தமக்கு இணங்கச் செய்வதற்குத் தம் வாழ்க்கையில் என்றைக்குமே வாய்ப்பிருக்காது; பெண்கள், உண்மைக் காதலுக்காக மட்டுமேயன்றி வேறெந்த நோக்கத்துக்காகவும் எந்த ஆணுக்கும் என்றைக்குமே இணங்கக் கடமைப்பட்டிருக்க மாட்டார்கள்; பொருளாதார விளைவு களைப் பற்றி பயந்து கொண்டு காதலனுக்குத் தம்மை ஒப்புக்கொடுக்கத் தயங்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படாது. அப் படிப்பட்ட மக்கள் தோன்றியவுடனே அவர் கள் என்ன செய்ய வேண்டும் என்று நாம் இன்று நினைக்கிறோமோ, அதைக் கடுகளவேனும் சட்டை செய்ய மாட்டார்கள். தனித்தனி நபரின் நடைமுறையையொட்டித் தமது சொந்த நடைமுறையையும் அதற்குப் பொருத்தமான தமது சொந்தப் பொதுஜன அபிப்பிராயத்தையும் அவர்கள் நிலைநிறுத்து வார்கள் — அத்துடன் விஷயம் தீர்ந்தது.'' *

முதலாளித்துவத்தின் நெருக்கடி, மரபு வழிப்பட்ட (அதாவது முதலாளித்துவ) திரு மண-குடும்ப உறவுகளை விமர்சனம் செய்து நிராகரிப்பதையும் கட்டுப்பாடில்லாத பாலுறவுச் சுதந்திரம் வேண்டும் என்று பேசுவதை யும் இன்று தவிர்க்க முடியாத முறை யில் நாகரிகமாக்கி இருக்கிறது. 20ஆம் நூற்றாண்டின் 60 — 70ஆம் ஆண்டுகளில் இப்போக்குகள் ''பாலுறவுப் புரட்சி'' என்று

---

* *Ibid.*, p. 255.

சொல்லப்படுவதில் வெடித்தன. முதலாளித்துவ தகவல் ஒலிபரப்பு சாதனங்கள் இப்பொருளைப் பற்றி விரிவாக எழுதி செயற்கையாகப் பரபரப்பூட்டின. சமூக புரட்சியின் தேவைக்குப் பதிலாக பாலுறவுப் புரட்சியை முன்வைத்து அதைப் பற்றிய கற்பனைகளால் பெருந்திரளான மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கு மூலதனத்துக்கு ஆதரவாக வாதம் புரிகின்ற அறிஞர்கள் எப்பொழுதுமே தயாராக இருக்கிறார்கள். அதே சமயத்தில் பாலுறவுப் புரட்சி என்ற கருத்தில் சேர்க்கப்பட்டுள்ள பிரச்சினைகளின் மொத்தத் தொகுதியும் காதலை வெளியேற்றி, இருபாலினருக்கும் இடையிலுள்ள உறவை வெறும் உடலியலாக வகைப்படுத்துகின்ற மொத்த மதிப்பீட்டுடன் உடன்படுவது கடினமே.

பாலுறவுப் புரட்சியின் எல்லா வடிவங்களிலும் திருமணம், குடும்பம் மற்றும் பாலுறவின் துல்லியமான முதலாளித்துவத் தரங்களுக்கு எதிராகத்தான் தன்னிச்சையான எதிர்ப்பு கிளம்புகிறது என்பதை முதலில் சுட்டிக்காட்ட வேண்டும். மனிதனுடைய உடலையும் ஆன்மாவையும் விற்பனை செய்வதற்கும் வாங்கப்படுவதற்கும் உரிய பொருளாக மாற்றுகின்ற வெளிப்படையாகப் போலியான, வசதித் திருமணத்துக்கு எதிராக ''கலப்பற்ற'', சிற்றின்ப, பாலுணர்ச்சி உறவுகள் வற்புறுத்தப்படுகின்றன.

முதலாளித்துவ சமுதாயத்தில் பின்பற்றப் படுகின்ற நுகர்வு வழிபாடு, வெகுஜனக்

கலாசாரத் தரங்கள், நெருக்கமான உறவுகளை சுற்றப்புற உலகத்தின் அழுத்தத்திலிருந்து தப்புவதற்குரிய பிரத்யேகமான வடிவமாக மாற்றுதல் ஆகிய காரணிகளும் இருபாலினருக்கும் இடையிலுள்ள உறவுகளை மாற்றியிருக்கின்றன என்னும் உண்மையை நாம் மறக்க முடியாது. விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி பெண்களின் பொருளாதார நிலையில், ஆகவே அவர்களுடைய உளவியல் போக்குகளில் புதிய கூறுகளைப் புகுத்தியிருக்கிறது. சோவியத் தத்துவஞானி இ. அந்திரேயெவா பின்வருமாறு எழுதுகிறார்: ''அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த சில நாடுகளிலும் மரபு வழிப்பட்ட திருமண உருமாதிரிகள் சிதைவடைதல் வெகு தூரம் போய் விட்டதென்பது உண்மையே. பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டம், சிறு குடும்பம், பிறப்பு விகிதம் குறைந்திருத்தல் இவை அனைத்தும் சமூக ரீதியாக பெண்களின் பால் நடவடிக்கைக்குப் புதிய பின்னணியைப் படைத்திருக்கின்றன. நகரமயமாக்கல், நகர வாழ்க்கையின் முகமறியாத் தன்மை ஆகியவற்றின் விளைவாய் சமூக கண்காணிப்பின் வடிவங்கள் பலவீனமடைதல் பாலுறவு ஒழுக்கத்தின் மரபு வழிப்பட்ட வடிவங்களைச் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருக்கின்றன. பாலுறவு வாழ்க்கையில் பெண்களுடைய பாத்திரத்திலும் பெண்களுக்குரிய பாலுறவு வாழ்க்கையின் பாத்திரத்திலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. துல்லியமாக இந்நிகழ்வுகளே ஆண்கள் மற்றும்

பெண்களின் பாலுறவு நடத்தையில் புதிய சகாப்தத்தைத் தொடங்கியிருக்கின்றன; இந்த சகாப்தம் பாலுறவுப் புரட்சி என்று அழைக்கப் பட்டது.'' *

முதலாளித்துவ வளர்ச்சியில் குறிப்பிட்ட கால வட்டங்களில் பொருளாதார நெருக் கடிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இத்தகைய வளர்ச்சி இருபாலினருக்கும் இடை யிலுள்ள உறவுகளையும் பாதிக்கும் என்று எங்கெல்ஸ் முன்கூட்டியே கண்டார். வி. இ. லெனின் கிளாரா ஸெத்கினுடன் உரையாடிய பொழுது இப்பிரச்சினையைப் பற்றித் தெரி வித்த கருத்துகள் எங்கெல்ஸ் தன்னுடைய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் தெரிவித்திருக்கின்ற கருத்துகளுடன் பொருந்துகின்றன, மேலும் வி. இ. லெனின் அந்த உரையாடலில் எங் கெல்சின் நூலை நேரடியாகக் குறிப்பிட்டார் என்பது சுவாரசியமான விஷயமாகும். முதலா ளித்துவ சமுதாயத்தின் பாலுறவு ஒழுக்கத் தில் அடிப்படையான மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்று வி. இ. லெனின் அறிவித்து பின்வருமாறு கூறினார்: ''...வலிமை மிக்க அரசுகள் நொறுங்கி விழுந்து கொண் டிருக்கும் இச்சகாப்தத்தில், பழைய ஆதிக்க

---

* இ. எஸ். அந்திரேயெவா, ''பால், திருமணம், குடும்பம் ஆகியவற்றின் சமூக-தத்துவஞானப் பிரச் சினைகள்'', **வப்ரோசி ஃபிலசோபியி** (''தத்துவஞானப் பிரச்சினைகள்''), இதழ் 1, 1980, பக்கம் 138 (ருஷ்ய மொழியில்).

உறவுகள் பிய்த்தெறியப்படுகின்ற பொழுது, ஒரு மொத்த சமூக உலகமும் அழியத் தொடங்குகின்ற பொழுது தனி மனிதனுடைய புலனுணர்ச்சிகள் சீக்கிரமாக மாற்றமடைகின்றன. பல்வகையான இன்பத்தை அனுபவிக்கத் துடிக்கும் தாகம் தடுக்க முடியாத சக்தியைப் பெறுகிறது. திருமண மற்றும் பாலுறவு வடிவங்கள் — முதலாளித்துவ அர்த்தத்தில் — இனிமேல் திருப்தியளிப்பதில்லை.'' *

சமூகப் புரட்சிக்குப் பதிலாக பாலுறவுப் புரட்சியை முன்வைக்கும் முயற்சி முதலாளித்துவ சித்தாந்திகளுக்கு மட்டுமின்றி, அராஜகவாத சித்தாந்திகளுக்கும் குறியடையாளமே. இத்தகைய ''தத்துவ ரீதியான'' மாதிரிகள் மனிதனுடைய பாலுறவு மற்றும் திருமண-குடும்ப உறவுகளின் வளர்ச்சியில் நெடுங்காலத்துக்கு முந்திய கட்டங்களை நினைவூட்டுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும். உதாரணமாக, வரைமுறையற்ற பாலுறவை உயர்த்திப் போற்றி, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள உறவுகளுக்கு அது மாதிரியளவாக இருக்க வேண்டும் என்பது வர்க்கத் தன்மை இழந்தவர்களின் குணாம்சம். அவர்கள் அதை உண்மையான ''சுதந்திரக்காதல்'' என்கிறார்கள். ஆனால் அது உண்மையில் காதலை நிராகரிப்பதாகும்; விலங்குலகத்துக்கும் ஆதிக்கால மனித சமூகத்துக்கும் இடை

---

* Clara Zetkin, *My Recollections of Lenin,* Moscow, 1956, p. 63.

யிலிருந்த மாறும் கட்டத்தில் நிலவிய வரை முறையற்ற புணர்ச்சிக்குத் திரும்ப வேண்டும் என்று கூறுவதாகும்.

மேற்கு நாடுகளில் வெளியிடப்படுகின்ற பிரசுரங்களில் ''கட்டுப்பாடற்ற'' திருமணம், கம்யூனில் கோஷ்டிப் பாலுறவு ''இலட்சியங் கள்'' (அங்கே சிலர் குழந்தைகளைப் பெறு வார்கள், சிலர் குழந்தைகளை வளர்ப்பார்கள், மற்றும் சிலர் வீட்டு வேலைகளைச் செய் வார்கள், இதரவை), கணவன், மனைவி இருவருமே தமக்கு விருப்பமானவர்களுடன் பாலுறவு கொள்ளுதல், ''மனைவிகளைப் பரிமாறிக் கொள்ளும்'' திருமணம், ''முறைப் படியான'' பலதார மணம், முதலாளித்துவப் பாலுறவு ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் இதர வடிவங்கள் ஆகிய குட்டிமுதலாளி வர்க்கக் கோரிக்கைகள் விரிவாக விவாதிக்கப்படு கின்றன. புதுக் கற்காலப் புரட்சிக்கு முந்திய பூர்விகக் குழு மண முறையின் வரையளவு களை விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி யினால் உருவாக்கப்பட்ட பொருளாதார நிலைமைகளின் கீழ் கேலிச் சித்திர வடிவத்தில் மறுபதிப்புச் செய்வதை இவை அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

பெண்ணுரிமை இயக்கத்தின் இலட்சியங் கள் ஓரளவுக்கு தாய்வழி முறையைப் பற்றிய வரலாற்றுக்கு மாறான கருத்தை நினைவு படுத்துகின்றன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமத்துவத்தை நிலைநாட்டவும் மூலதனத்தின் உலகத்தில் பெண்களுக்கு எதி

ரான சமூகப் பாகுபாட்டிற்கு முடிவு கட்டுவதற்கும் நடைபெறுகின்ற ஜனநாயகப் போராட்டத்தின் சுற்றுவட்டத்துக்கு வெளியே பெண்ணுரிமை இயக்கம் நின்றால் அது அரசியல் தீவிரவாதத்தின் பிரத்யேகமான வடிவமாகும். மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த சமூகவியலாளரான எலிசபெத் தேசாய் பெண்களைப் போல் பாகுபாட்டிற்கு உட்படுத்தப்பட்ட நீக்ரோக்கள் பெண்களின் "கறுப்புச் சகோதரர்கள்" என்று எழுதுவது தற்செயலானதல்ல.* எனினும் இப்போராட்டத்தை ஆண்களுக்கு எதிராக அல்ல, முதலாளித்துவத்துக்கு எதிராக நடத்த வேண்டும். அதுதான் எல்லாத் தீமைகளுக்கும் மூலமாக இருக்கிறது; முதலாளித்துவ சமுதாயத்திலிருக்கின்ற ஆண்களும் பெண்களும் அனுபவிக்கின்ற எல்லாத் துயரங்களுக்கும் வேதனைகளுக்கும் அதுவே ஆதித் தோற்றுவாயாக இருக்கிறது. எனினும் பொதுவான ஜனநாயக இயக்கங்களுக்கும் முதலாளித்துவ சமூகத்துக்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்துக்கும் வெளியே "ஆணின வெறியை"** அம்பலப்படுத்துவது, பால் அடிப்படையில் ஒன்றுசேர வேண்டும் என்னும் அறைகூவல்கள்***, ஆண், பெண் உறவுகளில்

* Elisabeth Dessai, *Hat der Mann versagt?* Rowohlt, Hamburg, 1972.

** Michael Korda, *Male Chauvinism: How It Works,* Barrie & Jenkins, London, 1974, p. 47.

*** *Sisterhood is Powerful,* An Anthology of Writings from the Women's Liberation Movement, Vintage Books Edition, New York, 1970.

பெண்ணின் பாத்திரத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற போக்கு ஆகியவற்றிற்கு எத்தகைய அர்த்தமும் இல்லை; அவை வெற்றி யடைவதற்கு வாய்ப்பும் இல்லை. அத்த கைய பெண்ணுரிமை இயக்கம் கற்பனாவாத மாகவும் புறநிலையில் பிற்போக்குத்தனமாக வும் மாறுகிறது; ஏனென்றால் அது முதலா ளித்துவத்துக்கு எதிராகப் போராடுபவர்களின் ஒற்றுமையை அழிக்கிறது, முக்கியமான கடமை யிலிருந்து அவர்களுடைய கவனத்தைத் திருப்பு கிறது.

முதலாளித்துவ சமுதாயத்துக்குரிய மரபு வழிப்பட்ட ''ஒருதார வசதித் திருமணம்'' என்று சொல்லப்படுவது ஓரளவுக்குத் தந்தை வழி முறையை நினைவுபடுத்துகிறது; ஏனென் றால் மூலதனம் அதற்குள்ளாக எஜமான னாகிய ஆணின் தனியுரிமைகளைப் பாது காக்க முற்படுகிறது. எனினும் நாடோடியான கால்நடை வளர்ப்பு தோன்றி கொண்டிருந்த காலத்துக்கும் அதன் அடிப்படையில் கலப்பைப் பயிர்த்தொழில் தோன்றிய பண்டைக்காலத் துக்கும் நவீன சகாப்தத்துக்கும் எத்தகைய ஒட்டுறவுமில்லை. எனவே ''தந்தைவழி முறையை மறுபடியும் கொண்டு வருவதற்கு'' நவீன பழமைவாதிகள் செய்கின்ற முயற்சிகள் வர லாற்றுப் போக்கைத் திருப்புகின்ற முயற்சிகளில் ஒன்றாகும். அதே சமயத்தில் வரலாற்றுப் போக்கை செயற்கையான முறையில் துரிதப் படுத்துவதற்குத் தீவிரவாத அவசரத்துடன் செய்யப்படுகின்ற முயற்சிகள் முதலாளித்துவ

எதிர்ப்பு தன்மை கொண்டவை எனத் தோன்றி னாலும் சாராம்சத்தில் முதலாளித்துவ ஆதரவுத் தன்மை கொண்டவையாகும். சோவியத் நாட்டில் 1920க்களின் ஆரம்பத்தில் தோன்றிய ''பாலுறவுப் புரட்சிக்காரர்களின்'' ''தத்துவக்'' கருத்தோட்டங்களை கிளாரா ஸெத்கினுடன் வி. இ. லெனின் நடத்திய மேற்சொன்ன உரையாடலில் ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்தினார்.

''பாலுறவு வாழ்க்கையைப் பற்றி இளைஞர் களின் மாறிய அணுகுமுறை ''கோட்பாட்டு ரீதியானது', அது தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டிருப்பதாகவே கருதப்படுகிறது. பலர் தங்களுடைய நிலை 'புரட்சிகரமானது', 'கம்யூனிச' நிலை என்று கூறுகிறார்கள். அது உண்மை என்று அவர்கள் மனப்பூர்வ மாக நம்புகிறார்கள். ஒரு வயோதிகனா கிய என்னை, இது கவர்ச்சிக்கவில்லை. நான் சிடுசிடுப்பான சந்நியாசி அல்ல. எனினும் இளைஞர்களின் — பல சமயங்களில் பெரியவர்களின் கூட — 'புது பாலுறவு வாழ்க்கை' என்றழைக்கப்படுவது எனக்கு முற்றிலும் முதலாளி வர்க்கத் தன்மை உடையதாக, பழைய முதலாளி வர்க்க விபசார விடுதியின் மற்றொரு ரகமாகத்தான் தோன்றுகிறது. இதற் கும் கம்யூனிஸ்டுகளான நாம் புரிந்து கொள்கின்ற சுதந்திரமான காதலுக்கும் கடுகளவு ஒற் றுமை கூட இல்லை. கம்யூனிச சமுதாயத்தில் ஒருவருடைய உடற்பசியைத் தீர்ப்பதும் காத லுக்காக ஏங்குவதும் ஒரு டம்ளர் தண்ணீரைக்

குடிப்பதைப் போன்றதே என்ற பிரபலமான தத்துவத்தை நீங்கள் நிச்சயமாகக் கேட்டிருப் பீர்கள். நம்முடைய இளைஞர்கள் இந்த 'ஒரு டம்ளர் தண்ணீர்' தத்துவத்தைக் கேட்டு வெறியடைந்து விட்டார்கள், முற்றிலும் வெறியடைந்து விட்டார்கள்.... பிரபலமான 'ஒரு டம்ளர் தண்ணீர்' தத்துவத்தை நான் முற்றிலும் மார்க்சியம் அல்லாத தத்துவ மாகக் கருதுகிறேன். மேலும் அது சமூக விரோதமானது என்று நான் கருதுகிறேன். பாலுறவு வாழ்க்கையில் மனிதனுக்கு இயற் கையால் தரப்பட்டவை மட்டும் வெளியாக வில்லை, கலாசாரத்திலிருந்து பெறப்பட் டவையும் — உயர்ந்த மட்டமோ, தாழ்ந்த மட்டமோ — வெளியாகின்றன. பாலுறவுக் காதல் வளர்ச்சியடைந்து மேலும் நாகரிகமடை வது எவ்வளவு முக்கியம் என்பதை எங் கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம்** என்ற நூலில் சுட்டிக்காட் டினார்.... பாலுறவு விவகாரங்களில் அடக்க மின்மை முதலாளி வர்க்கத் தன்மையே, அது சீரழிவின் அறிகுறி.'' *

உயிரினம் என்ற முறையில் மனிதனுடைய சாராம்சத்தை இருபாலினருக்கும் இடை யிலுள்ள உறவாக மட்டுமே வகைப்படுத்த முடியாது. ஆண், பெண் உடலுறவு மனித னுடைய ஒத்திசைவான சுயவெளியீட்டில் பிரிக்க முடியாத கூறாக இருந்தபோதிலும், அவ

* Clara Zetkin, *op. cit.*, pp. 64—66.

னுடைய எல்லாத் தேவைகளையும் விருப்பார்வங்களையும் இலட்சியங்களையும் அந்தத் துறையை மட்டும் கொண்டு பூர்த்தி செய்ய முடியாது.

பரஸ்பரக் காதல், கூட்டு உழைப்பு, கணவன், மனைவிக்கு இடையிலான சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட பாட்டாளி வர்க்கத் திருமணத்தின் புதிய தன்மையைப் பற்றி எங்கெல்ஸ் முக்கியமான முடிவுகளுக்கு வந்தார். இன்று, சோஷலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கில் இவை தொடர்ச்சியாக அமுலாக்கப் படுகின்றன. எனினும் மனித உறவுகளைப் பற்றிய மிகவும் மென்மையான இத்துறையில் கடந்த கால மரபுகளின் சடத்துவம் குறிப்பிடத் தக்க அளவுக்கு வலிமையோடிருக்கிறது.

# 7. தனிச்சொத்தின் தோற்றம்

## மார்கன் மற்றும் எங்கெல்சினுடைய நூல்களில் சமூக உறவு என்ற முறையில் உடைமை

எங்கெல்சின் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலின் முக்கிய அம்சங்களில் ஒன்று ஆரம்பக் கூட்டு (குலமரபு) உடைமையிலிருந்து உற்பத்திச் சாதனங்களின் மீதான தனி உடைமைக்கு—இது மனிதனை மனிதன் சுரண்டுவதற்கும் ஒடுக்குவதற்கும் அடிப்படையாயிற்று—மனிதகுலத்தின் நியதியான மாற்றத்தை இயக்கவியல்-பொருள் முதல்வாத முறையில் விளக்குகிறது.

தனிச்சொத்து தோன்றுவதற்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, மேன்மேலும் அதிகரித்த சமூக உழைப்புப் பிரிவினை, இக்காரணிகளின் விளைவாய் பரிவர்த்தனை தீவிரமடைந்தது ஆகியவை மூலத்தோற்றுவாய்களாகும் என்று எங்கெல்ஸ் கண்டார். உற்பத்திக்கு அவசியமான சில இயற்கை முன்நிபந்தனைகள் இல்லாமலிருப்பது, அல்லது அவை தீர்ந்து போனது, அதன் காரணமாக ஏற்படுகின்ற நுகர்வுப் பொருள் பற்றாக்குறை உற்பத்தியையும் நுகர்வையும் ஒழுங்குபடுத்த வேண்டிய சமூக அவசியத்தை ஏற்படுத்தின. முதலில் பொது உடைமை வடிவங்கள்: இனக் குழு மற்றும் கூட்டுச் சமூகத்தைச் சேர்ந்த வடிவங்

கள், பின்னர் குடும்ப மற்றும் தனி உடைமை வடிவங்கள் தோன்றின.

உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சி இரட்டை நிகழ்ச்சிப் போக்கிற்கு இட்டுச் சென்றது. பரிவர்த்தனையின் பல்வேறு வடிவங்கள் தீவிரமடைதல் மூலம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய சமூக வளர்ச்சியில் ஈடுபடுகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை அது முன்னூகித்தது. அதே சமயம் உற்பத்தி மற்றும் நுகர்வின் (அதாவது வாழ்க்கைக் காப்பின்) குவிமுனையாகச் செயல்படுகின்ற பொருளாதார அலகினுடைய அளவு குறுக்கப்படுவதற்கு அது இட்டுச்சென்றது; அது தன்னளவில் பல்வேறு உற்பத்தி அலகுகளின் உடைமையைத் தனியாகப் பிரித்து வைப்பதற்கு முற்பட்டது. அதன் விளைவாக மரபு வழிப்பட்ட, சடத்தன்மை கொண்ட கூட்டுடைமை மற்றும் சுறுசுறுப்பான தனி உடைமை சமூக உற்பத்தி உறவுகளின் எதிர் ரகங்களாகச் சக வாழ்க்கை கொண்டிருந்தன.

எங்கெல்சின் முறையியல் நிலை அன்றைய முதலாளித்துவ விஞ்ஞானத்தில் ஆதிக்கம் செலுத்திய முறையியல் நிலையிலிருந்து — இப்பிரச்சினையில் மார்கனுடைய தன்னியல்பான பொருள்முதல்வாத அணுகுமுறையிலிருந்த முரணான தன்மைக்கு அதுவே காரணம் — அடிப்படையில் வேறுபட்டிருந்தது என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது அவசியம். பிரபலமான பிரெஞ்சு மார்க்சிய அறிஞர் ஜான் சுரே-கனேல் சரியாகச் சுட்டிக்காட்டியிருப்

பதைப் போல மார்கனிடம் முரணில்லாத இயக்கவியல் கருத்தமைப்பு இல்லாததனால் சமூகயதார்த்தத்தின் குணாம்சமான முரண்பாடுகளை அவரால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. *

குறிப்பாக, மார்கன் உடைமையை செல்வம் என்று இனங்காண்பதற்கு முற்படுகிறார். அவர் செல்வத்தை நுகர்வுச் சாதனங்கள், விலையுயர்ந்த பொருட்கள், பணம் ஆகியவற்றின் மொத்தம் (உற்பத்திச் சாதனங்கள் அல்ல), அறிவுத்துறை நடவடிக்கையின் விளைவு (புதிய கண்டுபிடிப்புகளின் விளைவு), மனிதனுடைய அறிவுத் திறனின் விளைவு என்று புரிந்து கொள்கிறார். எனவே கூட்டு மற்றும் தனிச் சொத்தின் சமூக-பொருளாதார எதிர்நிலை — பூர்விக கூட்டுவாழ்வு அமைப்புக்குப் பதிலாக வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் தோன்றிய பொழுது இது தீர்க்கப்பட்டது — மார்கனால் மிகையாக எளிமைப்படுத்தப்பட்டது; இந்த எதிர்நிலையை அவர் வறுமை மற்றும் செல்வம், அடக்கமான வாழ்க்கை மற்றும் அபரிமிதமான வாழ்க்கை, துறவு வாழ்க்கை மற்றும் சொகுசான வாழ்க்கை என்ற எதிர்முனைகளாக வகைப்படுத்தினார். உடைமை வளர்ச்சி கூட்டுடைமையின் பரிணாமத்தையும் அது நியதியான முறையில் தனி

* Jean Suret-Canale, "Lewis H. Morgan et l'anthropologie moderne", *La Penseé,* numéro special, "Ethnologie", No. 171 (octobre), 1973.

யுடைமையாக மாறுவதையும் — இது நாகரிகத்தின் வர்க்க முரணியல்புகளின் பொருளாதார அடிப்படை — உள்ளடக்கியிருக்கிறது. மார்கன் இந்த நிகழ்ச்சிப் போக்கை மூன்று தொடர் வரிசையான ''மரபுவழிச் சொத்துரிமை விதிகளாக'' சித்தரித்தார் (இச்சித்திரம் தத்துவ ரீதியில் ஓரளவுக்கு பலவீனமானதாகவும் அனேகமாக அணியலங்கார, உணர்ச்சி மிக்க சித்திரமாகவும் இருந்தது). இந்த விதிகள் 1) குலத்தின் மூலம், 2) திருமணத்தால் உறவினர்களாகியிருந்தோரின் குழுவின் மூலம், 3) குழந்தைகள் மற்றும் சிறு குடும்பத்தின் இதர உறுப்பினர்களின் மூலம் நிறைவேற்றப்பட்டன. மேலும் மார்கன் தனிச்சொத்தின் தோற்றம் ஏற்படுத்திய சமூக மாற்றங்களின் ஆன்மீக அம்சத்தை (செல்வத்தின் மீது பற்றுதல், லாப வேட்டை, சொகுசுப் பொருட்கள் மீது ஆசை வளர்தல், தார்மீகப் பண்பு கெடுதல், இதரவற்றை) வலியுறுத்துகிறார்.

பூர்விக சமூகத்தில் கூட்டுடைமை இருப்பது மற்றும் தகர்வதன் பொருளாதாரக் காரணங்களையும் வரலாற்று ரீதியான அவசியத்தையும் எங்கெல்ஸ் சந்தேகத்துக்கு இடமில்லாத விதத்தில் எடுத்துக்காட்டினார். முதலாளித்துவ கட்டத்துக்கு முந்திய சமூக அமைப்புகளில் மார்க்ஸ் கண்டுபிடித்த பொருளாதார விதிகள் செயல்படுவதன் தனித்தன்மைகளை அவர் பகுப்பாய்வு செய்தார். இத்துறையில் அவருடைய பகுப்பாய்வுகள் ஆழமானவை, நன்கு வாதிக்கப்பட்டு நிறுவப்பட்டவையாகும்.

இவர் ''மனிதன் — இயற்கை மற்றும் உழைப்புக் கருவிகள்'' எனும் அமைப்பில் உள்ள உற்பத்தி தொடர்புகளின் பரிணாம வளர்ச்சியையும் ''மனிதன் — மற்ற மனிதர்கள்'' எனும் அமைப்பைச் சேர்ந்த உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியில் உள்ள பாய்ச்சல்களையும் வேறுபடுத்திப் பார்த்தார். முதலில் கூறப்பட்ட உற்பத்தி தொடர்புகள் உற்பத்திச் சக்திகளின் அடிப்படையாகும்; உற்பத்திச் சாதனங்களின் சொத்துடைமை உறவுகள் இரண்டாவதாகக் கூறிய அமைப்பின் உட்கருவாகும். பொருளாதார நடவடிக்கையின் பரிணாம நிகழ்ச்சிப் போக்கில் உற்பத்திச் சக்திகளின் பல்வேறு கூறுகளின் நுகர்வு, சுவீகரிப்பு மற்றும் விநியோகத்தைப் பற்றி எங்கெல்ஸ் எழுதினார். அடிப்படையைப் பொறுத்தமட்டில், அவர் பயன்படுத்துதல், உடைமையாகப் பெற்றிருத்தல் மற்றும் செயலாட்சி உரிமை ஆகியவை உடைமை உறவுகளின் தோற்றத்தின் வடிவங்களாகவும் மட்டங்களாகவும் சுட்டிக்காட்டினார்.

எங்கெல்ஸ் காட்டுமிராண்டி நிலை, பண்பாடற்ற நிலை, நாகரிக நிலை ஆகிய காலகட்டங்களை ஒப்பிட்டு 1) பூர்விக கூட்டுவாழ்வு அமைப்பின் சுற்றுவட்டத்திற்குள் கூட்டுச்சமூக-குலமரபு உடைமை, 2) முந்திய அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்துக்கு மாறுகின்ற பொழுது தனியாகப் பிரிக்கப்பட்ட (separate) (எங்கெல்சின் சொல்) உடைமை, 3) அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவத்தின்

அடிப்படை என்ற முறையில் தனிச்சொத்து ஆகியவற்றின் தோற்றம் மற்றும் வரலாற்றுப் பரிணாமத்தை வேறுபடுத்திப் பார்க்கிறார்.

## குலமரபு உடைமை

பூர்விக சமூகத்தில் சொத்துடைமையும் உழைப்பும் பிரிக்க இயலாதவாறு ஒன்றுகலந் திருந்தன; அதே போல் ஒருவர் பால் ஒரு வருக்குள்ள மனித உறவும், இயற்கை மற்றும் உழைப்புக் கருவிகளின் பால் அதாவது சமூக உற்பத்தியின் முன்தேவைகள் (மற்றும் விளைவுகள்) மீதான உறவும் பிரிக்க இயலாத வாறு கலந்திருந்தன. இதற்கு மிகவும் தத்ரூப மான உதாரணமாக குறிப்பிட்ட காரியத் துக்கென்று தயாரிக்கப்பட்ட உழைப்புக் கருவிகள் ஆண்களின் அல்லது பெண்களின் உடைமையாக இருந்ததைச் சுட்டிக்காட்ட லாம். குலமரபு அமைப்பின் பொருளாதார அடிப்படையை ஆராய்ந்த எங்கெல்ஸ் பின்வரு மாறு எழுதினார்: ''உழைப்புப் பிரிவினை என்பது இயற்கையிலே வந்த எளிய வெளிப் பாடுதான். இது ஆண், பெண் மத்தியில் மட்டுமே இருந்தது. ஆண்கள் போர் புரிந்தார் கள், வேட்டையாடினார்கள், மீன் பிடித் தார்கள், உணவுக்குரிய மூலப்பொருட்களையும் அத்தொழில்களுக்கெல்லாம் வேண்டிய கருவி களையும் படைத்தார்கள். பெண்கள் வீட்டைக் கவனித்துக் கொண்டார்கள், உணவு சமைத் தார்கள், நெய்தார்கள், துணி தைத்தார் கள். அந்தந்தச் செயல்துறையில் அவன்

எஜமான், அவள் எஜமானி; காட்டில் ஆண், வீட்டில் பெண். அவரவர்கள் செய்த, உபயோகித்த கருவிகள் அவரவர்களுக்கே சொந்தம்; போராயுதங்கள், வில்லம்புகள், மீன் பிடிக்கும் சாதனங்கள் ஆண்களுக்கு; வீட்டுப் பொருட்கள் பெண்களுக்கு. பொதுவில் உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட்டவையெல்லாம் (வீடு, தோட்டம், நீண்ட மரக்கலம் ஆகியவை) பொதுச் சொத்தாக இருந்தன.''*

பூர்விக உடைமை உறவுகளின் ஆரம்ப நிலையில் பயன்படுத்துதல் என்பது நிர்ணயிக்கின்ற குணாம்சமாக இருந்தது; அது இயற்கைப் பொருட்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்கு அவசியமான உழைப்புக் கருவிகளின் நுகர்வுடன் நெருக்கமாக இணைந்திருந்தது. விஞ்ஞான சோஷலிசத்தின் பிரபலமான பிரெஞ்சுத் தத்துவாசிரியரும் மார்க்சின் மருமகனுமான போல் லஃபார்க் பயன்படுத்துதல் என்ற அம்சம் ''உடைமை குறித்து காட்டுமிராண்டிகள் அறிந்த, ஒரே சாத்தியமான, புரிந்து கொள்ளப்படக் கூடிய உரிமை...''** என்று சுட்டிகாட்டினார்.

உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்துகின்ற தன்மை மற்றும் உழைப்பின் விளைபொருட்களை நுகர்வு செய்கின்ற தனித்தன்மைகளையும் எங்கெல்ஸ் வலியுறுத்துகிறார்.

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 317.

** Paul Lafarque, *La propriété. Origine et évolution,* Librairie Ch. Delagrave, Paris, 1895, p. 344.

பண்டப் பொருளாதாரத்தை அறியாத பண்டைக்கால சமூகத்தில் உற்பத்தி மற்றும் நுகர்வு நிகழ்ச்சிப் போக்குகள் தொடக்கத்தில் காலத்திலும் விசும்பிலும் நெருங்கியிருப்பதை — சாராம்சத்தில் அவற்றின் நேரடியான இடை ஊடுருவலை — அவர் சுட்டிக்காட்டுகிறார். ''சமுதாயத்தின் முந்திய கட்டங்களிலெல்லாம் உற்பத்தி சாராம்சத்தில் கூட்டு முறையில் இருந்தது; அதே போல் சிறிய அல்லது பெரிய பொதுவுடைமைக் கூட்டுச் சமூகங்களுக்குள் செய்பொருட்களை நேரடியாக வினியோகிப்பதன் வழியாக நுகர்வு நடந்தது. இந்தப் பொது உற்பத்தி மிக மிகக் குறுகிய வரம்புகளுக்குள் நடந்து வந்தது; ஆனால் அதன் சக அம்சமாகவே உற்பத்தியாளர்களும் தமது உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிற்கும் செய்பொருளுக்கும் எஜமானர்களாக இருந்தனர். செய்பொருளின் கதி என்னவாயிற்று என்று அவர்களுக்குத் தெரியும்; அதை அவர்கள் அனுபவித்தார்கள், அவர்கள் கையை விட்டு அது போகவில்லை; இவ்வடிப்படையில் உற்பத்தி நடந்து கொண்டிருந்த வரை அது உற்பத்தியாளர்களின் கட்டு மீறி வளர முடியவில்லை; அதனால், நாகரிகத்தில் முறையாக, தவிர்க்க முடியாததாக நடந்து வருகிறது போல, அவர்களுக்கு எதிராக விநோதமான சக்திகளை அது தோற்றுவிக்க முடியவில்லை.'' *

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 330.

## கால்நடைகளின் மீதான தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையும் பரிவர்த்தனையின் வளர்ச்சியும்

பண்பாடற்ற காலகட்டத்தில் உடைமை உறவுகளின் மாறும் தன்மையை வரையறுக்கின்ற பொழுது எங்கெல்ஸ் ''தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை''* என்ற சொற்றொடரை உபயோகிக்கிறார். இப்படித் தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை கூட்டுடைமை மற்றும் தனி உடைமைக்கு இடையில் இருக்கிறது என்பது அவருடைய கருத்தாகும். மனிதர்கள் மத்தியில் உடைமை உறவுகளில் இந்த வடிவம் தோன்றியதை அவர் உபரி உற்பத்திப் பொருட்களுடனும் குறிப்பாக, கால்நடை மந்தைகளுடனும் இணைக்கிறார். உபரிப்பொருட்கள் நிலையாக சப்ளை செய்யப்பட்டதுதான் உற்பத்தி மற்றும் நுகர்வு என்னும் மேன்மேலும் சிக்கலாகி கொண்டிருந்த போக்கில் அவசியமான கூறாக முறையான பரிவர்த்தனை தோன்றுவதற்கு வழிவகுத்தது. ஒரு ரகத்தைச் சேர்ந்த உற்பத்தியில் உள்ள உபரியை மற்ற உற்பத்தித் துறைகள் படைக்கின்ற பொருட்களாக மாற்றுவதைப் பரிவர்த்தனை சாத்தியமாக்கிற்று; மேலும் உழைப்புச் சாதனங்கள் மற்றும் விளைபொருட்களின் மரபு வழிப்பட்ட பொது சேம இருப்பை பரிவர்த்தனை நிதியாக

---

* *Ibid.*, pp. 231, 318.

மாற்றுவதையும் அது சாத்தியமாக்கியது. பரிவர்த்தனை நிதியைச் செலவழித்தல் மேன் மேலும் குல, இனக்குழுத் தலைவர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ''ஆதியில், இனக் குழுக்களுக்கு இடையிலான பரிவர்த்தனை குலத் தலைவர்களின் மூலமாக நடந்தது. ஆனால், கால்நடை மந்தைகளைத் தனியாகப் பிரிக்கப்பட்ட சொத்தாக மாற்றத் தொடங் கிய போது தனித்தனி நபர்களிடையே பரிவர்த்தனை நடப்பது மேன்மேலும் வளர்ந்து கடைசியில் ஒரேயொரு பரிவர்த்தனை வடிவ மாக ஆகிவிட்டது. கால்நடைகளை வளர்த்த இனக்குழுக்கள் அருகில் வாழ்ந்த மக்களுட னான பண்டமாற்றத்துக்கு முக்கியமாக கால் நடைகளைத்தான் பயன்படுத்தினர். கால் நடை என்ற சரக்கே மற்றெல்லாச் சரக்கு களையும் மதிப்பிடுவதற்குரிய சரக்காக ஆயிற்று; மற்றச் சரக்குகளுக்கு மாற்றுப் பண்ட மாக எங்கும் விருப்பத்தோடு அது பெற்றுக் கொள்ளப்பட்டது — சுருங்கச் சொன் னால், பணத்தின் பணியை அது மேற் கொண்டு விட்டது, ஏற்கெனவே இந்தக் கட்டத்தில் அது பணம் மாதிரியே பயன்பட்டு வந்தது'' * என்று எங்கெல்ஸ் எழுதினார். தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை உறவு களின் தோற்றத்தில் — உரிய நிலைமைகள் இருக்கும் பொழுது அவை தனி உடைமை உறவுகளாக வளர்ச்சி அடைகின்றன — கால்

* *Ibid.*, p. 318.

நடை வளர்ப்பின் தீர்மானகரமான பாத்திரத்தைப் பற்றிய எங்கெல்சின் கருதுகோள்களை சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் உறுப்பினரான பி. பி. பியத்ரோவ்ஸ்கியின் தலைமையில் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற சோவியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவின் அகழ்வாராய்ச்சிகளின் முடிவுகள் நிரூபித்துள்ளன. *

பண்டைக்கால மனிதர்கள் மத்தியில் உற்பத்தி நடவடிக்கையின் விசேஷத் துறைகளின் வளர்ச்சியுடன் இணைக்கப்பட்ட புதிய உழைப்புப் பொருட்கள் மற்றும் கருவிகள் தனியாகப் பிரிக்கப்பட்ட சொத்துடைமையாக மாற்றமடைந்தன. உடைமையின் (சாராம்சத்தில் மாறும்) இந்த வடிவம் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் நிர்ணயிக்கப்பட்டது என்பது இதில் வெளிப்படுகிறது. அதன் விளைவாக இந்த உற்பத்திச் சக்திகள், இவற்றின் வளர்ச்சிக்கு தடையாக விளங்கிய பூர்விகக் கூட்டு வாழ்வு சமூக-பொருளாதார அமைப்பின் சமூக உறவுகளின் மீது தாக்கம் செலுத்தத் தொடங்கின.

கூட்டுடைமை உறவுகள் குலத்தில்தான் தொடர்ந்து இருந்தன; அந்தக் குலம் தற்பொழுது இனக்குழுக்களின் கூட்டாக வளர்ச்சி

---

* பி. பி. பியத்ரோவ்ஸ்கி, ‘‘வட நியூபியாவின் வரலாற்று பக்கங்கள்’’, **பண்டைய நியூபியா,** மாஸ்கோ — லெனின்கிராத், 1964, பக்கங்கள் 12 — 14 (ருஷ்ய மொழியில்) பார்க்க.

யடைந்திருந்தது. மறு பக்கத்தில், மேன் மேலும் அதிகரிக்கின்ற உற்பத்திச் சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் மீதான உடைமை தனியாகப் பிரிக்கப்படும் போக்கு பிரதானமாக கூட்டுச் சமூகத்திற்குள்ளாகவே வளர்ச்சியடைந்தது; குலத்தில் ஏற்பட்டதற்கு எதிரான பரிணாமத்தைக் கூட்டுச் சமூகம் அடைந்தது; அது பெரிய குடும்பங்களாக (இவற்றை குடும்பக் கூட்டுச் சமூகங்கள் என்றும் கூறுவதுண்டு), பின்னர் சிறிய குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டது; இவை நெடுங்காலம் வரையிலும் பரஸ்பர உதவி, உழைப்பு ஒற்றுமை என்னும் மரபினால் இன்னும் பிணைக்கப் பட்டிருந்தன.

குலப் போக்கிற்கும் கூட்டுச் சமூக வாழ்க்கைப் போக்கிற்கும் இடையில் தவிர்க்க முடியாத மோதல் எழுந்த பொழுது பிந்தைய போக்கு வெற்றியடைந்தது. எங்கெல்ஸ் இதை மணிச்சுருக்கமாகக் குறிப்பிட்டார்: ‘‘மார்க் சமூகத்தில் குலம் புகுந்து மறைந்து விட்டது’’.* இயற்கையாக உருவாகியுள்ள இரத்த உறவுகள் — சமூக உற்பத்தியின் அளவும் பன்முகத் தன்மையும் பயன்தன்மையும் வளர்ச்சியடைந்த போது — ஒரு காலத்தில் முழுமையாக இருந்த குலமரபு அமைப்பிலிருந்து உடைமை மற்றும் ஆட்சியதிகார புதிய உறவுகள் பிரிந்து போகும் நிகழ்ச்சிப் போக்கின்

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 311.

முன் இடம் விட்டு ஒதுங்கின. ஆதியில் எல்லாவற்றையும் தழுவியிருந்த இரத்த உறவு முறை அமைப்பிலிருந்து இடைநிலை ரகத்தைச் சேர்ந்த அடிப்படை மற்றும் மேற்கட்டுமானம் படிப்படியாக வெளிப்பட்டன. மேலும் பல அம்சங்களில் இதே இரத்த உறவுகள், தற்பொழுது இரத்த உறவுமுறை அமைப்புக்கு வெளியில் உருப்பெற்றிருந்த சமூக கண்காணிப்பு மற்றும் தூண்டுதல் பற்றிய பொறியமைவுகளினால் நிர்ணயிக்கப்பட்டன. அத்தகைய பொறியமைவுகளில் ஒன்றுதான் பரிவர்த்தனை.

பரிவர்த்தனையானது, உடைமை தனியாகப் பிரிக்கப்படுவதற்கு இட்டுச் செல்ல முற்பட்டது. அதன் எல்லைக்குள் வந்த ஒவ்வொன்றுமே கூட்டாக செயலாட்சி புரிதல், உடைமையாகப் பெற்றிருத்தல், பயன்படுத்துதல் என்னும் தொடக்க உறவுகளிலிருந்து பிரிந்து போகும் ஆபத்தைச் சந்தித்தது. பரிவர்த்தனை என்பது பயன் மதிப்புகளைத் தாங்கிச் செயல்படுகின்ற பொருளின் மீதான உடைமை மாற்றம் என்று அரசியல் பொருளாதாரம் கூறுகிறது. உற்பத்திச் சக்திகளின் துறையில் பரிவர்த்தனை இயற்கைப் பொருட்கள் மற்றும் சமூக உழைப்பின் விளைபொருட்கள் அந்நியமாக்கப்படுவதை முன்னூகிக்கிறது.

ஏதோ உடைமையாகப் பெற்றிருத்தல் என்பது இச்சொத்துடைமையின் நுகர்வு குணாம்சங்களைப் பயன் படுத்துகின்ற நீண்டகால (அல்லது ஒத்திப் போடப்பட்ட அல்லது பரிவர்த்தனை

நிகழ்ச்சிப் போக்கில் மாற்றியமைக்கப்பட்ட) சாத்தியம் என்ற முறையில் தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை உறவுகளின் குவி முனையாக விளங்கியது. உழைப்பின் சமூகப் பிரிவினை அதிகரிப்புடன் உடைமையாகக் கொண்டுள்ள பொருட்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. நிலத்தின் மீது தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையின் தோற்றத்தையும் பரிணாமத்தையும் விளக்குவதற்கு எங்கெல்ஸ் கருங்கடற்கரைக்கு அருகிலுள்ள ஸ்டெப்பிப் பிரதேசங்களில் பனிக்காலத்திற்குக் கால்நடைத் தீவனம் (குறிப்பாக, தானியம்) சேமிக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளான கால்நடை வளர்ப்பவர்களின் உதாரணத்தைச் சுட்டிக் காட்டுகிறார். ''முதலில் கால்நடைக்காகத் தான் தானியம் பயிரிடப்பட்டது, ஆனால் விரைவில் அது மனிதனுக்கும் உணவு ஆயிற்று. பயிர் செய்த நிலம் இனக்குழுவின் உடைமையாகவே இன்னும் இருந்து வந்தது; அது முதலில் உபயோகத்திற்காக குலத்துக்குத் தரப்பட்டது, பின்னால், அந்தக் குலம் தன் பங்கிற்கு அதைக் குடும்பக் கூட்டுச் சமூகங்களிடையே உபயோகத்திற்காக வினியோகம் செய்தது, கடைசியில் தனிநபர்களுக்கு வினியோகம் செய்தது; இவர்களுக்கு அதன் மீது சில உடைமை உரிமைகள் இருந்திருக்கலாம், அதற்கு மேலில்லை.'' *

கால்நடை மீது தனியாகப் பிரிக்கப்பட்ட

---

* *Ibid.*, p. 318.

உடைமையின் தோற்றமும் வளர்ச்சியும் அதிகமான வேகத்துடனும் சுலபமாகவும் நடைபெற்றது போல் தெரிகிறது. ''கால்நடை மந்தைகள் இனக்குழுவின் அல்லது குலத்தின் பொதுச் சொத்தாயிருந்தது போய்த் தனிப்பட்ட குடும்பத் தலைவர்களின் சொத்தாக எப்படி, எப்போது மாற்றப்பட்டன என்பது இன்றுவரை நமக்குத் தெரியாது. ஆனால், மொத்தத்தில், அது இந்தக் கட்டத்தில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும். மந்தைகளும் இதர புதிய செல்வங்களும் குடும்பத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கின.... உற்பத்தியிலிருந்து இப்போது கிடைத்த உபரி எல்லாம் ஆணுக்குரியதாயிற்று; அதை நுகர்வதில்தான் பெண் பங்கு கொண்டாள், ஆனால் அதன் உடைமையில் அவளுக்குப் பங்கில்லை. 'காட்டுமிராண்டித்தனமான' போர்வீரனும் வேட்டைக்காரனும் வீட்டில் இரண்டாம் ஸ்தானத்தை வகித்துப் பெண்ணுக்கு முதலிடம் தருவதில் திருப்தியடைந்திருந்தார்கள். 'மென்மையடைந்த' ஆட்டிடையனோ, தனது செல்வத்தைக் காட்டி, முதலிடத்தை முண்டியடித்துப் பிடித்துக் கொண்டு பெண்ணை இரண்டாம் ஸ்தானத்துக்குத் தள்ளி விட்டான். அவளால் புகார் செய்யவும் முடியவில்லை. குடும்பத்தில் இருந்த உழைப்புப் பிரிவினை கணவன், மனைவிக்கிடையே சொத்து வினியோகித்ததை நிர்ணயித்திருந்தது. இந்த உழைப்புப் பிரிவினை மாறாமலேதானிருந்தது; என்றாலும் இது முந்தியக் குடும்ப

உறவுமுறையைத் தலைகீழாக்கி விட்டது; காரணம், குடும்பத்துக்கு வெளியே இருந்த உழைப்புப் பிரிவினை மாறி விட்டதுதான்'' * என்று எங்கெல்ஸ் எழுதுகிறார். சமூக உற்பத்தி உடனடியான நுகர்வுப் பொருட்களைத் தயாரிப்பதைக் காட்டிலும் சந்தைக்கு உற்பத்தி செய்வதை நோக்கி மேன்மேலும் முடுக்கி விடப்பட்டது. அதன் பண்ட வளம் அதிகரித்தது கணிசமான சமூக விளைவுகளைக் கொண்டிருந்தது. எங்கெல்ஸ் சொன்னபடி ''இது பழைய குலமரபு அமைப்பில் பிளவு உண்டாக்கியது; தனிப்பட்ட குடும்பம் ஒரு சக்தியாகிக் குலத்திற்கு எதிராக அபாயகரமாகக் கிளம்பியது''. ** தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையின் தோற்றமும் அதன் துரிதமான வளர்ச்சியும் தாய்வழிக் குலத்திலிருந்து தந்தைவழிக் குடும்பத்திற்கு நடைபெற்ற மாற்றத்துக்குப் பொருளாதார முன்நிபந்தனை ஆயிற்று. தாயுரிமை இரத்த உறவுமுறை அமைப்பு, கூட்டுச் சமூகத்துக்குள் தோன்றி அதற்கு வெளியே போய் கொண்டிருந்த தனிச்சொத்தின் தாக்கத்தில் சிதைவுறத் தொடங்கியது. உற்பத்தியாளனையும் நுகர்பவனையும் பிரித்த பரிவர்த்தனை இந்த நிகழ்ச்சிப் போக்கைத் தூண்டியது. கால்நடை வளர்ப்பின் அடிப்படையில் பரிவர்த்தனையும் தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையும் மிகச் சுறுசுறுப்பாக வளர்ச்சியடைந்தன. புறச்சூழல் மற்றும் இதர

* *Ibid.*, p. 319.

** *Ibid.*, p. 320.

காரணிகளால் கால்நடை வளர்ப்பு பரவலாக இல்லாத, பயிர்த்தொழில் வெறும் களைக் கொட்டு நிலையில் நின்று விட்ட இடங்களில் (கொலம்பஸ் வருவதற்கு முந்திய அமெரிக்கா, வெப்ப மண்டல ஆப்பிரிக்கா, இதர பிரதேசங்களின் சுயமான நாகரிகங்கள்) குலமரபு அமைப்பின் சிதைவு பிந்திய தாய் வழி முறை என்ற வடிவத்தில் நடைபெற்றது.

எனினும் உடைமை தனியாகப் பிரிக்கப் படும் போக்கு, கூட்டு வாழ்க்கைக் கோட் பாட்டுக்கும் தனியுடைமைக் கோட்பாட் டுக்கும் (பண்ட உற்பத்தி இக்கோட்பாட்டை அறிமுகம் செய்து தூண்டியது) இடையில் கடுமையான போராட்டம் ஆகியவற்றைப் பயிர்த்தொழில், விவசாயக் கூட்டுச் சமூகங் களில் மிகவும் தத்ரூபமாகக் காண முடியும். இக்கூட்டுச் சமூகம் பழமைப் போக்குடைய, ஆனால் அதே சமயத்தில் வரலாற்று ரீதியில் ஓரளவு சுறுசுறுப்பான சமூக அமைப்பு; பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்துக்கு மாறும் சகாப்தத்திற்கு அது உரித்தானது.

ஆகவே தனியுடைமை உறவுமுறை உரு வாகுதல், பூர்விக சமூகத்துக்குரிய பொரு ளாதார வாழ்க்கையின் ஸ்தல மையம், குவிமுனை மற்றும் ஆரம்ப அலகு என்ற முறையில் அந்தக் கூட்டுச் சமூகத்தின் வளர்ச்சி யுடன் இணைந்திருக்கிறது.* இறுதி நிலை

---

* *Ibid.*, pp. 218, 311.

யில் கூட்டுச் சமூகத்தின் வளர்ச்சி குறிப்பிட்ட புறச்சூழல் மற்றும் மக்கள்தொகை நிலைமைகளில் உருவாகின்ற உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை ரகத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது.

அந்தக் கூட்டுச் சமூகத்திற்குள் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் உற்பத்தி உறவுகளுக்கு நேரடி எதிர்ப்பாக உள்ள புதிய, முரணியல் உற்பத்தி உறவுகள் முதிர்ச்சியடைகின்றன. அவற்றுக்கு இடையில் எழுந்த போராட்டம் கூட்டு வாழ்க்கை மரபுகளை அசைத்து, காலப் போக்கில் அவற்றை அழித்து விட்டது; அதன் மூலம் உடைமை வகைவேறுபடுத்தல் மற்றும் வர்க்க முரணியல்புகளுக்கு வழி திறந்து விடப்பட்டது. கூட்டுச் சமூகமோ குல வகையிலிருந்து பல கட்டங்கள் மற்றும் இடைநிலை வடிவங்களின் வழியாகப் பிரதேச, விவசாயக் கூட்டுச் சமூகமாக வளர்ச்சியடைகிறது; அது குறிப்பிட்ட சமூகத்திலுள்ள முரணியல்புகளை சுவீகரித்துக் கொள்கிறது.

முதலில் வருடந்தோறும் நடைபெற்ற பொது நிலத்தின் (தரிசு நிலம் மற்றும் களர் நிலத்தைப் பயிரிடுவதன் தொடர்பாக) மறு வினியோகம் தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையின் யதார்த்த வடிவமாக இருந்தது; பிறகு தனிப்பட்ட (பெரிய மற்றும் சிறிய அளவிலான) குடும்பங்கள் விவசாயம் செய்த பொது நிலங்களின் மறு வினியோகம் வருடந்தோறும் நடைபெறுவதற்குப் பதிலாகப்

படிப்படியாகக் குறைந்து விட்டது. ம. ம. கவலேவ்ஸ்கி எழுதிய **கூட்டு நிலவுடைமை, அது சிதைவுற்றதன் காரணங்கள், நிகழ்ச்சிப் போக்கு மற்றும் விளைவுகள்** என்னும் நூலைப் பற்றி மார்க்ஸ் எழுதிய விரிவான குறிப்புகளில் நிலத்தின் மறு வினியோகத்தின் வரலாற்றுப் பரிணாமத்தில் மிகவும் சுவாரசியமான அம்சம் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை தனியுடைமையாக வளர்ச்சியடைவதற்குரிய உள்ளீடான முன்நிபந்தனைகளின் தோற்றத்துடன் அது பொருந்தியிருந்தது. வெவ்வேறு வகையான ஒதுக்கீடுகளுக்கு சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு நிலத்தை மறு வினியோகம் செய்வதற்கு முன்னர் வயல்கள் முறையாக மாற்றிக் கொள்ளப்பட்ட வழக்கம் இருந்தது. தோட்ட நிலப் பகுதிகள் மட்டுமின்றி அவற்றில் கட்டப்பட்டிருந்த வீடுகளும் கூட முறையாக மாற்றிக் கொள்ளப்பட்ட மிகவும் தொன்மையான வழக்கம் இதற்கு ஆதியாக இருந்தது என்பதை மார்க்ஸ் கண்டுபிடித்தார். பஞ்சாபில் ஓர் இடத்தை விட்டுப் போவதற்கு முன்னர் அந்த இடத்தின் மீது கட்டப்பட்டிருந்த வீடுகளையும் இதர கட்டிடங்களையும் இடித்து விடுகின்ற பழக்கம் காணப்பட்டது. நிலவுடைமை உறவுமுறையின் இந்த வடிவம் புதிய சமூக-பொருளாதார உறவுகளுடன் இனியும் பொருந்தவில்லை என்பதை இந்த விவரம் எடுத்துக்காட்டுகிறது. *

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், **நூல் திரட்டு,**

## நிலத்தின் மீதான தனியுடைமையின் தோற்றம், பணம் மற்றும் அடைமானம்

ஜெர்மன் பிரதேசத்தில் 2,000 வருடங்களுக்கும் அதிகமான காலத்தில் நில மறுவினியோகத்தின் தன்மையை ஆராய்ந்த பிறகு தனியாகப் பிரிக்கப்பட்ட சொத்து தனியுடைமையாக மாற்றமடைந்த தொடர்வரிசையான கட்டங்களை எங்கெல்ஸ் கண்டுபிடித்தார். **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலில் இப்பொருள் மேலோட்டமாகவே ஆராயப்படுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், மார்கனுடைய புத்தகத்தையும் அதைப் பற்றிய மார்க்சினுடைய குறிப்புகளையும் படிப்பதற்கு முன்பு எங்கெல்ஸ் ஜெர்மன் விவசாயிகளுக்காக எழுதப்பட்ட **மார்க்** என்ற பிரசுரத்தை வெளியிட்டார். அது தனிப் பிரசுரமாகவும் **கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்** என்னும் நூலின் பிற்சேர்க்கையாகவும் எங்கெல்சின் வாழ்நாளில் நான்கு தடவை மறுபதிப்புச் செய்யப்பட்டது.

எங்கெல்ஸ் நிலத்தின் மீதான தனியுடைமையின் தோற்றத்தை ஆராய்ந்த பொழுது நேரடியான உழைப்புப் பிரிவினை மற்றும் உழைப்பின் விளைபொருட்களின் பரிவர்த்தனையைச் சுருக்கமாக மட்டுமே பார்த்தார்

---

தொகுதி 45, பக்கங்கள் 166, 167, 172, 175 (ருஷ்ய மொழியில்).

என்பது குறிப்பிடத் தக்கது. அவர் பிரதான மாக, நாடோடிக் கால்நடை வளர்ப்பிலிருந்து நிலையான பயிர்த்தொழிலை நோக்கிய மாற்றத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார்; அது தவிர, உற்பத்திச் சாதனங்களின் மீது தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையின் வளர்ச்சிக்கும் அவற்றில் அடங்கியிருந்த பொருண்மைப்படுத்தப்பட்ட உழைப்புக்கும் இடையில் நியதியான இணைப்பை அவர் தெளிவாக வெளிப்படுத்தினார்.

''தனி நபர்களின் தனியுடைமைக்கு மாறிய முதல் துண்டு நிலம் வீடு கட்டப்பட்டிருந்த நிலமாகும். வீட்டுக்குள் அத்து மீறி நுழையக் கூடாது என்பது தனிப்பட்ட சுதந்திரங்கள் அனைத்துக்கும் அடிப்படையாகும். அது நாடோடிக் கூட்டத்தினருடைய கூடாரங்களிலிருந்து ஓரிடத்தில் நிலையாக வசிக்கின்ற விவசாயியின் மரப் பலகை வீட்டுக்கு மாற்றப்பட்டுப் படிப்படியாக மனையிடத்தின் மீதான முழுமையான சொத்துடைமையாக மாற்றமடைந்தது. இது ஏற்கெனவே தாசிட்டசின் காலத்திலேயே நடைமுறைக்கு வந்து விட்டது. அனேகமாக அக்காலத்திலேயே சுதந்திர ஜெர்மானியரின் மனையிடம் மார்க்கிலிருந்து விலக்கப்பட்டு, ஆகவே மார்க்கின் அதிகாரிகள் நுழைய முடியாத இடமாக, சட்டத்திலிருந்து தப்பி வந்தவர்களுக்குப் பாதுகாப்பான இடமாக மாறி விட்டது.... ஏனென்றால் மனையிடத்தின் புனிதம் அது தனியுடைமையாக மாறியதன் விளைவு அல்ல,

மாறாக அதற்குக் காரணமாக இருந்தது.'' *

மனையிடத்தைத் தொடர்ந்து விளை நிலமும் தனிப்பட்ட குடும்பங்கள் மற்றும் தனிநபர்களின் உடைமைக்கு போய்ச் சேரத் தொடங்கியது; இதிலும் இந்த நிகழ்ச்சிப் போக்கு மிக மோசமான புறச்சூழல் உள்ள பிரதேசங்களில் மிகவும் வெளிப்படையாக நடைபெற்றது. குறுகலான பள்ளத்தாக்கு களிலும் சதுப்பு நிலப் பிரதேசங்களிலும் உயர மான மேட்டுப் பகுதிகளிலும் நிலத்தின் தன் மையும் நிலத்தை விவசாயம் செய்வதற்குப் பண்படுத்த விசேஷமான பொருளாயத மற்றும் உழைப்பு முயற்சிகள் அவசியமாக இருந்ததும் தனிப்பட்ட குடும்பங்களுக்கு மரபு வழிப்பட்ட உடைமை உரிமையை முற்றிலும் வழங்கு வதற்கு வழிவகுத்தன.

மார்க்கின் (எந்த பயிர்த்தொழில் கூட்டுச் சமூகத்தைப் போல்) கடைசிப் பாதுகாப்பாக காடுகள், மேய்ச்சல் நிலங்கள், களர் நிலம், சதுப்பு நிலம், ஆறுகள், குளங்கள், ஏரிகள், சாலைகள் மற்றும் வேட்டையாடுகின்ற, மீன் பிடிக்கின்ற பிரதேசங்கள் இருந்தன; இவை அனைத்தும் பொது உபயோகத்திற்கு உட்பட்டிருந்தன. எனினும், இவை கூட படிப்படியாகத் தனிப்பட்ட குடும்பங்களின் உடைமையாக மாறின. நிலப்பிரபுத்துவ சகாப்

* Marx, Engels, *Pre-Capitalist Socio-Economic Formations,* Progress Publishers, Moscow, 1979, pp. 277—278.

தத்தின் போது கணிசமாக முன்னேற்ற மடைந்த இந்த நிகழ்ச்சிப் போக்கு — பிற்காலத் தில் முதலாளித்துவ உறவுகளின் தாக்கம் ஏற்பட்ட பொழுது — மார்க் கூட்டுச் சமூகத்தை வீழ்ச்சியின் விளிம்புக்குக் கொண்டு வந்தது.

ஆகவே நிலத்தின் மீதான தனியுடைமை வளர்ச்சியின் கட்டங்கள் குலக் கூட்டுச் சமூகத்திலிருந்து குடும்பக் கூட்டுச் சமூகத் துக்கு, பிறகு கிராமப்புறக் கூட்டுச் சமூகத் துக்கு மாறி அந்தக் கூட்டுச் சமூகம் ஒரு பக்கத்தில் செல்வந்தர்களாகவும் மறு பக்கத்தில் நிலம் அல்லாத ஏழைகளாகவும் பிரிந்த கட்டங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டிருக்கின்றன, சாராம்சத்தில் பொருந்தி யிருக்கின்றன. ஒரு காலத்தில் சுதந்திரமாக இருந்த மார்க் கூட்டுச் சமூகங்கள் ''விவசாய உடைமையாளர்களைக் கொண்ட கிராமங் களாக''* மாறின.

**குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் நிலத்தின் மீதான தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை தனியுடை மையாக மாறிய பிரச்சினைக்கு மறுபடியும் திரும்புகின்ற எங்கெல்ஸ் பரிகாசத்துடன் பின்வருமாறு எழுதுகிறார்: ''ரோமானியர் களைத் தமது சொந்த அரசிலிருந்து விடுதலை செய்வதற்குப் பிரதியாக ஜெர்மன் பண் பாடற்றவர்கள் அவர்களின் மொத்த நிலத்தில்

* *Ibid.*, p. 277.

மூன்றில் இரண்டு பங்கைத் தமதாக்கிக் கொண்டு தம்மிடையே பங்கு போட்டுக் கொண்டார்கள்.'' * இப்பங்கீடு கண்டிப்பாக குல அமைப்பின் விதிகளுக்கேற்ப நிறை வேற்றப்பட்டது என்று எங்கெல்ஸ் சுட்டிக் காட்டுகிறார். இது பின்வருவதைக் குறிக்கிறது: ''ஒவ்வொரு குலத்திலும் விளை நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் தனித்தனிக் குடும்பங் களிடையே சீட்டுக் குலுக்கிப் போட்டு சம பங்குகளாக வினியோகிக்கப்பட்டன. பின்னர் அடிக்கடி மறுபங்கீடுகள் நடந்தனவா என்பது நமக்குத் தெரியாது. எப்படியாயினும், ரோமானிய மாகாணங்களில் இந்த நடை முறை விரைவில் கைவிடப்பட்டது; தனிப்பட்ட நிலப் பகுதிகள் அந்நியமாக்கப்பட்ட தனிச் சொத்தாக, அதாவது அலோடியமாக ஆயின. காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் பொது உபயோகத்துக்கெனப் பிரிக்கப்படாமலே இருந்து வந்தன; இவற்றை உபயோகிப்பதையும் பங்கிட்டு கொள்ளப்பட்ட நிலத்தில் சாகுபடி செய்யும் முறையையும் பண்டைய மரபும் கூட்டுச் சமூகம் முழுவதன் தீர்மானங்களும் நியமப்படுத்தி வந்தன.'' **

கொள்கையளவில் நிலத்தின் மீதான கூட்டுச் சமூக உடைமை தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையாக மாற்றப்படுவது ''மேலே

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 311.

** *Ibid.*

யிருந்தும்'' நடைபெறலாம், ''கீழேயிருந்தும்'' நடைபெறலாம். இந்த நிகழ்ச்சிப் போக்கு இரண்டு திசைவழிகளில் வளர்ச்சி அடைய முடியும் என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார். வரலாற்று ரீதியில் அது அரசு உடைமையாக மாற்றப்படுவது முந்திய வடிவம் எனத் தோன்றும். ரோமானிய *ager publicus* இப்படிப்பட்டது; ''அதைச் சுற்றி குடியரசின் மொத்த உள்நாட்டு வரலாறும் சுழன்றது''* என்று எங்கெல்ஸ் எழுதினார். அதற்குப் பிறகு தனியுடைமை நிலங்கள் தீவுகளைப் போலத் தலைகாட்டின. அரசு உடைமை கூட்டுக் சமூக உடைமைக்கு மேலே உயர்ந்து நின்றது. அதன் முதல் வரலாற்று ரீதியான விளைவு என்று கிழக்கத்திய எதேச்சாதிகார அரசின் ரகத்தைச் சேர்ந்த தலைமையான அதிகாரத்தின் தோற்றத்தைக் குறிப்பிடலாம். அது கூட்டுச் சமூகங்களின் அமைப்பைப் பாதுகாத்தது. இதற்கு மாறாக, தனியுடைமை கூட்டுச் சமூகம் சிதைவுற்றதன் விளைபொருளாகவும் சாதனமாகவும் இருந்தது. தனியுடைமைக்கும் விவசாயக் கூட்டுச் சமூகத்துக்கும் இடையில் நடைபெற்ற இப்போராட்டத்தைச் சுற்றி, சீர்திருத்தத்துக்குப் பிந்தைய ருஷ்யாவின் உள்நாட்டு வரலாறு முழுவதும் சுழன்றது என்று எங்கெல்சின் சொற்றொடரை பயன்படுத்தி கூறலாம். இது வெப்ப மண்டல ஆப்பிரிக்காவில் உள்ள பல நாடுகளுக்கும்

* *Ibid.*, p. 286.

வளர்முக உலகத்தின் மற்ற பிரதேசங்களுக்கும் பெருமளவுக்கு உண்மையாக இருக்கிறது.

உற்பத்திச் சாதனங்களையும் உழைப்பின் விளைபொருட்களையும் விருப்பப்படி கையாளுகின்ற உரிமையே முதிர்ச்சியடைந்த தனியுடைமையின் சாராம்சம். இது மேன்மேலும் பரிவர்த்தனையின் வடிவத்தை அடைந்தது. பரிவர்த்தனை படிப்படியாக, காலத்திலும் விசும்பிலும் தனித்தனியான இரண்டு நடவடிக்கைகளாக, அன்னியப்படுதல் மற்றும் சுவீகரிப்பு, விற்பனை மற்றும் வாங்குதல் என்று பிரிந்தது.

எங்கெல்ஸ் உலோகப் பணத்தை, குறிப்பாக அச்சுப்பதிக்கப்பெற்ற நாணயத்தைப் பற்றி ''உற்பத்தியில் ஈடுபடாதவன் உற்பத்தியாளன் மீதும் அவனுடைய செய்பொருட்களின் மீதும் ஆட்சி செலுத்துவதற்கு ஒரு புதிய சாதனம்''* என்று கருதினார். ஒழுங்குபடுத்தப்படாத பரிவர்த்தனை வர்த்தகம் ஆயிற்று; அது பணம் என்ற ஊடகத்தின் மூலம் நடைபெற்ற முறையான பரிவர்த்தனையைக் கொண்ட விசேஷமான நடவடிக்கை; உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு உற்பத்திக்கு அப்பால், எல்லாவற்றுக்கும் மேலாக நுகர்வுத் துறைக்குள் விரிவடைவதை அது பிரதிநிதித்துவம் செய்தது. அதன் விளைவாக, ''உண்மையான சமுதாய சோம்பேறிகள்'' — வர்த்தகர்கள்** என்னும் புல்லுருவி வர்க்கம் தோன்றியது.

---

* *Ibid.*, p. 323.

** *Ibid.*

சமூக உறவுகளில் ஆழமான மாற்றங்களுடன் சேர்ந்து வர்த்தகத் துறையிலும் எல்லா உடைமை உறவுகளிலும் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. ''சரக்குகளுக்கெல்லாம் சரக்கு, மற்ற சரக்குகளையெல்லாம் தன்னுள் மறைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சரக்கு கண்டுபிடிக்கப்பட்டு விட்டது; விரும்பத் தக்க எந்தப் பொருளாகவும் தேவைப்படுகின்ற எந்தப் பொருளாகவும் தன்னை உருமாற்றிக் கொள்ளும் தாயத்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது''* என்று எங்கெல்ஸ் எழுதுகிறார். கடன், கடுவட்டி முறை, அடைமானம் — நிலத்தைப் பிணையாக வைக்கின்ற கடன் — ஆகியவை பணத்தின் கடும் நிழலாக மாறி விட்டன. முடிவில், குலத்தின் முன்னாள் உறுப்பினர் மற்றும் கூட்டுச் சமூக வாழ்க்கை நிலவுடைமையாளர் கணிசமான வாரம் கொடுத்தால் அல்லது தனிப்பட்ட ஊழியம் புரிவதாகத் தன்னைப் பிணைத்துக் கொண்டால் மட்டுமே நிலத்தைப் பயன்படுத்த முடியும். ''நிலம் குலத்துக்குச் சொந்தமாக இருந்து வந்த வரை அப்படிப்பட்ட சாத்தியப்பாடு இருக்கவில்லை. ஆனால், புதிய நிலச்சொந்தக்காரன் குலத்தின், இனக்குழுவின் தலையாய உடைமையின் விலங்குகளை உதறியெறிந்து விட்ட பிறகு அதோடு தன்னை நிலத்துடன் இதுவரை பிரிக்க முடியாதபடி பிணைத்து வைத்திருந்த பந்தத்தையும் அவன்

---

* *Ibid.*

அறுத்து விட்டான்''* என்று எங்கெல்ஸ் எழுதினார்.

தனியுடைமை உறவுகளின் சிகரம் என்று சொல்லப்படும் செயலாட்சி உரிமையின் உச்ச நிலையே உயில் என்னும் சமூக உறவுமுறை. அதன்படி உடைமையாளர், அவருடைய உடைமை, அதாவது நிலம், கால்நடை, அடிமைகள், சொகுசுப் பொருட்கள், கட்டிடங்கள், பணம், இதரவை தன் மரணத்துக்குப் பிறகு தன்னுடைய வாரிசுகளுக்கு, வழக்கமாகக் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று தன்னுடைய வாழ்நாளிலே நிர்ணயித்தார். ஜெர்மானியர்கள் மத்தியில் உடைமை திருச்சபைக்கும் கொடுக்கப்பட்டது. காலப் போக்கில் திருச்சபை மிகப் பெரிய வாரிசு என்னும் நிலை ஏற்பட்டது. திருச்சபை (சுயநலம் இல்லை என்று சொல்ல முடியாது) வாரிசுரிமை முறையை சுறுசுறுப்பாக ஆதரித்தது.** தனியுடைமை சமூக உறவுகளுக்குள் மேன்மேலும் ஆழமாகவும் உறுதியாகவும் ஊடுருவி, அவற்றின் தன்மையைத் அடிப்படையாக மாற்றியது.

இவ்வாறாக, தனியுடைமை உறவுமுறைகள் உருவாகும் நிகழ்ச்சிப் போக்கில் பயன்படுத்துதல், உடைமையாகப் பெற்றிருத்தல், செயலாட்சி உரிமை ஆகிய உறவுகள் வரலாற்று ரீதியில் உருவெடுத்தன. பயன்படுத்துதல்

---

* *Ibid.*, p. 324.

** *Ibid.*, p. 332.

என்பது உற்பத்தியின் முன்நிபந்தனைகளை நுகர்வதைக் குறிக்கிறது. எதோ உடைமை யாகப் பெற்றிருத்தல் என்பது ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட காலத்துக்கு உபயோகிப்பதற்கான சமூக உத்தரவாதத்தை முன்னூகிக்கிறது. செயலாட்சி உரிமை அல்லது முழு உடைமை என்பது அந்த உடைமைக்குரிய பொருளை அன்னிய மாக்குவது உட்பட அதன் கதியை முடிவு செய்கின்ற உரிமை சம்பந்தமான உறவாகும்.

தனியுடைமையின் இம்மூன்று அம்சங்களும், மாறும் கட்டத்தில், சமூகத்தின் வெவ்வேறு மட்டங்களில் படிப்படியாக உருவெடுத்தன என்று எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். ''பூர்ணமான, சுதந்திரமான நிலவுடைமை என்பதற்கு'' மட்டுமே ''கட்டுத்தளை எதுவுமில்லாத, வில்லங்கம் எதுவுமில்லாத உடைமை சாத்தியம் என்ற பொருள் மட்டுமல்ல, அதை அன்னியமாக்குவதற்குள்ள உரிமை என்ற பொருளும் இருக்கும்.'' *

இவ்வாறாக, வரலாற்று ரீதியில் தனியுடைமை, பரிவர்த்தனையும் வர்த்தகமும் வளர்ச்சி அடைந்த போக்கில், யுத்தக் கொள்ளை உட்படப் பொது நிதியிலிருந்து (இன்ஷூரன்ஸ், வழிபாட்டு நிதி போன்றவற்றிலிருந்து) வளர்ச்சி யடைந்தது. இப்புதிய ரகத்தைச் சேர்ந்த உடைமையின் முதல் இலக்காக இயங்குடைமை, அதாவது சுலபமாக எடுத்துச் செல்லப் பட்ட, அன்னியமாக்கப்பட்ட உடைமை

* *Ibid.*, p. 324.

இருந்தது; முதலில் கால்நடை, பிறகு ஆயுதங்கள் மற்றும் உழைப்புக் கருவிகள், சொகுசுப் பொருட்கள், அடிமைகள் ஆகியவை இயங்குடைமையாக இருந்தன. அதன் பிறகு வீடு, தோட்டம் (மனையிடம்) ஆகியவையும் தனியுடைமைப் பொருட்களாயின. இம்மாறும் கட்டத்தில் உடைமையில் இரட்டைத் தன்மை இருந்தது; அதாவது இயங்குடைமை ஏற்கெனவே தனிச்சொத்தாக இருந்தது, ஆனால் இயங்கா உடைமை (எல்லாவற்றுக்கும் மேலாக, நிலம்) இன்னும் பொது உடைமையாக, கூட்டுடைமையாக இருந்தது. நிலத்தின் மீதான தனியுடைமையின் தோற்றம் சமூக வாழ்க்கையில் தனியுடைமை நிர்ணயமான பாத்திரத்தை வகிக்கின்ற யுகத்தின் தொடக்கத்தைக் குறித்தது. இறுதியாக, முறையான பணப் பழக்கம் தோன்றியதுடன் தனியுடைமை தனது முதிர்ச்சி வடிவங்களை அடைந்தது.

தனியுடைமை தோன்றிய கட்டங்களை எங்கெல்ஸ் சுருக்கமான உருவரையில் கூறியுள்ளார். இக்கட்டங்கள் பின்வருபவை: முதலில் இனக்குழுவிற்குள் தனிப்பட்ட கூட்டுச் சமூகங்களுக்கு உடைமை தனியாகப் பிரிக்கப்பட்ட, முறைப்படியான நிகழ்ச்சிப் போக்கு, பின்னர் கூட்டுச் சமூகங்களுக்குள் பெரிய குடும்பங்களின் தலைவர்களுக்கு உடைமை தனியாகப் பிரிக்கப்படுதல், முடிவில், சிறிய அளவான, தனிப்பட்ட குடும்பங்களுக்குள் உற்பத்திச் சாதனங்களைச் செலவழிக்கும் உரிமை குவிக்கப்பட்டிருத்தல்.

சமூக உறவுகளில் குணாம்ச ரீதியான புதிய வடிவம் என்னும் முறையில் தனியுடைமையின் தோற்றம் பூர்விக கூட்டுவாழ்வு அமைப்பின் சாராம்சத்துக்குக் கோட்பாட்டு ரீதியாக அன்னியமான நிகழ்வாகும். புதிதாக உருவாகியுள்ள சமூகப் படிநிலையினர், அதாவது முதலில் இராணுவத் தலைமையினர் மற்றும் சமயக் குருமார்களின் மேற்பகுதியினர், பிறகு வர்த்தகர்களும் லேவாதேவிக்காரர்களும் தனியுடைமைக்கு உரியவர்களானார்கள் என்பதை எங்கெல்ஸ் கண்டார். தனியுடைமையின் தோற்றம் தன் பங்கிற்கு வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்தின் உருவாக்கத்தில் மிக முக்கியமான கூறுகளில் ஒன்று ஆயிற்று.

தனியுடைமை உருவாகுதலின் இயக்கவியல் எதில் அடங்கியிருந்தது? குறைவான அளவிலிருந்த உற்பத்திக்கான முன்நிபந்தனைகளை சமூகத் தடைகள் மூலம் முதலில் பிரித்ததும் இவற்றை சடங்கு ரீதியாக ஒழுங்குபடுத்தியதும் இம்முன்நிபந்தனைகளை மற்ற இனக் குழுக்கள், கூட்டுச் சமூகங்கள், குலங்கள் கைப்பற்றிக் கொள்ளாதபடி பாதுகாப்பதற்கான ஒரு வழி என்ற வகையில் தோன்றின. எனினும் மனிதக் கூட்டின் வாழ்க்கை நடவடிக்கையை உறுதிப்படுத்துகின்ற சமூக வடிவம் என்ற வகையில் தோன்றிய தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமை பிற்காலத்தில் அதன் எதிரிடையாக, சலுகைகளைக் கொண்ட மேல் மட்டத்தினர் நிலம், கருவிகள், உற்

பத்தியின் மற்ற முன்நிபந்தனைகளைத் தகாத வழியில் கைப்பற்றுவதாக வளர்ச்சியடைந்தது. இந்த மேல் மட்டத்தினர் காலப் போக்கில் ஆதிக்கம் செலுத்திய வர்க்கம் ஆனார்கள்; அவர்கள் இனி சமூக உற்பத்தியின் நிகழ்ச்சிப் போக்கில் பங்கெடுக்கவில்லை. மாறாக, இந்த நிகழ்ச்சிப் போக்கில் நேரடியாகப் பங் கெடுத்தவர்கள் உற்பத்திச் சாதனங்களிலிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டார்கள். உழைப் பாளர்களை உற்பத்திச் சாதனங்களுடன் ஒன்றுசேர்க்கின்ற செயலை ஆதிக்கம் செலுத் திய சமூக பகுதியினர் மேற்கொண்டு, அதன் மூலம் தம்முடைய சலுகைகளையும் செல்வத் தையும் சமூக அதிகாரத்தையும் பெருக்கிக் கொண்டார்கள்.

உருவாகியுள்ள தனியுடைமை, மக்கள் ஒரு வருக்கொருவர் கொண்டிருக்கின்ற புதிய உறவைக் காட்டிலும் பெருமளவில் பொருட் களின் பால் மக்களுக்குள்ள உறவாக சமூக வாழ்க்கையின் ''மேற்பரப்பில்'' தோன்றியது. முதலாளித்துவ இலக்கியத்தில் எண்ணற்ற கருத்துமுதல்வாத விளக்கங்கள் வெளியிடப்படு வதற்கு இது காரணமாயிற்று. ஒரு பக்கத்தில் தனியுடைமை ''நிரந்தரமானது'', தவிர்க்க முடியாதது என்றும் மறு பக்கத்தில் அது தீய நோக்கின் (ரூஸ்ஸோ), திருட்டின் (புரூதோன்) விளைவு, மனிதன் மீது மனிதன் கொண் டிருக்கின்ற அகற்றப்பட முடியாத, மூர்க்கத் தனமான பகைமையின், திருட்டு மற்றும் கொள்ளையின் விளைவு (டூரிங்) என்றும்

விளக்கப்பட்டது. இன்று கூட அத்தகைய கருத்துகளை நாம் சந்திக்க முடியும். உதாரண மாக, பிரபலமான அமெரிக்க உயிரியலாளரும் சமூகவியலாளருமான ராபர்ட் ஆர்ட்ரி தனி யுடைமையின் ''நிரந்தரம்'' என்னும் தன் னுடைய விஸ்தாரமான கருத்தில் விலங்குலகத் தையும் சேர்த்துக் கொள்கிறார். மனிதன் தன்னுடைய வாழ்க்கைச் சாதனத்தைப் பெறுகின்ற துண்டு நிலத்துக்காகப் போராடு வதைப் போல கொடிய மிருகமும் தன் னுடைய பிரதேசத்தைப் பாதுகாப்பதற்குப் போராடுகிறது என்று அவர் கூறுகிறார்.* அவர் பிரதேச அதிகாரம். உடைமை மற்றும் தேசிய இனங்களின் பிராணி மூலங்களைப் பற்றிய சொந்த ஆராய்ச்சி என்னும் தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்.** இப்புத்த கம் மிகவும் கொச்சையான, பொருத்தமற்ற ஒப்புமையை அடிப்படையாகக் கொண்டிருக் கிறது; இன்றைய விஞ்ஞான அறிவு மட்டத்தில் அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக இருப்பதுடன் பிற்போக்கான அரசியல் அர்த் தத்தையும் கொண்டிருக்கிறது. ஆர்ட்ரி ஏகாதிபத் தியத்தின் தீமைகளை ''ஒரு பாவமும் அறியாத

---

* Robert Ardrey, *Adam kam aus Africa,* Heyne Verlag, München, 1969.

** Robert Ardrey, *The Territorial Imperative. A Personal Inquiry in the Animal Origins of Property and Nations,* Atheneum, New York, 1966.

பிராணிகள் உலகத்தின் மீது சுமத்துகிறார்'' * என்று ஆஸ்திரியாவைச் சேர்ந்த மார்க்சிய அறிஞரான வால்டெர் ஹோல்லிட்ஷெர் எழுதுகிறார்.

தனியுடைமை இன்னும் ஆழமான அடிப் படையைக் கொண்டிருக்கிறது. நிலம், கால் நடை, உழைப்புக் கருவிகள் மற்றும் உற்பத் தியின் இதர முன்நிபந்தனைகளுடன் மனித னுடைய உறவு — உற்பத்தியின் சமூகத் தன்மை காரணமாகவே — மனிதனுடன் மனிதனுக்குள்ள உறவின் மூலம் நியதியான முறையில் மத்தியஸ் தப்படுத்தப்படுகிறது. இந்த உறவு தனியுடை மையின் பல்வேறு அம்சங்களில் அதிக மாகவோ, குறைவாகவோ காணப்படும்: செயலாட்சி உரிமை உறவுகளில் அது மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது, பயன்படுத்தும் உறவுகளில் மிகவும் குறைவாகக் காணப் படுகிறது.

தனியுடைமை சமூக உற்பத்தியை ஒழுங்கு படுத்துகின்ற வடிவமாகத் தோன்றியது என் பது எங்கெல்சின் கருத்தாகும். பெரும் புகழ் பெற்ற அதீனிய சட்டவியலாளரான சொலோன் (சுமார் கி. மு 509) வயல்களிலிருந்து அடைமானக் கம்பங்களை அகற்றினார், லேவாதேவிக்காரர்களிடம் மற்ற அதீனியர்கள் வாங்கியிருந்த கடன்களை ரத்துச் செய்தார், கடன் கொடுத்தவர்கள் வெளிநாடுகளில்

---

* Walter Hollitscher, *Agression in Menschenbild,* Verlag Marxistische Blätter, Frankfurt/Main, 1972, S. 138.

விற்பனை செய்த அதீனியர்களைத் திரும்பக் கொண்டு வந்தார். இவருடைய சீர்திருத்தத் தைப் பற்றி எழுதுகின்ற பொழுது எங்கெல்ஸ் பின்வரும் அம்சத்தை வலியுறுத்தினார்: ‘‘ஆகவே முற்றிலும் புதிய கூறு ஒன்று ஆட்சியமைப்புக்குள் நுழைக்கப்பட்டது; அது தனியுடைமையாகும்’’ * வர்த்தகர்களையும் லேவாதேவிக்காரர்களையும் குலத்தின் மேற் குடியினரையும் கொண்ட புல்லுருவி, ஆதிக்கம் செலுத்திய வர்க்கம் துல்லியமாக இத்தனியுடை மையின் உதவியுடன்தான் ‘‘உற்பத்தியின் நிர் வாகம் முழுவதையும் பறித்துக் கொள்கிறது; பொருளாதார ரீதியில் தன் ஆட்சிக்கு உற்பத்தி யாளர்களைப் பணிய வைக்கவும் செய்கிறது; எந்த இரண்டு உற்பத்தியாளர்களிடையேயும் தன்னை ஒரு இன்றியமையாத இடைநிலை பகுதியாக்கிக் கொண்டு இருவரையும் சுரண்டு கிறது.’’ * *

மக்களுடைய வாழ்க்கையில் தனியுடைமை போன்ற உறவுமுறையின் தோற்றம் உற்பத்திச் சக்திகள் மற்றும் சமூக உழைப்புப் பிரிவினை யின் வளர்ச்சியால் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே தனியுடைமையின் தோற்றம் அறிவில் முதிர்ச்சியுற்ற கனி அல்ல, குறிப்பிட்ட சமூகக் குழுக்களின் சூக்குமமான இலட்சியங்களின் ஈடேற்றமும் அல்ல. உற்பத்தியையும் நுகர்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 281.

** *Ibid.*, p. 323.

வையும் சமூக ரீதியில் ஒழுங்கமைக்கின்ற தீவிரமான புதிய முறை மேன்மேலும் அவசியப் பட்டது தனியுடைமையின் தோற்றத்தை விளக்குகிறது; அது உற்பத்திச் சக்திகளையும் கலாசாரத்தையும் மேலும் வளர்த்துச் செல்கின்ற சாத்தியத்தை மனிதகுலத்துக்கு முன்பாகக் காட்டியது.

பூர்விக குலமரபு உடைமையிலிருந்து முதலாளித்துவ ரகத்தைச் சேர்ந்த தனியுடைமைக்கு மனிதனை இட்டுச் சென்ற பரிணாம வளர்ச்சியின் இடைநிலைக் கட்டங்களை இன்றைய ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் புரிந்து கொள்ள முடியும். மேலும், ஆப்பிரிக்காவில் அந்தப் பழமையான (அதாவது, மனித வரலாற்றின் இன்றைய கட்டத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது) நிகழ்ச்சிப் போக்குகள் இன்று, நிலம், கால்நடை, கருவிகள் மற்றும் சமூக உற்பத்தியின் இதர புறநிலையான முன்நிபந்தனைகள் சம்பந்தமாக மனிதர்களிடையே நிலவும் உறவுகளை ஒழுங்கமைக்கும் நவீன பொருளாதாரப் போக்குகளின் அருகாக இயங்குகின்றன, பரஸ்பரச் செயலாக்கம் புரிகின்றன, சில சமயங்களில் மிகவும் விசித்திரமான முறையில் கூடிக் கலக்கின்றன; இப்போக்குகள் வெவ்வேறு சமூகத் திசையமைவைக் கொண்ட நாடுகளின் குறியடையாளமாகும்.

வெப்ப மண்டல ஆப்பிரிக்காவின் பெரும் பிரதேசங்களில் சமீப காலம் வரை நிலம்

தனியுடைமையாக, மனிதனை மனிதன் சுரண்டுகின்ற சாதனமாக இருக்கவில்லை. மிகவும் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் நிலத்தின் மீதான பொது உடைமை தனித்தனிக் குடும்பங்கள் அதை உபயோகப்படுத்தும் தன்மையுடன் சகவாழ்க்கை நடத்துகிறது என்பது மெய்யே. உபயோகிக்கப்படாத, உழுது பயிரிடப்படாத நிலம் அதிகமாக இருந்தபடியால் அந்த நிலத்தை உழுது பயிரிடுவதற்கு (காடுகளை அழிக்க வேண்டியிருத்தல், ட்ஸெட்ஸெ கொசுவின் தொல்லையினால் மிருகங்களையும் கலப்பையையும் பயன்படுத்த இயலாத இடங்களில் களைக்கொட்டுப் பயிர்த்தொழில், இதரவை) உழைப்புக் கூட்டுறவைப் பயன்படுத்துவது அவசியமாக இருந்தது. அந்த நிலம் அதை முதன்முதலில் விவசாயத்துக்குப் பண்படுத்திய தன்னுடைய மூதாதையர்களுக்குச் சொந்தமானது என்றும் அந்த மூதாதையர்களுக்கும் வாழ்கின்ற நபர்களுக்கும் இடையில் ஆன்மீக இணைப்பு இருந்தது என்றும் கூட்டுச் சமூக விவசாயி உறுதியாக நம்பினான். இத்தகைய எண்ணங்கள் கூட்டு நிலவுடைமை மரபின் சித்தாந்த மற்றும் சமூக-உளவியல் அடிப்படையாக அடிக்கடி இருக்கின்றன. ''வாழ்கின்றவர்கள் நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள், ஆனால் அவர்கள் நிலத்தை பராதீனப்படுத்த முடியாது; ஏனென்றால் அது இறந்தவர்களுக்குச் சொந்தமானது''* என்று ஆப்பிரிக்காவைப்

* Augustin Bernard, *Afrique septentrionale et occidentale,* tome XI, Librairie Armand Colin, Paris, 1939, n. 431

பற்றிய பிரெஞ்சு நிபுணரான அ. பெர்னார்டு எழுதுகிறார். இம்மாதிரியான கருத்துகளை வேறு சில ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள்: ''நிலம் வாழ்கின்றவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உரிய பொதுச் சொத்தாக இருந்தபடியால், அதைப் பராதீனப்படுத்த முடியாது. சக உடைமையாளர்களுக்கு மத்தியில் அந்த நிலத்தைத் திட்டவட்டமாகப் பிரிவினை செய்கின்ற பிரச்சினையே ஏற்படவில்லை; ஏனென்றால் சக உடைமையாளர்களில் பெரும்பான்மையானவர்கள் இறந்தவர்களுடைய ஆவிகளே.'' *

எனினும் எங்கெல்ஸ் கண்டுபிடித்த தனியுடைமையை நோக்கிய பரிணாமப் போக்கு இங்கும் செயல்பட்டது. அது பண்ட-பண உறவுகளின், குறிப்பாக சந்தை உறவுகளின் வளர்ச்சியினால் தூண்டிவிடப்பட்டது. குறிப்பாக பிரெஞ்சு இனப் பரப்பு விளக்கவியல் ஆராய்ச்சியாளரான விவியான் பாக் மாலியைச் சேர்ந்த பாம்பரா மக்களினத்தவரைப் பற்றி முப்பது வருடங்ளுக்கு முன்பு கண்டுபிடித்த விவரம் சுவாரசியமானது. அவர்கள் ஒரு காலத்தில் குடும்பப் பொது நிலத்தைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு கவனித்ததைப் போல இப்பொழுது செய்வதில்லை. அந்தப் பொது நிலத்துக்குப் பதிலாகத் தனிப்பட்ட வயல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. பெரிய

---

* Jean-Paul Harroy, *Afrique terre qui meurt,* Marcel Haver, Bruxelles, 1944, p. 336.

குடும்பத்திலிருந்து தள்ளி இருப்பதற்காகவும் தங்களுடைய தனிப்பட்ட வருமானத்தின் மீது குடும்ப கண்காணிப்பின் எல்லா வடிவங் களையும் தவிர்ப்பதற்காகவும் அத்தகைய தனிப்பட்ட வயல்கள் தள்ளிப் போய் புதர் களுக்குப் பக்கத்தில் ஏற்படுத்தப்பட்டன.* எங்கெல்ஸ் கால்நடை மீதான தனியாகப் பிரிக்கப்பட்ட உடைமையைப் பற்றி எழுதி னாலும் இந்த நிகழ்வும் நிலவுடைமையின் பரிணாமத்திற்கு உரித்தானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

புதிதாகச் சுதந்திரம் பெற்று, முதலாளித் துவத் திசையமைவு கொண்ட நாடுகளில் கூட்டுச் சமூக உடைமையின் எல்லா எச்சங் களையும் ஒழித்து, வசதியான விவசாயிகளை பிரத்யேகமான ''மத்தியதர வர்க்கத்தின ராக'' —ஸ்தல பிற்போக்கு மற்றும் நவீன காலனியாதிக்கத்தின் தூணாகச்—செய்வதை நோக்கமாகக் கொண்ட காலனியாதிக்க நிர்வாகத்தின் கொள்கை இன்னும் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

புதிதாகச் சுதந்திரம் பெற்று, சோஷலிச திசையமைவைப் பின்பற்றுகின்ற நாடுகளில் விவசாயக் கூட்டு வாழ்க்கை மரபுகளையும் நிலத்தின் மீதான தனியுடைமையின் குறைந்த வளர்ச்சி நிலையையும் உபயோகித்து சோஷலிச, முதலாளித்துவ எதிர்ப்பு மாற்றங்களின் முன்

* Viviana Paques, *Les Bambara*, Presses univérsitaires de France, Paris, 1954, p. 78.

நிபந்தனைகளைப் படைக்கும் நிகழ்ச்சிப் போக்குகளைத் துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நாடுகளில் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முன்நிபந்தனையாகவும் சாதனமாகவும் இருக்கின்ற தனியுடைமைக் கட்டத்தைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்பது இதன் பொருள். மார்க்சிய அறிஞர்கள் 25 வருடங்களுக்கு முன்பே இப்போக்கைப் பற்றி எழுதினார்கள். ''உற்பத்திக் கூட்டுறவின் வளர்ச்சிக்கு — குறிப்பாக, வெப்ப மண்டல ஆப்பிரிக்காவில் — இன்னும் இருக்கின்ற கூட்டுச் சமூக நிலவுடைமை மற்றும் கூட்டு உழைப்பு மரபுகள் எல்லாவற்றுக்கும் மேலாக அங்கே உதவி புரிகின்றன'' * என்று சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் ஆப்பிரிக்காவைப் பற்றிய ஆராய்ச்சி நிலையத்தின் முதல் இயக்குநராகிய இவான் பொடேகின் எழுதினார். ''ஆப்பிரிக்க அரசுகள் சோஷலிச திசையில் வேகமாக முன்னேறுமானால் இந்தக் கூட்டுடைமையைப் பாதுகாத்து முழுமையான சோஷலிச உடைமையாக மாற்ற முடியும். அரசுக் கடன்கள், விதைத் தானியம், இரசாயன உரங்கள், விவசாய இயந்திரங்கள் ஆகிய அரசு உதவியின் மூலம் இது ஆப்பிரிக்காவின் கிராமப் பகுதிகளில் சுபிட்சத்தை ஏற்படுத்த

---

* இ. இ. பொடேகின், **ஆப்பிரிக்காவின் எதிர்காலம்**, *மாஸ்கோ, 1960, பக்கம் 44 (ருஷ்ய மொழியில்).*

முடியும்''* என்று இங்கிலாந்தைச் சேர்ந்த ஆப்பிரிக்கவியல் நிபுணரான ஜேக் வாடிஸ் எழுதினார்.

இந்த வாய்ப்பை நிறைவேற்றுவது எதிர் பார்த்ததைக் காட்டிலும் மிகவும் கடினமாயிருக் கிறது. எனினும் சோஷலிச திசையமைவைப் பின்பற்றுகின்ற நாடுகளில், ஒரு காலத்தில் குலமரபு சமுதாயம் மற்றும் பூர்விகக் கூட்டு வாழ்வு சமூக-பொருளாதார அமைப்பின் குறியடையாளமாக இருந்த கூட்டுடைமை வடிவங்களையும் கூட்டு உழைப்பு மரபுகளையும் பயன்படுத்துகின்ற போக்கை நாம் காண்கி றோம். டான்சானியாவின் ''உஜமாக்கள்'' மடகாஸ்கரில் உள்ள ''ஃபுனுகுலுனாக்கள்'' மொசாம்பிக்கின் ''அல்டேயஷ் கம்யூனிஷ்'' மற்றும் எத்தியோப்பியாவின் விவசாய சங் கங்களையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். எங்கெல்ஸ் துல்லியமாக இதைத்தான், கூட் டுடைமை மற்றும் கூட்டு உழைப்பின் வர லாற்று விதியைத்தான் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலில் விவாதித்தார். புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் மக்களினங்களின் சமூக-பொரு ளாதார வளர்ச்சி வாய்ப்புகள் இன்று தீவிர மாக வேறுபடலாம். எனினும் சமூக நீதி, சமூக உழைப்பின் உற்பத்தித் திறன் அதி கரிப்பு, உற்பத்திச் சாதனங்களின் மீது சோஷ லிச உடைமை வடிவங்களைப் படைத்தல்

* Jack Woddis, *Africa. The Way Ahead,* Lawrence & Wishart, London, 1963, pp. 31—32.

ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆப் பிரிக்க விவசாயிகளின் வாழ்க்கையில் அடிப் படையான மாற்றங்களை ஏற்படுத்துகின்ற எதிர்கால, ஆனால் யதார்த்தமான முறை களையும் வழிகளையும் வகுத்துரைப்பதற்கு எங்கெல்சின் புத்தகத்தை பற்றிய ஞானம் அவசியமானதே.

# 8. உதித்தெழுந்து கொண்டிருந்த அரசு

## அரசின் தோற்றம்

பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் குறியடையாளமான சமூக உறவுகள் குலத்தின் மரபுகளால் ஒழுங்கமைக்கப்பட்டன. பூர்விக ஜனநாயக உணர்ச்சியில் தோய்ந்த குலங்கள், பிராட்ரிகள், இனக்குழுக்கள் மற்றும் இனக்குழுக்களின் கூட்டுகளிலிருந்து எழுந்த சமூக அமைப்பின் உருவாக்கத்தைப் பற்றி முறையான விளக்கத்தை மார்கன்தான் முதலில் கொடுத்தார். அதே சமயம், சமூக ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்பிற்கு உரிய, அடிப்படையில் மாற்றமில்லாதிருந்த குல அமைப்புகளுக்கும் வடிவங்களுக்கும் ஒரு வகையான சுறுசுறுப்பு இருந்தது என்பதை அவர் எடுத்துக்காட்டினார்; இதிலும் குல அமைப்புகளுக்கும் புதிதாகத் தோன்றிக் கொண்டிருந்த அரசுக்கும் இடையிலிருந்த தொடர்ச்சியை அவர் கோடிட்டுக் காட்டினார். அவருடைய கருத்துப்படி நிர்வகிப்பது என்னும் கருத்தின் வளர்ச்சி இதன் அடிப்படையாக இருந்தது.

இந்த விஷயத்தில் எங்கெல்ஸ் மார்கனிடமிருந்து வேறுபட்டிருந்தார். அவர் வர்க்க முரணியல்புகள் ஒரு வகையான ''அறிவின்'' படைப்பு என்று கருதவில்லை, வரலாற்று

நிகழ்ச்சிப் போக்கின் புறநிலையான விளைவு என்று கருதினார். மார்கனுடைய கண்டு பிடிப்பைப் பற்றி முரணற்ற பொருள் முதல்வாத விளக்கத்தை அவர் கொடுப் பதற்கு இதுதான் உதவியது. மார்கன் சுரண் டல் சமூகத்தில் நிர்வகிப்பது என்ற உறவு முறையைக் குலம் என்ற முப்பட்டைக் கண் ணாடியின் வழியாகப் பார்த்தார்; ஆனால் எங்கெல்ஸ் குலமரபு உறவுகள் தகர்ந்த நிகழ்ச்சிப் போக்கிலிருந்த புறநிலையான முரண்பாடுகளில் எதிர்கால அரசின் கூறு களைக் கண்டுபிடித்தார். மார்கன் குலத் துக்கும் அரசுக்கும் இடையில் தொடர்ச்சியை வலியுறுத்தினார்; ஆனால் எங்கெல்ஸ் அரசைக் குலத்தின் **நிலைமறுப்பாகக்** கண்டார், மார்கன் குலத்தை இலட்சிய வடிவமாக்கியதை நிரா கரித்தார்.

குலத்தின் வெவ்வேறு உறுப்புகளிலிருந்து அரசு அதிகாரம் வெளித்தோன்றியதானது சமூகம் குல அமைப்பிலிருந்து அரசியல் அமைப்புக்கு மாறிய பரிணாம வளர்ச்சியின் ஒரே ஒரு அம்சம் மட்டுமே என்பதை எங் கெல்ஸ் சிறப்பாக எடுத்துக்காட்டினார். குறிப்பாக குறுகிய ஸ்தல அமைப்பிலிருந்து மேன்மேலும் பரந்த மனிதக் கூட்டை நோக்கி குலத்தில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் குல உறவுகள் தகர்ந்து புதிய சமூகத் தொடர்பு கள் — தொழில்முறை, பிரதேச மற்றும் பொரு ளாதாரத் தொடர்புகள் — உருப்பெற்ற நிகழ்ச்சிப் போக்கை ஆராய்வது மிகவும்

முக்கியமானது என்று அவர் கருதினார்.

சமூக இணைப்புகளின் அளவு வளர்ச்சியடைந்து தொழில்முறை தொடர்புகள் பெருகிய பொழுது (இந்தத் தொடர்புகள் நகரங்களில் அதிக வளர்ச்சியடைந்திருந்தன) மக்களை ஒன்றுபடுத்திய இரத்த முறை உறவுகள் பலவீனமடைந்தன. "ஆட்டிக்கா முழுவதிலும் குறிப்பாக ஏதன்ஸ் நகரத்திலும் குல அங்கத்தினர்களும் பிராட்ரி அங்கத்தினர்களும் வரைமுறையின்றிக் கலந்தது, தலைமுறைக்குத் தலைமுறை அதிகரித்தது.... ஜனத்தொகை தான் ஈடுபட்டுள்ள தொழில்களின்படி ஓரளவுக்கு நிலையான குழுக்களாக இப்போது பிரிக்கப்பட்டது; அந்த ஒவ்வொரு குழுவும் குலத்திலோ, பிராட்ரியிலோ இடம் பெறாத சில புதிய பொதுவான நலன்களைப் பெற்றிருந்தது; எனவே அவற்றைக் கவனித்துக் கொள்வதற்குப் புதிய பதவிகளை சிருஷ்டிப்பது அவசியமாயிற்று."* அப்பொழுது உருவாகிக் கொண்டிருந்த தொழில்முறை தொடர்புகள் மேன்மேலும் பிரதேசத் தன்மையையும், பரிவர்த்தனையின் வளர்ச்சியுடன் பொருளாதாரத் தன்மையையும் அடைந்தன.

பொது விவகாரங்களையும் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளையும் ஒழுங்குபடுத்துகின்ற வடிவங்கள் மற்றும் முறைகளின் வளர்ச்சி அதன் பரந்த உருவரைகளில் சமூக உறவு

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 279.

களில் ஏற்பட்ட மாற்றங்களுடன் பொருந்துகிறது. காட்டுமிராண்டி நிலை மற்றும் பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்திற்குரிய இரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட, ''இயற்கையாக தோன்றிய கட்டமைப்பு'' சிதைகிறது. இக்கட்டமைப்புக்குள் சமூக மோதல்களுக்கு இடம் கிடையாது. முதலாவதாக, இக்காலகட்டத்தைச் சேர்ந்த தனிநபர்கள் அநேகமாக ஒருவருக்கொருவர் ''வேறுபாடு இல்லாதவர்கள்.'' இரண்டாவதாக, ''எல்லாப் பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்டவர்களே முடிவு செய்கிறார்கள்; மேலும், பெரும்பான்மையான விஷயங்களில் பல நூற்றாண்டுகளாக நிலவியிருக்கின்ற பழைய மரபு எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துகின்றது''. *

பொருளாதார முன்னேற்றத்தின் புறவய தேவைகள் உற்பத்தியாளர்களை மேன்மேலும் பரந்த முறையில் ஒருங்கிணைப்பதை அவசியமாக்கின. இக்கட்டத்தில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு பிரதானமாக அதன் அளவைப் பெருக்குவதன் மூலம் சாதிக்கப்பட்டது. புதிதாக உருவாகியுள்ள சமூக உறவுகளும் தொடர்புகளும் இரத்த உறவுகளின் சுற்று வட்டத்துக்கு வெளியே வெகுதூரம் விரிவடைந்தன, குலமரபு அமைப்பை அழித்தன. ''அது இனக்குழுவுக்கு அப்பால் ஒருபோதும் வளர்ச்சி அடையவில்லை; இனக்குழுக்களின் கூட்டு

* *Ibid.*, p. 266.

அதன் வீழ்ச்சியின் ஆரம்பத்தை ஏற்கெனவே அறிவித்தது''* என்று எங்கெல்ஸ் எழுதினார். கூட்டுச் சமூகங்களின் இணைப்பு உற்பத்தியை ஒழுங்குபடுத்துகின்ற அவசியத்தை அதிகப்படுத்தியது. குல அமைப்புகளுக்கு வெளியில், பல்வேறு கூட்டுச் சமூகங்களின் தலைமைகள் ஒன்றுசேர்ந்ததன் மூலம் ஒரு விசேஷப் பிரிவு உருவெடுத்தது; அப்பிரிவு உற்பத்தியில் நேரடியாகப் பங்கெடுக்காமல் விலகியிருந்து கொண்டு அதை ''மேலே இருந்து'' ஒழுங்குபடுத்தியது. இப்பிரிவைச் சேர்ந்தவர்களுடைய புதிய, சொத்துடைமை-பொருளாதார நலன்கள் இரத்த உறவுமுறைகளுக்கு அப்பால் சென்றன. உயர்குடியினர் மற்றும் செல்வக் குடியினர் ''தம்முடைய குலங்களுக்கு வெளியில், தனிச் சலுகைகளைக் கொண்ட விசேஷ வர்க்கமாக ஒன்று சேரத் தொடங்கினார்கள்''** என்று எங்கெல்ஸ் எழுதினார். அந்தச் சமயத்தில் இந்த வர்க்கமும் பொது விவகாரங்களில் ஈடுபட்டது; ஆனால் புறநிலையில் அதற்கென்று சொந்தமான, பிரத்யேகமான பொருளாதார நலன்கள் இருந்தன; இவை பொது நலன்களிலிருந்து வேறுபட்டிருந்தன.

இப்படித்தான், வரலாற்று ரீதியில் ஆதிக்க வர்க்கம் முதன்முதலாகப் பிரிந்தது. இந்த வர்க்கத்துக்கு அரசு அவசியமாக இருந்தது. இக்குழுவினர் மக்களின் எஞ்சிய பகுதியிட

---

* *Ibid.*, p. 267.

** *Ibid.*, p. 277.

மிருந்து மேன்மேலும் கூர்மையாகப் பிரிந்து நின்றார்கள்; இவர்களுடைய பொருளாதார வாழ்க்கை நிலைமைகள் புறவய ரீதியில் சமமாக இருந்தன என்பது வெவ்வேறு — சில சமயங்களில் பரம்பரையாக விரோத மான — குலங்களின் பிரதிநிதிகள் குலங்களுக்கு வெளியேயும், குலங்களைக் காட்டிலும் உயர் வாகவும், அவற்றுக்கு எதிராகவும் ஒன்று சேருவதற்கு அடிப்படையாக உதவியது. சமூக அளவுகோலின் எதிர்முனையில், சமூகக் கட் டமைப்பின் அடிப் பாதாளத்தில் குலங்களே இல்லாத, பொருளாயதச் செல்வம் ஏதுமில் லாத மக்கள் இருந்தார்கள்; அவர்கள் விதியின் விசித்திரங்களால் தம்முடைய இரத்த முறைக் கூட்டுகளிலிருந்து வெளியேற்றப்பட்ட வர்கள்.

மனிதகுலம் பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டம் மற்றும் இரும்பு யுகத்துக்குள் நுழை கின்ற பொழுது, சமூக வகைப்படுத்தல் தீவிர மடைகின்ற பொழுது பொது அதிகாரம் (இராணுவ ஜனநாயகம் என்ற வடிவத்தில்) தீவிரமாக அரசு அதிகாரமாக வளர்ச்சியடை கிறது. ஆதிக்க வர்க்கத்தின் பொருளாதார நலன்கள் விசேஷமான அரசியல் அமைப்பு களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற வர்க்க சமுதாயத்தின் அமைப்பு ரீதியான வடிவமே அரசு என்பதாகும். ஆகவே உருவாகிக் கொண்டிருந்த அரசின் நடவடிக்கையில் ஆயுத அடிப்படையிலான நிர்ப்பந்தம் முன்னணிக்கு வந்தது.

## ஒடுக்குமுறை இயந்திரம் என்கின்ற முறையில் அரசின் கூறுகள்

எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூலில் அரசின் மூன்று அடிப்படையான கூறுகளை வரையறுத்தார். பூர்விகக் கூட்டுவாழ்வுச் சமூகத்திலிருந்த பொது சுயநிர்வாக முறையிலிருந்து அரசை வேறுபடுத்துவதற்குப் பயன்படுகின்ற வரையளவுகளின் தொகுதியாக இந்த மூன்று கூறுகளும் இருக்கின்றன. அதே சமயத்தில் இந்தக் கூறுகளும் சுயநிர்வாக முறை சமுதாயத்தின் அரசியல் அமைப்பாக—அதன் மையப் பகுதியே அரசு—வளர்ச்சியடைந்த ஆதாரப் போக்குகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

குலங்கள், இனக்குழுக்களின் மூத்தவர்களுடைய அதிகாரமும் மரபின் சக்தியும் தொடக்கத்தில் மொத்த சமூகத்தின் நலன்களையும் பிரதிபலித்தன என்பதை எங்கெல்ஸ் எடுத்துக்காட்டினார். வளர்ச்சியடைந்த உழைப்புப் பிரிவினையைப் பற்றியும் குடும்பங்களுக்கும் தனிநபர்களுக்கும் மத்தியில் சமூக-உடைமை வகைவேறுபடுத்தலைப் பற்றியும் அந்த சமூகத்துக்கு எதுவுமே தெரியாது. வர்க்க முரணியல்புகள் தோன்றுகின்ற பொழுது பொதுப் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் முடிவு செய்கின்ற மரபுவழிப்பட்ட முறைகள் மறைந்து பொது அதிகாரம் அந்த இடத்தைப் பெறுகிறது; அந்தப் பொது அதி

காரம் மக்கள்தொகையின் பெரும் பகுதியிலிருந்து தனித்திருப்பதுடன் அதற்கு எதிராகவும் இருக்கிறது. குலமரபு அமைப்பு சிறிதும் அறியாத, அடிப்படையிலேயே புதிய அதிகாரப் பகுதி தோன்றுவதை நிர்ணயித்தது இதுதான். இப்பகுதி விசேஷ மக்கள் பிரிவினரால் தோற்றுவிக்கப்படுகிறது; அதிகாரத்தைச் செயற்படுத்துகின்ற பணியை இப்பகுதி நிறைவேற்றுகிறது. மக்கள்தொகையின் பெரும்பான்மையினரிடமிருந்து வரக் கூடிய கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்புகளிலிருந்து ஆள்கின்ற, செல்வவசதியுள்ள மேல்மட்ட பகுதியினரின் சலுகைகளைப் பாதுகாத்து, ஆதரிக்கின்ற கடமையை இப்பகுதி நிறைவேற்றுகிறது. அது இக்கடமையை அதிகாரம், ஆயுத மற்றும் சித்தாந்த நிர்ப்பந்தம், உடலியல் மற்றும் உளவியல் ஒடுக்குமுறை ஆகிய கருவிகளைக் கொண்டு நிறைவேற்றுகிறது. ''எல்லா சமூகங்களின் தன்மையிலிருந்தும் தோன்றுகின்ற பொது விவகாரங்களை நிறைவேற்ற வேண்டிய''* அவசியத்திலிருந்து பொது அதிகாரம் பிறக்கிறது; அது இக்கடமைகளில் சிலவற்றைப் பாதுகாத்துக் கொண்டு மக்கள் பெருந்திரளினரிடமிருந்து பிரிந்து செல்கிறது; ஆதிக்க வர்க்கமாக வளர்ச்சியடைகின்ற தனிச்சலுகைகளைக் கொண்ட மேல்மட்டத்தினர் தமது சித்தத்தையும் சமூக நடத்

---

* K. Marx, *Capital,* Vol. III, Progress Publishers, Moscow, 1977, p. 384.

தையின் குறிப்பிட்ட மரபுமுறைகளையும் மக்களின் பெரும்பான்மையினர் மீது திணிக்கின்ற சாதனமாக அது மேன்மேலும் மாறுகிறது. கீழான நிலையில் இருக்கின்ற சமூகப் பகுதியினர் மற்றும் குழுக்களை சுரண்டும் சமூக மேல்மட்டத்தினர் அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் உரிய இயந்திரமாக அரசு மாறுகிறது. வர்க்க-பகைமுரண்பாட்டு சமுதாயத்தைச் சேர்ந்த அமைப்பு என்னும் முறையில் அரசின் சாராம்சம் இதுதான்.

சுரண்டல் அரசு என்பது ''சுரண்டலுக்குரிய கருவி'', சுரண்டப்படுபவர்களைக் கட்டாய உழைப்புச் செய்யும்படி ஒடுக்குவதற்கும் நிர்ப்பந்திப்பதற்கும் உரிய ''இயந்திரம்'' என்னும் எங்கெல்சினுடைய வரையறுப்பை லெனின் பின்னால் தன்னுடைய **அரசும் புரட்சியும்** என்னும் நூலில் பன்முறை திருப்பிக் கூறினார். லெனின் தத்ரூபமான உவமைகளைப் பயன்படுத்தி 1) அரசின் சிக்கலான கட்டமைப்பின் புறநிலையான வளர்ச்சியை, 2) தன்னுடைய சொந்த ஆதாரமான பொருளாதார நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்ற வர்க்கத்தின் அரசியல் சக்தி மற்றும் சித்தாந்த வாய்ப்புகளின் பிரம்மாண்டமான அதிகரிப்பைச் சித்தரித்தார்.

மக்கள் பெருந்திரளினருக்கு எதிராகச் செயல்படுகின்ற விசேஷமான பொது அதிகாரம் நிறுவப்படுதல் அவசியமாயிற்று; ஏனென்றால் ''சமுதாயம் வர்க்கங்களாகப்

பிரிந்த பிறகு மக்களின் சுயநிர்வாக ஆயுத அமைப்பு என்பது இயலாததாயிற்று.''* உண்மையில் அதை அகற்றியது எது? இக்குறிப்பிட்ட விதியின் இயக்கத்துக்கு மூலச்சிறப்பான உதாரணமாக பண்டைக்கால கிரீசைக் கருதிய எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''அதீனிய ஜனநாயகத்தின் மக்கள் படை என்பது பிரபுத்துவ வகைப்பட்ட பொது அதிகாரம் ஆகும், அது அடிமைகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது, அடிமைகளைக் கட்டுக்குள் வைத்திருந்தது. இருந்தாலும், மக்களையும் கட்டுக்குள் வைப்பதற்காகப்... போலீஸ் படையும் அவசியமாயிற்று. இந்தப் பொது அதிகாரம் ஒவ்வொரு அரசிலும் உண்டு; அதில் அடங்குவது ஆயுதமேந்திய ஆட்கள் மட்டுமல்ல, அதற்கு வேண்டிய பொருள் வகைப்பட்ட உபகருவிகளும் கூட, அதாவது சிறைக் கூடங்கள், பலாத்காரம் செய்கிற பல்வகை ஸ்தாபனங்கள்; இவற்றை எல்லாம் பற்றிக் குலச் சமுதாயத்துக்கு ஒன்றுமே தெரியாது.''**

குலமரபு அமைப்பில் இயங்கிய சுயநிர்வாக உறுப்புகளிலிருந்து அரசை வேறுபடுத்திக் காட்டிய மற்றொரு கூறு மக்கள் பிரதேச ரீதியில் அமைக்கப்பட்டதாகும் என்று எங்கெல்ஸ் கூறுகிறார். புதுக் கற்காலப் புரட்சி, (இனக்குழுக்களும் குலங்களும் தகர்ந்த நிகழ்ச்சிப்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 327.

** *Ibid.*

போக்கில் குடும்பங்கள் மற்றும் தனிநபர் களின் உடைமையாக நிலம், வீடுகள், இதரவை மாறியது ஆகியவற்றின் விளைவாய் உருவாகிய புதிய பொருளாதார, பரிவர்த் தனைத் துறைகளை அந்தந்த இடங்களில் ஏற்படுத்தும் தன்மையால் அது ஓரளவுக்கு நிர்ணயிக்கப்பட்டது.

பழைய குலமரபு கூட்டுகள் மறைந்து குலங் களின் உறுப்பினர்களுக்கும் ''அவர்களுடைய'' நிலத்துக்கும் இடையிலிருந்த பிணைப்பு தற் பொழுது வெறும் சம்பிரதாயமாக மாறி விட்டபடியால் குறிப்பிட்ட பொருளாதாரப் பிரதேசம் மக்களை ஒன்றுபடுத்துகின்ற காரணி யாயிற்று. இது வெவ்வேறு குலங்களைச் சேர்ந்த மக்களின் சமூக உழைப்பின் இடமா யிற்று. ஆகவே குலமரபு அமைப்பு அல்ல, உடைமை மற்றும் சமூக வேறுபாடுகளும் மக்களை வகைபிரிக்கின்ற அடிப்படை வடி வமாயின. மக்கள் பொதுக் காரியங்களில் பங்கெடுப்பதற்கு இரத்த உறவுமுறைக் குழுக் களின் அடிப்படையில் ஒன்றுசேராமல் அவர் கள் வசிக்கின்ற பிரதேசத்தைப் பொறுத்து ஒன்றுசேர்ந்ததும் குல அமைப்பை மேலும் அரித்தழித்தது. கிளிஸ்ஃபேனிஸ் அமுலாக்கிய புதிய நிர்வாக அமைப்பை ஒரு புரட்சி என்று எங்கெல்ஸ் மதிப்பிட்டார். இதில், ''குலமரபு கூட்டுகளில் அங்கம் வகிப்பதல்ல, நிரந்தரமாக குடியிருக்கும் இடமே இப்போது நிர்ணயிக்கிற அம்சமாக இருந்தது. மக்களல்ல, பிரதேசம் தான் இப்போது பிரிக்கப்பட்டது; அரசியல்

ரீதியிலே பிரதேசத்தின் இணைப் பாகங்களாக மக்கள் ஆகிவிட்டனர்''* என்று எங்கெல்ஸ் எழுதினார்.

எங்கெல்ஸ் பொது வரிவிதிப்பையும் அரசுக் கடன்கள் இருப்பதையும் அரசின் மூன்றாவது கூறாக இனங்கண்டார். இப்பொருளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் நூல்களில் அரசின் இக் கூறின் முக்கியத்துவம் குறைவாக மதிப்பிடப் பட்டிருக்கிறது. உழைக்கும் மக்களை அடக்கு கின்ற இயந்திரத்தை உழைக்கும் மக்களின் பணத்தைக் கொண்டு இயக்குவதற்கு வரிகள் ஒரு குறிப்பிட்ட நிதித் தோற்றுவாய் எனலாம். மேலும் சுரண்டப்படும் வர்க்கங்களிடமிருந்து உபரியையும் பகுதியளவுக்கு அவசியமான பொருளையும் கைப்பற்றுவதற்கு அது கூடு தலான (சுரண்டலின் நேரடியான, உற்பத்தி வடிவங்களுடன் ஒப்பிடுகின்ற பொழுது), உற்பத்தியிலிருந்து தனித்திருக்கின்ற முறை யாக இருக்கிறது. வரிகள் மற்றும் அரசுக் கடன்கள் (மற்ற அரசுகளிடமிருந்தும் குறிப் பிட்ட அரசுக்குள்ளே இருந்தும் பெறப்பட் டவை) படிப்படியாக அனைத்தையும் தழுவிய அரசு வரிவிதிப்பு முறையாக வளர்ச்சியடைந் தது. சாராம்சத்தில், இது அரசின் பொருளா தார ஒப்பேறு நிலையை உறுதியாக்குவதற்கு சுயமாக இயங்கும் முறையை உருவாக்கியது (இந்த முறை தனிப்பட்ட நபர்களின் சித்தத் திலிருந்து மேன்மேலும் சுதந்திரமடைந்தது);

---

* *Ibid.*, p. 282.

அரசுக்கும் உழைக்கும் மக்களுக்கும் இடையிலிருந்த இடைவெளியை மேலும் அதிகப்படுத்துவதற்கு உதவியது. மக்கள் திரளினரைக் காட்டிலும் உயர்வானதாகவும் அவர்களுக்கு எதிராகவும் தன்னை வளர்த்துக் கொண்ட பொது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு ''குடிமக்களிடமிருந்து கட்டணங்கள் வசூலிப்பது அவசியமாயிற்று; அவைதான் **வரிகள்.** குல சமுதாயத்தில் இவற்றைப் பற்றி எதுவுமே தெரியாது.... நாகரிகம் முன்னேற, முன்னேற இவ்வரிகள் பற்றாமல் போகின்றன; அரசு எதிர்காலத்தை வைத்துப் பணம் வாங்குகிறது, கடன் வாங்குகிறது, **அரசாங்கக் கடன்களை** ஏற்படுத்துகிறது''* என்று எங்கெல்ஸ் எழுதுகிறார்.

## அரசின் தோற்றத்தின் இயக்கவியல்

குல சிதைவின் மீது அரசு வளர்ச்சியடைந்ததானது அரசு தோன்றுவதன் இயக்கவியல் அம்சங்களில் ஒன்றாகும். அதே சமயத்தில் அரசு குலத்திற்கு எதிராக இருக்கிறது, ஆகவே புரட்சிகர சக்தியாகவும் இருக்கிறது, ஏனென்றால் அது நிர்வாகம் மற்றும் சமூக கண்காணிப்பின் குலமரபு வடிவங்களுடைய (இவை உற்பத்திச் சக்திகள் மற்றும் கலாசாரத்தின் கூடுதலான வளர்ச்

* *Ibid.*, p. 328.

சிக்குத் தடையாக மாறின) சங்கிலிகளை நொறுக்குகிறது. அதற்குள்ளாக விரோதமான இயற்கைச் சூழலுக்கு எதிராக குலத்தின் உறுப்பினர்களைக் கூட்டாகப் பாதுகாக்கின்ற முந்திய பணியை குல அமைப்பு இழந்து விட்டிருந்தது. சொத்துடைமை வேறுபாடும் அதன் மூலம் தோன்றிய சமூக முரணியல்புகளும் குல அமைப்பு தகர்வதற்கு இட்டுச் சென்றன; விசேஷ உரிமைகளைக் கைப்பற்றிக் கொண்ட மேல்மட்டத்தினர், பாரபட்ச முறையினால் பாதிக்கப்படுகின்ற சாதாரண நிலையிலுள்ள மக்கள் திரளினர் என்று குல சமூகம் இரண்டாகப் பிரிவதற்கு வழிவகுத்தன.

இவ்வாறு சமூக நிலைமைகள் மாறிய பொழுது குல அமைப்பு அதன் ஜீவ சக்தியை இழந்தது: ''தன் கண்ணெதிரே விளைந்து வரும் மிகத் துன்பகரமான தீமைகளையும் கூடத் தடுக்கவோ தணிக்கவோ அது சக்தியற்றிருந்தது'' என்று எங்கெல்ஸ் எழுதினார். எனவே, அது ''சுரண்டப்பட்ட மக்களுக்கு உதவியாக வர முடியாமற் போனதால் அவர்கள் தோன்றி கொண்டிருக்கிற அரசின் பாதுகாப்பைத்தான் எதிர்பார்த்து நிற்க வேண்டியிருந்தது.''* பண்டைக்கால நாகரிகங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் இரண்டு பெரும் ஆபத்துக்களுக்கு இடையில் சிக்கிக் கொண்டார்கள் எனலாம். ஒரு பக்கத்தில், தம் சக மக்களிடமிருந்து பிரிந்து விட்ட குல

---

* *Ibid.*, p. 280.

மேற்குடியினருடைய கொடிய ஆட்சி அவர்களைப் பயமுறுத்தியது; மறு பக்கத்தில், குலத்தின் சுற்றுவட்டத்துக்கு வெளியே நடைபெற்ற லேவாதேவி என்னும் தனியுடைமை நிகழ்வு அவர்களை எதிர்நோக்கியது. பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பின் முடிவுக் கட்டங்களில் சமூக வளர்ச்சிப் பாதையில் அதிகார பலம் மற்றும் செல்வத்தின் பலம், குல மேற்குடியினர் மற்றும் லேவாதேவிகள் ஒன்று திரண்டு நின்றனர். இத்தகைய நிலைமைகளில் உருவாகி கொண்டிருந்த அரசு ''நாகரிக சமுதாயத்தைப் பிணைக்கின்ற சக்தியாயிற்று.'' அது மிகக் குறுகிய ஸ்தல அளவிலிருந்த இரத்த உறவுமுறை என்னும் காலாவதியான பிணைப்புகளை அகற்றியது. அரசின் உதவியுடன் உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருப்பவர்களும் உடைமையாகக் கொண்டிராதவர்களும் ஒரே சமூக-பொருளாதார அமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டனர்; உடைமையாளர்களுக்கு இடையில் தவிர்க்க முடியாத போட்டி ஒழுங்குபடுத்தப்படுகிறது.

அரசின் தோற்றத்தின் இயக்கவியலின் மற்றொரு அம்சம், தனியுடைமையின் தோற்றத்திலிருந்து மாறுபட்ட முறையில், தனிநபர்களுக்கு இடையிலும் வெவ்வேறு சமூகக் குழுக்களுக்கு இடையிலும் ஆட்சியதிகார மற்றும் ஒழுங்குபடுத்தும் உறவுகள் பொது வாழ்க்கையின் ''மேற்பரப்புக்கு'' வருகின்றன என்பதாகும். உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில்

ஈடுபட்டிருக்கின்றவர்களுடைய நடவடிக்கைகளின் மீது பொது நிர்வாகத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் மேன்மேலும் அதிகரித்தது என்பதைக் கொண்டு இதைப் பொருள்முதல்வாத அடிப்படையில் விளக்கலாம். அதே சமயத்தில் வெளித்தோற்றத்தில் விருப்பாற்றல் உடையதாகவும் தனிநபர்களிடம் நேரடியாக முன்வைக்கப்பட்டதாகவும் இருக்கின்ற இந்த அரசு-சட்ட வரையளவுகள் ஏற்கெனவே பண்டைக்காலத்தில் — எங்கெல்ஸ் வலியுறுத்தியதைப் போல — இயற்கை மற்றும் உற்பத்திச் சாதனங்களுடன் மனிதர்களுடைய உறவுகளினால் முடிவில் நிர்ணயிக்கப்படுகின்றன.

மக்கள் பெருந்திரளினருக்கு எதிராகச் செலுத்தப்படுகின்ற பொது அதிகாரத்தின் தோற்ற நிகழ்ச்சிப் போக்கை, குறிப்பிட்ட சமூகக் குழுக்களின், சுரண்டல் வர்க்கத்தின் தனியுரிமைகள் உறுதியாக்கப்படுகின்ற வடிவமாக எங்கெல்ஸ் கண்டார். அப்படியானால் அரசு என்பது உடைமை இல்லாதவர்களுக்கு எதிராக உடைமையாளர்களின் ஸ்தாபனமாக, முந்தியவர்களின் மறைவான மற்றும் நேரடியான கோரிக்கைகளை எதிர்த்துப் பிந்தியவர்களின் தனியுரிமைகளைப் பாதுகாக்கின்ற ஸ்தாபனமாகத் தோன்றுகிறது என்பது பெறப்படும்.

அரசின் சாராம்சத்தைப் பற்றிய இந்த விளக்கம், தனியுடைமை உறவுகளிலிருந்து அரசு-ஆட்சியதிகார உறவுகள் பிரிந்திருப்பதாக

முதலாளி வர்க்க அறிஞர்கள் கூறுகின்ற தத்துவங்களை — ''நிர்வாக இயல்வாதம்'', ''நிர் வாக இயல் புரட்சி'', இதரவற்றை — ஆதாரபூர்வ மாக விமர்சிப்பதை சாத்தியமாக்குகிறது. இது மிகவும் முக்கியமானது; ஏனென்றால் முதலாளித்துவ உலகத்தில் தனியுடைமைக்கு எதிராக அரசு அதிகாரம் ''சுதந்திரமானது'' என்ற கட்டுக்கதையை முதலாளித்துவ சமூக வியல் வன்மையாக ஆதரிக்கிறது.

எங்கெல்ஸ் அரசு அதிகாரப் பிரச்சினையை ஆராய்ந்ததானது இன்றும் — குறிப்பாக, முத லாளி வர்க்க சமூகவியல் கருத்தமைப்புகளை விமர்சிப்பதற்கு — பொருத்தமுடையதாக இருக் கிறது. உதாரணமாக, பிரெஞ்சு வழக் குரைஞரான ரோஜர் பின்டோ அரசியல் சமூகம், அரசு என்னும் கருத்துகளுக்கு இடையில் வேறுபாடு காண்கிறார்; ''குலமரபு குழுக்களிலிருந்து சாம்ராஜ்யங்கள் வரை, சமய ஆட்சிகள் முதல் நவீன அரசுகள் வரை'', எந்த சமூகத்துக்கும் முதலாவது ஒரு குணாம்சம் என்று அறிவிக்கிறார்; மேற்கு ஐரோப்பாவில் 14 மற்றும் 16ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் முதலாளித்துவ அரசியல் மேற்கட்டுமானத்தின் தோற்றத் துடன் அரசின் தோற்றத்தை இனங் காணுகிறார்.* முதலாளி வர்க்க சமூகவியலாளர்

* Roger Pinto, Madeleine Grawitz, *Méthodes des sciences sociales,* tome 1, Précis Dalloz, Paris, 1964, pp. 136, 150.

கள் அடிக்கடி அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் ''நிர்வாகத் தொகுதி யோடு'' மேலெழுந்த வாரியாக ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்; மக்கள்தொகையின் மீதான அதன் தாக்கத்தை ''அதிகார உறவுகள்'' என்று பார்க்கிறார்கள். அரசின் வர்க்க சாராம்சம் குலமரபு அமைப்பின் பொது சுயநிர்வாகத்திற்கு எதிரிடையானது என் பதை மேற்கூறிய இரண்டு கருத்துகளும் புறக்கணிக்கின்றன.

அரசின் வர்க்க சாராம்சத்தை அடிப் படையாக ஏற்றுக் கொள்கின்ற அறிஞர்கள் கூட அரசின் தோற்றம் சம்பந்தமான பிரச்சினைகளின் சிக்கலான தன்மையினால் பல்வேறு கருத்துகளை விரித்துரைக்கிறார்கள். வர்க்கங்கள் மற்றும் அரசு தோன்றுகின்ற நிகழ்ச்சிப் போக்குகள் காலத்தில் எப்படி நடந்தன என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டு இந்த விவாதம் நடைபெறுகிறது; முதலில் அரசு தோன்றியது, பிறகு வர்க்கங் கள் தோன்றின என்று சில ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர்; சிலர் அரசுக்கு முன்பாக வர்க்கங்கள் தோன்றின என்று கருதுகிறார்கள்; தொடக்கத்தில் வர்க்கம்-அரசு என்ற சுற்றுவட்டத்திற்குள் இந்த உறவுமுறை வடிவங்கள் வேறுபடுத்தப்படவில்லை என்று சிலர் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இந்த முக்கியமான பிரச்சினையைத் தெளிவு படுத்துவதற்கு எங்கெல்சின் தத்துவ ஆராய்ச்சி கணிசமாக உதவுகிறது. இங்கே மார்

கனிடமிருந்து எங்கெல்ஸ் வேறுபடுகிறார். அரசின் வர்க்கத் தன்மை முரணியல்பான சமுதாயத்தின் செயல்முறை வடிவம் என்று எங்கெல்ஸ் கண்டார்; பொதுவான உலக வரலாற்றில் வர்க்கங்கள் மற்றும் அரசு தோன்றுகின்ற நிகழ்ச்சிப் போக்குகள் ஒரே சமயத்தில் நடைபெற்றன என்று அவர் எடுத்துக்காட்டினார்.

இராணுவ ஜனநாயகத்தின் சாராம்சத்தைப் பற்றியும் கிழக்கத்திய எதேச்சாதிகாரம் என்ற கருத்தமைப்புடனான அதன் உறவைப் பற்றியும் இன்று கூட விவாதம் நீடிக்கிறது. இது அரசு தோன்றுகின்ற பல்வேறு வழிகளைப் பற்றிய விரிவான பிரச்சினையை எழுப்புகிறது. எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** மற்றும் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்னும் நூல்களில் இப்பிரச்சினையை ஆராய்ந்தார். எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** என்னும் நூலின் இரண்டாம் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் (1885), பண்டைக்கால வரலாற்றைப் பற்றிய பகுதியை இன்னும் துல்லியமாகத் தெளிவு படுத்த விரும்பியதாகவும் ஆனால் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** வெளியாகியிருப்பது அத்தகைய அவசியத்திலிருந்து தன்னை விடுவித்து விட்டது என்றும் எழுதினார். சில தற்கால ஆராய்ச்சியாளர்கள் இக்கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, பண்டைய கிழக்கைப் பற்றிய விவரங்களின் அடிப்படையில் எங்கெல்ஸ்

**டூரிங்குக்கு மறுப்பு** என்ற நூலில் செய்த முடிவுகளை முற்றிலும் நிராகரித்திருப்பதாகக் கருதுகிறார்கள்.

குலமரபு அமைப்பின் பொது சுயநிர்வாகம் அரசு அதிகாரத்துக்கு மாறுகின்ற வடிவமே இராணுவ ஜனநாயகம் என்று எங்கெல்ஸ் கண்டார்; பண்பாடற்ற நிலையில் இருந்த மொத்த மக்களினங்களுக்கும் அடிப்படையான தேவைகளைப் பெற்றுத் தருகின்ற குறிப்பிட்ட சாதனம் என்ற முறையில் செய்யப்படுகின்ற இராணுவ நடவடிக்கைகளின் குறிப்பிட்ட நிலைமைகளில் இந்த மாற்றம் நடைபெறுகிறது. முறையாக நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல் அல்லது ஏராளமான மக்களின் மத்தியப்படுத்தப்பட்ட நடவடிக்கையின் இதர வடிவங்களைக் கோரிய பிரத்யேகமான புறச்சூழல் நிலைமைகளில் பல கூட்டுச் சமூகங்களுக்கு உள்ள பொது பொருளாதார தேவைகளின் அடிப்படையில் நிர்வாக அதிகாரத்தை மிகை ஊட்ட முறையில் தீவிரப்படுத்துவது அரசு அதிகாரத்தின் செயல்கள் மற்றும் பொறியமைவின் தோற்றத்தில் இதற்கு முற்றிலும் எதிர் வடிவமாக இருக்கக் கூடும். எங்கெல்ஸ் மார்க்சைப் போல இராணுவ ஜனநாயகத்தை வலியுறுத்தி அதைக் கிழக்கத்திய எதேச்சாதிகாரத்தின் — அவர் அதை **டூரிங்குக்கு மறுப்பு** நூலில் பகுப்பாய்வு செய்தார் — இயக்கவியல் எதிர்நிலையாகக் கண்டார். இந்தக் காரணத்தினால்தான் எங்கெல்ஸ்

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலில், இராணுவத் தலைமையை அடிப்படையாகக் கொண்ட அதீனிய மற்றும் ரோமானிய அரசுகளின் தோற்றத்துக்குப் பக்கத்தில் அரசு உருவாக் கத்தின் மற்றொரு வடிவத்தை, அதாவது ''மார்க்குகள், கிராமங்கள், எஸ்டேட்டுகள், நகரங்கள் ஆகியவற்றின் ஆதி அமைப்பு முறையிலிருந்தும் அதற்கு அக்கம்பக்கமாகவும் பொது அதிகாரம் படிப்படியாக எழுவதைக்''* குறிப்பிடுகிறார்; இது யுத்தக் கைதிகளைப் பிடிப்பதுடனும் இராணுவ வெற்றிகளுடனும் நேரடியான இணைப்பைக் கொண்டிருக்க வில்லை. இப்புத்தகத்தில் எங்கெல்ஸ் அரசு தோன்றுகின்ற பல்வேறு வழிகளை இந் நிகழ்ச்சிப் போக்கின் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டுக் காரணிகளின் சார்புநிலை முக்கியத் துவம் என்ற கண்ணோட்டத்தில் ஆராய்கின் றாரே தவிர, டூரிங்குக்கு மறுப்பு நூலில் அவர் செய்ததைப் போல பொருளாதார-அமைப்பு அல்லது இராணுவ-அமைப்புக் கடமைகளின் கண்ணோட்டத்தில் ஆராயவில்லை.

அரசு தோன்றுகின்ற நிகழ்ச்சிப் போக்கின் இயக்கவியலிலுள்ள குறியடையாளமான கூறு கள் புதிதாக விடுதலையடைந்த ஆப்பிரிக்க நாடுகளின் மேற்கட்டுமானத் துறையில் வெளிப் படுகின்றன.

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 265.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் அலை காலனியாதிக்க நிர்வாகத்தின் வரிவசூல்-ஒடுக்குமுறைப் பொறியமைவை அகற்றி அதற்குப் பதிலாக ஒரு புது வகையான மேற்கட்டுமானத்தை ஏற்படுத்தியது; அதன் தன்மை புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் சமூகத் திசையமைவினால் — சோஷலிச அல்லது முதலாளித்துவத் திசை யமைவினால் — நிர்ணயிக்கப்பட்டது. இந்த நாடு கள் எத்தகைய திசையமைவைப் பின்பற் றினாலும் அவை தம்முடைய ஸ்தல நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். பல்வேறு பால்-வயதுக் குழுக் களைச் சேர்ந்தவர்களின் நடத்தையை சமூக ரீதியாக ஒழுங்குபடுத்துகின்ற மரபுவழிப்பட்ட குலமரபு முறையைக் காலனியாதிக்கம் (மிகவும் உருத்திரிபான வடிவத்தில் என்றாலும்) பாது காத்து வைத்திருந்தது. அந்த முறை யுகப் பழமையான சோம்பல் முறையாகக் கெட்டுப் போயிருந்தது; அதற்குச் சுறுசுறுப்புண்டாக்க வேண்டும் அல்லது அதை அகற்ற வேண்டும்.

புதிதாக விடுதலையடைந்து முதலாளித் துவத் திசையமைவைப் பின்பற்றுகின்ற நாடு களில் ''உயர் வட்டாரங்களில்'' வகுத்தளிக்கப் படுகின்ற அரசின் முதலாளித்துவ ஆதரவு மாதிரியுடன் மேற்கட்டுமானத்தின் கீழ் பகுதி களைத் ''தகவமைக்கின்ற'' நிகழ்ச்சிப் போக்கு புறவய ரீதியாக குலமரபு அமைப்பின் எல்லா எச்சங்களையும் பலாத்காரமாக அழிப்பதை உள்ளடக்கியிருக்கிறது.

சோஷலிச திசையமைவைப் பின்பற்றுகின்ற ஆப்பிரிக்க அரசுகளைப் பொறுத்தவரை, ''உயர்வான சமூக அமைப்பு'' என்னும் சுற்றுவட்டத்துக்குள் ''பண்டைய குலங்களின் சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத் துவத்தின்'' * பிரத்யேகமான வடிவத்துக்கு எதிர்கால மனித சமூகம் திரும்பக் கூடும் என்கின்ற மார்கனுடைய கருத்து — அது சூக்குமமான, வெகுளித்தனமான வடிவத்தில் கூறப்பட்டிருந்தாலும் — மேன்மேலும் அதிகரிக் கின்ற பொருத்தத்தைக் கொண்டிருக்கிறது. இந்தக் கருத்து மொத்த மார்க்சியப் போதனையின் சாரத்துடன் பொருந்தியிருப் பதால் மார்க்ஸ், எங்கெல்சின் நுணுக்கமான கவனத்தை ஈர்த்தது. மரபுவழிப்பட்ட குலமரபு மற்றும் கூட்டுச் சமூக வாழ்க்கை வடிவங் களைப் பாதுகாத்திருக்கின்ற மக்களினங் களின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் பாதையை ''நேராக அமைக்கின்ற'' கருத்தை நோக்கி ஒரு தன்னியல்பான அணுகு முறையை — அதை மார்கன் உணரவில்லை — இந்தக் கருத்தில் இன்று நாம் காண முடியும். வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாத கட்டங்களைக் கொண்ட மெல்லிழை வான, ஒத்திசைவான, படிப்படியான, தொடர்ச் சியான வளர்ச்சி என்ற பரிணாமவாதக் கோட்பாட்டை மார்கன் ஆதரித்தபடியால்,

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், நூல் திரட்டு, தொகுதி 45, பக்கம் 269 (ருஷ்ய மொழியில்).

மேற்கூறிய அணுகுமுறைக்குரிய எல்லா முன் நிபந்தனைகளும் அவருடைய நூலில் இடம் பெற்றிருந்தபோதிலும் அவரால் அத்தகைய அணுகுமுறையை வகுத்தளிக்க முடியவில்லை.

மார்கன் ''உயர்வான சமூக அமைப்பை'' மிகவும் சூக்குமமான வடிவத்தில் (நிர்வகிப் பதில் ஜனநாயகம், சமூக உறவுகளில் சகோதரத்துவம், உரிமைகளில் சமத்துவம், எல்லோருக்கும் கல்வி), முதலாளித்துவ நாகரி கத்தைப் பற்றிய தன்னுடைய எதிர்மறை யான அணுகுமுறையின் வெளியீடாகக் கண் டார் என்பது உண்மையே. அந்த நாகரிகம் தன்னை அழிக்கப் போகின்ற கூறுகளைத் தனக்குள்ளாகவே கொண்டிருக்கிறது (மார் கனுடைய நூலைப் பற்றி மார்க்ஸ் எழுதிய குறிப்புகளில் இந்த அம்சத்தைச் சிறப்பாக வலியுறுத்துகிறார்). ஆகவே மார்கனுக்கு குல சமூகத்துடன் ஒப்பிட்டுக் காண்பது எதிர்கால சமூக அமைப்பைப் பற்றிய வர்ணனைக்கு அறிதலியல் அடிப்படையாக இருந்தது.

### அரசு அதிகாரத்தின் வர்க்க சாராம்சம்

எங்கெல்ஸ் அரசு தோன்றிய நிகழ்ச்சிப் போக்கிற்கு பொருளாயத ரீதியான, உள்ளீ டான காரணங்கள் இருந்ததைப் பற்றிய தன்னுடைய ஆய்வுரைக்கு சந்தேகத்துக் கிடமில்லாத நிரூபணத்தைத் தன்னுடைய நூலில் வெளியிட்டார். உற்பத்திச் சக்திகள்

வளர்ச்சியடைந்த பொழுது குலமரபு உற்பத்தி உறவுகள் மிகவும் குறுகலாகி அவற்றின் வளர்ச்சியைத் தடுக்க ஆரம்பித்தபடியால் அவை அகற்றப்பட்டு வர்க்க முரணியல்புகள் மற்றும் அரசியல் ஒடுக்குமுறையைக் கொண்ட சமுதாயம் ஏற்பட்டது. பண்டைய கிரேக்கர் கள், ரோமானியர்கள் மற்றும் ஜெர்மானியர் கள் மத்தியில் அரசு தோன்றுகின்ற நிகழ்ச்சிப் போக்கின் மூன்று வழிகளை **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற நூலில் பொழித்துரைக்கின்ற பொழுது எங் கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''ஆகவே, அரசு என்பது வெளியேயிருந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு சக்தியல்ல; ஹெகல் சாதிப்பது போல் அது 'தார்மீகக் கருத்தின் யதார்த்தமோ' 'பகுத்தறிவின் பிரதிபிம்பமோ, யதார்த்தமோ' அல்ல. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை எட்டிய சமுதாயத்தின் விளைபொருள் அது. இந்தச் சமுதாயம் தீர்வு காண முடியாத ஒரு சுய முரண்பாட்டில் சிக்கிக் கொண்டு விட்டது என்றும், சமரசப்படுத்த முடியாத பகைமைகளாகப் பிளவுபட்டு விட்டது, அவற் றைப் போக்கி விடும் சக்தி தனக்கில்லை என்றும் ஒப்புக்கொள்வதே அது. ஆனால் இந்தப் பகைமைகள், எதிர்மறையான பொரு ளாதார நலன்களைக் கொண்டிருக்கும் வர்க்கங்கள் ஒரு வீணான சண்டையிலே தம்மையும் சமுதாயத்தையும் அழித்து விடாமல் இருக்க செய்யலாம் என்பதற்காக சமுதாயத்

துக்கு மேலாக நின்று கொண்டிருப்பதாக வெளிக்காட்டிக் கொள்கிற ஒரு சக்தி அவசியப்பட்டது; அதன் நோக்கம் சண்டையின் கடுமையைத் தணிப்பது, 'ஒழுங்கு' என்ற வரம்புக்குள் அதைக் கட்டுப்படுத்துவது. சமுதாயத்திலிருந்து தோன்றிய, ஆனால் சமுதாயத்திற்கு மேலாகத் தன்னை உயர்த்தி வைத்துக் கொண்டு, சமுதாயத்திலிருந்து மேலும் மேலும் தன்னை வேறாகப் பிரித்துக் கொண்டு செல்லும் இந்தச் சக்தியே அரசு என்பது.''*

சுரண்டும் அரசின் மாற்று வடிவங்கள் அனைத்தின் சாராம்சம் என்னவென்றால், ''பொது விதியாகவே, அது மிகவும் வலிமை வாய்ந்த, பொருளாதார வகையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம், அரசின் மூலமாக, அரசியல் ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது; இந்த வழியிலே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்கி வைத்துச் சுரண்டிக் கொண்டிருப்பதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது''** அதே சமயத்தில் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியில் ஒவ்வொரு புதிய படியும் தன்னுடன் குறிப்பிட்ட வகையான வர்க்க முரணியல்புகளைக் கொண்டு வந்து அதற்குப் பொருத்தமான அரசின் ரகத்தை

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, pp. 326—327.

** *Ibid.,* p. 328.

நிர்ணயம் செய்தது. ''இப்படித்தான் பண்டைய அரசு, எல்லாவற்றிற்கும் மேலாக, அடிமைகளை ஒடுக்கி வைப்பதற்கு அமைந்த அடிமைச் சொந்தக்காரர்களின் அரசாக இருந்தது; அதே போலத்தான் நிலப்பிரபுத்துவ அரசு என்பதும் விவசாயப் பண்ணையடிமைகளையும் நிலப்பிரபுக்களுக்கு கீழ்ப்பட்டவர்களையும் ஒடுக்கி வைத்திருப்பதற்கு அமைந்த பிரபு வம்சத்தினரின் அரசாக இருந்தது; அதே போலத்தான் நவீன காலப் பிரதிநிதித்துவ அரசும் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கு அமைந்த கருவியாகும்.'' * சுரண்டும் அரசின் வரலாற்று ரீதியான வகைகள் அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகிய ''நாகரிகத்தின் மூன்று மாபெரும் சகாப்தங்களின் குணாம்சமாகிய அடிமைத்தனத்தின் மூன்று மாபெரும் வடிவங்களுடன்'' ** (இவை மார்க்ஸ், எங்கெல்சால் சுட்டிக்காட்டப்பட்டன) பொருந்துவதைக் காண்பது கடினமல்ல.

கடைசியாக, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் நூலின் முடிவில் எங்கெல்ஸ் வரலாற்று ரீதியில் அரசின் தற்காலிகமான தன்மையை வலியுறுத்துகிறார்; அரசு ஆதிக்காலத்திலிருந்து இருப்பதல்ல, அது நிரந்தரமாக இருக்கப் போவதுமல்ல; ஏனென்றால் முதலாளித்துவத்தைப் புரட்சி

* *Ibid.*

** *Ibid.*, p. 332.

கரமாகத் தூக்கியெறிகின்ற யுகம், சோஷலிச சமூகம் கம்யூனிசத்தை நோக்கி வளர்ச்சி யடைகின்ற யுகம் நெருங்கி வந்து கொண் டிருக்கிறது என்று எங்கெல்ஸ் சுட்டிக் காட்டுகிறார். "அவற்றுடன் (வர்க்கங்களுடன் — ப-ர்.) அரசும் தவிர்க்க முடியாதபடி வீழ்ந்து போகும். உற்பத்தியாளர்களின் சுதந்திரமான, சமமான சங்கம் என்ற அடிப்படையில் உற்பத்தியை புதிய வகையில் ஒழுங்கமைக்கப் போகின்ற சமுதாயம் அரசு இயந்திரம் முழுவதையும் அது அப்போது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது தொல் பொருள் மியூசியத்தில், கைராட்டை, வெண் கலக் கோடாரி ஆகியவற்றின் பக்கத்தில் கொண்டு போய் வைத்து விடும்." *

எங்கெல்சின் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலை மிகவும் சிறப்பாக மதிப்பிட்ட லெனின் எங்கெல்சின் நூல்களிலேயே அது மிகவும் பிரபலமானது என்று கருதினார்; ** அரசின் தோற்றத் தையும் சாராம்சத்தையும் பற்றிய எங் கெல்சினுடைய விளக்கத்தை அவர் மிகவும் சார்ந்திருந்தார் என்பதைக் குறித்துக் கொள் வது மிகவும் முக்கியமாகும். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் முற் பொழுதில், 1917 ஆகஸ்ட் மாதத்தில் லெனின்

---

* *Ibid.*, p. 330.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 6, 1980, பக்கம் 26 பார்க்க.

எழுதிய அரசும் புரட்சியும் என்னும் நூல் இதை எடுத்துக்காட்டும்.

''வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் புறநிலைக் காரணங்களால் இணக்கம் காண முடியாதவை ஆகின்றனவோ அங்கே, அப்பொழுது, அந்த அளவுக்கு அரசு உதித்தெழுகிறது''* என்று லெனின் எழுதினார். அரசு எனப்படும் சக்தியைப் பற்றிய கருத்தை எங்கெல்ஸ் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலில் வளர்த்துக் கூறியது அவருடைய சாதனை என்று லெனின் கருதினார்.

அரசுப் பிரச்சினையைப் பற்றி இத்தீவிரமான புதிய அணுகுமுறை வெறும் ஏட்டுப்புலமையான, முற்றிலும் தத்துவ ரீதியான அணுகுமுறை என்று லெனின் கருதவில்லை. குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூலின் பொருள் நவீன உலகத்திலிருந்து வெகு தூரத்துக்கு அப்பாலிருப்பதைப் போலத் தோன்றினாலும், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த புரட்சிக்காரர்கள் அதைப் படிக்கும் பொழுது பெறக் கூடிய, பெற வேண்டிய சித்தாந்த மற்றும் அரசியல் முடிவுகளை அவர் வாசகரின் தனியான கவனத்துக்குக் கொண்டு வருகிறார். இந்நூலுக்

* அதே நூல், பக்கங்கள் 14 – 15.

கும் அவர் காலத்தில் மிகவும் அவசரமாக இருந்த பிரச்சினைகளுக்கும் இடையிலிருந்த இணைப்பை லெனின் திறமையாக வெளிப் படுத்துகிறார்: ''தற்போது ஆதிக்கம் புரியும் அற்பவாதக் கண்ணோட்டத்தின்படி, சிறிதும் கவனிக்கத் தேவையற்றதென்றும் பழக்கப் பட்டு சர்வசாதாரணமாகி விட்டதென்றும் கருதப்படும் ஒன்றை, வேர்விட்டு ஆழப் பதிந்ததோடு இறுகிக் கெட்டிப் பிடித்தவை என்றும் சொல்லத் தக்க தப்பெண்ணங்களால் புனிதமென உயர்த்தி வைக்கப்படும் இதனை, மாபெரும் புரட்சிகர சிந்தனையாளர்கள் எல்லோரையும் போலவே எங்கெல்சும் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறார். நிரந் தரச் சேனையும் போலீசும்தானே அரசு அதிகாரத்தின் பிரதான கருவிகள். இவ் வாறின்றி வேறு எப்படி இருக்க முடியும்?'' * என்று **அரசும் புரட்சியும்** நூலின் ஆசிரியர் கேட்கிறார்.

லெனின் இக்கருத்தை மேலும் வளர்த்துச் சென்று, உலகப் புரட்சிகர நிகழ்ச்சிப் போக்கின் அவசரமான நடைமுறைக் கடமை களைப் பற்றிய தத்துவ ரீதியான சிந்த னையில் எங்கெல்சின் பொருத்தத்தைப் பாராட்டு கிறார். ''மாபெரும் புரட்சி ஒவ்வொன்றும் நடைமுறையில், திட்டவட்டமாகவும், இன்னும் முக்கியமாய் வெகுஜனச் செயல் அளவிலும்

---

* அதே நூல், பக்கங்கள் 18 — 19.

நம் முன் எழுப்பும் அதே பிரச்சினையை, அதாவது ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட 'தனிவகைப்' படைகளுக்கும் 'தானாகவே இயங்கும் மக்களது ஆயுதமேந்திய ஒழுங் கமைப்புக்கும்' இடையிலான உறவு பற்றிய பிரச்சினையை மேற்கூறிய மேற்கோளில் எங்கெல்ஸ் தத்துவார்த்த வழியில் எழுப்பு கிறார். ஐரோப்பிய, ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம் இந்தப் பிரச்சினைக்கு எப்படித் திட்டவட்டமான முறையில் பதிலளிக்கிறது என்பதை நாம் பார்ப்போம்.'' *

அதே சமயத்தில் லெனின், அரசின் சாராம்சம் மற்றும் வரலாற்று விதிகுறித்த மார்க்சியத் தத்துவத்தைப் பற்றி சந்தர்ப்ப வாத-திருத்தல்வாத மற்றும் சூன்யவாத-அராஜகவாத கருத்தமைப்புகளில் ஏற்கெனவே இருக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற ஊக முறையான திரிபுகளைப் பற்றி துல்லியமான முறையியல் பகுப்பாய்வை அளித்தார்; அது லெனினுடைய சிறப்பான நுண்ணோக்கையும் தொலை நோக்கையும் எடுத்துக் காட்டியது.

எங்கெல்ஸ் பிரதானமாக பண்டைக்கால வரலாற்றிலிருந்து கிடைத்த விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அரசின் தோற் றத்தையும் சாராம்சத்தையும் பற்றிய மார்க் சியத் தத்துவத்தை விரித்துரைத்தது ருஷ்யா வில் வெற்றிகரமான சோஷலிசப் புரட்சி

---

* அதே நூல், பக்கம் 20.

யின் முற்பொழுதில் லெனினுடைய நுணுக்கமான கவனத்தை ஈர்த்தது இயற்கையே. மார்கனுடைய **பண்டைய சமுதாயத்தைக்** குறித்து மார்க்ஸ் எழுதிய குறிப்புகளிலும் எங்கெல்சினுடைய நூலிலும் நேரடியான கூட்டு சுயநிர்வாகத்திற்கும் அரசு அதிகாரத்திற்கும் இடையேயான உறவைப் பற்றிய கருத்துகள் உள்ளன. இவை இன்றும் தம்முடைய பொருத்தத்தை இழந்து விடவில்லை என்பது அதே அளவுக்குத் தெளிவானதே. சோஷலிச திசைவழியைப் பின்பற்றுகின்ற ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள புரட்சிகரக் கட்சிகளின் சித்தாந்த ஊழியர்களுக்கு இன்று அவை விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் நவீன ஆப்பிரிக்காவில் அதிகாரத்தை அமைக்கின்ற, சாராம்சத்தில் எதிர்நிலையான இந்த இரண்டு முறைகளும் — ''கீழேயிருந்து'' அமைக்கப்படுகின்ற மரபுவழிப்பட்ட குலமரபு மற்றும் கூட்டுச் சமூக சுயநிர்வாகமும் ''மேலேயிருந்து'' அமைக்கப்படுகின்ற அரசு-சட்ட ஒழுங்குபடுத்தலும் — இன்னும் அடுத்தடுத்து இருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில், முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையின் சுற்றுவட்டத்துக்குள் உழைக்கும் மக்களை ஒடுக்குகின்ற இயந்திரம் என்ற முறையில் சுரண்டல் அரசுக் கட்டத்தைத் தவிர்ப்பதற்கு வரலாற்று ரீதியில் சாதகமான வாய்ப்பை ஏற்படுத்துதல் அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்ட

அரசியல் கடமையாகிறது. இக்கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வர்க்க அணுகுமுறை அவசியம்; அதே சமயம், சமூக அமைப்புகளில் இன்னும் எஞ்சியிருக்கின்ற நேரடியான (சாராம்சத்தில் பூர்விகமான) ஜனநாயகத்தின் மரபுவழிப்பட்ட உறவுமுறைகளின் பால் — இவை மக்களால் புரிந்து கொள்ளப்படக் கூடியவையாக, அவர்கள் அறிந்தவையாக இருக்கின்றன — உளவியல் ரீதியாக நெகிழ்வான அணுகுமுறை அவசியம்.

ஆப்பிரிக்க நாடுகளின் சித்தாந்தத்தில் நேரடியான, குலமரபு ஜனநாயகத்தின் மிச்சக் குறியீடாக 'பாலாபர்' என்னும் மரபு இன்னும் எஞ்சியிருக்கிறது. அதில் எல்லோரும் சேர்ந்து பொது விவகாரங்களை நிதானமாக விவாதிப்பார்கள்; அதன் முடிவில் ஏகமனதான முடிவுகள் செய்யப்படலாம். இது குலங்களிலும் இனக்குழுக்களிலும் நிலவிய மிகவும் தொன்மையான பொதுமக்கள் பேரவைகளை ஒத்திருக்கிறது; இந்த நடைமுறை காலனியாதிக்க ஆட்சி முறையின் கீழ் மரபுவழிப்பட்ட அமைப்புகள் மற்றும் சடங்குமுறைகளின் ஆழத்தில் அரை உயிருடன் நீடித்தது; ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் விடுதலை பெற்ற பொழுது இந்த நடைமுறை ''புத்துயிர்'' பெற்றது. ஆனால், இது பூர்விகமான ''நாடாளுமன்றவாதத்தின்'' சுதேசி வடிவம் என்று எடுத்துக்காட்டுவதற்கும், மக்களை ''மேலேயிருந்து'' இயக்குகின்ற போலி ஜன

நாயக சாதனமாக (முதலாளித்துவப் பிரதி நிதித்துவ முறையைப் பின்பற்றி) இதை மாற்றுவதற்கும் செய்யப்பட்ட முயற்சிகள் — மொத்தமாகப் பார்க்கும் பொழுது — வெற்றி பெறவில்லை. மறு பக்கத்தில், சோஷலிச திசைவழியைப் பின்பற்றுகின்ற சில நாடு களில், பொது விவகாரங்களைக் கூட்டாக, ஜனநாயக ரீதியில் விவாதிக்கின்ற மரபு மக்களின், குறிப்பாக விவசாய மக்கள் திரளினரின் சமூக-வர்க்க மற்றும் அரசியல் உணர்வைத் தூண்டுவதற்கு உபயோகிக்கப் படுகிறது. உதாரணமாக, எத்தியோப்பியாவில் மக்கள் கூட்டுகளில் அல்லது அவற்றை நிர்வாகம் செய்கின்ற பொது உறுப்புகளில் முடிவுகள் செய்கின்ற முக்கியமான வழியாக பாலாபர் கருதப்படுகிறது. மொசாம்பிக் நாட்டில் கிராமத்தில் அல்லது நகரத்தின் ஒரு வட்டாரத்தில் மக்களின் அல்லது தொழிற்சாலையில் தொழிலாளர்களின் பொதுப் பேரவைக் கூட்டங்களில் **பிரெலிமோ (FRELIMO)** கட்சிக்குப் பரீட்சார்த்த மற்றும் முழு உறுப்பினர்களைத் தேர்வு செய்கின்ற நடைமுறையும் பாலாபரை நினைவுபடுத்து கிறது; அங்கோலா நாட்டில் ஸ்தல மக்கள் சபைகளின் செயல்முறையின் சில கூறுகளும் அதை நினைவுபடுத்துகின்றன.

கூட்டு வாழ்க்கை ஜனநாயக மரபுகள், செயல்முறைகள் மற்றும் உறவுமுறைகள் மீது பல நூற்றாண்டுகளாகப் படிந்திருக் கின்ற ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலின்

அழுக்கை அப்புறப்படுத்தி அவற்றை வேண்டு மென்றே ''கடைப்பிடிக்கின்ற'' செயல்தந் திரம், உருவாகிக் கொண்டிருக்கின்ற புரட்சி கர-ஜனநாயக அரசு அமைப்பில் உழைக்கும் மக்கள் திரளினரை ஈடுபடுத்த உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய சமூக உறவுகளில் சுறுசுறுப்பாகப் பங்கெடுக்கின்ற வாய்ப்பு உழைக்கும் மக்களை நேரடியான குலமரபு உறவுமுறையின் குறுகிய எல்லை களுக்கு அப்பால் இட்டுச் செல்கிறது; இது அவர்களுடைய அரசியல் கருத்துகள் உருவாக் கம் பெறுவதையும் விரிவடைவதையும் ஊக்கு விக்கிறது. இந்த நோக்கம் எந்த நாடுகளில் பின்பற்றப்படவில்லையோ (முதலாளித்துவத் திசைவழி நாடுகள்) அல்லது கணிசமான காலத்துக்கு முறையாகத் தீர்க்கப்பட வில்லையோ அங்கே பழகிப்போன (முந்திய), ஆன்மீக திருப்திக்கு ஒருவித உளவியல் மாற்றீடாக சில சமயம் மத நம்பிக்கை தோன்றும்; ஏனென்றால் மதத்தில் அடங்கி யிருக்கின்ற சமத்துவம், சகோதரத்துவம், பரஸ்பர உதவி மற்றும் அயலாரை நேசித் தலைப் பற்றிய உபதேசங்கள் குலச் சமுதாயத் தின் தார்மீக நெறிகளுடன் பொருந்து கின்றன.

# 9. வர்க்க சமுதாயம் உருவாகிய வழிகள்: முதல் சமூகப் புரட்சி

## வர்க்க சமுதாயத்தின் உருவாக்கத்தில் முரண்பாடான போக்குகள்

பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமுதாயத்தை நோக்கிய மாற்றத்தின் ஒற்றுமை மற்றும் பல்வகைத் தன்மை பற்றிய பிரச்சினையை எங்கெல்ஸ் அதன் வரலாற்று இயக்கியலில் பார்க்கிறார். பூர்விக சமுதாயத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியின் சமமற்ற தன்மைக்கு உற்பத்திச் சக்திகள் மற்றும் சமூக உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சியின் சமமற்ற தன்மை காரணமாகும். பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்துக்கும் இடைக் கட்டத்துக்கும் இடையில் உள்ள எல்லையில் இவ்விரண்டு காரணிகளும் பிரதானமாக புறச்சூழல் நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

வர்க்கங்கள் தீவிரமாக உருப்பெற்ற யுகத்தைப் பகுப்பாய்வு செய்த பொழுது இந்த நிகழ்ச்சிப் போக்கிற்குள் முரண்பாடான மற்றும் பரஸ்பர தொடர்புடைய போக்குகள் இருந்ததை எங்கெல்ஸ் பார்த்தார். அடிமையுடைமை மற்றும் நிலப்பிரபுத்துவ வடிவங்களுக்குள் வர்க்கப் பகைமைகள் நிலவும் சமுதாயம் உருவாகிறது என்பதை அவர்

எடுத்துக்காட்டியதுடன் வர்க்கங்கள் உருப்பெறு கின்ற இந்த இரண்டு வடிவங்களுக்கும் பொதுவான அடிப்படை இருப்பதையும் சுட்டிக்காட்டினார். மாற்றத்தின் விளைவாக எந்த பகைமுரண்பாட்டு சமூகம் ஏற்படுகிறது என்பதில் மட்டும் விஷயம் இருக்கவில்லை, வரலாற்று ரீதியாக ஒரு திட்டவட்டமான சமூகத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்திற்கும் உற்பத்தி உறவுகளின் தன் மைக்கும் இடையிலுள்ள மெய்யான உறவில் தான் விஷயம் இருக்கிறது.

வர்க்கங்களின் தோற்றத்தில் இயக்கவியல் ரீதியாக பரஸ்பர தொடர்புடைய போக்குகள் இருக்கின்றன. ''சுதந்திர மனிதன், அடிமை என்பதோடு பணக்காரன், ஏழை என்ற வேறுபாடும் கூடிக் கொண்டது...''* என்பதில் இப்போக்குகள் அடங்கியுள்ளன. வேறு வார்த்தை களில் சொல்வதென்றால், உபரி உழைப் பையும் உபரி விளைபொருளையும் ஒரு வருடைய சொந்த கூட்டுச் சமூகம் அல்லது இனக்குழுவைச் சேர்ந்த மக்களிடமிருந்தும் பறித்துக் கொள்ள முடியும் (குல, இனக் குழுவின் மேற்குடியினர் பொது நிதியையும் கூட்டு வேலைகளையும் அபகரிப்பதன் மூலம்), அதே போல் அந்நிய இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து இவற்றை பறித்துக் கொள்ள முடியும்.

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 321.

இந்தக் குழுக்களின் சமூக அந்தஸ்து ஒன்றுகுவிவதற்கு ஒரு வெளிப்படையான போக்கு இருக்கிறது: ஒருவருடைய சொந்த கூட்டுச் சமூகத்துக்குள் ''அந்நியர்களைச்'' சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் ஒருவருடைய சொந்த கூட்டுச் சமூகத்தின் உறுப்பினர் களைக் கடன் பாக்கிக்காக அடிமையாக்கி அவர்களை வெளிநாட்டில் விற்பனை செய்தல். பண்டைய கிரீசில் சொலோனுடைய சீர்திருத் தத்துக்கு முற்பொழுதில் இந்த நிலைதான் நிலவியது. ஆதிக்கம் மற்றும் அடிமைப் படுத்துதலை அடிப்படையாகக் கொண்ட உறவுகளைப் பற்றி அவை ''இரண்டு வழிகளில் தோன்றின''* என்று எங்கெல்ஸ் எழுதினார். முதலாவதாக ''சமுதாயம் சம்பந் தப்பட்ட சமூகப் பணிகளின் சுதந்திரம் காலப் போக்கில் அதிகரித்து சமுதாயத்தின் மீது ஆதிக்கம் ஏற்படுகின்ற வரை வளர்ச்சி யடைந்தது....''** இப்பொருளைப் பற்றிய நவீன வெளியீடுகளில் இப்போக்கு நிலப் பிரபுத்துவத்துக்கு முந்தியது என்று பெரும் பாலும் குறிப்பிடப்படுகிறது. ''சொந்த'' மக்களைச் சுரண்டுவதையும் ஒடுக்குவதையும் அடிப்படையாகக் கொண்ட நிலப்பிரபுத் துவத்தின் சமூக உறவுகளின் பொதுவான குணாம்சங்களை அது புனருற்பத்தி செய்கிறது.

---

* F. Engels, *Anti-Dühring,* Progress Publishers, Moscow, 1978, p. 219.

** *Ibid.*, p. 220.

இந்த வகையைச் சேர்ந்த வர்க்க உருவாக்கம் தொடக்கத்தில் பண்டைய கிழக்கத்திய நாகரி கங்களில் இருந்தது. இந்த நாகரிகங்கள், கூட்டுச் சமூகங்களில் ஒன்றுசேர்க்கப்பட்ட நேரடி உற்பத்தியாளர்களின் அடிமைத்தனத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

இரண்டாவதாக, பண்பாடற்ற நிலையின் ஆரம்பக் கட்டத்தில், அந்நிய இனக்குழுவைச் சேர்ந்த மக்கள் சிறைப்படுத்தப்பட்டு அல்லது வேறு வழிகளில் கூட்டுச் சமூகத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பொழுது தம் முடைய உழைப்புச் சக்தியை ''பொது உழைப்புச் சேர்மத்துக்குள்'' கொண்டு வந் தனர். ஒன்றுபடுத்தப்பட்ட உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கிற்குள் ஈடுபட்டவர்களின் வெறும் எண்ணிக்கை அதிகரிப்பு, பாரபட்சம் காட் டுதல் அல்லது ஒடுக்குமுறையின் அவசியமின்றி பலனளித்தது. இந்த நிகழ்வு, ''சிறைப்பிடிக்கப் பட்டவர்களுக்கு சம உரிமைகளைக் கொடுத்து வெற்றியடைந்தவர்களின் சமூக அமைப்புக்குள் அவர்களைப் பலாத்காரமாகச் சேர்த்துக் கொள் வதே. இங்கே சிறைப்பிடிக்கப்பட்ட நபருடைய உபரி உழைப்புக்கு உபயோகமில்லை, அந்த நபருடன் ஒத்துழைப்பதன் மூலம் ஏற்படுகின்ற பொது நன்மை மட்டுமே இருந்தது.'' *

உத்தேசமாக பண்பாடற்ற நிலையின்

---

* G. V. Plekhanov, *Selected Philosophical Works,* in five Volumes, Vol. III, Progress Publishers, Moscow, 1976, p. 144.

இடைக் கட்டத்தில் சிறைப்பட்டவர் துணைப் பொருளாதார நடவடிக்கைகளைச் செய்கின்ற வேலைக்காரனாக மாற்றப்படுகிறார். எங்கெல்ஸ் இதை குடும்ப, தந்தைவழி அடிமைத்தனம் என்றார். இது பண்டைய கிழக்கிலும் மைசின் கிரீசிலும் இட்ராஸ்கன் இத்தாலியிலும் ஸ்லாவ் உலகத்திலும் சகாராவுக்குத் தெற்கிலுள்ள ஆப்பிரிக்காவிலும் மற்றும் இதர பிரதேசங்களிலும் நிலவியது. பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டத்தில்தான், இரும்பு யுகம் தோன்றிய பிறகுதான் அடிமைத்தனம் ''பண்டைய கூட்டுச் சமூகத்துக்கு அப்பால் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த எல்லா மக்களினங்கள் மத்தியிலும் தலைமையான உற்பத்தி வடிவமாக வெகு சீக்கிரத்தில் ஆயிற்று''. *

வர்க்கங்களின் உருவாக்கத்தில் மேலே வர்ணிக்கப்பட்ட போக்குகள் பரஸ்பர தொடர்புடையவை, பரஸ்பரம் நிர்ணயிக்கப்பட்டவை என்பது நவீன வரலாற்று ஆதாரங்களால் நிரூபிக்கப்படுகிறது.

முதலாவதாக, இந்த இரண்டு போக்குகளில் எதிலும் அடுத்த, எதிரிடையான போக்கின் கலப்பு முற்றிலும் இல்லாதிருப்பது எந்த இடத்திலும் இல்லை. பண்டைய கிரேக்க மற்றும் ரோமானிய உலகத்தில், அடிமை உடைமை உற்பத்தி முறையின் உச்ச நிலையைக் குறித்த கட்டத்தில் கூட

---

* F. Engels, *Anti-Dühring*, p. 221.

சார்புநிலையில் இருந்தவர்கள் மற்றும் சுதந்திர மனிதர்களுடைய உழைப்பின் பொருளாதாரப் பாத்திரம் கணிசமாக இருந்தது. மத்தியகால, நிலப்பிரபுத்துவ ஐரோப்பாவில், உற்பத்திச் சாதனங்கள் முற்றிலும் பறிக்கப்பட்டிருந்த மக்கள் குழுவினர் அடிமைத்தனத்துக்கு நெருக்கமான நிலையில் சுரண்டப்பட்ட வடிவங்கள் ஒருபோதும் முற்றிலும் மறைந்து விடவில்லை.

இரண்டாவதாக, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வளர்ச்சியில் குறிப்பிட்ட கட்டத்தில் ஏதாவதொரு போக்கு தலைமையாக இருப்பது எதிர் நிலையான போக்கு மறுபடியும் தலை தூக்குவதற்குத் தவிர்க்க முடியாத விதத்தில் வழி வகுத்தது. பண்டைக்கால உலகம் தகர்ந்த பொழுது கொலோனாடஸ்*, கிலியென்டேலா** என்ற உறவுமுறைகளிலும் சுதந்திரமடைந்த அடிமைகளிடமும் இதைப் பார்க்கிறோம். மத்தியகால ஐரோப்பாவில் அடிமையுடைமை ரகத்தைச் சேர்ந்த சுரண்டல் வடிவங்கள் மறுபடியும் தோன்றுவதை ஜெர்மனியில் பண்ணையடிமை முறை இரண்

---

* கொலோனாடஸ் (colonatus) – சிறு விவசாய உற்பத்தியாளர்களுக்கும் (கொலோனஸ்கள்) பெரும் நிலச்சுவாந்தார்களுக்கும் இடையிலான உற்பத்தி உறவுகளின் வடிவம். இது ரோமானியப் பேரரசின் இறுதிக் காலத்தில் நிலப்பிரபுத்துவ உறவுகள் தோன்ற அடிப்படையாகத் திகழ்ந்தது. – ப-ர்.

** கிலியென்டேலா (clientela) – சமூகச் சார்புநிலை வடிவம், இது அடிமையுடைமை முறைக்கு நெருக்கமானது; இத்தாலியில் கி. மு. 6–3ஆம் நூற்றாண்டுகளில் ஆரம்பக் கால அடிமையுடைமை அமைப்பில் நிலவியது. – ப-ர்.

டாவது முறையாகத் தோன்றிய போதும் ருஷ்யா சர்வதேச தானியச் சந்தைக்குள் நுழைந்த பொழுது பிரபுவிற்காக செய்த கட்டாய வேலைகளின் பாத்திரம் அதிகரித்ததிலும் பண்ணையடிமை முறை தீவிரப் படுத்தப்பட்டதிலும் பார்க்க முடியும்.

மூன்றாவதாக, இரண்டு போக்குகளும் (''சொந்த'' மற்றும் ''அந்நிய'' மக்களைச் சுரண்டுதல்) பொதுவான மூலத்தைக் கொண்டிருக்கின்றன; பூர்விக அமைப்பிலிருந்து வர்க்க சமூகத்துக்கு மாறுகின்ற கட்டத்தின் சமூக வடிவங்களே அந்த மூலமாகும். குறைவான வளர்ச்சி காரணமாக ஒடுக்குமுறையின் இரண்டு வடிவங்களும் ஒரே சமயத்தில் ஒத்து வாழ்வது இக்கட்டத்தின் குணாம்சமாகும்.

பண்டைய எகிப்து மற்றும் அதை ஒத்திருந்த இதர சமூக அமைப்புகள் பண்டைய கிரீசிலும் ரோமிலும் மூலச்சிறப்பான முறையில் நிலவிய உற்பத்தி முறைக்கு ஒருபோதும் மாறவில்லை. அவை — பண்டைய கிழக்கத்திய நாடுகளின் நிலைமைகளில் — பண்பாடற்ற நிலையின் இடைக் கட்டத்தின் சாத்தியமான முழு வளர்ச்சியைப் பிரதிநிதித்துவம் செய்தன. பண்பாடற்ற நிலையின் உச்சக் கட்டத்திற்குள் இந்த சமூகங்கள் வரலாற்று ரீதியில் ''புதைபடிவங்களாக'' நுழைந்தன. மரபு வழி ஆட்சி முறைக்கு முந்திய எகிப்தில் ஏற்கெனவே அடிமையுடைமை ரகச் சுரண்டல் வடிவங்களை நோக்கிய ஒரு போக்கு தெளிவாகப் புலப்படுவதை இங்கே சுட்டிக்

காட்ட வேண்டும். இக்கட்டத்தில்தான் பெண்களை அடிமைகளாக வைத்திருக்கும் பழக்கம் ஏற்பட்டது; கலப்பையை ஆண்கள் இழுக்கின்ற பண்டைய சித்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; அடிமைகளை ''வாழ்கின்ற பிரேதங்கள்'' என்று குறிப்பிடுகின்ற மறை பொருள் வாசகம் படித்தறியப்பட்டிருக்கிறது, இதரவை. எனினும் குறிப்பிட்ட இயற்கை மற்றும் வரலாற்று நிலைமைகளால் எகிப்தில் அடிமை முறை அடிப்படையில் வீட்டு வேலைக்கு மட்டுமே பயன்பட்டது, அதன் வாய்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை.

நீர்ப்பாசன விவசாயத்துக்குப் பல நூற்றாண்டுகளாகத் திரட்டப்பட்ட அனுபவத்தைக் கொண்ட திறமை மிக்க நபர்கள் பாடுபட்டுழைக்க வேண்டியிருந்தது; தங்களுடைய உழைப்பின் பலனில் அவர்கள் ஜீவாதாரமான அக்கறை கொண்டிருக்க வேண்டும். எனவே ''வாழ்கின்ற கருவியான'' பண்டைக்கால அடிமை பொருளாதார அமைப்பின் ஜீவாதாரமான துறைகளில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கவில்லை. அதே சமயத்தில் அன்றைக்கிருந்த ஆயுதத் தரம் அதிகமான எண்ணிக்கையில் அடிமைகளைச் சிறைப்பிடிப்பதற்கும் சுரண்டுவதற்கும் இன்னும் போதுமானதாக இருக்கவில்லை.

வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் தர்க்கவியலை அந்த இரண்டு போக்குகளில் ஏதாவதொன்றுடன் விசும்பில் அல்லது காலத்தில் இனங்காணக் கூடாது.

பண்டைய உலகம் பூர்விக கூட்டுவாழ்வு அமைப்பின் சிதைவின் மேல் நேரடியாகத் தோன்றி விடவில்லை. அது தன்னுடைய தோற்றத்துக்குப் பண்டைய கிழக்கின் கலாசார சாதனைகளையும் சமூகப் போக்குகளையும் அடிப்படையாக கொண்டிருந்தது. உதாரண மாக, கிரீசிலும் ரோமிலும் இருந்த அடிமையுடைமை முறை, பெருந்திரளான மக்களுக்கு அரசியல் உரிமைகள் அறவே இல்லாமற் செய்கின்ற பண்டைய கிழக்கத்திய நாகரிகங்களின் போக்கைச் சேர்த்துக் கொண்டு அதை மூலச்சிறப்பான வடிவமாக வளர்த்தது. கொடுங்கோலனுக்கும் எல்லா உரிமைகளையும் இழந்த பெருந்திரளான அடிமைகளுக்கும் இடையில் அடிமையுடைமை அரசின் சுதந் திரமான மக்கள் இருந்தார்கள். இச்சுதந் திரமான மக்கள் தம் பங்கிற்கு அடிமைகளை (மற்றும் சார்புநிலையில் இருந்த மக்களை) பொறுத்தமட்டில் கூட்டு கொடுங்கோலனாகவும் அவர்களின் பெயரில் ஆட்சி புரிந்து கொண் டிருக்கின்ற மேல்மட்டத்தினரான சிலருடைய பொருளாதாரச் சுரண்டல் மற்றும் அரசியல் சூழ்ச்சியின் இலக்காகவும் இருந்தனர்.

மார்கனும் எங்கெல்சும் இப்பிரச்சினையை ஆராய்ந்த பொழுது, இந்த ''கிரேக்க அதிசயம்'' ஸ்தல, வரலாற்று ரீதியான இடைநிலை வடிவங்களின் பல நூற்றாண்டுக் காலப் பழைய அடுக்குகள் என்ற அடிப்படையின் மீது தோன்றியதென்றும் அவ்வடிவங்களின் பல கூறுகளும் போக்குகளும் பண்டைய

கிழக்கத்திய நாகரிகங்களின் மூலச்சிறப்பான வடிவங்களை வியத்தகு முறையில் ஒத்திருந்தன என்றும் உறுதியாக இன்னும் கூற முடியாதிருந்தது. கிரீசிலும் ரோமிலும் தான் ஆராய்ந்த தொன்மையான சமூக உறவுமுறைகள் சமகால சமூக நிலைமைகளின் விளைவு என்பதாக மட்டுமின்றி ''நமக்கு எதுவுமே தெரியாத முந்திய கால வரலாற்றின்'' விளைவாகவும் இருந்தன என்ற உண்மையை எங்கெல்ஸ் அடிக்கடி குறிப்பிட்டார்.

நிலப்பிரபுத்துவம் மூலச்சிறப்பான அடிமையுடைமை முறையின் நேரடியான வாரிசு அல்ல. பூர்விகக் கூட்டுவாழ்வு சமூகத்துக்கும் வர்க்க சமூகத்துக்கும் இடையிலிருந்த மாறும் வளர்ச்சிக் கட்டத்திலிருந்தும், இக்கட்டத்தில் மக்களை உழைக்க நிர்ப்பந்திக்கும் பொருளாதாரப் பொறியமைவைப் பயன்படுத்துகின்ற போக்கிலிருந்தும் அது வளர்ச்சியடைந்தது. இங்கே சுரண்டலின் தொன்மையான வடிவங்களுக்கு மாறுபட்ட விதத்தில், முக்கியமாக சுதேசி மக்கள்தான் சுரண்டப்பட்டார்கள். நிலப்பிரபுத்துவம் ஒரே இரவில் வளர்ச்சியடைந்து விடவில்லை; அது சில கட்டங்களைக் கடந்து வந்தது; ஒவ்வொரு கட்டமும் நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் மூலச்சிறப்பான வடிவங்களுக்கு மேன்மேலும் நெருங்கி வந்தது. ''ஒன்பதாவது நூற்றாண்டின் சமூக வர்க்கங்கள் நசித்துக் கொண்டிருந்த நாகரிகம் என்னும் சதுப்பு நிலத்தில் உருவாகவில்லை, ஒரு புதிய நாகரிகத்தின் பிரசவ வேதனை

யிலேயே உருவாயின'' என்று எங்கெல்ஸ் எழுதினார். ''ரோமானிய கொலோனசுக்கும் புதிய பண்ணையடிமைக்கும் மத்தியில் சுதந்திரமான பிராங்கிஷ் விவசாயி இருந்தான்.'' *

மார்க்சுக்கு முன்பு வரலாற்று விஞ்ஞானத் துறையில் அடிமை முறை ''மனிதகுலத்தின் அவமானம்'', ''வரலாற்றின் தவறு'' என்றும் நிலப்பிரபுத்துவம் ''ஐரோப்பாவின் ஆயிரம் வருட சோம்பல்'', ''வரலாற்றில் இடைப் பிளவு'', ''வரலாற்று ரீதியான சூன்யம்'' என்றும் கருத்துமுதல்வாத முறையில் மதிப்பீடுகள் செய்யப்பட்டன. எங்கெல்ஸ் இத்தகைய மதிப்பீடுகளை மறுத்தார்; சமூக வளர்ச்சியில் இந்த இரண்டு கட்டங்களும் புறநிலையில் தவிர்க்க முடியாதவை, இயக்கவியல் ரீதியில் பரஸ்பரம் தொடர்புடையவை என்று திட்டவட்டமான வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் எடுத்துக்காட்டினார்.

துல்லியமாக ''அடிமை முறையுடன் (அது தனது பூரண வளர்ச்சியை நாகரிகத்தில் அடைந்தது) சமுதாயத்தில் சுரண்டுகின்ற வர்க்கம், சுரண்டப்படுகின்ற வர்க்கம் என்ற முதன்முதலான மாபெரும் பிளவு ஏற்பட்டது.... அடிமை முறை என்பது சுரண்டலின் முதல் வடிவம், பண்டைய உலகிற்குரிய வடிவம் அது'' ** என்று எங்கெல்ஸ் வெளிப்படையாகக்

---

* K. Marx and F. Engels, *Selected Works,* Vol. 3, p. 314.

** *Ibid.,* pp. 331—332.

கூறினார் (வரலாற்று ஆதாரங்கள் இதை நிரூபிக்கின்றன). எனினும் அதே சமயத்தில் நேரடியாக நிலப்பிரபுத்துவத்தின் வடிவத்தில் வர்க்க உருவாக்கம் பூர்த்தியடைகின்ற சாத்தியத்தை (உதாரணம், பண்டைக்கால ஜெர்மானியர்களின் வரலாறு) அவர் அங்கீகரித்தார். அடிமையுடைமை உற்பத்தி முறை — குறைந்த பட்சம் ஒரு பிரதேசத்தில் — தீவிரமான நெருக்கடியில் இருப்பது அத்தகைய நிகழ்ச்சிப் போக்கிற்கு முக்கியமான பொருளாயத முன்நிபந்தனை என்று எங்கெல்ஸ் கருதினார். ''அடிமை முறை இனிமேல் லாபகரமாக இல்லாதபடியால் அது அழிந்தது'',* பெரிய பண்ணைகள் (லாட்டிபூண்டியாக்கள்) மற்றும் அடிமை உழைப்பை உபயோகிக்கும் பட்டறைகள் (எர்கஸ்டேரியன்கள்) சிறு அளவு விவசாயத்தின் மீது தமக்கிருந்த பழைய செல்வாக்கை இழந்தன; பயிர்த்தொழில் மற்றும் கைத்தொழில் துறைகளில் சிறு அளவு விவசாயம் ''மறுபடியும் லாபகரமான ஒரே வடிவமாயிற்று''.** ஆகவே அடிமைகள் விடுதலை செய்யப்பட்டார்கள் அல்லது கொலோனஸ்களாக மாற்றப்பட்டார்கள். பலம் மிகுந்த, பண்பாடற்ற நிலையின் இராணுவத் தலைவர்கள், ரோமானிய அதிகாரிகள் மற்றும் பெரிய நிலவுடைமையாளர்களின் ஒடுக்குமுறையிலிருந்து

* *Ibid.*, p. 310.

** *Ibid.*, p. 309.

தப்பி வந்த விவசாயிகளைத் தம்முடைய பாதுகாப்பில் வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்; திருச்சபையும் அவர்களுடைய உதாரணத்தைப் பின்பற்றியது. விவசாயிகள் தங்களுடைய நிலவுடைமை உரிமையைத் தம்முடைய பாதுகாவலனிடம் அல்லது திருச்சபையிடம் கொடுத்துவிட்டு வாழ்க்கை முழுவதும் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை வைத்துக் கொள்ள வேண்டும் என்பது இத்தகைய பாதுகாப்புக்கு நிபந்தனையாக இருந்தது.* பாதுகாப்புக்குப் பரிவர்த்தனையாக உடைமைகளை இழந்த சாதாரண ஜெர்மானியர்களுடன் சேர்ந்து ரோமானிய மாகாணங்களின் முன்னாள் குடிமக்கள் ஒரு சமூகப் பகுதியின் உள் வரிச்சட்டமாக அமைந்தனர்; அப்பகுதி நிலப்பிரபுத்துவ முறையில் பெரும் நிலப்பிரபுக்களைச் சார்ந்திருக்கின்ற விவசாயி வர்க்கமாக வளர்ச்சியடைந்தது. மூலச்சிறப்பான அடிமை முறையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டிருந்த நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய உற்பத்தி உறவுகள் உருப்பெற்றன; அவை புதிய யுகத்தின் உற்பத்திச் சக்திகளின் நிலை, வாய்ப்பு வளம் மற்றும் வளர்ச்சித் தேவைகளுடன் மிகவும் நெருக்கமாகப் பொருந்தியிருந்தன.

அடிமையுடைமை உற்பத்தி முறை, அதன் மூலச்சிறப்பான வடிவத்தில் மத்திய தரைக்

---

* *Ibid.*, p. 310.

கடல் பிரதேசத்தில் மட்டுமே இருந்தது என்றபோதிலும் அது ஸ்தல நிகழ்வாகச் சிறிதும் இருக்கவில்லை; உலக வரலாற்று நிகழ்வாக அது இருந்தது. மனிதகுலத்தின் சமூக வளர்ச்சியில் அதன் முக்கியத்துவமும் தாக்கமும் உலகம் தழுவியவையாக இருந்தன. வெறும் பூகோளக் கோணத்தில் கூட அது, பழைய உலக நாகரிகத்தின் தொட்டிலாக இருந்த மூன்று கண்டங்களின் மீதும் தாக்கம் செலுத்தியது. அடிமையுடைமை உற்பத்தி முறையின் மையப் பகுதி மத்திய தரைக் கடல் பிரதேசம் என்பது உண்மையே; ஹெகல் அதைப் பண்டைய உலகத்தின் இதயம் என்று கூறினார். ரோமானியப் பேரரசின் முக்கியத்துவத்தைப் பற்றி எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ‘‘ரோமானிய உலக ஆதிக்கத்தின் சமமட்டமாக்கும் இழைப்புளி பல நூற்றாண்டுகளாக எல்லா மத்திய தரைக் கடல் நாடுகளையும் இழைத்து நிரவி வந்தது. எங்கெல்லாம் கிரேக்க மொழி எதிர்ப்பைக் காட்டவில்லையோ அங்கெல்லாம் எல்லாத் தேசிய மொழிகளும் மறைந்து ஒரு கொச்சை லத்தீன் மொழி வந்தது. தேசிய இன வேறுபாடுகள் எவையும் இப்போதில்லை; கோல்கள், இபெரியர்கள், லிகூரியர்கள், நோரிகர்கள் என்று யாருமில்லை — எல்லோரும் ரோமானியர்களாகி விட்டனர். ரோமானிய நிர்வாகமும் ரோமானியச் சட்டமும் எங்கணுமே பண்டைய குலமரபு குழுக்கூட்டுகளைக் கலைத்து விட்டன, அதன்

மூலம் ஸ்தல, தேசிய சுய வெளியீட்டின் கடைசி மிச்சசொச்சங்களை நசுக்கி விட்டன.... உலக ஆதிக்கம் கொண்ட ரோமானிய அரசு உண்டாக்கி வைத்த நிலைமை இதுதான்; உள்நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்து வதையும் வெளிப்புறத்திலுள்ள பண்பாடற்ற வர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதையும் தான் அது தனது வாழ்வுரிமைக்கு அஸ்திவார மாகக் கொண்டிருந்தது. ஆனால் அது ஏற்படுத்திய ஒழுங்கு படுமோசமான ஒழுங் கின்மையை விட மோசமாயிருந்தது; குடிமக் களை எந்த பண்பாடற்றவர்களிடமிருந்து பாதுகாப்பதாக அது நடித்ததோ, அந்தப் பண்பாடற்றவர்களை விமோசனமளிப்பவர் களெனக் குடிமக்கள் வாழ்த்தி வரவேற்றார் கள்.'' * ரோமானியப் பேரரசின் உலக ஆதிக்கத்தைப் பற்றி எங்கெல்ஸ் எழுதியுள்ள சொற்கள் வெறும் உவமையலங்காரமல்ல. தனது சிகரத்தை எட்டி விட்ட அடிமை யுடைமை உற்பத்தி முறை, பண்பாடற்ற நிலை நிலவிய பரந்த வெளிப் பகுதியின் மீது மட்டுமின்றி, அக்கால மனிதகுலத்தின் வரலாற்று வளர்ச்சியின் மொத்தப் போக்கின் மீதும் தாக்கம் செலுத்தியதை இச்சொற்கள் பிரதிபலிக்கின்றன. ஆகவே அடிமை முறை விசேஷமான, புறவய ரீதியில் அவசியமான உற்பத்தி முறை என்ற வகையில் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது என்பதை

---

* *Ibid.*, pp. 307—308.

கடல் பிரதேசத்தில் மட்டுமே இருந்தது என்றபோதிலும் அது ஸ்தல நிகழ்வாகச் சிறிதும் இருக்கவில்லை; உலக வரலாற்று நிகழ்வாக அது இருந்தது. மனிதகுலத்தின் சமூக வளர்ச்சியில் அதன் முக்கியத்துவமும் தாக்கமும் உலகம் தழுவியவையாக இருந்தன. வெறும் பூகோளக் கோணத்தில் கூட அது, பழைய உலக நாகரிகத்தின் தொட்டிலாக இருந்த மூன்று கண்டங்களின் மீதும் தாக்கம் செலுத்தியது. அடிமையுடைமை உற்பத்தி முறையின் மையப் பகுதி மத்திய தரைக் கடல் பிரதேசம் என்பது உண்மையே; ஹெகல் அதைப் பண்டைய உலகத்தின் இதயம் என்று கூறினார். ரோமானியப் பேரரசின் முக்கியத்துவத்தைப் பற்றி எங் கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''ரோமானிய உலக ஆதிக்கத்தின் சமமட்டமாக்கும் இழைப் புளி பல நூற்றாண்டுகளாக எல்லா மத்திய தரைக் கடல் நாடுகளையும் இழைத்து நிரவி வந்தது. எங்கெல்லாம் கிரேக்க மொழி எதிர்ப்பைக் காட்டவில்லையோ அங்கெல்லாம் எல்லாத் தேசிய மொழிகளும் மறைந்து ஒரு கொச்சை லத்தீன் மொழி வந்தது. தேசிய இன வேறுபாடுகள் எவையும் இப்போதில்லை; கோல்கள், இபெரியர்கள், லிகூரியர்கள், நோரிகர்கள் என்று யாரு மில்லை—எல்லோரும் ரோமானியர்களாகி விட் டனர். ரோமானிய நிர்வாகமும் ரோமானியச் சட்டமும் எங்கணுமே பண்டைய குலமரபு குழுக்கூட்டுகளைக் கலைத்து விட்டன, அதன்

மூலம் ஸ்தல, தேசிய சுய வெளியீட்டின் கடைசி மிச்சசொச்சங்களை நசுக்கி விட்டன.... உலக ஆதிக்கம் கொண்ட ரோமானிய அரசு உண்டாக்கி வைத்த நிலைமை இதுதான்; உள்நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்து வதையும் வெளிப்புறத்திலுள்ள பண்பாடற்ற வர்களிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதையும் தான் அது தனது வாழ்வுரிமைக்கு அஸ்திவார மாகக் கொண்டிருந்தது. ஆனால் அது ஏற்படுத்திய ஒழுங்கு படுமோசமான ஒழுங் கின்மையை விட மோசமாயிருந்தது; குடிமக் களை எந்த பண்பாடற்றவர்களிடமிருந்து பாதுகாப்பதாக அது நடித்ததோ, அந்தப் பண்பாடற்றவர்களை விமோசனமளிப்பவர் களெனக் குடிமக்கள் வாழ்த்தி வரவேற்றார் கள்.'' * ரோமானியப் பேரரசின் உலக ஆதிக்கத்தைப் பற்றி எங்கெல்ஸ் எழுதியுள்ள சொற்கள் வெறும் உவமையலங்காரமல்ல. தனது சிகரத்தை எட்டி விட்ட அடிமை யுடைமை உற்பத்தி முறை, பண்பாடற்ற நிலை நிலவிய பரந்த வெளிப் பகுதியின் மீது மட்டுமின்றி, அக்கால மனிதகுலத்தின் வரலாற்று வளர்ச்சியின் மொத்தப் போக்கின் மீதும் தாக்கம் செலுத்தியதை இச்சொற்கள் பிரதிபலிக்கின்றன. ஆகவே அடிமை முறை விசேஷமான, புறவய ரீதியில் அவசியமான உற்பத்தி முறை என்ற வகையில் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது என்பதை

* *Ibid.*, pp. 307—308.

சில ஆராய்ச்சியாளர்கள் மறுப்பது ஆதார மற்றது. அடிமையுடைமை உற்பத்தி முறையின் மூலச்சிறப்பான வடிவங்கள் முற்றிலும் ஸ்தல அளவில், அதாவது சில பிரதேசங்களில் மட்டுமே இருந்தன என்னும் கருத்து வர்க்க சமூகக் கட்டத்திற்குள் நுழைந்த ஒவ்வொரு மக்களினத்தின் வரலாற்றிலும் வளர்ச்சியடைந்த அடிமை முறையைத் தேடுகின்ற முயற்சிகளைப் போலவே தவறாகும்.

அடிமையுடைமை உற்பத்தி முறையில் நாகரிகம் பிரதானமாக கைத்தொழில்களையும் அவை நடைபெற்றுக் கொண்டிருந்த நகரங்களையும் உள்ளடக்கியிருந்தது. நாகரிகம் விவசாயத்துக்குள், பழைய கூட்டுச் சமூகங்களுக்குப் பதிலாக ஏற்பட்டிருந்த கிராமங்களின் வாழ்க்கைக்குள் ஊடுருவுவதற்கு நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை உதவியாக இருந்தது. நிலப்பிரபுத்துவத்தின் ஆரம்பக் கட்டங்கள் தேக்கக் காலகட்டமாக, நகரங்கள் மற்றும் நகரக் கைத்தொழில்கள் நசிவடைந்த காலகட்டமாக இருந்தாலும் நகரக் கைத்தொழில்களின் சாதனைகள் மிகவும் அதிகத் தொலைவான கிராமப் பகுதிகளையும் எட்டின. ஆகவே நிலப்பிரபுத்துவத்தின் தொடக்கம் வரலாற்றில் இடைப் பிளவாக இருக்கவில்லை, முந்திய உற்பத்தி முறையின் சுற்றுவட்டத்துக்குள் வரலாற்று வளர்ச்சியின் படிப்படியான போக்கில் ஏற்பட்ட இடையீடுகளில் ஒன்றாக இருந்தது.

## முதல் சமூகப் புரட்சி: சாராம்சமும் வடிவங்களும்

பரிணாமவாதியான மார்கனும் புரட்சி வீரரான எங்கெல்சும் பண்டைக்கால கிரேக்க, ரோமானிய வரலாற்றைப் பற்றி எழுதுவதற்கு உபயோகித்த ஆதாரங்கள் மிகவும் பெரிய அளவுக்கு ஒத்திருந்தபோதிலும் வர்க்க-பகைமுரண்பாட்டு சமுதாயத்தின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் அவர்கள் இருவருக்கும் இடையிலுள்ள வேறுபாடு குறிப்பாகப் புலப்படுகிறது.

உலக வரலாற்றின் படிப்படியான வளர்ச்சியில் இடை நிறுத்தங்களும் பாய்ச்சல்களும் அல்லது சமூகப் புரட்சிகளும் குணாம்சமாக இருக்கின்றன என்று எங்கெல்ஸ் எடுத்துக் காட்டினார்; காலாவதியான சமூக உறவுகளையும் நிறுவனங்களையும் ஒழிப்பதில் ''வரலாற்றின் மருத்துவச்சி'' என்ற முறையில் பலாத்காரத்தின் பாத்திரத்தை அவர் வலியுறுத்தினார். சமூக வன்முறையைப் பற்றி எழுதுகின்ற பொழுது எங்கெல்ஸ் அதை அதன் வடிவங்களில் ஒன்றாகிய ஆயுதமேந்திய ஒடுக்குமுறையுடன் இனங்காணவில்லை. தனிச் சொத்து மற்றும் அரசின் தோற்றம் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்தை நோக்கிய புரட்சிகரமான மாற்றத்தின் இயக்கவியல் ரீதியாக பரஸ்பர தொடர்புடைய அம்சங்கள் என்னும் எங்கெல்சின் தத்துவம் ரூஸ்ஸோவின்

''சமுதாய ஒப்பந்தக்'' கருத்தை அல்லது டூரிங் ஆயுதமேந்திய வன்முறையைத் தனி முதலாக்குவதைக் காட்டிலும் மிகவும் உயர் வானதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பூர்விகக் கூட்டுவாழ்வு சமூகத்திலிருந்த கூட்டு உழைப்பு, சம வினியோகம், ஜனநாயக ரீதியில் பொது விவகாரங்களை முடிவு செய்தல் ஆகிய மரபுகள் பண்டைக்கால உலகத்தின் சமூகப் போராட்டத்தின் இலக்காக இருந்தன. வர்க்கங்கள் உருவாக்கமடைந்த காலம் நெடுகிலும் — வர்க்க சமூகத்திலும் கூட — இந்த மரபுகளின் எச்சங்கள் சுரண்டல் தீவிரப்படுத்தப்படுவதை சாதாரண மக்கள் எதிர்க்கின்ற சாதனமாகப் பயன்பட்டன. எங்கெல்ஸ் தன்னுடைய புத்தகத்தில் இந்த மெய்விவரத்தைப் பன்முறை குறிப்பிடுகிறார். எனினும், பழைய குல மேற்குடியினர் மற்றும் அவர்கள் மத்தியிலிருந்து தோன்றிய அல்லது அவர்களுடன் ஒத்துழைத்த வர்த்தக மற்றும் லேவாதேவிச் சக்திகள் அதிகாரத் தையும் அதனுடன் வந்த செல்வம் மற்றும் தனியுரிமைகளையும் தக்கவைத்துக் கொள் வதற்குப் பாடுபட்டனர். அப்படிச் செய் கின்ற பொழுது அவர்கள் இரத்த முறை உறவுப் பிணைப்புகளையும் குலத் தெய்வங் களின் சித்தத்தையும் பற்றிக் குறிப்பிடுவது வழக்கம். அவசியமேற்படும் பொழுது கீழ்ப் படிய மறுக்கின்றவர்களுக்கும் ஏழையான, முரண்டு செய்கின்ற கடன் பெற்றவர் களுக்கும் எதிராக பொதுஜன நிர்ப்பந்தத்

தையும் (மிகவும் அநேகமாக ஆயுத வன்முறையையும்) உபயோகப்படுத்தினார்கள்.

சமூகப் பகுதிகளுக்கு இடையில் நடைபெற்ற போராட்டத்தில் மனிதனை மனிதன் பொருளாதார ரீதியில் சுரண்டுவதும் அரசியல் ரீதியாக ஒடுக்குவதும் பகிரங்கமான வர்க்க அமைப்புகளாக முதலில் கெட்டிப்பட்டன; அவை எந்த பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்புக்குள் படிப்படியாக உருப்பெற்றனவோ அந்த அமைப்பின் மரபுகளைத் தூக்கியெறிந்தன.

பண்டைய உலகத்தில் வர்க்க சமூகம் மற்றும் அரசின் தோற்றத்தைப் பற்றி விசேஷ ஆராய்ச்சிகளைச் செய்த எங்கெல்ஸ் இந்த நிகழ்ச்சிப் போக்கை ஒரு சமூகப் புரட்சியாகக் காண்கிறார். இப்புரட்சி சில கட்டங்களில் நடைபெறுகிறது; அப்பொழுது உடைமை உறவுகளிலும் சமூக வாழ்க்கையின் அமைப்பு ரீதியான வடிவங்களிலும் தீவிரமான மாற்றம் ஏற்படுகிறது; அவை தாம் முன்னர் இருந்த நிலைக்கு எதிரிடையாகி விடுகின்றன. ‘‘உடைமை உறவுகளின் மீது ஆக்கிரமிப்பு நடத்துவது மூலமாக அரசியல் புரட்சிகள் என்று சொல்லப்படுபவற்றை வரிசையாக சொலோன் ஆரம்பித்து வைத்தார். இதுவரை நடந்திருக்கிற புரட்சிகள் எல்லாமே ஒரு வகை உடைமையை எதிர்த்து இன்னொரு வகை உடைமைக்குப் பாதுகாப்பளிப்பதற்கே நடந்தவை. ஒரு வகை உடைமையைப் பாதிக்காமல் அவை இன்னொரு வகை

உடைமையைக் காக்க முடியாது. மகத்தான பிரெஞ்சுப் புரட்சியில் பூர்ஷ்வா உடைமையைப் பாதுகாப்பதற்காக நிலப்பிரபுத்துவ உடைமை பலியிடப்பட்டது; சொலோனின் புரட்சியில், கடன்பட்டவர்களின் உடைமை லாபம் பெற வேண்டி, கடன் கொடுத்தவர்களின் உடைமை நஷ்டப்பட வேண்டியிருந்தது. கடன்கள் எல்லாம் அப்படியே ரத்து செய்யப் பட்டன.'' *

முகம்மது நபி அவர்கள் செய்த மதப் புரட்சி என்று சொல்லப்படுவதும் கூட சொலோனுடைய சீர்திருத்தங்களை மிகவும் ஒத்திருக்கிறது. வட்டித் தொழிலை ஒழித்தல், பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவி செய்வதைக் கட்டாயமாக்குதல், சொகுசான வாழ்க்கையைக் கண்டித்தல், இதரவை மூலம் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட அராபியர்கள் மத்தியில் சமரசத்தை ஏற்படுத்துவதை அது சாத்தியமாக்கிற்று. அதன் விளைவாக, முகம்மது நபி அவர்களுடைய சீர்திருத்தங்கள் அரேபியாவில் (பெடூயின் இனக்குழுக்கள், வர்த்தகம் மற்றும் கைத்தொழில்களை ஆதாரமாகக் கொண்ட நகரங்கள் மற்றும் பாலைவனச் சோலைகளை அடிப்படையாகக் கொண்ட விவசாய சமூகங்களில்) வளர்ச்சியடைந்த சமூக முரண்பாடுகளை வெளியே, அரபு அல்லாத, முஸ்லீம் அல்லாத மக்களினங்

* *Ibid.*, p. 280.

களின் பாலான உறவுகளுக்கு மாற்றின; அவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு அரபு-முஸ்லீம் நாகரிகத்தின் இராணுவ, வர்த்தக விஸ்தரிப்புக்கும், பிறகு சித்தாந்த விஸ்தரிப்புக்கும் இலக்காக இருந்தார்கள்.

பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்புக்கும் வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்துக்கும் இடையிலுள்ள எல்லையில் அரசியல் புரட்சி நடைபெறுவதற்கு இரண்டு எதிரிடையான – ஆனால் தற்காலிகமாக ஒத்து வாழ்கின்ற – உடைமை வடிவங்கள், அதாவது பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்புடன் உயிர்க்கரு இணைப்பைக் கொண்டிருக்கின்ற கூட்டுடைமையும் இரத்த உறவுமுறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆகவே எளிதில் பராதீனப் படுத்தப்படக் கூடிய தனியுடைமையும் அவசியமாக இருக்கின்றன. சமூகக் குழுக்களில் ஏதாவதொன்று அதன் பொருளாதார நலன்கள் காரணமாக இந்த உடைமை வடிவங்களில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, அதை ஒட்டிக் கொண்டு தொங்குகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மேல்மட்டத்தினர் மத்தியில் இந்த முரண்பாடு எதிர்ப்புக் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குச் செய்யும் போராட்டத்தில் வெளிப்படுகிறது. தன்னுடைய சொந்த மக்களை அடிமைப்படுத்தியிருக்கின்ற குல மேற்குடியினரும் சமூக முரண்பாடுகளின் குவிமுனையைச் சொந்த மக்கள் வட்டத்துக்கு வெளியில், சிறைப்பட்டிருக்கும் அடிமைகள் மீது அல்லது பொருளாதார விஸ்தரிப்புக்கு இலக்காகியுள்ள

மொத்த மக்களினங்கள் மீது சுமத்த முயற்சி செய்கின்ற ஜனநாயகத்தின் ஆதரவாளர் களும் இந்த எதிர்ப்புக் குழுக்களாக இருந்தனர். இந்த சமூக நாடகத்தின் முதல் அம்சம் பண்டைய கிரீசில் ஆதிக்கம் செலுத்தியது, இரண்டாவது அம்சம் பண்டைய ரோமில் ஆதிக்கம் செலுத்தியது.

எங்கெல்ஸ் சொலோனுடைய நடவடிக் கைகளைப் பற்றி கூறும் போது ''சீர்திருத் தம்'', ''புரட்சி'' என்ற இரண்டு சொற் களையும் உபயோகிப்பது குறிப்பிடத் தக்க தாகும். முதலாளித்துவ வரலாற்றியலில் ''சொலோனுடைய சீர்திருத்தம்'' என்பது அங்கீகரிக்கப்பட்ட சொல்லாகும்; அது புரட்சி என்ற கருத்தமைப்பைத் தவிர்க்கிறது, அதை சமூக வளர்ச்சியில் ஒரு முறைகேடாக, வரலாற்றின் வாடிக்கையான போக்கில் ஒரு திரிபாகப் பார்க்கிறது. நமக்குத் தெரிந்த வரை சொலோனுடைய நடவடிக்கை ஒரு புதிய சட்டத்தை, சீர்திருத்தத்தை வெளியிடும் வடிவத்தில் அடங்கியிருந்தது. தனியான உரிமைகளைக் கொண்ட சமூகப் பகுதியினர் மத்தியில் நடைபெற்ற சிக்கலான, தீவிரமான போராட்டத்தின் போது ஏற்பட்ட பொதுஜனக் கொந்தளிப்பின் பின்னணியில் அப்புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் அதன் உள்ளடக்கத்தில் (உடைமை உறவுகளில் தீவிரமான முறையில் தலை யிடுதல், மக்கள்தொகையின் ஒரு பகுதியை மறு பகுதிக்குக் கூர்மையாக எதிர்நிலைப்

படுத்துதல்) ஒரு புரட்சியாக இருந்தது. எங்கெல்ஸ் இச்சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது (அன்று அங்கீகரிக்கப்பட்ட சொற்பிரயோகத்தைப் பின்பற்றி) ''சீர்திருத்தம்'' என்று எழுதுகிறார்; ஆனால் அதை மதிப்பிடுகின்ற பொழுது ''புரட்சி'' என்று வர்ணிக்கிறார்.

இப்புரட்சி தன் உள்ளடக்கத்தில் அடிமையுடைமைப் புரட்சியாக இருந்தது. வர்க்கப் பகைமுரண்பாடுகளின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த சமூகத்தில் இது நடைபெற்றது. அச்சமயத்தில் சுதேசி மக்களை அடிமைப் படுத்துகின்ற நிகழ்வு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது; ஆனால் அதே சமயத்தில் ''ஒற்றை'' கிரேக்க தேசத்தை அதைச் சூழ்ந்திருந்த பண்பாடற்ற இனக்குழுக்கள் மற்றும் கூட்டணிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு சுறுசுறுப்பான முயற்சிகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. உபரி உழைப்பைப் பயன்படுத்துகின்ற பொருளாதார வாய்ப்பு அந்நியர்களைச் சுரண்டுவதன் மூலமும் ஒடுக்குவதன் மூலமும் நிறைவேற்றப்பட்டது. சொலோன் மற்றும் அவரை ஆதரித்த சமூக சக்திகளுடைய நடவடிக்கையின் பொருளாதாரக் காரணங்களை எங்கெல்ஸ் பின்வரும் விதத்தில் தொகுத்துரைத்தார்: ''தங்களுடைய சொந்த குடிமக்களைப் பழமையான முறையில் கடுமையாக சுரண்டுவதற்குப் பதிலாக, இப்போது அதீனியர்கள் பிரதானமாக அடிமைகளையும் அதீனியர்களல்லாத வாடிக்கைக்

காரர்களையும் சுரண்டினார்கள்''.* இது சமூக உறவுகளில் புரட்சிக்கு வழி வகுத்தது. ''எந்த வர்க்கப் பகைமையின் அடிப்படையில் சமுதாய, அரசியல் அமைப்புகள் அமைந் திருந்தனவோ அது இப்பொழுது பிரபுக் களுக்கும் சாதாரண மக்களுக்கும் இடை யிலான பகைமையாக இருக்கவில்லை; அடிமை களுக்கும் சுதந்திரமானவர்களுக்கும், சார்பு நிலையில் இருந்தவர்களுக்கும் முழு உரிமை யுள்ள குடிமக்களுக்கும் இடையிலான பகைமை யாக அது இருந்தது.''**

உடைமை உறவுகளில் ஏற்பட்ட இப்புரட்சி மற்ற சமூகப் பிணைப்புகள் அனைத்தையும் பாதித்தது. தங்கள் வயல்களிலிருந்து நில அடமானத்தைக் குறிக்கின்ற கம்பங்கள் அகற்றப்பட்டதையும் கைவினைஞர்கள் மற்றும் இதர உழைக்கும் மக்களின் கடன்கள் ரத்துச் செய்யப்பட்டதையும் கடன் கொடுத் தவர்களால் அடிமையாக விற்பனை செய்யப் பட்ட கடனாளிகள் பணம் கொடுத்து மீட்கப்பட்டதையும் லேவாதேவிக்காரர்களிட மிருந்து தப்புவதற்காக நாட்டை விட்டு ஓடியவர்கள் தாய்நாட்டுக்குத் திரும்பியதையும் பார்த்த சாதாரண மக்களுடைய உற் சாகத்தை நாம் கற்பனை செய்ய முடியும். இதிலும் உக்கிரமான சமூகப் போராட்டம் நடந்தது. சொலோனுடைய சீர்திருத்தத்தின்

* *Ibid.*, p. 282.

** *Ibid.*, p. 284.

விளைவாகப் பொருளாயத இழப்புக்குள்ளான பெரிய உடைமையாளர்கள் மற்றும் லேவா தேவிக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக இருந்த பழைய நிலைமையைக் கொண்டு வருவதற்காக எதிர்த்தாக்குதலுக்குச் சில முயற்சிகளைச் செய்தார்கள். சொலோனுடைய சட்டத்தின் விளைவாக எழுந்த மோதல் மேலும் 85 வருடங்களுக்கு நீடித்தது; அதை உறுதிப்படுத்துவதற்கு மற்றொரு புரட்சிகரமான சீர்திருத்தம் அவசியமாயிற்று. குலமரபுத் தொடர்புகளை ஆதாரமாகக் கொண்ட மேற்குடியினருடைய வலிமையை அரித்தழிக்கின்ற நோக்கத்துடன் மக்களின் பிரதேச சுயநிர்வாகம் சம்பந்தமான சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆட்டிக்கா முழுவதும் சுயநிர்வாகம் பெற்ற நூறு கூட்டுச் சமூக வட்டாரங்களாக அல்லது ''டேம்களாகப்'' பிரிக்கப்பட்டது. அந்த டேமின் குடிமக்கள் தமக்குள்ளேயிருந்து ஒரு அதிகாரியான தலைவர், பொருளாளர், முப்பது நீதிபதிகள் மற்றும் கோயிலில் வேலை செய்வதற்கு சில பூசாரிகளையும் தேர்ந்தெடுத்தார்கள். கிளிஸ்ஃபேனிசின் பெயரோடு இணைக்கப்பட்டுள்ள இச்சட்டத்தை வர்ணிப்பதற்கு எங்கெல்ஸ் ''புரட்சி'' என்ற சொல்லை உபயோகிப்பதை நாம் மறுபடியும் பார்க்கிறோம். ''...மேற்குடியினர் தமது முந்திய சலுகை நலன்களைத் திரும்பிப் பெற முயன்றார்கள்; ஒரு குறைந்த அளவுக் காலத்துக்குத் தமது மேலாதிக்கத்தைத் திரும்பப் பெற்றனர்;

ஆனால் கிளிஸ்ஃேபனிசின் புரட்சி (கி.மு. 509) அதை இறுதியாக வீழ்த்திய வரைக்கும்தான் அது இருந்தது. அத்துடன் குல அமைப்பின் மிச்சசொச்சங்களும் வீழ்ந்து விட்டன''* என்று அவர் எழுதுகிறார்.

பண்டைய ரோமில் வர்க்க சமூகம் மற்றும் அரசின் தோற்றத்தைப் பொறுத்த மட்டில் சேர்வியஸ் துல்லியஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல அம்சங்களில் சொலோனுடைய சட்டங்களை ஒத்திருந்தன. தகுந்த ஆதாரங்கள் இல்லாதபடியால் இந்த நிகழ்ச்சிப் போக்கின் சந்தர்ப்பங்களையும் விவரங்களையும் பற்றி எங்கெல்ஸ் கருத்துத் தெரிவிக்காதபோதிலும் ''பழைய குல அமைப்புக்கு முடிவு கட்டிய புரட்சி'' என்று அதை வர்ணிக்கிறார். ''பிளெப்சுக்கும் populus க்கும் இடையிலிருந்த மோதல்கள்தான் அதற்குக் காரணங்களாயிருந்தன''** என்று கூடுதலாகத் தெரிவிக்கிறார்.

அடிமை உழைப்பின் பொருளாதார மதிப்பு குறைந்து கொண்டிருந்ததன் விளைவாகவும் சுதந்திர மக்களிடம் உடல் உழைப்பைப் பற்றிய ஆழமான, பல நூற்றாண்டுக் கால அருவருப்பின் காரணமாகவும் ரோமானிய உலகம் ஒரு நெருக்கடியில் சிக்கிக் கொண்டது. ''ஒரு முழுப் புரட்சி மட்டுமே இங்கு உதவியளிக்கும்''*** என்று எங்கெல்ஸ் எழுதி

* *Ibid.*, p. 282.

** *Ibid.*, p. 292.

*** *Ibid.*, p. 310.

னார். அடிமையுடைமைக்கு எதிரான புரட்சியை உலக வரலாற்று முக்கியத்துவமுடையதாக மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள். எனினும் அவர்கள் அத்தகைய புரட்சியை விடுதலைக்காக அடிமைகள் நடத்திய கலகங்களுடன் மட்டுமே இணைக்கவில்லை, ''அடிமைப் புரட்சியுடன்'' ஒருபோதும் இனங்காணவில்லை. மேலும், வெற்றியடைந்த அடிமைக் கலகங்களைப் பற்றி பண்டைய உலகம் அறிந்ததில்லை என்று எங்கெல்ஸ் எழுதினார்.*

ரோமானியப் பேரரசின் கடைசிக் கட்டத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடியை அதற்குள்ளேயிருந்த சக்திகளால் தீர்க்க முடியவில்லை என்பதை எங்கெல்ஸ் வலியுறுத்தினார்; கொலோனாடஸ், கிலியென்டேலா ஆகிய உறவுமுறைகள் அடிமையுடைமை உற்பத்தி முறைக்கு அசாதாரணமானவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். அடிமையுடைமை அமைப்பு தூக்கியெறியப்பட்டதை, அடிமை முறைக்கு நேரடியாகவே எதிரான உற்பத்தி முறையை அல்லது குறைந்த பட்சம் அத்தகைய உற்பத்தி முறையின் தொடக்கத்தைக் கொண்டிருந்த மக்களினங்கள் மத்தியில் ஏற்பட்ட பிரதேசத் தொடர்புகளுடன் அவர் இணைத்தார். ''சீரழிந்து வரும் சமுதாயங்களை மற்றவை, மேலும் வலிமையுள்ளவை வலுக்கட்டாயமாக அடக்குவதன் மூலமே (கிரீஸ் மாசிடோனியாவாலும் பிறகு ரோமினாலும்

---

* *Ibid.*, p. 315.

அடக்கப்பட்டது)'' அடிமையுடைமை எதிர்ப்புப் புரட்சி வரலாற்றினுள் நுழைகிறது. ''இவை தாமும் அடிமை உழைப்பையே தமக்கு அடிப்படையாகக் கொண்டிருக்கும் காலம் வரை இது மையம் மாற்றப்படுவதோடு மட்டுமே நின்று விடுகிறது. இறுதியாகப் படையெடுத்து வெல்லும் மக்கள் (ரோம்) அடிமை முறையை அகற்றி வேறொரு உற்பத்தி முறையைப் புகுத்தும் வரையில் இதே நிகழ்ச்சி முறை உயர்ந்த கட்டத்தில் மீண்டும் நடைபெறுவதாகவே இருக்கும்.''*

பண்டைய கிழக்கத்திய மற்றும் பண்டைய மத்திய தரைக் கடல் நாகரிகங்களின் வரலாற்றை ஒப்பிடுவதன் மூலம் வர்க்க-பகைமுரண்பாட்டு சமூக உறவுகளின் தோற் றத்துக்கு இட்டுச் சென்ற சமூகப் புரட்சியின் ஆழத்தையும் முழுமையையும் பற்றி குறிப் பிட்ட முடிவுகளைச் செய்ய முடியும். பண்டைய மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் இந்த வரிச்சட்டம் — கிரீட் முதல் ரோம் வரை — சமமற்றதாக இருந்தது என்பது உண்மை. புரட்சி அதன் ஆரம்ப, தொடக்க நிலைக் கட்டங்களில் நீடித்திருந்த இடங் களில் அது முடிவடையாததாகவும் அரை குறையாகவும் இருந்தது. மரபு வழிப்பட்ட சமூக உறவுமுறைகளும் கூட்டுச் சமூக நடைமுறைகளும் உருவாகிக் கொண்டிருந்த புதிய வடிவங்களுடன் சேர்ந்தே இருப்பது

* F. Engels, *Anti-Dühring*, p. 422.

நீடித்தது; வரலாற்று இயக்கம் திடீரென்று மெதுவாக்கப்பட்டு பிரதான பாதையிலிருந்து படிப்படியாக திருப்பப்பட்டது. அந்தந்த மக்களினங்களில் பூர்விகக் கூட்டுவாழ்வு உறவுகள் மிகவும் மெதுவாகத்தான் தகர்ந்தன.

ஆரம்ப சமூகப் புரட்சி (எங்கெல்ஸ் தன்னுடைய புத்தகத்தில் இதை விசேஷமான சொல்லின் மூலம் குறிப்பிடவில்லை என்ற போதிலும் இந்த ஆரம்ப சமூகப் புரட்சியே அவருடைய ஆராய்ச்சியின் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும்) உற்பத்திச் சக்திகளுக்குள்ளே புதுக் கற்கால-உலோகவியல் புரட்சியாக உதித்தெழுந்தது. பாரம் இழுக்கும் மிருகங்களின் சக்தியையும் தண்ணீர், காற்று, இதரவற்றின் இயற்கைச் சக்தி ஆதாரங்களையும் உபயோகித்தல் அதற்கு அடிப்படையாக இருந்தது. அது ''கீழேயிருந்து'', அடித்தளத்திலிருந்து சமூக வாழ்க்கைக்குள் நுழைந்தது. குலமரபு உறவுகள் தகர்ந்தன; உதித்தெழுந்த அரசியல் நடவடிக்கை மற்றும் அதை ஒட்டிய அமைப்புகளின் உதவியின் மூலம் இது குடும்பத்துக்கு உள்ளேயும் வெளியிலும் உடைமை ஏற்றத்தாழ்வுக்கு சமூக அடிப்படையை உருவாக்கியது. இந்த சமூகப் புரட்சி வழக்கமாக சட்டச் சாதனங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது, சமூக வாழ்க்கையின் ''மேலே'' அரசியல் மேற்கட்டுமானம் எழுந்ததுடனும் அதன் மகுடமாக அரசு உருப்பெற்றதுடனும் அது பூர்த்தியடைந்தது.

உற்பத்திச் சக்திகளின் புதிய தொழில் நுட்பக் கட்டமைப்புக்கும் முந்திய உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு முதன்முதலாக வெளிப்பட்ட துறை, மாறு கின்ற தந்தைவழி இணைக் குடும்பமே. உற்பத்திச் சக்திகளின் இந்த வளர்ச்சி மட்டத்தில் அவற்றுக்கும் அவற்றின் வளர்ச் சியைத் தடுத்துக் கொண்டிருந்த உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலிருந்த முரண்பாட்டுக்கு மிகவும் தீவிரமான தீர்வாக உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை இருந் தது; அத்தனியுடைமை தந்தைவழிக் குடும்பங் களின் தனியாகப் பிரிக்கப்பட்ட பொருளா தாரத்திற்குள் உதித்தெழுந்தது. எனினும் அது தோன்றியவுடனே, இடைநிலைக் கட்டத் தில் ஏற்கெனவே தோன்றிய சமூக பகைமை களை மிகவும் தீவிரப்படுத்தியபடியால் அரசின் உருவாக்கம் மிகவும் அவசரமானதாயிற்று. ஒடுக்குமுறை இயந்திரம் என்ற முறையில் தோன்றிய அரசு "எல்லாச் சமூகங்களின் தன்மையிலிருந்தும்" * உருவான பல பணி களின் நிறைவேற்றத்தை ஆதாரமாகக் கொண் டிருந்தது. இவ்விதமான புதிய நிலைமை களில், வாழ்க்கைச் சாதனங்களை சமூக ரீதியில் உற்பத்தி செய்வதையும் மனிதனை உற்பத்தி செய்வதையும் ஒழுங்குபடுத்துதல் மனிதகுல வரலாற்றில் முதல் சமூகப் புரட்சியுடன் தொடங்கியது.

---

* K. Marx, *Capital,* Vol. III, p. 384.

எங்கெல்ஸ் வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்தின் உருவாக்க யுகத்தைப் பற்றிக் கிடைத்த விவரங்களை ஆதாரமாகக் கொண்டு மார்க்சின் போதனையை நிரூபிக்கின்ற புதிய வாதங்களைக் கூறியதுடன் அப்போதனையைப் படைப்பாற்றலுடன் வளர்த்துக் கூறினார். உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளினால் அடிப்படையில் ''கீழேயிருந்து'' நிர்மாணிக்கப்படுகின்ற பண்டைய வரலாற்றுப் போக்கில் முதல் சமூகப் புரட்சியிலே அடிப்படையான பிரச்சினை ஏற்கெனவே அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையாகி விட்டது என்பதை அவர் எடுத்துக்காட்டினார். ஏராளமான செல்வத்தைத் திரட்டி தம்முடைய தனியுரிமைகளைத் தவறான முறையில் உபயோகித்துக் கொண்ட குல மேற்குடியினர் அதீனிய அடிமையுடைமை ஜனநாயகம், ரோமானியக் குடியரசு, பிறகு பேரரசு, முடிவில் நிலப்பிரபுத்துவத்துக்கு முந்திய பண்பாடற்ற ஜெர்மன் இராஜ்யங்களால் அகற்றப்பட்ட பிறகுதான் வரலாற்று முன்னேற்றத்துக்குப் பாதை திறக்கப்பட்டது.

முதல் சமூகப் புரட்சியின் சுற்றுவட்டத்துக்குள், இயக்கவியல் ரீதியில் எதிரிடையான வளர்ச்சிப் போக்குகளில் ஒன்று ஆதிக்கம் செலுத்தியது. வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் பூர்வீகக் கூட்டுவாழ்வு அமைப்பை அகற்றிய நிகழ்ச்சிப் போக்கு — தனது சமூக-பொருளாதார முன்நிபந்தனைகளின் கோணத்தில் — தனக்குள்ளே முரண்பாடானதாக இருந்தது.

தம்முடைய சககுலத்தவர்களின் சார்புநிலையில் சிக்கிக் கொண்ட, வறுமையடைந்த ''சொந்த'' மக்கள் மற்றும் யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது வேறு வழிகளின் மூலம் அடிமைப்படுத்தப்பட்ட ''அந்நியர்கள்'' ஆகிய இருவருமே சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மேலும் உபரி உழைப்பை சுவீகரித்தல் (கூட்டுச் சமூகத்தில் கூட்டு உழைப்பு, சககுலத்தவர்களின் இராணுவப் பிரிவுகள் மற்றும் அடிமைகளின் உழைப்பு), உபரிப் பொருளை சுவீகரித்தல் (கூட்டுச் சமூகங்களின் சேம நிதி; இது இராணுவக் கைப்பற்றுதல்கள், கொள்ளைகள், யுத்த நட்ட ஈடுகள் மற்றும் கப்பத்திற்கு இலக்காக இருந்தது) ஆகியவற்றுக்கு இடையிலான விகிதத்தைப் பொறுத்து சுரண்டல் சாதனங்களின் தொகுதியும் கணிசமான அளவுக்கு மாறியது. குல மேற்குடியினர், வர்த்தக மற்றும் லேவாதேவி வட்டாரங்கள், கோயிற் பூசாரிகள் மற்றும் இராணுவத் தலைவர்கள், தோன்றி கொண்டிருந்த சுரண்டலை எப்படி நிறைவேற்றினார்கள் என்பதும் புரட்சியின் தன்மையை நிர்ணயித்தது.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் சமூக உறவுகளில் தீவிரமான மாற்றம் மெய்யாகவே நடைபெறுகின்ற சமூக ''அலகை'' இனங்காணுவதில் எங்கெல்ஸ் கவனத்தைக் குவித்தார். அவர் மார்கனுடைய புத்தகத்தைப் படிப்பதற்கு முன்னர் பண்டைய கிழக்கு நாடுகளைப் பற்றிக் கொண்டிருந்த

அக்கறை அதற்குக் காரணமாக இருந்திருக் கும். பண்டைய கிழக்கில், பிரதானமாக நீர்ப்பாசனத் துறையில், மத்தியப்படுத்தப்பட்ட சமூக உழைப்பை அமைத்தல் (பொரு ளியலாளர்கள் அதை அளவின் விளைவு என்று குறிப்பிடுகிறார்கள்) உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது. மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் பிரதான மாக உழைப்புக் கருவிகளின் அபிவிருத்தி மற்றும் பரிவர்த்தனைத் தொடர்புகளைத் தீவிரப்படுத்துவதன் மூலம் உழைப்பின் உற் பத்தித் திறன் அதிகரித்தது, அதாவது உற்பத்தி நடவடிக்கையின் நிலைமைகள் மற்றும் ரகங் களை வகைவேறுபடுத்தலின் விளைவு பிரதான காரணியாக மாறியது. ஆகவே பண்டைய கிழக்கத்திய நாகரிகங்களில், கலைவுற்ற, ஆனால் அழிக்கப்படாத குலமரபு உறவுகள் சமூக-பொருளாதாரக் கட்டமைப்புகளின் அடிப் படைக்குள் முற்றிலும் மெய்யாகவே ‘‘அழுத்தப் பட்டிருந்தன’’, அவற்றுக்கு மேலே இருந்த எதேச்சாதிகார மேற்கட்டுமானத்தின் சுமை யினால் நசுக்கப்பட்டிருந்தன. பண்டைய மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் குலமரபு உறவுகளுக்கும் அவை மேன்மேலும் கட்டுப் படுத்திய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் இடையில் எழுந்த முரண்பாடு அரசின் உருவாகி கொண்டிருந்த வடிவங்களின் அடிப் படையில் ‘‘அழுத்தப்பட்டுப்’’, புதைக்கப்பட்டு, மறைக்கப்படாதது மட்டுமின்றி, அதற்கு மாறாக, மேற்பரப்புக்குக் கொண்டு வரப்

பட்டு, பூர்விக ஜனநாயக மரபுகளின் உச்ச அலையில் சிறப்பாக எடுத்துக்காட்டப் பட்டது. ஆகவே **குடும்பம், தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூலின் ஆசிரியர் ''புரட்சி'' என்ற சொல்லை இப் புத்தகத்தில் முதல் தடவையாகக் குடும்ப உறவுகளின் தொடர்பான துறைக்கு, தந்தை வழிக் குடும்பத்துக்கு உபயோகிப்பது தற்செயலானதல்ல. குல மற்றும் குடும்ப உறவுகளில் இந்தப் புரட்சி நடைபெறாத அல்லது அரைகுறையாக மட்டுமே நடை பெற்ற இடங்களில் குல, இனக்குழு, கூட்டுச் சமூக மற்றும் சாதி உறவுகள் அவற்றின் ஆரம்ப, பூர்விக வடிவத்தில் கெட்டிப் படுத்தப்பட்டன. பல்லாயிரக்கணக்கான வருடங் களில் இந்த உறவுகள் பண்டைய கிழக்கத்திய நாகரிகங்களின் அசைக்க முடியாத அடிப் படையாக அமைந்தன என்று எங்கெல்ஸ் எழுதினார். மிக ஈவிரக்கமற்ற எதேச் சாதிகாரத்தினால் அல்லது அரசியல் துறையில் ஏற்பட்ட புயல்களினால் அல்லது அழிவுண் டாக்கிய நாடோடிகளின் படையெடுப்பு களினால் கூட அதை அசைக்க முடியவில்லை. வர்க்க பகைமுரண்பாடுகளை நோக்கிய பண்டைய கிழக்கத்திய சமூகங்களின் வளர்ச்சி இப்படித் தேக்கமடைந்தது.

எனினும் பண்டைய கிழக்கில் மட்டுமின்றி, கிரேக்க-ரோமானிய மற்றும் ஜெர்மானிய-பண்பாடற்ற வகையான மாற்றங்களிலும் முதல் சமூகப் புரட்சி மிகவும் நீண்ட,

இழுபறியான நிகழ்ச்சிப் போக்காக இருந்தது.

எங்கெல்ஸ் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பை வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகம் அகற்றிய நிகழ்ச்சிப் போக்கை ஆராய்ந்த பொழுது சமூக வளர்ச்சியின் நியதியான கட்டங் களைப் பற்றி இயக்கவியல்-பொருள்முதல்வாத மதிப்பீட்டையும் இந்த மாற்றம் மனிதகுலத் தின் உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியினால் நிர்ணயிக்கப் படுவதையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டார். மார்கன், கருத்துகள் மற்றும் தொழில்நுட்ப அனுபவத்தைத் திரட்டுவதை வரலாற்று வளர்ச்சிக்குப் பின்னால் உள்ள இயக்குச் சக்தியாகக் கண்டார், அவற்றின் ஒன்றுகு விக்கப்பட்ட வெளியீட்டை மேற்கட்டுமானத்தில் பார்த்தார். எங்கெல்ஸ் சமூக மாற்றங் களின் பொருளாதார மூலவேர்களுக்கு அடிப் படையை, சமூகத்தின் பொருளாயத வாழ்க் கையை எடுத்துக்காட்டினார். ஓர் ஆராய்ச்சி யாளருடைய நுண்ணறிவு மார்கனை இயக் கியது. எங்கெல்சோ, மார்க்சும் தானும் உருவாக்கிய சமூக-பொருளாதார அமைப்பு களைப் பற்றிய தத்துவத்தைச் செயல் நோக்குடன் கையாண்டார், அவர் சமூக மாற்றங்களை வர்க்கப் பகுப்பாய்வுக்கு உட் படுத்தினார். எனவே எங்கெல்ஸ் மார் கனுடைய கருதுகோளை இயக்கவியல்-பொருள் முதல்வாத நிலையிலிருந்து விளக்கி அதை செழுமைப்படுத்தியதுடன் நிற்கவில்லை; அவர் மார்கன் முறைப்படுத்திய, பொதுமைப்படுத்திய

விவரங்களின் அடிப்படையில் மற்றும் இப்பிரச்சினையைப் பற்றித் தானும் மார்க்சும் செய்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் பூர்விகக் கூட்டுவாழ்வு அமைப்பிலிருந்து வர்க்க-பகைமுரண்பாட்டு சமூகத்தை நோக்கிய புரட்சிகரமான மாற்றத்தைப் பற்றி மெய்யான விஞ்ஞானத் தத்துவத்தைப் படைத்தார் என்று உறுதியாகக் கூற முடியும்.

மனித வரலாற்றில் முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தை ஆராயும் போது இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அடிப் படையான கோட்பாடுகளை முழுமையாகக் கையாள முடியும் என்று **குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** நூல் சந்தேகமின்றி ஏற்றுக் கொள்கின்ற முறையில் நன்கு நிரூபித்திருக்கிறது. கம்யூனிசத்துக்கு முந்திய சமூக-பொருளாதார அமைப்புகளுக்குப் பொருந்துகின்ற வளர்ச்சி விதிகள் பண்டைய சமூகத்துக்கும் பொருந்துகின்றன என்று உலக விஞ்ஞானத்தில் முதன்முதலில் எடுத்துக் காட்டியவர் எங்கெல்ஸ். குறிப்பாக, பண்டைய வரலாறு மற்றும் முதலாளித் துவத்துக்கு முந்திய சமூக அமைப்புகளில் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்கும் இடையில் கூர்மையான முரண்பாடு கள் இருக்கின்றன, எந்த சமூகப் பிரிவுகள், குழுக்களின் அடிப்படையான பொருளாயத நலன்கள் மோதுகின்றனவோ அந்தப் பிரிவு கள், குழுக்களுக்கு இடையில் போராட்டம் நடைபெறுகிறது. முடிவில் பூர்விகச் சமூக-பொருளாதார அமைப்பை வர்க்க-பகைமுரண் பாட்டு சமூகத்தின் ஏதாவதொரு வடிவம் — அடிமையுடைமை சமூகம் (கிரேக்கர்கள், ரோமானியர்கள்) அல்லது நிலப்பிரபுத்துவ சமூகம் (ஜெர்மானியர்கள்) — அகற்றுவதற்கு சமூகப் புரட்சி சாதனமாயிற்று.

நவீன மார்க்சிய வரலாற்று விஞ்ஞானம், பண்டைக்கால வரலாற்றுத் துறையில் எங்கெல்சினுடைய படைப்பாற்றல் மிக்க பாரம்பரியத்தை ஆதாரமாகக் கொண்டு அவர் சுட்டிக்காட்டிய பாதையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது; புதிய ஆராய்ச்சி முறைகளின் தோற்றத்தினால் அதன் வளர்ச்சியில் ஏற்படுகின்ற திருப்புமுனைகளில் அது அவருடைய தத்துவப் பாரம்பரியத்துக்கு மீண்டும் மீண்டும் திரும்புகிறது. பூர்விக சமூகத்தின் சாராம்சத்தைப் பற்றியும் வர்க்க-பகைமுரண்பாட்டு சமூக அமைப்புகளை நோக்கிய அதன் வளர்ச்சியின் விதிகளைப் பற்றியும் மார்க்சிய மூலவர்கள் உருவாக்கிய தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை வரலாற்றாசிரியர்கள் இன்று திரட்டியுள்ள விவரங்கள் நிரூபிக்கின்றன. குறிப்பிட்ட யுகங்கள், கலாசாரங்கள் மற்றும் மக்களினங்களைப் பொறுத்து வரலாற்றின் பொது விதிகளின் செயல்பாட்டை அதிகமான விவரங்களுடன் விரித்துக் கூறுவதை இத்தத்துவம் சாத்தியமாக்குகிறது.

இந்த அர்த்தத்தில் எங்கெல்சின் தத்துவப் பாரம்பரியம் அதன் முழுப் பொருத்தத்தையும் கொண்டிருக்கிறது; **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** என்ற அவருடைய நூல் பண்டைய வரலாற்றின் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிய மெய்யான இயக்கவியல் பகுப்பாய்வுக்கு மூலச்சிறப்பான உதாரணமாக இருக்கிறது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

**தலைமை அலுவலகம்**

*41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை — 600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை — 600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001*
*3 — 4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018*
*42 / 7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008*
*செர்ரி ரோடு, சேலம் — 636001*

**விற்பனை நிலையங்கள்**

*3-22-75-D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன் — 627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001*

முன்னேற்றப் பதிப்பகம், கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின் ஆகியோரின் நூல்கள், கட்டுரைகளோடு கூட மார்க்சிய-லெனினியத் தத்துவத்தைப் பயிலுபவர்களுக்கு உதவும் பொருட்டு மார்க்சிய-லெனினிய ஆசான்களின் தனிப்பட்ட படைப்புகளைப் பற்றிய நூல்களையும் வெளியிடுகிறது.

சோவியத் விஞ்ஞானி இ. அந்திரேயெவ் இந்நூலில், எங்கெல்ஸ் எழுதிய **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** எனும் புத்தகத்தின் முக்கிய அம்சங்களை ஆராய்கிறார். பூர்விக சமுதாயத்தின் வளர்ச்சிக் கட்டங்கள், இச்சமுதாயத்திலிருந்து பகைமுரண்பாடுகளடங்கிய வர்க்க சமுதாயத்திற்கு மாறியது, திருமண-குடும்ப உறவுகளின் வரலாற்றுப் பரிணாமம், தனியுடைமையும் அரசும் தோன்றியது ஆகியவற்றின் மீது ஆசிரியர் கவனம் செலுத்துகிறார். இவற்றோடு கூட எங்கெல்ஸ் முன்வைத்த பிரச்சினைகளைப் பற்றிய இன்றைய விஞ்ஞானக் கருத்துகளையும் வாசகர்கள் அறியலாம்.

முன்னேற்றப் பதிப்பகம்